# பகுதி III

# பகுதி III

## 2007 ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

### தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும், சுற்றறிக்கைகளும், பணிப்புரைகளும், அறிவித்தல்களும்


| | | | |
|---|---|---|---|
| | **வங்கி மேற்பார்வைத் திணைக்களம்** | | **பக்கம்** |
| 1. | வாடிக்கையாளர்களை நுணுக்கமாகக் கவனித்தல் - "உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள்" நடைமுறைகள் | 02/04/004/0012/001 | (i) |
| 2. | 2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் - வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதன உடமை | | (ii) |
| 3. | 2007ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் - வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதன உடமை | | (v) |
| 4. | 2007ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் - கொடுகடன்களின் அதிகூடிய தொகை | | (viii) |
| 5. | 2007ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் - கொடுகடன்களின் அதிகூடிய தொகை | | (xiv) |
| 6. | 2007ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் - மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணுதல் | | (xx) |
| 7. | 2007ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் - மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணுதல் | | (xxii) |
| 8. | 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் - கொடுகடன்களின் அதிகூடிய தொகை | | (xxiv) |
| 9. | 2007ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் - கொடுகடன்களின் அதிகூடிய தொகை | | (xxx) |
| 10. | 2008ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து பாசல் IIஇன் மூலதன போதுமை கட்டமைப்பினைப் பின்பற்றுதல் | | (xxxvi) |
| 11. | 2007ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் - மூலதனப் போதுமை விகிதத்தை பேணுதல் | | (xxxviii) |
| 12. | 2007ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் - மூலதனப் போதுமை விகிதத்தை பேணுதல் | | (xxxix) |
| 13. | 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் - இலங்கையின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை | | (xl) |
| 14. | 2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் - இலங்கையின் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை | | (lv) |
| 15. | திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைகள் | | (lxx) |
| 16. | தேசிய சேமிப்பு வங்கிக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள் | | (lxxi) |
| 17. | வங்கித்தொழில் புரியும் வெளிநாட்டு அலுவலர்களுக்கான வழிகாட்டி | 02/01/00/0002/001 | (lxxii) |
| | **உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்** | | |
| 18. | நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி | 35/01/005/0006/12 | (lxxv) |
| 19. | நாணயக் கடிதத்திற்கெதிரான வரையறைத் தேவைப்பாடுகள் | 35/01/005/0010/06 | (lxxvi) |
| 20. | நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி | 35/01/005/0006/13 | (lxxvii) |
| 21. | நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி | 35/01/005/0006/14 | (lxxviii) |
| | **செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்** | | |
| 22. | இரட்டைப் பிரசாவுரிமையுடைய விண்ணப்பத்தாரர்களுக்கான வெளிநாட்டு நாணய நிலையான வைப்புக் கணக்குகள் | 06/04/01/2007 | (lxxix) |
| 23. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை - அதி விசேடமானது | இல. 1481/1 | (lxxxi) |
| 24. | வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் செய்யப்படும் முதலீடு | 06/04/03/2007 | (lxxxii) |
| 25. | பயன்படுத்தப்பட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான ஏற்றுமதி பரிசோதனைச் சான்றிதழ் | 06/07/04/2007 | (lxxxiv) |
| 26. | இலத்திரனியல் பயணச்சீட்டினை சமர்ப்பிப்பதன் மூலம் பயணத்திற்கான வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குதல் (ஈ பயணச்சீட்டு) | 06/07/05/2007 | (lxxxv) |

| | | | |
|---|---|---|---|
| 27. | வதியும் விருந்தினர் திட்டம் - சிறப்புக் கணக்குகள் | 06/04/06/2007 | (lxxxvi) |
| 28. | சரக்குகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல் மற்றும் உள்நாட்டு வான் வழிக்கட்டணம்/ உள்நாட்டு தரையிறங்கும் கட்டணங்கள்/ கப்பலேற்றுபவர்களின் கப்பற் சரக்கு பற்றுச் சீட்டுக்களை வழங்குதல் | 06/04/07/2007 | (lxxxix) |
| 29. | வெளிநாட்டிற்கு பயணம் செய்யும் இலங்கையர்களுக்கு வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குதல் | 06/04/08/2007 | (xci) |
| 30. | வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் மூன்றாந்தரப்பு வெளிநாட்டு செலாவணி வைப்புக்களுக்கு அனுமதியளித்தல் | 06/04/09/2007 | (xcii) |
| 31. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை - அதி விசேடமானது | இல. 1516/19 | (xciii) |
| 32. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை - அதி விசேடமானது | இல. 1516/24 | (xcv) |
| 33. | வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் செய்யப்படும் முதலீடு (ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உடமை வரையறையினை 5% இலிருந்து 10% இற்கு அதிகரித்தல்) | 06/04/10/2007 | (xcviii) |
| 34. | சரக்குகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல் மற்றும் உள்நாட்டு வான் வழிக்கட்டணம்/ உள்நாட்டு தரையிறங்கும் கட்டணங்கள்/ கப்பலேற்றுபவர்களின் கப்பற் சரக்கு பற்றுச் சீட்டுக்களை வழங்குதல் | 06/04/11/2007 | (c) |

**நிதியியல் உளவறிதல் பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| 35. | மில்லியன் மெழுகுவர்த்திகளை ஏற்றும் பிரச்சாரம் | | (ci) |
| 36. | 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் - நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2 (3)இன் நியதிகளில் உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் தொடர்பான விதிகள் | 37/04/001/0001/007 | (cii) |
| 37. | 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் அறிக்கையிடும் தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுகுதல் | 37/04/001/0001/007 | (cxvi) |
| 38. | கட்டாயமாக அறிக்கையிடும் தேவைப்பாடு - இலத்திரனியல் நிதிய மாற்றல்கள் | 37/04/001/0001/007 | (cxvii) |
| 39. | புதிய வாடிக்கையாளர் மற்றும் ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களுக்கான உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் தொடர்பான இணங்குவிப்புக்கள் - தயார் நிலை | 37/01/016/0001/007 | (cxviii) |
| 40. | 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் பிணையங்கள் தொழில்துறைக்கான உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் கட்டாய விதிகள் | 37/03/004/0003/007 | (cxix) |

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்**

| | | | |
|---|---|---|---|
| 41. | 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டம் | | (cxxxvi) |
| 42. | காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறையின் கீழ் "வாடிக்கையாளர்களிடமிருந்து காசோலை வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கும் வாடிக்கையாளர்களுக்கான காசோலை பெறுகைகளை வரவு வைப்பதற்குமான பணி வசதிகள் மற்றும் நியம நேரங்கள்" தொடர்பாக பங்கேற்கும் நிறுவனங்கள் மீதான பொதுவான பணிப்புரை | 01/2007 | (cxl) |
| 43. | வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பெயர் மாற்றம் | 34/07/029/0001/001 | (cxlii) |
| 44. | லங்கா செட்டில் பங்கேற்பாளர்களின் பெயர் மாற்றங்கள் | 34/07/029/0001/001 | (cxliii) |
| 45. | வரையறுக்கப்பட்ட ஸ்டான்டட் சார்டட் வங்கியின் (பாகித்தான்) வங்கி அடையாளக் குறியீட்டின் மாற்றம் | 34/07/029/0001/001 | (cxliv) |

**பொதுப்படுகடன் திணைக்களம்**

| | | | |
|---|---|---|---|
| 46. | 2003 ஓகத்தில் லங்கா செட்டில் முறையின் விதிகளுக்கான திருத்தம் | எஸ்எஸ்எஸ்எஸ்/01/2007 | (cxlv) |
| 47. | அரச பிணையங்களுடன் தொடர்புபட்ட ஓரிரவு வாடிக்கையாளர் மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்துகின்ற கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்வதற்கான இலங்கை மத்திய வங்கியின் பரந்த துறை வலையமைப்பினை அடிப்படையாகக் கொண்ட விண்ணப்பம் | எஸ்எஸ்எஸ்எஸ்/02/2007 | (cxlvi) |
| 48. | உள்ளூர் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 8(1) மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 21இ(2)இன் நியதிகளில் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை லங்கா செட்டில் முறையில் நேரடிப் பங்கேற்பாளர்களாகவும் வணிகர் நேரடி பங்கேற்பாளர்களாகவும் நியமித்தல் | எஸ்எஸ்எஸ்எஸ்/03/2007 | (cxlviii) |
| 49. | 2003 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறை விதிகளுக்கான திருத்தங்கள் | எஸ்எஸ்எஸ்எஸ்/04/2007 | (cl) |

| | | | |
|---|---|---|---|
| 50. | அரச பிணையங்களுடன் தொடர்புபட்ட ஓரிரவு வாடிக்கையாளர் மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்துகின்ற கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்வதற்கான இலங்கை மத்திய வங்கியின் பரந்த துறை வலையமைப்பினை அடிப்படையாகக் கொண்ட விண்ணப்பம் | எஸ்எஸ்எஸ்எஸ்/05/2007 | (clii) |
| 51. | 2003 ஒகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறையின் விதிகளுக்கான திருத்தங்கள் | எஸ்எஸ்எஸ்எஸ்/06/2007 | (cliv) |


**வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**


| | | |
|---|---|---|
| 52. | தீர்மானம் | (clv) |
| 53. | 1995ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வருவாய் அங்கீகரிப்பும், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிக்காட்டல்களும்) பணிப்பு | (clvi) |
| 54. | 2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்குகளைப் பேணல்) வழிகாட்டல்கள் | (clvii) |
| 55. | 2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கடன் வழங்கல்) பணிப்பு | (clviii) |
| 56. | 2007ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுடனான வியாபார கொடுக்கல் வாங்கல்கள்) பணிப்பு | (clx) |

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2008 சனவரி 19

தொடர்பு எண்: 02/04/004/0012/001

**உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்**
**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும்**

அன்புள்ள ஐயா

**வாடிக்கையாளர்களை நுணுக்கமாகக் கவனித்தல் -**
**"உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள்" நடைமுறைகள்**

தோன்றக்கூடிய வங்கித்தொழில் மற்றும் நிதியியல் முறைகளின் மீது எல்லை கடந்த நிதிசார் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து தோன்றக்கூடிய உள்ளார்ந்த இடர்நேர்வுகளைக் கருத்திற் கொண்டு, அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் எல்லை கடந்த நிதிசார் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்ற அனைத்து வாடிக்கையாளர்களின் மீதும் நுணுக்கமான கவனிப்பினை மேற்கொள்ள வேண்டியதுடன், 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலைத் தடுத்தல் சட்டம், 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிகள் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டம், 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியிடலை ஒழிப்பதன் மீதான சமவாயச்சட்டம் மற்றும் 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக்கட்டுப்பாட்டுச் சட்டம் என்பன உள்ளிட்ட தொடர்பான நியதிச் சட்டங்களின் கீழ் தொகுக்கப்பட்ட அனைத்து தேவைப்பாடுகளையும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

இதற்கமைய, உரிமம் பெற்ற வங்கிகள் சந்தேகத்திற்குரிய தன்மைகளைக் கொண்ட எந்தவொரு கொடுக்கல் வாங்கலையும் மேற்குறிப்பிட்ட நியதிச்சட்டங்களின் நியதிகளுக்கமைய தொடர்பான அதிகாரசபைகளுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**பி. சமரசிங்க**

பதில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) இன் கீழ் நாணயச்சபையினால் பணிப்புரைகள்.

ஒப்பம்
**நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்**
ஆளுநர்

கொழும்பு
2007 சனவரி 19

## பணிப்புரைகள்

## 2007 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதன உடமை

2006 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1) இனால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைக்கிடுதலுக்கமைய நாணயச்சபையால் பின்வரும் பணிப்புரைகள் விடுக்கப்படுகின்றன.

எடுத்துக் காட்டல்

1. இப்பணிப்புகள் 2007 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் என எடுத்துக் கூறப்படலாம். இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் 2006 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தினுடையதாக இருக்கும்.

பிரிவு 76ஜே(1) கீழ் அதிகாரமளிப்பு

2. பிரிவு 46(1) இன் பிரகாரம் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளோரினால் வைத்திருக்கக் கூடிய ஆகக்கூடிய பங்கு மூலதன சதவீதம் சார்ந்த பணிப்புரைகள் உள்ளடங்கலாக அவ்வாறான வங்கிகள் கொண்டு நடாத்த வேண்டிய வியாபாரத்தின் ஏதாவது அம்சத்தின் தன்மை தொடர்பிலான பணிப்புரைகளை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிற்கு வழங்குவதற்கு நாணயச்சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(i) கம்பனி ஒன்றினால், கூட்டு ஆயமொன்றினால் அல்லது தனியொருவரினால் வைத்திருக்கப்படுபவை

(ii) பின்வருவோரினால் கூட்டு மொத்தமாக வைத்திருக்கப்படுபவை

(அ) கம்பனி ஒன்றினால் மற்றும் பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை

(அஅ) அதனது துணை நிறுவனங்கள்

(ஆஆ) அதனது உடமைக் கம்பனி

(இஇ) அதனது உடமைக் கம்பனியின் ஓர் துணை நிறுவனம்; அல்லது

(ஈஈ) குறித்த கம்பனி அல்லது அதனது துணைநிறுவனம், அல்லது அதனது உடமைக் கம்பனி அல்லது அதனது உடமைக் கம்பனியின் துணை நிறுவனம் கணிசமான நலவுரித்துக்களை கொண்டுள்ள கம்பனி ஒன்று; அல்லது

(ஆ) தனியொருவரினால் மற்றும் பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை

(அஅ) தனியாளின் நெருங்கிய உறவினர்கள்

(ஆஆ) தனியொருவர் அல்லது தனியாளின் நெருங்கிய உறவினர் கணிசமான நலவுரித்துக்களைக் கொண்டுள்ள கம்பனியொன்று

(இஇ) அவ்வாறான கம்பனியின் துணை நிறுவனம்

(ஈஈ) அவ்வாறான கம்பனியின் உடமைக் கம்பனியொன்று

(உஉ) அவ்வாறான கம்பனியின் உடமைக் கம்பனியின் துணை நிறுவனமொன்று

(ஊஊ) அந்தக் கம்பனியில் அல்லது அதனது துணை நிறுவனத்தில் அல்லது உடமைக் கம்பனியில் ஒரு கணிசமான நலவுரித்துக்களை கொண்டுள்ள கம்பனி ஒன்று; அல்லது

(எஎ) அவ்வாறான தனியொருவர் அல்லது தனியாளின் நெருங்கிய உறவினர் ஒரு கணிசமான நலவுரித்துக்களைக் கொண்டுள்ள கம்பனியல்லாத கூட்டிணைக்கப்பட்ட ஆயமொன்றும்; அல்லது

(இ) தனியொருவர் அல்லது கம்பனி ஏதாவதொன்று நேரடியாகவோ மறைமுகமாகவோ அல்லது நன்மை பயக்கும் விதத்தில் ஒரு கணிசமான நலவுரித்துக்களை அல்லது குறிப்பிடத் தகுந்த முகாமைத்துவ நலவுரித்துக்களை கொண்டிருக்கும் கம்பனிகள் ஒவ்வொன்றும்

பிரிவு 12(1இ) கீழ் அதிகாரமளிப்பு

3. (1) பிரிவு 12(1இ)(அ) இன் அடிப்படையில், நிதி விடயத்திற்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அனுசரணையுடன் நாணயச்சபையினால் கொடுக்கப்பட்ட எழுத்திலான முன் அனுமதியின்றி ஏதாவதொரு தனிநபர், பங்குடமை அல்லது கம்பனி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது நியமிக்கபடுபவர் ஊடாகவோ அல்லது வேறு ஒரு தனிநபர், பங்குடமை அல்லது கம்பனி கூட்டு நடவடிக்கை மூலமாகவோ எந்தவொரு எழுதப்பட்ட சட்டத்தின் கீழோ அல்லது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியில் ''பொருள்சார்ந்த நலவுரித்துக்களை'' கொள்வனவு செய்ய முடியாது.

(2) பிரிவு 12(1இ)(ஆ) இன் அடிப்படையில் பொருத்தமாகக் காணப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு அமைவாக இத்தகைய அனுமதியை வழங்க நாணயச்சபையானது அதிகாரத்தை கொண்டுள்ளது.

(3) ''பொருள்சார்ந்த நலவுரித்துக்கள்'' என்று உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதன உடமையில் 10 சதவீதத்தினை விஞ்சும் வகையில் வைத்திருத்தலாகும்.

பங்கு மூலதன உடமையின் ஆகக் கூடிய சதவீதம்

4. அதன் பிரகாரம், பிரிவுகள் 12(1ஆ), 12(1இ) மற்றும் 13 இற்கு அமைவாகவும் பொருத்தமாகக் காணப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு அமைவாகவும் நாணயச்சபையானது பிரிவு 12(1இ) மற்றும் 46(1)(ஈ)இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு பங்குதாரர்கள் பிரிவுகளுக்கு தனித்தனி விடய அடிப்படையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதன உடமையில் 15 சதவீதத்திற்கு விஞ்சாத வகையில் பொருள்சார்ந்த நலவுரித்துக்களை கொள்வனவு செய்ய அனுமதி அளிக்கலாம்.

விலக்களிப்புகள்

5. உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று மூலதனப் போதுமாந்தன்மையற்ற நிலையை, கடன்தீர் ஆற்றலற்ற நிலையை தவிர்ப்பதற்காக மீள்கட்டமைப்பினை வேண்டி நிற்கும் போது மேற்குறிப்பிட்ட பணிப்புரை 4 இல் சொல்லப்பட்ட அத்தகைய மேல் எல்லை பிரயோகிக்கப்படமாட்டாது மற்றும் நாணயச்சபையானது பிரிவு 12(1இ) மற்றும் 46(1)(ஈ) இல் குறிக்கப்பட்டவாறு ஏதாவது பங்குதாரர் பிரிவினருக்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் பொருள்சார்ந்த நலவுரித்துக்களை 15 சதவீதத்திற்கு மேலதிகமாக வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தினை கொள்வனவு செய்வதாகும். அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட பொருள்சார்ந்த நலவுரித்துக்கள் நாணயச்சபையினால் தனித்தனி விடய அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லைக்குள் 15 சதவீதத்திற்கு குறைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்கு அமைவாகவும் அவ்வாறான காலப்பகுதி அனுமதியளிக்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து வருடத்தினை விஞ்சாத வகையில் இருக்கும்படியாகவும் அனுமதியளிக்கப்படலாம்.

தற்போதுள்ள உடமை தொடர்பான ஏற்பாடுகள்

6. (1) பிரிவுகள் 12(1இ) மற்றும் 46(1)(ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது பங்குதாரர் பிரிவினர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதனத்தின் உடமையில் 15சதவீதத்திற்கு மேலதிகமாக ஏதாவது பொருள்சார்ந்த நலவுரித்துக்களை முன்னரே கொள்வனவு செய்திருந்ததுடன் இப்பணிப்புரைகள் திகதியில் அவற்றை வைத்தும் இருந்தால் அவை உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதனத்தில் 15 சதவீதத்தை விஞ்சாத மட்டத்திற்கு விற்பதனூடாகவோ மற்றும் அல்லது வேறேதேனும் வழியிலோ அவ்வாறான பங்குதாரர்களினால் குறைக்கப்பட வேண்டும்.

(2) அவ்வாறான விற்பனை மற்றும் அல்லது குறைப்பானது நாணயச்சபையினால் தனித்தனி விடய அடிப்படையில் குறித்துரைக்கப்பட்ட கால எல்லையிலிருந்த 5 வருடத்தினை விஞ்சாத வகையில் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் செயற்படுத்தப்பட வேண்டும்.

(3) பிரிவு 12(1இ) மற்றும் 46(1)(ஈ) இல் குறிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு பங்குதாரர் பிரிவினர் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் நாணயச்சபையின் பணிப்புரைக்கு இசைந்து நடக்கத் தவறுமிடத்து இப்பணிப்புரைக்கு அமைய பங்குதாரர் பிரிவினரால் வைத்திருக்கப்படும் பங்குகளின் உடமைக்கு உரித்தாக்கப்படும் 10 சதவீதத்தினை விஞ்சிய வாக்களிக்கும் உரிமை, நாணயச்சபையினால் பொருள்சார்ந்த நலவுரித்துக்களைக் குறைப்பதற்கு குறித்தொதுக்கப்பட்ட காலத்தின் கடைசி நாளிலிருந்து வலிதற்றதாக கருதப்படும்.

மாற்றத்திற்கு உள்ளாகும் ஏற்பாடுகள்

7. (1) இப்பணிப்புரைகளின் திகதியிலிருந்து இரண்டு மாதங்களிற்குள் ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் பிரிவு 12(1இ) மற்றும் 46(1)(ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பங்குதாரர் பிரிவினர் அவ்வங்கியில் வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதனத்தின் 15 சதவீதத்தினை விஞ்சும் அளவிற்கு பொருள்சார்ந்த நலவுரித்துக்களை அவ்வங்கியில் கொண்டிருக்குமிடத்து நாணயச்சபையிடமிருந்து பொருள்சார்ந்த நலவுரித்துக்களை 15 சதவீத எல்லைக்கு கொண்டு வரும் நோக்கில் விற்பனை மற்றும் அல்லது குறைப்புச் செய்யப்பட வேண்டிய கால எல்லைக்கான பணிப்புரையை வேண்டி நிற்றல் வேண்டும்.

(2) அவ்வாறான தகவல் மற்றும் வேண்டுகோள் கிடைக்கப் பெற்று இரண்டு மாத காலப்பகுதிக்குள் நாணயச்சபையானது மேலே பணிப்புரை 6(2) இன் படி விற்பனை மற்றும் அல்லது குறைப்பு மேற்கொள்ளப்பட வேண்டிய கால எல்லையினை குறிப்பிடுவதுடன் அவை பற்றி உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிக்கு அறியத்தரும்.

(3) அதனைத் தொடர்ந்து உடனடியாக பிரிவு 46(3) இன் அடிப்படையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியானது இப்பணிப்புரையுடன் இசைந்து நடக்கும் விதத்தில் இப்பணிப்புரையில் குறிப்பிட்டவாறு அவ்வங்கியில் இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட எல்லைகளுக்கு மேலாக பொருள்சார்ந்த நலவுரித்துக்களை வைத்திருக்கும் பங்குதாரர்கள், அவர்களின் வாக்களிக்கும் உரிமையுள்ள பங்குகளின் எண்ணிக்கையை நாணயச்சபையினால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் விற்பதற்கு மற்றும் அல்லது குறைப்பதற்கு வழிப்படுத்தல் வேண்டும்.

**இணக்கத்தை காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகள்**

8. பிரிவு 12(1)(இ) இன் அடிப்படையாயும் மற்றும் மேலே கூறப்பட்ட பணிப்புரைகள் 6 மற்றும் 7 என்பவற்றிற்கு அமைவாகவும் பிரிவுகள் 12(1இ) மற்றும் 46(1)(ஈ) இல் குறிக்கப்பட்ட யாராவது பங்குதாரர் பிரிவு 12(1)(இ) மற்றும்/ அல்லது இப்பணிப்புரைகளின் ஏற்பாடுகளுக்கு மாறாக செயற்பட்டிருந்தால் அவரின் பெயரினை உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று அவ்வங்கியில் பங்குகளை வைத்திருப்பவராக உறுப்பினர்கள் பதிவேட்டில் பதியலாகாது.

**பணிப்புரைகளை பிரயோகிக்காமை**

9. இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் விடயமொன்று பின்வருவனவற்றில் வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதனத்தின் உடமையை கட்டுப்படுத்துவதாக கருதப்படலாகாது.

(அ) 1938ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க இலங்கை வங்கிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பிரதேச இலங்கை வங்கி

(ஆ) 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மக்கள் வங்கி

(இ) அரசாங்கம் அல்லது பொதுக் கூட்டுத்தாபனமொன்று அல்லது நியதிச்சட்ட ஆயமொன்று பங்குகளின் பெரும்பான்மை உடமையைக் கொண்டிருக்கும் நியதிச் சட்டத்தினால் உருவாக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கி.

**முன்னைய பணிப்புரையின் அகற்றல்**

10. (1) 22 ஒத்தோபர் 1998 திகதியிடப்பட்ட 1998ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் (பங்கு மூலதன உடமை மற்றும் 5 மாச்சு 1999 திகதியிடப்பட்ட 1999ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணிப்புரைகள் (பங்கு மூலதன உடமை) என்பன இத்தால் அகற்றப்படுகின்றன.

(2) முன்னைய பணிப்புரைகள் அகற்றப்பட்டமையானது அகற்றப்படுவதற்கு முன்னால் இப்பணிப்புரைகளின் கீழ் ஏற்பட்ட ஏதேனும் தண்டம் அல்லது பொறுப்பில் தாக்கத்தினை ஏற்படுத்தமாட்டாது.

திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஓ(1) இன் கீழ் நாணயச்சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள்.

ஒப்பம்
**நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்**
ஆளுநர்

கொழும்பு
2007 சனவரி 19

**பணிப்புரைகள்**

**2007 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள்**
**வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதன உடமை**

2006 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1) இனால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைக்கிடுதலுக்கமைய நாணயச்சபையால் பின்வரும் பணிப்புரைகள் விடுக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டல்

1. இப்பணிப்புகள் 2007 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் என எடுத்துக் கூறப்படலாம். இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் 2006 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தினுடையதாக இருக்கும்.

பிரிவு 76ஜே(1) கீழ் அதிகாரமளிப்பு

2. பிரிவு 76ஜே(1) இன் பிரகாரம் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளோரினால் வைத்திருக்கக் கூடிய ஆகக்கூடிய பங்கு மூலதன சதவீதம் சார்ந்த பணிப்புரைகள் உள்ளடங்கலாக அவ்வாறான வங்கிகள் கொண்டு நடாத்த வேண்டிய வியாபாரத்தின் ஏதாவது அம்சத்தின் தன்மை தொடர்பிலான பணிப்புரைகளை உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளிற்கு வழங்குவதற்கு நாணயச்சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(i) கம்பனி ஒன்றினால், கூட்டு ஆயமொன்றினால் அல்லது தனியொருவரினால் வைத்திருக்கப்படுபவை

(ii) பின்வருவோரினால் கூட்டு மொத்தமாக வைத்திருக்கப்படுபவை

(அ) கம்பனி ஒன்றினால் மற்றும் பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை

(அஅ) அதனது துணை நிறுவனங்கள்

(ஆஆ) அதனது உடமைக் கம்பனி

(இஇ) அதனது உடமைக் கம்பனியின் ஓர் துணை நிறுவனம்; அல்லது

(ஈஈ) குறித்த கம்பனி அல்லது அதனது துணை நிறுவனம், அல்லது அதனது உடமைக் கம்பனி அல்லது அதனது உடமைக் கம்பனியின் துணை நிறுவனம் கணிசமான நலவுரித்துக்களை கொண்டுள்ள கம்பனி ஒன்று; அல்லது

(ஆ) தனியொருவரினால் மற்றும் பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை

(அஅ) தனியாளின் நெருங்கிய உறவினர்கள்

(ஆஆ) தனியொருவர் அல்லது தனியாளின் நெருங்கிய உறவினர் கணிசமான நலவுரித்துக்களைக் கொண்டுள்ள கம்பனியொன்று

(இஇ) அவ்வாறான கம்பனியின் துணை நிறுவனம்

(ஈஈ) அவ்வாறான கம்பனியின் உடமைக் கம்பனியொன்று

(உஉ) அவ்வாறான கம்பனியின் உடமைக் கம்பனியின் துணை நிறுவனமொன்று

(ஊஊ) அந்தக் கம்பனியில் அல்லது அதனது துணை நிறுவனத்தில் அல்லது உடமைக் கம்பனியில் ஒரு கணிசமான நலவுரித்துக்களை கொண்டுள்ள கம்பனி ஒன்று; அல்லது

(எஎ) அவ்வாறான தனியொருவர் அல்லது தனியாளின் நெருங்கிய உறவினர் ஒரு கணிசமான நலவுரித்துக்களைக் கொண்டுள்ள கம்பனியல்லாத கூட்டிணைக்கப்பட்ட ஆயமொன்றும்; அல்லது

(இ) தனியொருவர் அல்லது கம்பனி ஏதாவதொன்று நேரடியாகவோ மறைமுகமாகவோ அல்லது நன்மை பயக்கும் விதத்தில் ஒரு கணிசமான நலவுரித்துக்களை அல்லது குறிப்பிடத் தகுந்த முகாமைத்துவ நலவுரித்துக்களை கொண்டிருக்கும் கம்பனிகள் ஒவ்வொன்றும்.

**பங்கு மூலதன உடைமையின் ஆகக் கூடிய சதவீதம்**

3. (1) நாணயச்சபையின் எழுத்திலான முன் அனுமதியின்றி பிரிவு 76ஜே(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் பங்குதாரர் பிரிவினர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது நியமிக்கப்படுபவர் ஊடாகவோ அல்லது வேறு பங்குதாரர் பிரிவினருடனான/ பிரிவினர்களுடனான கூட்டு நடவடிக்கையின் மூலமோ எந்தவொரு எழுதப்பட்ட சட்டத்தின் கீழோ அல்லது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியொன்றில் வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதன உடமையில் 15 சதவீதத்தினை விஞ்சும் வகையில் வாக்களிக்கும் உரிமையுள்ள பங்குகளை வைத்திருக்கலாகாது.

(2) “கூட்டு நடவடிக்கை” என்பது வங்கியின் கட்டுப்பாட்டினை பெறுவதற்கு அல்லது ஒன்று திரட்டுவதற்கு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கி ஒன்றினுடைய வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் 15 சதவீதத்திற்கும் விஞ்சிய அளவினை கொள்வனவு செய்வதில் அல்லது வைத்திருப்பதில், ஒரு புரிந்துணர்வு அடிப்படையில் (முறை சார்ந்த அல்லது முறைசாரா) செயலூக்கத்துடனான கூட்டுச் செயற்பாட்டு நடவடிக்கையினை குறிக்கும்.

**விலக்களிப்புகள்**

4. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியொன்று மூலதனப் போதுமாந்தன்மையற்ற நிலையை, கடன் தீர் ஆற்றலற்ற நிலையை அல்லது சாத்தியமான முறிவடையும் நிலையை தவிர்ப்பதற்காக மீள்கட்டமைப்பினை வேண்டி நிற்கும் போது நாணயச்சபையானது, பொருத்தமாக இருக்குமென கருதக்கூடிய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக பிரிவு 76ஜே(1)(ட) இல் குறிக்கப்பட்டவாறு ஏதாவது பங்குதாரர் பிரிவினருக்கு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியொன்றில் 15 சதவீதத்திற்கு மேலதிகமாக வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தினை கொள்வனவு செய்வதற்கு அல்லது வைத்திருப்பதற்கும் அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட வழங்கப்பட்ட மூலதனம் நாணயச்சபையினால் தனித்தனி விடய அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லைக்குள் 15 சதவீதத்திற்கு குறைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்கு அமைவாகவும் அவ்வாறான காலப்பகுதி அனுமதியளிக்கப்பட்ட திகதியில் இருந்து ஐந்து வருடத்தினை விஞ்சாத வகையில் இருக்கும்படியுமாகவும் அனுமதியளிக்கப்படலாம்.

**தற்போதுள்ள உடமை தொடர்பான ஏற்பாடுகள்**

5. (1) பிரிவு 76ஜே(1)(ட) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது பங்குதாரர் பிரிவினர் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியொன்றில் 15 சதவீதத்திற்கும் மேலதிகமாக வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதனத்தின் உடமையை முன்னரே கொள்வனவு செய்திருந்ததுடன் இப்பணிப்புரைகள் திகதியில் அவற்றை வைத்தும் இருந்தால் அவை உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியின் வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதனத்தில் 15 சதவீதத்தை விஞ்சாத மட்டத்திற்கு விற்பதனூடாகவோ மற்றும் அல்லது வேறேதேனும் வழியிலோ அவ்வாறான பங்குதாரர்களினால் குறைக்கப்பட வேண்டும்.

(2) அவ்வாறான விற்பனை மற்றும் அல்லது குறைப்பானது நாணயச்சபையினால் தனித்தனி விடய அடிப்படையில் குறித்துரைக்கப்பட்ட கால எல்லையிலிருந்த 5 வருடத்தினை விஞ்சாத வகையில் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள்ள செயற்படுத்தப்பட வேண்டும்.

(3) பிரிவு 76ஜே(1)(ட) இல் குறிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு பங்குதாரர் பிரிவினர் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் நாணயச்சபையின் பணிப்புரைக்கு இசைந்து நடக்கத் தவறுமிடத்து இப்பணிப்புரைக்கு அமைய பங்குதாரர் பிரிவினரால் வைத்திருக்கப்படும் பங்குகளின் உடமைக்கு உரித்தாக்கப்படும் 15 சதவீதத்தினை விஞ்சிய வாக்களிக்கும் உரிமை, நாணயச்சபையினால் வாக்களிக்கும் உரிமையுள்ள பங்குகளின் உடமையைக் குறைப்பதற்கு குறித்தொதுக்கப்பட்ட காலத்தின் கடைசி நாளிலிருந்து வலிதற்றதாக கருதப்படும்.

**மாற்றத்திற்கு உள்ளாகும் ஏற்பாடுகள்**

6. (1) இப்பணிப்புரைகளின் திகதியிலிருந்து இரண்டு மாதங்களிற்குள் ஒவ்வொரு சிறப்பியல்பு வங்கியும் பிரிவு 76ஜே(1)(ட) இல் குறிப்பிடப்பட்டுள்ள பங்குதாரர் பிரிவினர் அவ்வங்கியில் வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதனத்தின் 15 சதவீதத்தினை விஞ்சும் அளவிற்கு வாக்களிக்கும் உரிமையுள்ள பங்கு மூலதனத்தின் உடமையை அவ்வங்கியில் கொண்டிருக்குமிடத்து நாணயச்சபையிடமிருந்து வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதனத்தை 15 சதவீத எல்லைக்கு கொண்டு வரும் நோக்கில் விற்பனை மற்றும் அல்லது குறைப்புச் செய்யப்பட வேண்டிய கால எல்லைக்கான பணிப்புரையை வேண்டி நிற்றல் வேண்டும்.

(2) அவ்வாறான தகவல் மற்றும் வேண்டுகோள் கிடைக்கப் பெற்று இரண்டு மாத காலப்பகுதிக்குள் நாணயச்சபையானது மேலே பணிப்புரை 5(2) இன் படி விற்பனை மற்றும் அல்லது குறைப்பு மேற்கொள்ளப்பட வேண்டிய கால எல்லையினை குறிப்பிடுவதுடன் அவை பற்றி உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிக்கு அறியத்தரும்.

(3) அதனைத் தொடர்ந்து உடனடியாக உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியானது இப்பணிப்புரையுடன் இசைந்து நடக்கும் விதத்தில் இப்பணிப்புரையில் குறிப்பிட்டவாறு அவ்வங்கியில் வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதனத்தில் 15 சதவீத எல்லையை விஞ்சிய அளவினை வைத்திருக்கும் பங்குதாரர்கள், அவர்களின் வாக்களிக்கும் உரிமையுள்ள பங்குகளின் எண்ணிக்கையை நாணயச்சபையினால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் விற்பதற்கு மற்றும் அல்லது குறைப்பதற்கு வழிப்படுத்தல் வேண்டும்.

இணக்கத்தை காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகள்

7. மேலே கூறப்பட்ட பணிப்புரைகள் 5 மற்றும் 6 என்பவற்றிற்கு அமைவாக பிரிவு 76ஒ(1)(கியு) இல் குறிக்கப்பட்ட யாராவது பங்குதாரர் இப்பணிப்புரைகளின் ஏற்பாடுகளுக்கு மாறாக செயற்பட்டிருந்தால் அவரின் பெயரினை உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியொன்று அவ்வங்கியில் பங்குகளை வைத்திருப்பவராக உறுப்பினர்கள் பதிவேட்டில் பதியலாகாது.

பணிப்புரைகளை பிரயோகிக்காமை

8. இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் விடயமொன்று பின்வருவனவற்றில் வாக்களிக்கும் உரிமையுள்ள வழங்கப்பட்ட மூலதனத்தின் உடமையை கட்டுப்படுத்துவதாக கருதப்படலாகாது.

(அ) 1997ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பிரதேச அபிவிருத்தி வங்கி

(ஆ) அரசாங்கம் அல்லது பொதுக் கூட்டுத்தாபனமொன்று அல்லது நியதிச்சட்ட ஆயமொன்று பங்குகளின் பெரும்பான்மை உடமையைக் கொண்டிருக்கும் நியதிச் சட்டத்தினால் அல்லது 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கி.

முன்னைய பணிப்புரையின் கைமீட்பு

9. (1) வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஒ(1) இன் கீழான 23.11.1999 திகதியிடப்பட்ட 1999ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் (பங்கு மூலதன உடமை - உரிமை பெற்ற சிறப்பியல்பு வங்கிகள்) இத்தால் அகற்றப்படுகின்றன.

(2) முன்னைய பணிப்புரைகள் அகற்றப்பட்டமையானது அகற்றப்படுவதற்கு முன்னால் இப்பணிப்புரைகளின் கீழ் ஏற்பட்ட ஏதேனும் தண்டம் அல்லது பொறுப்பில் தாக்கத்தினை ஏற்படுத்தமாட்டாது.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1)இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

ஒப்பம்
**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
ஆளுநர்

கொழும்பு
2007 பெப்புருவரி 20

**பணிப்புரைகள்**

**2007ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள்**
**கொடுகடன்களின் அதிகூடிய தொகை**

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) இனாலும், இறுதியாக திருத்தப்பட்டவாறு 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினாலும் அளிக்கப்பட்ட அதிகாரத்தை நடைமுறைக்கிடுதலுக்கமைய நாணயச்சபையால் பின்வரும் பணிப்புரைகள் விடுக்கப்படுகின்றன.

எடுத்துக் காட்டல்

1. இப்பணிப்புரைகள் 2007ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளாக குறிப்பிடலாம். இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட பிரிவுகள் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் மற்றும் இறுதியாக திருத்தப்பட்டவாறு 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திலும் காணப்படுவனவாகும்.

46(1)இன் கீழ் அதிகாரமளிப்பு

2. பிரிவு 46(1)இன் நியதிகளின்படி, வங்கித்தொழில் முறைமையினுடைய உறுதித்தன்மையினை உறுதி செய்யும் பொருட்டு, நாணயசபையானது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அத்தகைய வங்கிகளுடைய வியாபாரங்களின் ஏதாவது விடயம் தொடர்பில் பணிப்புரைகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அத்தகைய அனுமதியளிக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கிகளுடைய உரிமை மூலதனம், ஒதுக்குகள் மற்றும் வைப்புக்கள் தொடர்பில்

(i) ஏதாவது தனிக்கம்பனி, அரச கூட்டுத்தாபனம், நிறுவனம், தனிப்பட்டவர்களை கொண்ட அமைப்பு அல்லது ஒரு தனிநபர்; அல்லது

(ii) கூட்டு மொத்தத்தில் -

(அ) ஒரு தனியாள், அவரது நெருங்கிய உறவினர் அல்லது அவர் கணிசமான அக்கறையினை கொண்டுள்ள ஒரு கம்பனி அல்லது நிறுவனம்;

(ஆ) ஒரு கம்பனி மற்றும் பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை:-

(அஅ) அதனுடைய துணை நிறுவனங்கள்
(ஆஆ) அதனுடைய உடமைக் கம்பனி
(இஇ) அதனுடைய இணைக் கம்பனி
(ஈஈ) அதனுடைய உடமைக் கம்பனியின் ஓர் துணை நிறுவனம்; அல்லது
(உஉ) குறித்த கம்பனி அல்லது அதனுடைய துணை நிறுவனம், அல்லது அதனுடைய உடமைக் கம்பனி அல்லது அதனுடைய உடமைக் கம்பனியின் ஓர் துணை நிறுவனம் கணிசமான நலவுரித்துக்களை கொண்டிருக்கக்கூடிய ஓர் கம்பனி, ஆகியோருக்கு வழங்கக்கூடிய கொடுகடன்களின் அதிகூடிய தொகை மற்றும் ஏனைய தொடர்புடைய கருத்தில் கொள்ளாத தன்மைகள் தொடர்பிலான பணிப்புரைகள் வழங்குவதையும் இது உள்ளடக்குகிறது.

வரைவிலக்கணங்கள் மற்றும் பிரிவுகள் 46(1)(இ)இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் களுக்கான கொடுகடன்களின் அதிகூடிய வரையறைகள்

3. (1) அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளால் வழங்கப்படக்கூடிய கொடுகடன்களின் அதிகூடிய தொகைகள் அத்தகைய அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் அடிப்படை மூலதனத்தின் பின்வரும் வீதங்களுக்கு மேற்படலாகாது.

(அ) பிரிவு 46(1) (இ) (i) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் தொடர்பில் 30 சதவீதம்.

(ஆ) பிரிவு 46(1) (இ) (ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் தொடர்பில் 33 சதவீதம்.

(2) பிரிவு 86 இற்காக வரைவிலக்கணப்படுத்தப்பட்டதற்கும் மற்றும் வழங்கப்பட்டதற்கும் அமைவாக, கொடுகடன்கள் என்பதால் கருதப்படுவது ஏதாவது கடன், மேலதிகப்பற்றுக்கள் அல்லது நிதி குத்தகைகள், வாடகைக் கொள்வனவுகள் மற்றும் கடன் பிணையங்கள், முறிகள் மீதான முதலீடுகள் மற்றும் ஏனைய கடன் சாதனங்களுக்கு எதிரான மறு மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் என்பவற்றை உள்ளடக்கிய மற்றும் முற்பணங்கள் ஏதாவது கடன், மேலதிக

பற்றுக்கள் அல்லது முற்பணங்கள் அல்லது நிகழத்தக்க பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கான பொறுப்பளித்தல்களை உள்ளடக்கிய அத்தகைய ஏனைய வசதிகள்.

(3) இப்பணிப்புரையின் நோக்கங்களுக்காக,

(அ) ஏதாவது ஓர் தரப்பட்ட நேரத்தில் ஏற்கனவேயுள்ள ஒட்டு மொத்த கொடுகடன் எல்லைகள் அல்லது அனைத்து கொடுகடன் வெளிநின்ற தொகை ஆகியவற்றில் எது கூடுதலானதோ அவை கொடுகடன்களின் ஒட்டுமொத்த தொகையாக கணிக்கப்படும்.

(ஆ) ஒரு கடன், மேலதிக பற்றுக்கள் அல்லது நிதி குத்தகைகள், வாடகைக் கொள்வனவுகள் மற்றும் கடன் பிணையங்கள், முறிகள் மீதான முதலீடுகள் மற்றும் ஏனைய கடன் சாதனங்களுக்கெதிரான நேர்மாறான மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் என்பவற்றை உள்ளடக்கிய முற்பணங்கள் தொடர்பாக கடன்வசதிகளுடைய வெளிநின்ற தொகை என்பது மூலதன வெளிநின்ற தொகைகளாக கருதப்படும்.

(இ) பொறுப்பளித்தல்களின் வடிவில் வழங்கப்பட்ட கொடுகடன்களின் கூட்டு மொத்த தொகையானது நாணய சபையால் மூலதனப் போதுமாந்தன்மை வீதத்தை பேணுதல் தொடர்பாக நாணயசபையால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் கீழ் மூலதனப் போதுமாந்தன்மை கணிப்பீட்டில் அத்தகைய பொறுப்பளித்தல்களுக்காக பிரயோகித்த கடன் மாற்று காரணிகளை பயன்படுத்தி கணிப்பிடப்பட்ட கொடுகடன் சமப்பாட்டு தொகையை அடிப்படையாய் கொண்டு பெறலாம்.

(ஈ) மூலதனத்தளம் என்பதால் கருதப்படுவது, நாணயச்சபையால் மூலதனப் போதுமை விகிதத்தை பேணுவதற்காக வழங்கப்பட்ட பணிப்புரைகளின் கீழ் கணிக்கப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தின் மூலதனத்தள பிரயோகமாகும். உடனடி முன்னைய காலாண்டின் நிறைவில் உள்ளவாறான மூலதனத்தளத்தினை இப்பணிப்புரையின் கீழ் கடன் வசதிகளின் அதிகூடிய தொகைக்கான வரையறைக் கணிப்பீட்டுக்காக பிரயோகிக்க முடியும் மற்றும் அத்தகைய மூலதனத்தளம் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் கணக்காய்வாளரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.

பிரிவு 46(1)(இ) (ii)இல் குறிப்பிட்ட வாடிக்கையாளர்களின் கூட்டு மொத்த கொடுகடன்களின் வரையறைகளுக்கான அதிகரிப்பு

4. (1) மேலே கூறப்பட்ட பணிப்புரை 3(1)(இ) இன் விதிகளுக்கு புறம்பாக ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி பிரிவு 46(1) (இ) (ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளருக்கு அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் மூலதனத்தளத்தின் 33 சதவீதத்திலும் மேலதிகமான கொடுகடன்களை, மூலதனப் போதுமை விகிதம் மற்றும் அதனுடைய சொந்த கடன் தரமிடலுக்காக ஒதுக்கீடு செய்யும் கணிப்பீடுகளின் கூட்டு மொத்தம் மற்றும் பிரிவு 46(1) இ (ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர்களுடைய பிடிப்பு கம்பனிகளுடைய கொடுகடன் தரமிடல் என்பவற்றின் அடிப்படையில் வழங்க முடியும். இப்பணிப்புரைகளின் நோக்கத்துக்காக பிரிவு 46(1) இ (ii) இன் கீழ் கூட்டு மொத்தமாக்கப்பட்ட கொடுகடன்களுடைய கம்பனிகளுக்கிடையில் தொடர்புகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் பிடிப்பு கம்பனியை நோக்கி செல்லாது அத்தகைய கூட்டு மொத்தத்தில் உள்ளடங்கும் ஒதுக்கீடு செய்த கம்பனிகளுடைய அதிகுறைந்த கடன் தரமிடலை கவனத்தில் கொள்ள முடியும்.

(2) மேலே பணிப்புரை 4(1) இல் குறிப்பிடப்பட்ட கணிப்பீடுகளை பின்வருமாறு ஒதுக்கீடு செய்யலாம்.

(3) மேலே பணிப்புரை 4(1) மற்றும் 4(2) இனுடைய நோக்கத்திற்காக கவனத்திற் கொள்ளப்படக்கூடிய கடன்

| வங்கியின் தரமிடல் | வாடிக்கையாளரின் கடன் தரமிடல் | வங்கியின் மூலதனப் போதுமை விகிதம் | ஒவ்வொரு நிரலுக்குமாக ஒதுக்கீடு செய்த கணிப்பீடு |
|---|---|---|---|
| AAA இருந்து AA- அல்லது சமனானவை | AAA இருந்து AA- அல்லது சமனானவை | > 12 | 1 |
| A+ இருந்து A- வரை அல்லது சமனானவை | A+ இருந்து A- வரை அல்லது சமனானவை | 11% - 12% | 2 |
| BBB+ அல்லது சமனானது மற்றும் குறைவானது | BBB+ அல்லது சமனானது மற்றும் குறைவானது அல்லது தரமிடப்படாதது | 10% - <11% | 3 |

தரமிடலானது பின்னிணைப்பு (1) இல் அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுகடன் தரமிடல் முகவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படலாம். அத்துடன் அவை உயர்த்தப்பட்ட வரையறைகளின் கொடுகடன்களை வழங்குதலின் கடந்த 15 மாதங்களுக்குள் பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.

(4) மேலே பணிப்புரை 4(1) மற்றும் 4(2) இல் குறிப்பிடப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தால் கருதப்படுவது மூலதனப் போதுமை விகிதத்தை பேணுவது பற்றி நாணயச்சபையால் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் கீழ் முடிவடைந்த உடனடி முன்னைய காலாண்டுக்காக கணிப்பிடப்பட்ட கூட்டு மொத்த மூலதனப் போதுமை விகிதமாகும்.

(5) மேலே பணிப்புரை 4(1) இன் கீழ், பிரிவு 46(1) இ (ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளருக்கு ஓர் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கியால் வழங்கப்படக்கூடிய கொடுகடன்களின் அதிகூடிய தொகையின் அளவு மேலே பணிப்புரை 4(2) இல் குறிப்பிடப்பட்ட அட்டவணையின் பிரகாரம் மூன்று நிரலுக்காக ஒதுக்கு செய்யப்பட்ட கணிப்பீடுகளின் கூட்டு மொத்தத்தை அடிப்படையாகக் கொண்டு அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினுடைய மூலதன தளத்தின் பின்வரும் சதவீதங்களை விஞ்சக்கூடாது.

(அ) கணிப்பீடுகளின் கூட்டு மொத்தம் 3 இற்கும் 5 இற்கும் இடைப்பட்டதாயின் 40 சதவீதம்.

(ஆ) கணிப்பீடுகளின் கூட்டு மொத்தம் 6 இற்கும் 8 இற்கும் இடைப்பட்டதாயின் 36 சதவீதம்.

குறிப்பிட்ட வரையறைகளுக்கு மேற்பட்ட கொடுகடன்களுக்கு நாணயசபையின் அனுமதி

5. (1) மேலே கூறப்பட்ட பணிப்புரை 3 மற்றும் 4 இனுடைய விதிகளுக்கு மாறாக ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியானது நாணய சபையினுடைய முன் அனுமதி கோரி பெற்றுக் கொண்டதற்கிணங்க பிரிவு 46(1) இ(i) மற்றும் 46(1) இ(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் பகுதியினருக்கு பணிப்புரை 3 மற்றும் 4 இன் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகூடிய வரையறைகளுக்கு மேலாக கொடுகடன்களை வழங்கலாம். நாணயசபையானது அத்தகைய அனுமதிகளை விடயத்திற்கு விடய அடிப்படையில் தேசிய முன்னுரிமைகள் மற்றும்/ அல்லது தேசிய நலன்களின் சந்தர்ப்பங்களை கவனத்தில் கொண்டும் அத்தகைய உயர் தரப்பட்ட கொடுகடன்களின் தாக்கத்திலிருந்து எழக்கூடிய எதிர் நேரிடக்கூடிய இடர்நேர்வுகளுக்கு அல்லது அந்த உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் இயலுமையை கவனத்தில் கொண்டு இதனால் பொருந்தும் எனக் கருதுகின்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்கு அத்தகைய கொடுகடன்களிலிருந்து எழுகின்ற இடர்நேர்வுகளின் மதிப்பீட்டை விரிவாக ஆராய்ந்து நாணயச்சபையிடமிருந்து அனுமதியை எதிர்பார்க்கும் போது அந்த உரிமம் பெற்ற வர்த்தக வங்கியால் அம் மதிப்பீடு நாணயச்சபைக்கு வழங்கப்படும் என்ற அடிப்படையில் விதிக்கப்பட்டு வழங்கப்படலாம்.

(2) மேலே கூறப்பட்ட பணிப்புரை 5(1) இனை கருத்திற் கொண்டு ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி பிரிவுகள் 46(1) (இ) (i) மற்றும் 46(1) (இ) (ii) இல் குறித்துரைக்கப்பட்ட வாடிக்கையாளர்களுடைய பகுதியினருக்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியினுடைய மூலதனத்தளத்தின் 50 சதவீத வரையான கடன் வசதிகளை, இத்தோடு இணைக்கப்பட்ட இணைப்பு 2 இல் குறிப்பிடப்படும் உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான ஆரம்பித்தல் அல்லது விரிவாக்கல் நோக்கத்துக்கான நேரடி நிதியிடல் நோக்கத்திற்கான வழங்கல் முறை.

(அ) இலங்கையில் ஓர் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் நேரடியாக தொடர்ந்தும் ஒப்பந்த வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக அளிக்கப்படல் வேண்டும்.

(ஆ) அத்தகைய நிகழ்ச்சித்திட்டமானது ஆகக் குறைந்தது 50 சதவீதம், இலங்கைக்கு வெளியேயான மூலங்களின் மூலமாக வங்கியால் வழங்கப்படும் கடன் பெறுகைகள் தவிர அனுமதியளிக்கப்பட்ட வங்கிகளின் கூட்டால் நிதியிடப்பட வேண்டும்.

6. பிரிவுகள் 46(1) (இ) (i) மற்றும் 46(1) (இ) (ii)இல் குறித்துரைக்கப்பட்ட ஏதாவது வாடிக்கையாளர் வகுதியினருக்கு மேலே பணிப்புரைகள் 3 மற்றும் 4 இன் கீழ் கடன் பெறுதிகளின் அதிகூடிய தொகைகளை கணிக்கும் போது கடன் வசதிகளின் கூட்டு மொத்தத்திலிருந்து பின்வரும் கடன் வசதிகளை விலக்கிக் கொள்ள முடியும்.

கடன் வசதிகளிலிருந்தான விலக்களிப்புக்கள்

(அ) பணம், தங்கம், அரச பிணையங்கள், மத்திய வங்கி பிணையங்கள், திறைசேரி உத்தரவாதங்கள், மத்திய வங்கி உத்தரவாதங்கள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி கூட்டமைப்பு அல்லது நாணயச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது ஏனைய சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றால் வழங்கப்படும் உத்தரவாதங்கள் என்பவற்றின் எதிராக வழங்கப்படும் கடன் வசதிகள்.

(ஆ) பின்வருவனவற்றை கருத்துக் கொண்டு இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கியால் உத்தரவாதங்கள் அல்லது நாணயச்சபையால் ஏற்றுக்கொள்ளத்தக்க அதையொத்த சாதனங்களுக்கு எதிராக வழங்கப்படும் கடன் சாதனங்கள்.

(i) AAA தொடக்கம் A- வரையான அல்லது அதற்கு சமனான கொடுகடன் தரமிடலை கொண்டிருக்கும் வங்கியால் வழங்கப்படும் உத்தரவாதம்.

(ii) AAA தொடக்கம் AA- அல்லது சமனானதுமான கொடுகடன் தரமிடலையுடைய வங்கியால் வழங்கப்படும் உத்தரவாதங்களையுடைய சந்தர்ப்பத்தில் கொடுகடன்களின் 80 சதவீதத்தையும் A+ தொடக்கம் A- அல்லது சமமானதுமான கொடுகடன் தரமிடலைக் கொண்ட வங்கியின் சந்தர்ப்பத்தில் 50 சதவீதத்தையும் கொடுகடன் கணிப்பீட்டிலிருந்து நீக்கம் செய்தல் முடியும்.

(iii) அத்தகை ய சந்தர்ப்பம் அனைத்தினதும் தொடர்பில் நீக்கம் செய்யக்கூடிய எல்லாக் கொடுகடன்களுடைய கூட்டு மொத்தத் தொகையற்ற வர்த்தக வங்கியின் அடிப்படை மூலதனத்தின் 100 சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது.

(iv) உத்தரவாதத்தை வழங்குகின்ற வங்கியின் கொடுகடன் தரமிடலானது கடன் வழங்கலிலிருந்து 5 மாதத்திற்குள் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதை வர்த்தக வங்கியானது திருப்திப்பட்டுக் கொள்ள

வேண்டும். அத்துடன் அத்தகைய கொடுகடன் தரமிடலில் ஏதாவது மாற்றம் இடம் பெறுமாயின் கொடுகடன் உடனடியாக மீளமைக்கப்பட வேண்டும்.

அதிகூடிய வரையறைகளிலிருந்து விலக்கப்பட்ட நபர்கள்/ நிறுவனங்கள்

7. இந்த பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட கொடுகடன்களின் அதிகூற்று எல்லைகளானது பின்வரும் நபர்களுக்கு/ நிறுவனங்களுக்கு பிரயோகிக்கப்படமாட்டது.

(அ) இலங்கை அரசாங்கம்.

(ஆ) ஆகக் கூடுதலாக இந்த பணிப்புரைகளின் திகதியிலிருந்து இரண்டு வருடங்களுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை.

(இ) இரண்டு வருடங்களுக்கு உட்பட்ட முதிர்வு காலத்தைக் கொண்ட கொடுகடன் வழங்குதல் தொடர்பில் ஏனைய அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள்.

பாரிய கொடுகடன்களின் கூட்டு மொத்த வரையறை

8. (1) உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் அடிப்படை மூலதனத்தில் 15 சதவீதத்தை விஞ்சும் வகையில், கொடுகடன்களை கொண்ட பிரிவுகள் 46(1) இ (i) மற்றும் 46(1) இ (ii) ஒவ்வொன்றினாலும் குறிப்பிடப்படும் வாடிக்கையாளர் வகைகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன்களின் கூட்டு மொத்தமானது உடனடியாக தொடர்ந்து வந்த காலத்தின் இறுதியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியால் வழங்கப்பட்ட கொடுகடன்களின் ஒட்டு மொத்த வெளிநின்ற தொகைகளின் 55 சதவீதத்தை விஞ்சக்கூடாது.

(2) இப்பணிப்புரையின் நோக்கத்துக்காக,

(அ) ஒட்டுமொத்த கொடுகடன்களின் வெளிநின்ற தொகையானது மேலே பணிப்புரை 3(3) இல் வரையறுக்கப்பட்டவாறு அனைத்து கொடுகடன்களின் வெளிநின்ற தொகைகளினை உள்ளடக்குவதுடன் மேலே பணிப்புரை 7 (அ) இல் குறிப்பிடப்பட்ட கொடுகடன்களை விலக்குகின்றது, மற்றும்

(ஆ) மொத்த கொடுகடன்களின் தொகையானது, மேலே பணிப்புரை 8(1) இல் குறித்துரைக்கப்பட்ட அனைத்து வாடிக்கையாளருக்கும் பணிப்புரை 3(3) இல் குறிப்பிடப்பட்ட கொடுகடன்களை உள்ளடக்குவதுடன் மேலே பணிப்புரை 7 (அ) இல் குறிப்பிடப்பட்ட கொடுகடன்கள் விலக்குகின்றது.

கொடுகடன்களின் மீளாய்வு

9. (1) பிரயோகிக்கத்தக்க கொடுகடன் எல்லையின் குறைத்தல் காரணமாக ஓர் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட கொடுகடன்களை மீளாய்வு செய்ய வேண்டிய சந்தர்ப்பத்தில், அடுத்த கொடுகடன் மீளாய்வு திகதி அல்லது ஆறு மாதங்கள் இவற்றில் முன்னதாக ஏற்படும் திகதியில் வழங்கப்பட்ட கொடுகடன் குறைக்கப்படலாம்.

(2) ஏதாவது வாடிக்கையாளருக்கிடையிலான ஓர் இணைப்பு அல்லது கையகப்படுத்தல் பிரயோகித்திலுள்ள அதிகூடிய கொடுகடன்களின் தொகையில் மேலதிகத்தை உருவாக்கும் சந்தர்ப்பத்தில், உரிமம் பெற்ற வர்த்தக வங்கியானது அத்தகைய இணைப்பு அல்லது கையப்படுத்தல் திகதியிலிருந்து ஆறுமாத காலத்திற்குள் குறித்த கொடுகடன்களை பிரயோகித்த எல்லைக்கு குறைக்க முடியும்.

மாற்றத்திற்கு உள்ளாக்கும் ஏற்பாடுகள்

10. (1) இப்பணிப்புரைகளின் திகதியில் பிரிவுகள் 46(1) இ(i) மற்றும் 46 (1) இ(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் பகுதியினர் எவர்க்கேனும் வழங்கப்பட்ட கொடுகடன்கள் இப்பணிப்புரையில் குறிப்பிடப்பட்ட எல்லைகளை விஞ்சும் சந்தர்ப்பத்தில், அத்தகைய அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் இப்பணிப்புரைத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அத்தகைய கொடுகடன்களை குறித்த எல்லைகளுக்கு குறைத்துக் கொள்ள முடியும்.

(2) 2005இன் இல. 4 தனி கடன் பெறுநர் எல்லை பணிப்புரை, வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளால் திருத்தப்பட்டவாறு 2005 இன் இல. 2 இன் வங்கித்தொழில் சட்ட தனி கடன் பெறுநர் எல்லை பணிப்புரைகளில் பந்தி 6(1)(2) (ii) இன் நியதிகளின்படி இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியால் தலைமை அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட உத்தவாதத்திற்கெதிராக வழங்கப்பட்ட ஏதாவது கொடுகடன்கள் ஒப்பந்தக் காலத்தின் முடிவுரை அல்லது 11 ஓகத்து 2007 இவற்றில் முன்னர் வருகின்ற திகதி வரை தொடர முடியும்.

பணிப்புரைகளுடன் இணங்கி நடப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

11. ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி இத்தகைய பணிப்புரைகளை மீறுகின்றது என நாணயசபை கருதுகின்ற போது மற்றும் அத்தகைய மீறுதல்களின் கருத்துக்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்கு கூறப்பட்ட சந்தர்ப்பத்தில் அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மீறுகைகளை திருத்தும் அத்தகைய திருத்தங்கள் வங்கி மேற்பார்வையாளர் திணைக்கள பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்படும் வரை பங்கிலாபங்களை செலுத்த அல்லது இலாபங்களை வெளியே அனுப்ப முடியாது.

முன்னைய பணிப்புரைகளின் அகற்றல்கள்

12. (1) 7 மாச்சு 2005 ஆம் திகதியிடப்பட்ட 2005இல் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தனி கடன் பெறுநர் எல்லை பணிப்புரைகள் மற்றும் 27 ஒத்தோபர் 2005, 28 யூன் 2006 மற்றும் 11 ஓகத்து 2006 திகதியிடப்பட்ட 2005இன் 4ஆம் இலக்க சுற்றறிக்கைகள் இத்தால் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) முன்னைய பணிப்புரைகளின் மற்றும் சுற்றறிக்கைகளின் நீக்கம் அதற்கு முன்னர் அத்தகைய பணிப்புரையின் கீழ் விதித்த ஏதாவது தண்டத்தில் அல்லது பொறுப்புக்களில் தாக்கத்தை ஏற்படுத்தாது.

**இணைப்பு 1**

## பணிப்புரைகள்

## 2007 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் கொடுகடன்களின் அதிகூடிய தொகை

## நாணயசபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொடுகடன் தரமிடல் முகவர்களின் அட்டவணை

1. பிச் றேட்டிங்ஸ் லங்கா லிமிட்டெட்
2. லங்கா றேட்டிங் ஏஜென்சி லிமிட்டெட்
3. ஸ்ராண்டட் சார்ட்டட் அன்ட் புவர்ஸ்
4. மூடிஸ் இன்வஸ்ரேஸ் சேர்விஸ்
5. கிறடிட் றேட்டிங் இன்போமேசன் சேர்விஸ் ஒவ் இந்தியா
6. இன்வஸ்மென் இன்போமேசன் அன்ட் கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி
7. பிச் றேட்டிங்ஸ் இந்தியா லிமிட்டெட்
8. பாகிஸ்தான் இன்ரநஷனல் கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி
9. றேட்டிங் ஏஜென்சி மலேசியா
10. யப்பான் கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி லிமிடெட்
11. காலத்துக்குக் காலம் நாணயசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது ஏனைய கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி

**இணைப்பு 2**

## பணிப்புரைகள்

## 2007 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் கொடுகடன்களின் அதிகூடிய தொகை

## உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களின் வரைவிலக்கணம்

அபிவிருத்தி அல்லது தொழிற்படுத்தல் மற்றும் பேணுதல் அல்லது கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட ஏதாவது உட்கட்டமைப்பு வசதியினை அபிவிருத்தி செய்தல், செயற்படுத்துதல், தரமுயர்த்தல் மற்றும் பேணுதல் போன்ற ஏதாவது செயற்றிட்டங்கள் மேலே உள்ள பணிப்புரைகளின் பணிப்புரை 8 (ஈ) இன் கீழான கொடுகடன்களுக்கான தகமையுடையனவாக உள்ள பணிப்புரையில் குறிப்பிடப்பட்டவாறு கொடுகடன்களினது செயற்றிட்டத்தில் நேரடிச் செலவினை மேற்கொள்ளும் நோக்கத்துக்காக இருக்க வேண்டும். அத்துடன் இவை ஏனைய வங்கிகளால் அல்லது நிதியியல் நிறுவனங்கள் அல்லது ஏற்கனவே செயற்பாட்டிலுள்ள ஓர் செயற்றிட்டத்தின் கொள்வனவு செய்வதற்கான கிரயத்தை சந்திப்பதற்கு ஏதாவது ஏற்கனவே வழங்கப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்த வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்க முடியாது.

(i) சுங்க வீதிகள் உட்பட்ட வீதி, பாலம் அல்லது புகைவண்டி அமைப்பு

(ii) நெடுஞ்சாலை செயற்றிட்டத்தின் முக்கிய பகுதியாக விளங்கும் ஏனைய நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு நெடுஞ்சாலைச் செயற்றிட்டம்

(iii) துறைமுகம், வானூர்தி, உள்நாட்டு நீர்வழி அல்லது உள்நாட்டு துறைமுகம்

(iv) நீர் வழங்கல் செயற்றிட்டம், நீர்ப்பாசனச் செயற்றிட்டம், நீர் சுத்திகரிப்பு முறை, சுகாதாரம் மற்றும் வடிகாலமைப்பு அல்லது திண்ம கழிவு முகாமைத்துவ அமைப்பு

(v) வானொலி, பேஜிங், தூர இடங்களுக்கான வலையமைப்பு, அகன்ற வழிகளைக் கொண்ட வலையமைப்பு மற்றும் இணையத்தள வசதிகள் உள்ளிட்ட அடிப்படை அல்லது செலூலர் எதனையும் கொண்ட தொலைத்தொடர்பூட்டல் பணிகள்

(vi) கைத்தொழில் பூங்கா அல்லது சிறப்பு பொருளாதார வலயம்

(vii) வலு உருவாக்கம் அல்லது வலு உருவாக்கமும் விநியோகமும்

(viii) புதிய மின்கடத்தலின் வலையமைப்பினை அல்லது விநியோக வழிகளை ஏற்படுத்துவதன் மூலமாக வலுவினைக் கொண்டு செல்லல் அல்லது விநியோகித்தல்

(ix) வேளாண்மை பொருட்களைப் பதனிடுவதுடன் தொடர்பான செயற்றிட்டங்களுடன் தொடர்பான கட்டுமானம் மற்றும் வேளாண்மைக்கான உள்ளீடுகளை வழங்குதல்

(x) கல்விசார் நிறுவனங்களையும் வைத்தியசாலைகளையும் நிருமாணித்தல்

(xi) இதே தன்மைகளைக் கொண்ட வேறு ஏதாவது வசதிகள்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1)இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

ஒப்பம்
**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
ஆளுநர்

கொழும்பு
2007 பெப்புருவரி 20

**பணிப்புரைகள்**

**2007ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள்**
**கொடுகடன்களின் அதிகூடிய தொகை**

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1) இனாலும், இறுதியாக திருத்தப்பட்டவாறு 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினாலும் அளிக்கப்பட்ட அதிகாரத்தை நடைமுறைக்கிடுதலுக்கமைய நாணயச்சபையால் பின்வரும் பணிப்புரைகள் விடுக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டல்

1. இப்பணிப்புரைகள் 2007ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளாக குறிப்பிடலாம். இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட பிரிவுகள் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் மற்றும் இறுதியாக திருத்தப்பட்டவாறு 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திலும் காணப்படுவனவாகும்.

76ஜே (1)இன் கீழ் அதிகாரமளிப்பு

2. பிரிவு 76ஜே(1)இன் நியதிகளின்படி, வங்கித்தொழில் முறைமையினுடைய உறுதித்தன்மையினை உறுதி செய்யும் பொருட்டு, நாணயசபையானது உரிமம் பெற்ற விசேட வங்கிகளுக்கு அத்தகைய வங்கிகளுடைய வியாபாரங்களின் ஏதாவது விடயம் தொடர்பில் பணிப்புரைகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அத்தகைய அனுமதியளிக்கப்பட்டுள்ள வியாபார வங்கிகளுடைய உரிமை மூலதனம், ஒதுக்குகள் மற்றும் வைப்புக்கள் தொடர்பில்

(i) ஏதாவது தனிக்கம்பனி, அரச கூட்டுத்தாபனம், நிறுவனம், தனிப்பட்டவர்களை கொண்ட அமைப்பு அல்லது ஒரு தனிநபர்; அல்லது

(ii) கூட்டு மொத்தத்தில் -

(அ) ஒரு தனியாள், அவரது நெருங்கிய உறவினர் அல்லது அவர் கணிசமான அக்கறையினை கொண்டுள்ள ஒரு கம்பனி அல்லது நிறுவனம்;

(ஆ) ஒரு கம்பனி மற்றும் பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை:-

(அஅ) அதனுடைய துணை நிறுவனங்கள்
(ஆஆ) அதனுடைய உடமைக் கம்பனி
(இஇ) அதனுடைய இணைக் கம்பனி
(ஈஈ) அதனுடைய உடமைக் கம்பனியின் ஓர் துணை நிறுவனம்; அல்லது
(உஉ) குறித்த கம்பனி அல்லது அதனுடைய துணை நிறுவனம் அல்லது அதனுடைய உடமைக் கம்பனி அல்லது அதனுடைய உடமைக் கம்பனியின் ஓர் துணை நிறுவனம் கணிசமான நலவுரித்துக்களை கொண்டிருக்கக்கூடிய ஓர் கம்பனி, ஆகியோருக்கு வழங்கக்கூடிய கொடுகடன்களின் அதிகூடிய தொகை மற்றும் ஏனைய தொடர்புடைய கருத்தில் கொள்ளாத தன்மைகள் தொடர்பிலான பணிப்புரைகள் வழங்குவதையும் இது உள்ளடக்குகிறது.

மேலே பந்தி 2(i) மற்றும் 2(ii) இல் குறிப்பிட்ட வாடிக்கையாளர்களின் கூட்டு மொத்த கொடுகடன்களின் வரையறைகளுக்கான அதிகரிப்பு

3. (1) அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கிகளால் வழங்கப்படக்கூடிய கொடுகடன்களின் அதிகூடிய தொகைகள் அத்தகைய அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் அடிப்படை மூலதனத்தின் பின்வரும் வீதங்களுக்கு மேற்படலாகாது.

(அ) மேலே பந்தி 2(i) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் தொடர்பில் 30 சதவீதம்.

(ஆ) மேலே பந்தி 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் தொடர்பில் 33 சதவீதம்.

(2) பிரிவு 86 இற்காக வரைவிலக்கணப்படுத்தப்பட்டதற்கும் மற்றும் வழங்கப்பட்டவாறாக, கொடுகடன்கள் என்பதால் கருதப்படுவது ஏதாவது கடன், மேலதிகப்பற்றுக்கள் அல்லது நிதி குத்தகைகள், வாடகைக் கொள்வனவுகள் மற்றும்

கடன் பிணையங்கள், முறிகள் மீதான முதலீடுகள் மற்றும் ஏனைய கடன் சாதனங்களுக்கு எதிரான மறு மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் என்பவற்றை உள்ளடக்கிய முற்பணங்கள் ஏதாவது கடன், மேலதிக பற்றுக்கள் அல்லது முற்பணங்கள் அல்லது நிகழத்தக்க பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கான பொறுப்பளித்தல்களை உள்ளடக்கிய அத்தகைய ஏனைய வசதிகள்.

(3) இப்பணிப்புரையின் நோக்கங்களுக்காக,

(அ) ஏதாவது ஓர் தரப்பட்ட நேரத்தில் ஏற்கனவேயுள்ள ஒட்டு மொத்த கொடுகடன் எல்லைகள் அல்லது அனைத்து கொடுகடன் வெளிநின்ற தொகை ஆகியவற்றில் எது கூடுதலானதோ அவை கொடுகடன்களின் ஒட்டுமொத்த தொகையாக கணிக்கப்படும்.

(ஆ) ஒரு கடன், மேலதிக பற்றுக்கள் அல்லது நிதி குத்தகைகள், வாடகைக் கொள்வனவுகள் மற்றும் கடன் பிணையங்கள், முறிகள் மீதான முதலீடுகள் மற்றும் ஏனைய கடன் சாதனங்களுக்கெதிரான நேர்மாறான மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் என்பவற்றை உள்ளடக்கிய முற்பணங்கள் தொடர்பாக கடன்வசதிகளுடைய வெளிநின்ற தொகை என்பது மூலதன வெளிநின்ற தொகைகளாக கருதப்படும்.

(இ) பொறுப்பளித்தல்களின் வடிவில் வழங்கப்பட்ட கொடுகடன்களின் கூட்டு மொத்த தொகையானது நாணய சபையால் மூலதனப் போதுமாந்தன்மை வீதத்தை பேணுதல் தொடர்பாக நாணயசபையால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் கீழ் மூலதனப் போதுமை கணிப்பீட்டில் அத்தகைய பொறுப்பளித்தல்களுக்காக பிரயோகித்த கடன் மாற்றல் காரணிகளை பயன்படுத்தி கணிப்பிடப்பட்ட கொடுகடன் சமப்பாட்டு தொகையை அடிப்படையாய் கொண்டு பெறலாம்.

(ஈ) மூலதனத்தளம் என்பதால் கருதப்படுவது, நாணயச்சபையால் மூலதனப் போதுமை விகிதத்தை பேணுவதற்காக வழங்கப்பட்ட பணிப்புரைகளின் கீழ் கணிக்கப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தின் மூலதனத்தள பிரயோகமாகும். உடனடி முன்னைய காலாண்டின் நிறைவில் உள்ளவாறான மூலதனத்தளத்தினை இப்பணிப்புரையின் கீழ் கடன் வசதிகளின் அதிகூடிய தொகைக்கான வரையறைக் கணிப்பீட்டுக்காக பிரயோகிக்க முடியும் மற்றும் அத்தகைய மூலதனத்தளம் அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கிகளின் கணக்காய்வாளரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.

மேலே பந்தி 2(ii) இல் குறிப்பிட்ட வாடிக்கையாளர்களின் கூட்டு மொத்த கொடுகடன்களின் வரையறைகளுக்கான அதிகரிப்பு

4. (1) மேலே கூறப்பட்ட பணிப்புரை 3(1)(அ) இன் விதிகளுக்கு புறம்பாக ஓர் உரிமம் பெற்ற விசேட வங்கி மேலே பந்தி 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளருக்கு அத்தகைய உரிமம் பெற்ற விசேட வங்கியின் மூலதனத்தனத்தின் 33 சதவீதத்திலும் மேலதிகமான கொடுகடன்களை, மூலதனப் போதுமை விகிதம் மற்றும் அதனுடைய சொந்த கடன் தரமிடலுக்காக ஒதுக்கீடு செய்யும் கணிப்பீடுகளின் கூட்டு மொத்தம் மற்றும் மேலே பந்தி 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர்களுடைய பிடிப்பு கம்பனிகளுடைய கொடுகடன் தரமிடல் என்பவற்றின் அடிப்படையில் வழங்க முடியும். இப்பணிப்புரைகளின் நோக்கத்துக்காக மேலே பந்தி 2(ii) இன் கீழ் கூட்டு மொத்தமாக்கப்பட்ட கொடுகடன்களுடைய கம்பனிகளுக்கிடையில் தொடர்புகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் பிடிப்பு கம்பனியை நோக்கி செல்லாது அத்தகைய கூட்டு மொத்தத்தில் உள்ளடங்கும் ஒதுக்கீடு செய்த கம்பனிகளுடைய அதிகுறைந்த கடன் தரமிடலை கவனத்தில் கொள்ள முடியும்.

(2) மேலே பணிப்புரை 4(1) இல் குறிப்பிடப்பட்ட கணிப்பீடுகளை பின்வருமாறு ஒதுக்கீடு செய்யலாம்.

| வங்கியின் தரமிடல் | வாடிக்கையாளரின் கடன் தரமிடல் | வங்கியின் மூலதனப் போதுமை விகிதம் | ஒவ்வொரு நிரலுக்குமாக ஒதுக்கீடு செய்த கணிப்பீடு |
|---|---|---|---|
| AAA இருந்து AA- அல்லது சமனானவை | AAA இருந்து AA- அல்லது சமனானவை | > 12 | 1 |
| A+ இருந்து A- வரை அல்லது சமனானவை | A+ இருந்து A- வரை அல்லது சமனானவை | 11% - 12% | 2 |
| BBB+ அல்லது சமனானது மற்றும் குறைவானது | BBB+ அல்லது சமனானது மற்றும் குறைவானது அல்லது தரமிடப்படாதது | 10% - <11% | 3 |

(3) மேலே பணிப்புரை 4(1) மற்றும் 4(2) இனுடைய நோக்கத்திற்காக கவனத்திற் கொள்ளப்படக்கூடிய கடன் தரமிடலானது பின்னிணைப்பு (1) இல் அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுகடன் தரமிடல் முகவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படலாம். அத்துடன் அவை உயர்த்தப்பட்ட வரையறைகளின் கொடுகடன்களை வழங்குதலின் கடந்த 15 மாதங்களுக்குள் பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.

(4) மேலே பணிப்புரை 4(1) மற்றும் 4(2) இல் குறிப்பிடப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தால் கருதப்படுவது மூலதனப் போதுமை விகிதத்தை பேணுவது பற்றி நாணயச்சபையால் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் கீழ் முடிவடைந்த உடனடி முன்னைய காலாண்டுக்காக கணிப்பிடப்பட்ட கூட்டு மொத்த மூலதனப் போதுமை விகிதமாகும்.

(5) மேலே பணிப்புரை 4(1) இன் கீழ், மேலே பந்தி 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளருக்கு ஓர் அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கியால் வழங்கப்படக்கூடிய கொடுகடன்களின் அதிகூடிய தொகையின் அளவு மேலே பணிப்புரை 4(2) இல் குறிப்பிடப்பட்ட அட்டவணையின் பிரகாரம் மூன்று நிரலுக்காக ஒதுக்கு செய்யப்பட்ட கணிப்பீடுகளை கூட்டு மொத்தத்தை அடிப்படையாகக் கொண்டு உரிமம் பெற்ற விசேட வங்கியினுடைய மூலதன தளத்தின் பின்வரும் சதவீதங்களை விஞ்சக்கூடாது.

(அ) கணிப்பீடுகளின் கூட்டு மொத்தம் 3 இற்கும் 5 இற்கும் இடைப்பட்டதாயின் 40 சதவீதம்.

(ஆ) கணிப்பீடுகளின் கூட்டு மொத்தம் 6 இற்கும் 8 இற்கும் இடைப்பட்டதாயின் 36 சதவீதம்.

குறிப்பிட்ட வரையறைகளுக்கு மேற்பட்ட கொடுகடன்களுக்கு நாணயசபையின் அனுமதி

5. (1) மேலே கூறப்பட்ட பணிப்புரை 3 மற்றும் 4 இனுடைய விதிகளுக்கு மாறாக ஓர் உரிமம் பெற்ற விசேட வங்கியானது நாணய சபையினுடைய முன் அனுமதி கோரி பெற்றுக் கொண்டதற்கிணங்க மேலே பந்தி 2(i) மற்றும் பந்தி 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் பகுதியினருக்கு பணிப்புரை 3 மற்றும் 4 இன் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகூடிய வரையறைகளுக்கு மேலாக கொடுகடன்களை வழங்கலாம். நாணயசபையானது அத்தகைய அனுமதிகளை விடயத்திற்கு விடய அடிப்படையில் தேசிய முன்னுரிமைகள் மற்றும்/ அல்லது தேசிய நலன்களின் சந்தர்ப்பங்களை கவனத்தில் கொண்டும் அத்தகைய உயர் தரப்பட்ட கொடுகடன்களின் தாக்கத்திலிருந்து எழக்கூடிய எதிர் நேரிடக்கூடிய இடர்நேர்வுகளுக்கு அல்லது அவ் உரிமம் பெற்ற விசேட வங்கிகளின் இயலுமையை கவனத்தில் கொண்டு இதனால் பொருந்தும் எனக் கருதுகின்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப ஓர் உரிமம் பெற்ற விசேட வங்கிக்கு அத்தகைய கொடுகடன்களிலிருந்து எழுகின்ற இடர்நேர்வுகளின் மதிப்பீட்டை விரிவாக ஆராய்ந்து நாணயச்சபையிடமிருந்து அனுமதியை எதிர்பார்க்கும் போது அவ் உரிமம் பெற்ற விசேட வங்கியால் அம் மதிப்பீடு நாணயச்சபைக்கு வழங்கப்படும் என்ற அடிப்படையில் வழங்கப்படலாம்.

(2) மேலே கூறப்பட்ட பணிப்புரை 5(1) இனை கருத்திற் கொண்டு ஓர் உரிமம் பெற்ற விசேட வங்கி மேலே பந்தி 2(i) மற்றும் பந்தி 2(ii) இல் குறித்துரைக்கப்பட்ட வாடிக்கையாளர்களுடைய பகுதியினருக்கு அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கியினுடைய மூலதனத்தளத்தின் 50 சதவீத வரையான கடன் வசதிகளை, இத்தோடு இணைக்கப்பட்ட இணைப்பு 2 இல் குறிப்பிடப்படும் உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான ஆரம்பித்தல் அல்லது விரிவாக்கல் நோக்கத்துக்கான நேரடி நிதியிடல் நோக்கத்திற்கான வழங்கல் முறை.

(அ) இலங்கையில் ஓர் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் நேரடியாக தொடர்ந்தும் ஒப்பந்த வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக அளிக்கப்படல் வேண்டும்.

(ஆ) அத்தகைய நிகழ்ச்சித்திட்டமானது ஆகக் குறைந்தது 50 சதவீதம், இலங்கைக்கு வெளியேயான மூலங்களின் மூலமாக வங்கியால் வழங்கப்படும் கடன் பெறுகைகள் தவிர அனுமதியளிக்கப்பட்ட வங்கிகளினால் நிதியிடப்பட வேண்டும்.

கடன் வசதிகளிலிருந்தான விலக்களிப்புக்கள்

6. மேலே பந்தி 2(i) மற்றும் பந்தி 2(ii)இல் குறித்துரைக்கப்பட்ட ஏதாவது வாடிக்கையாளர் வகுதியினருக்கு மேலே பணிப்புரைகள் 3 மற்றும் 4 இன் கீழ் கடன் பெறுதிகளின் அதிகூடிய தொகைகளை கணிக்கும் போது கடன் வசதிகளின் கூட்டு மொத்தத்திலிருந்து பின்வரும் கடன் வசதிகளை விலக்கிக் கொள்ள முடியும்.

(அ) பணம், தங்கம், அரச பிணையங்கள், மத்திய வங்கி பிணையங்கள், திறைசேரி உத்தரவாதங்கள், மத்திய வங்கி உத்தரவாதங்கள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி கூட்டமைப்பு அல்லது நாணயச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது ஏனைய சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றால் வழங்கப்படும் உத்தரவாதங்கள் என்பவற்றின் எதிராக வழங்கப்படும் கடன் வசதிகள்.

(ஆ) பின்வருவனவற்றை கருத்துக் கொண்டு இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கியால் உத்தரவாதங்கள் அல்லது நாணயச்சபையால் ஏற்றுக்கொள்ளத்தக்க அதையொத்த சாதனங்களுக்கு எதிராக வழங்கப்படும் கடன் சாதனங்கள்.

(i) AAA தொடக்கம் A- வரையான அல்லது அதற்கு சமனான கொடுகடன் தரமிடலை கொண்டிருக்கும் வங்கியால் வழங்கப்படும் உத்தரவாதம்.

(ii) AAA தொடக்கம் AA- அல்லது சமனானதுமான கொடுகடன் தரமிடலையுடைய வங்கியால் வழங்கப்படும் உத்தரவாதங்களையுடைய சந்தர்ப்பத்தில் கொடுகடன்களின் 80 சதவீதத்தையும் A+ தொடக்கம் A- அல்லது சமமானதுமான கொடுகடன் தரமிடலைக் கொண்ட வங்கியின் சந்தர்ப்பத்தில் 50 சதவீதத்தையும் கொடுகடன் கணிப்பீட்டிலிருந்து நீக்கம் செய்தல் முடியும்.

(iii) அத்தகைய சந்தர்ப்பம் அனைத்தினதும் தொடர்பில் நீக்கம் செய்யக்கூடிய எல்லாக் கொடுகடன்களுடைய கூட்டு மொத்தத் தொகையற்ற வர்த்தக வங்கியின் அடிப்படை மூலதனத்தின் 100 சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது.

(iv) உத்தரவாதத்தை வழங்குகின்ற வங்கியின் கொடுகடன் தரமிடலானது கடன் வழங்கலிலிருந்து 5 மாதத்திற்குள் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதை வர்த்தக வங்கியானது திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டும். அத்துடன் அத்தகைய கொடுகடன் தரமிடலில் ஏதாவது மாற்றம் இடம் பெறுமாயின் கொடுகடன் உடனடியாக மீளமைக்கப்பட வேண்டும்.

அதிகூடிய வரையறைகளிலிருந்து விலக்கப்பட்ட நபர்கள்/ நிறுவனங்கள்

7. இந்த பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட கொடுகடன்களின் அதிகூற்று எல்லைகளானது பின்வரும் நபர்களுக்கு/ நிறுவனங்களுக்கு பிரயோகிக்கப்படமாட்டது.

(அ) இலங்கை அரசாங்கம்.

(ஆ) ஆகக் கூடுதலாக இந்த பணிப்புரைகளின் திகதியிலிருந்து இரண்டு வருடங்களுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை.

(இ) இரண்டு வருடங்களுக்கு உட்பட்ட முதிர்வு காலத்தைக் கொண்ட கொடுகடன் வழங்குதல் தொடர்பில் ஏனைய அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள்.

பாரிய கொடுகடன்களின் கூட்டு மொத்த வரையறை

8. உரிமம் பெற்ற விசேட வங்கியின் அடிப்படை மூலதனத்தில் 15 சதவீதத்தை விஞ்சும் வகையில் கொடுகடன்களைக் கொண்ட மேலே பந்தி 2(i) மற்றும் பந்தி 2(ii) ஒவ்வொன்றினாலும் குறிப்பிடப்படும் வகுதியுடைய வாடிக்கையாளர் வகைகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன்களின் கூட்டு மொத்தமானது உடனடியாக தொடர்ந்து வந்த காலத்தின் இறுதியில் உரிமம் பெற்ற விசேட வங்கியால் வழங்கப்பட்ட கொடுகடன்களின் ஒட்டு மொத்த வெளிநின்ற தொகைகளின் 55 சதவீதத்தை விஞ்சக்கூடாது.

(2) இப்பணிப்புரையின் நோக்கத்துக்காக,

(அ) ஒட்டுமொத்த கொடுகடன்களின் வெளிநின்ற தொகையானது மேலே பணிப்புரை 3(3) இல் வரையறுக்கப்பட்டவாறு அனைத்து கொடுகடன்களின் வெளிநின்ற தொகைகளினை உள்ளடக்குவதுடன் மேலே பணிப்புரை 7 (அ) இல் குறிப்பிடப்பட்ட கொடுகடன்களை விலக்குகின்றது, மற்றும்

(ஆ) மொத்த கொடுகடன்களின் தொகையானது, மேலே பணிப்புரை 8(1) இல் குறித்துரைக்கப்பட்ட அனைத்து வாடிக்கையாளருக்கும் பணிப்புரை 3(3) இல் குறிப்பிடப்பட்ட கொடுகடன்களை உள்ளடக்குகின்றதுடன் மேலே பணிப்புரை 7 (அ) இல் குறிப்பிடப்பட்ட கொடுகடன்களை விலக்குகின்றது.

கொடுகடன்களின் மீளாய்வு

9. (1) பிரயோகிக்கத்தக்க கொடுகடன் எல்லையின் குறைத்தல் காரணமாக ஓர் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட கொடுகடன்களை மீளாய்வு செய்ய வேண்டிய சந்தர்ப்பத்தில், அடுத்த கொடுகடன் மீளாய்வு திகதி அல்லது ஆறு மாதங்கள் இவற்றில் முன்னதாக ஏற்படும் திகதியில் வழங்கப்பட்ட கொடுகடன் குறைக்கப்படலாம்.

(2) ஏதாவது வாடிக்கையாளருக்கிடையிலான ஓர் இணைப்பு அல்லது கையகப்படுத்தல் பிரயோகித்திலுள்ள அதிகூடிய கொடுகடன்களின் தொகையில் மேலதிகத்தை உருவாக்கும் சந்தர்ப்பத்தில், உரிமம் பெற்ற விசேட வங்கியானது அத்தகைய இணைப்பு அல்லது கையப்படுத்தல் திகதியிலிருந்து ஆறுமாத காலத்திற்குள் குறித்த கொடுகடன்களை பிரயோகித்த எல்லைக்கு குறைக்க முடியும்.

மாற்றத்திற்கு உள்ளாக்கும் ஏற்பாடுகள்

10. இப்பணிப்புரைகளின் திகதியில் மேலே பந்தி 2(i) மற்றும் பந்தி 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் பகுதியினர் எவர்க்கேனும் வழங்கப்பட்ட கொடுகடன்கள் இப்பணிப்புரையில் குறிப்பிடப்பட்ட எல்லைகளை விஞ்சும் சந்தர்ப்பத்தில், அத்தகைய அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் இப்பணிப்புரைத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அத்தகைய கொடுகடன்களை குறித்த எல்லைகளுக்கு குறைத்துக் கொள்ள முடியும்.

பணிப்புரைகளுடன் இணங்கி நடப்பன என உறுதிப்படுத்து வதற்கான நடவடிக்கைகள்

11. ஓர் உரிமம் பெற்ற விசேட வங்கி இத்தகைய பணிப்புரைகளை மீறுகின்றது என நாணயசபை கருதுகின்ற போது மற்றும் அத்தகைய மீறுதல்களின் கருத்துக்கள் அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கிக்கு கூறப்பட்ட சந்தர்ப்பத்தில் அத்தகைய உரிமம் பெற்ற விசேட வங்கிகள் மீறுகைகளை திருத்தும் வரை பங்கிலாபங்களை செலுத்த அல்லது இலாபங்களை மீள் செலுத்த முடியாது. அத்துடன் அத்தகைய திருத்தங்கள் வங்கி மேற்பார்வையாளர் திணைக்கள பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

முன்னைய பணிப்புரைகளின் அகற்றல்கள்

12. (1) 7 மாச்சு 2005 ஆம் திகதியிடப்பட்ட 2005இல் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் மற்றும் 27 ஒத்தோபர் 2005, 28 யூன் 2006 மற்றும் 11 ஓகத்து 2006 திகதியிடப்பட்ட 2005இன் 4ஆம் இலக்க 2005இன் 5ஆம் இலக்க சுற்றறிக்கைகள் இத்தால் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) முன்னைய பணிப்புரைகளின் மற்றும் சுற்றறிக்கைகளின் நீக்கம் அதற்கு முன்னர் அத்தகைய பணிப்புரையின் கீழ் விதித்த ஏதாவது தண்டத்தில் அல்லது பொறுப்புக்களில் தாக்கத்தை ஏற்படுத்தாது.

**இணைப்பு 1**

## பணிப்புரைகள்

## 2007 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் கொடுகடன்களின் அதிகூடிய தொகை

## நாணயசபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொடுகடன் தரமிடல் முகவர்களின் அட்டவணை

1. பிச் றேட்டிங்ஸ் லங்கா லிமிட்டெட்
2. லங்கா றேட்டிங் ஏஜென்சி லிமிட்டெட்
3. ஸ்ராண்டட் சார்ட்டட் அன்ட் புவர்ஸ்
4. மூடிஸ் இன்வஸ்ரேஸ் சேர்விஸ்
5. கிறடிட் றேட்டிங் இன்போமேசன் சேர்விஸ் ஒவ் இந்தியா
6. இன்வஸ்மென் இன்போமேசன் அன்ட் கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி
7. பிச் றேட்டிங்ஸ் இந்தியா லிமிட்டெட்
8. பாகிஸ்தான் இன்ரநஷனல் கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி
9. றேட்டிங் ஏஜென்சி மலேசியா
10. யப்பான் கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி லிமிடெட்
11. காலத்துக்குக் காலம் நாணயசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது ஏனைய கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி

**இணைப்பு 2**

## பணிப்புரைகள்

## 2007 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் கொடுகடன்களின் அதிகூடிய தொகை

### உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களின் வரைவிலக்கணம்

அபிவிருத்தி அல்லது தொழில்படுத்தல் மற்றும் பேணுதல் அல்லது கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட ஏதாவது உட்கட்டமைப்பு வசதியினை அபிவிருத்தி செய்தல், செயற்படுத்துதல், தரமுயர்த்தல் மற்றும் பேணுதல் போன்ற ஏதாவது செயற்றிட்டங்கள் மேலே உள்ள பணிப்புரைகளின் பணிப்புரை 8 (ஈ) இன் கீழான கொடுகடன்களுக்கான தகமையுடையனவாக உள்ள பணிப்புரையில் குறிப்பிடப்பட்டவாறு கொடுகடன்களினது செயற்றிட்டத்தில் நேரடிச் செலவினை மேற்கொள்ளும் நோக்கத்துக்காக இருக்க வேண்டும். அத்துடன் இவை ஏனைய வங்கிகளால் அல்லது நிதியியல் நிறுவனங்கள் அல்லது ஏற்கனவே செயற்பாட்டிலுள்ள ஓர் செயற்றிட்டத்தின் கொள்வனவு செய்வதற்கான கிரயத்தை சந்திப்பதற்கு ஏதாவது ஏற்கனவே வழங்கப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்த வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்க முடியாது.

(i) சுங்க வீதிகள் உட்பட்ட வீதி, பாலம் அல்லது புகைவண்டி அமைப்பு

(ii) நெடுஞ்சாலை செயற்றிட்டத்தின் முக்கிய பகுதியாக விளங்கும் ஏனைய நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு நெடுஞ்சாலைச் செயற்றிட்டம்

(iii) துறைமுகம், வானூர்தி, உள்நாட்டு நீர்வழி அல்லது உள்நாட்டு துறைமுகம்

(iv) நீர் வழங்கல் செயற்றிட்டம், நீர்ப்பாசனச் செயற்றிட்டம், நீர் சுத்திகரிப்பு முறை, சுகாதாரம் மற்றும் வடிகாலமைப்பு அல்லது திண்ம கழிவு முகாமைத்துவ அமைப்பு

(v) வானொலி, பேஜிங், தூர இடங்களுக்கான வலையமைப்பு, அகன்ற வழிகளைக் கொண்ட வலையமைப்பு மற்றும் இணையத்தள வசதிகள் உள்ளிட்ட அடிப்படை அல்லது செலூலர் எதனையும் கொண்ட தொலைத்தொடர்பூட்டல் பணிகள்

(vi) கைத்தொழில் பூங்கா அல்லது சிறப்பு பொருளாதார வலயம்

(vii) வலு உருவாக்கம் அல்லது வலு உருவாக்கமும் விநியோகமும்

(viii) புதிய மின்கடத்தலின் வலையமைப்பினை அல்லது விநியோக வழிகளை ஏற்படுத்துவதன் மூலமாக வலுவினைக் கொண்டு செல்லல் அல்லது விநியோகித்தல்

(ix) வேளாண்மை பொருட்களைப் பதனிடுவதுடன் தொடர்பான செயற்றிட்டங்களுடன் தொடர்பான கட்டுமானம் மற்றும் வேளாண்மைக்கான உள்ளீடுகளை வழங்குதல்

(x) கல்விசார் நிறுவனங்களையும் வைத்தியசாலைகளையும் நிருமாணித்தல்

(xi) இதே தன்மைகளைக் கொண்ட வேறு ஏதாவது வசதிகள்

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 19(7)இன் நியதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையால் வழங்கப்பட்ட பணிப்புரை.

ஒப்பம்
நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
ஆளுநர்

கொழும்பு
2007 மே 23

**பணிப்புரைகள்**

**2007ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள்**
**மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணுதல்**

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 19(7) இனால் வழங்கப்பட்ட அதிகாரத்தை உபயோகித்து, நாணயச் சபையானது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணுதல் தொடர்பாக நாணயச்சபையால், 22 ஓகத்து 1997ஆம் திகதியிடப்பட்ட தீர்மானத்தின் அட்டவணை 1 மற்றும் 27 திசெம்பர் 2001ஆம் திகதியிடப்பட்ட அறிக்கை ஆகியவற்றை திருத்துவதற்காக கீழ்வரும் பணிப்புரைகளை வழங்குகின்றது.

1. ஆ பிரிவின் 3ஆம் படிவத்தில் 34ஆம் விடயத்திற்கு உடன் அடுத்தபடியாக புதிய விடயம் "34.அ அங்கீகரிக்கப்பட்ட நீண்டகால கடன் மூலதன கருவிகள்" என்பதை உட்புகுத்தல்.

2. கீழ்வரும் விடயங்களை இ பிரிவின் 34ஆம் விடயத்திற்கு உடன் அடுத்தபடியாக உட்புகுத்தல்.

   34அ. அங்கீகரிக்கப்பட்ட நீண்டகால கடன் மூலதன கருவிகள்:

   கீழ்வரும் நிபந்தனைகளை திருப்திப்படுத்தும் நீண்டகால கடன் மூலதன கருவிகள்:

   (i) இலங்கை மத்திய வங்கியின் முன்கூட்டியே எழுத்து மூலமான அங்கீகாரம் பெறப்பட்டிருத்தல்;

   (ii) அக்கருவியானது முதிர்வுத்தன்மை அற்றிருத்தல் வேண்டும்;

   (iii) பிணையற்ற, முற்றிலும் செலுத்தப்பட்டு, கடன்கொடுநரின் உரிமைகளுக்கு கீழ்ப்படிந்திருத்தல்;

   (iv) கீழ்வரும் சந்தர்ப்பங்களில், விநியோகிக்கும் வங்கி வட்டி வழங்க பொறுப்பற்றது என்ற கிளை வாசகத்தை நீண்டகால கடன் மூலதன கருவிகள் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்;

      (அ) வங்கியின் மூலதனப் போதுமை விகிதம், மூலதனப் போதுமை விகித பணிப்புரைகளுக்கமைந்த மிகக் குறைந்த சட்டப்படியான தேவைக்கு குறைவாக இருத்தல்;

      (ஆ) அக் கொடுப்பனவுகளின் விளைவு வங்கியின் மூலதனப் போதுமை விகிதத்தை, மிகக் குறைந்த விகிதத்திற்கு கீழ் தள்ளுதல் மற்றும்

      (இ) அக் கொடுக்கப்படாத வட்டி, எதிர்கால கொடுப்பனவுக்காக ஒன்று திரட்டல் அல்லது அட்டுருவாக்குதல் முடியாது;

   (v) அக் கருவிகள், விநியோகிக்கப்பட்ட தினத்திலிருந்து 10 வருடங்களுக்குள் உபயோகிக்கக் கூடிய அழைப்புத் தெரிவினை கொண்டிருக்க முடியும். இவ்வழைப்புத் தெரிவினை உபயோகிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் முற்கூட்டிய அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும்;

   (vi) அடுக்கு 1 மூலதனமாக அங்கீகரிக்கப்பட்ட மொத்த நீண்டகால கடன், அடுக்கு 1 மூலதனத்தின் 15% விட அதிகரிக்க முடியாது;

   (vii) முன்மதியுடைய நோக்காக இலங்கை மத்திய வங்கியால் முன் வைக்கப்படும் சகலவித நிபந்தனைகள்.

3. இ பிரிவின் 40 ஆவது விடயத்தை இரத்து செய்து கீழ்வரும் விடயங்களை மாற்றீடு செய்க.

   40. கலப்பு (கடன்/ உரிமை) மூலதன கருவிகள்

உரிமை மூலதனம் மற்றும் கடன் மூலதனத்தின் சில குணாதியங்களை கொண்ட மூலதனக் கருவிகள் அதாவது மீட்கப்பட முடியாத முன்னுரிமை பங்குகள், ஒன்று திரட்டப்பட்ட மீட்கப்பட முடியுமான முன்னுரிமைப் பங்குகள் போன்றன, மற்றும் கீழ்வரும் குணாதிசயங்களை திருப்திப்படுத்துபவை:

(i) இலங்கை மத்திய வங்கியின் முன்கூட்டிய எழுத்து மூலமான அங்கீகாரம் பெறப்பட்டிருத்தல்;

(ii) பிணையற்று, முற்றிலும் செலுத்தப்பட்டு, கடன்கொடுநரின் உரிமைகளுக்கு கீழ்படிந்திருத்தல்;

(iii) 5 வருடங்களுக்கு உட்பட்ட காலப்பகுதிக்குள் மீட்கப்பட முடியாது அல்லது இலங்கை மத்திய வங்கியின் முன்கூட்டியே அங்கீகாரமின்றி மீட்க முடியாது;

(iv) வங்கி, வியாபாரத்தை நிறுத்த கடமைப்படாவிட்டாலும் நட்டத்தை பங்கு கொள்ள தயாராக இருத்தல்;

(v) வங்கியின் இலாபம் வட்டி செலுத்துவதற்கு போதுமற்றதாக இருக்குமாயின் அவ்வட்டி செலுத்துவதற்கான கடமைப்பாட்டை பிற்போட முடியும்;

(vi) முன்மதியுடைய நோக்காக இலங்கை மத்திய வங்கியால் முன் வைக்கப்படும் சகலவித நிபந்தனைகள்.

4. இ பிரிவின் 42ஆவது விடயத்தை ரத்து செய்து கீழ்வரும் விடயங்களை மாற்றீடு செய்க:

42 அங்கீகரிக்கப்பட்ட கீழ்படிவுடைய தவணைக் கடன்

கீழ்வரும் நிபந்தனைகளை திருப்திப்படுத்தும் கீழ்படிவுடைய தவணைக் கடன்:

(i) அடுக்கு II மூலதனத்தில் உள்ளடக்குவதற்காக இலங்கை மத்திய வங்கியின் முன்கூட்டிய எழுத்து மூலமான அங்கீகாரம் பெறப்பட்டிருத்தல்;

(ii) பிணையற்ற, கடன் கொடுநரின் உரிமைகளுக்கு கீழ்பட்டிருத்தல், கூப்பன் முறியாயின் முற்றிலும் செலுத்தப்பட்ட பெறுமதி அல்லது பூச்சியக் கூப்பன் முறியாயின் செலுத்தப்பட்ட பெறுமதியுடன் அட்டுரு வட்டியும் சேர்த்து;

(iii) குறைந்தது 5 வருட மூல முதிர்வு;

(iv) இலங்கை மத்திய வங்கியின் முன்கூட்டிய இணக்கமின்றி, முன்கூட்டிய மீள்செலுத்துதல் அல்லது மீட்கப்படுதல் முடியாது;

(v) மூலதனமாக கணக்கெடுக்கப்பட்ட தொகை, முதிர்வு வருடத்திலிருந்து தொடர்ச்சியாக 4 வருடங்களுக்குள் 1/5 பகுதியாக கழிக்கப்படுதல் வேண்டும்;

(vi) அங்கீகரிக்கப்பட்ட கீழ்படிவுடைய தவணைக் கடனின் மொத்தம், மொத்த அடுக்கு I மூலதனத்தின் 50% விட கூட முடியாது;

(vii) முன்மதியுடைய நோக்காக இலங்கை மத்திய வங்கியால் முன் வைக்கப்படும் சகலவித நிபந்தனைகள்.

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1)இன் நியதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையால் வழங்கப்பட்ட பணிப்புரை.

ஒப்பம்
**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
ஆளுநர்

கொழும்பு
2007 மே 23

**பணிப்புரைகள்**

**2007ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள்**
**மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணுதல்**

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1) இனால் வழங்கப்பட்ட அதிகாரத்தை உபயோகித்து, நாணயச் சபையானது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணுதல் தொடர்பாக நாணயச்சபையால், 27 திசெம்பர் 2001ஆம் திகதியிடப்பட்ட பணிப்புரைகளின் அட்டவணை 1 ஐ திருத்துவதற்காக கீழ்வரும் பணிப்புரைகளை வழங்குகின்றது.

1. ஆ பிரிவின் 3ஆம் படிவத்தில் 32ஆம் விடயத்திற்கு உடன் அடுத்தபடியாக புதிய விடயம் "32.அ அங்கீகரிக்கப்பட்ட நீண்டகால கடன் மூலதன கருவிகள்" என்பதை உட்புகுத்தல்.

2. கீழ்வரும் விடயங்களை இ பிரிவின் 32ஆம் விடயத்திற்கு உடன் அடுத்தபடியாக உட்புகுத்தல்.

   32அ. அங்கீகரிக்கப்பட்ட நீண்டகால கடன் மூலதன கருவிகள்:

   கீழ்வரும் நிபந்தனைகளை திருப்திப்படுத்தும் நீண்டகால கடன் மூலதன கருவிகள்:

   (i) இலங்கை மத்திய வங்கியின் முன்கூட்டியே எழுத்து மூலமான அங்கீகாரம் பெறப்பட்டிருத்தல்;

   (ii) அக்கருவியானது முதிர்வுத்தன்மை அற்றிருத்தல் வேண்டும்;

   (iii) பிணையற்ற, முற்றிலும் செலுத்தப்பட்டு, கடன்கொடுநரின் உரிமைகளுக்கு கீழ்ப்படிந்திருத்தல்;

   (iv) கீழ்வரும் சந்தர்ப்பங்களில், விநியோகிக்கும் வங்கி வட்டி வழங்க பொறுப்பற்றது என்ற கிளை வாசகத்தை நீண்டகால கடன் மூலதன கருவிகள் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்;

   (அ) வங்கியின் மூலதனப் போதுமை விகிதம், மூலதனப் போதுமை விகிதப் பணிப்புரைகளுக்கமைந்த மிகக் குறைந்த சட்டப்படியான தேவைக்கு குறைவாக இருத்தல்;

   (ஆ) அக் கொடுப்பனவுகளின் விளைவு வங்கியின் மூலதனப் போதுமை விகிதத்தை, மிகக் குறைந்த விகிதத்திற்கு கீழ் தள்ளுதல் மற்றும்

   (இ) அக் கொடுக்கப்படாத வட்டி, எதிர்கால கொடுப்பனவுக்காக ஒன்று திரட்டல் அல்லது அட்டுருவாக்குதல் முடியாது;

   (v) அக் கருவிகள், விநியோகிக்கப்பட்ட தினத்திலிருந்து 10 வருடங்களுக்குள் உபயோகிக்கக் கூடிய அழைப்புத் தெரிவினை கொண்டிருக்க முடியும். இவ்வழைப்புத் தெரிவினை உபயோகிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் முன்கூட்டிய அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும்;

   (vi) அடுக்கு 1 மூலதனமாக அங்கீகரிக்கப்பட்ட மொத்த நீண்டகால கடன், அடுக்கு 1 மூலதனத்தின் 15% விட அதிகரிக்க முடியாது;

   (vii) முன்மதியுடைய நோக்காக இலங்கை மத்திய வங்கியால் முன் வைக்கப்படும் சகலவித நிபந்தனைகள்.

3. இ பிரிவின் 38 ஆவது விடயத்தை இரத்து செய்து கீழ்வரும் விடயங்களை மாற்றீடு செய்க.

   38. கலப்பு (கடன்/ உரிமை) மூலதன கருவிகள்

   உரிமை மூலதனம் மற்றும் கடன் மூலதனத்தின் சில குணாதியங்களை கொண்ட மூலதனக் கருவிகள் அதாவது மீட்கப்பட முடியாத

முன்னுரிமை பங்குகள், ஒன்று திரட்டப்பட்ட மீட்கப்பட முடியுமான முன்னுரிமைப் பங்குகள் போன்றன, மற்றும் கீழ்வரும் குணாதிசயங்களை திருப்திப்படுத்துபவை:

(i) இலங்கை மத்திய வங்கியின் முன்கூட்டிய எழுத்து மூலமான அங்கீகாரம் பெறப்பட்டிருத்தல்;

(ii) பிணையற்று, முற்றிலும் செலுத்தப்பட்டு, கடன்கொடுநரின் உரிமைகளுக்கு கீழ்படிந்திருத்தல்;

(iii) 5 வருடங்களுக்கு உட்பட்ட காலப்பகுதிக்குள் மீட்கப்பட முடியாது அல்லது இலங்கை மத்திய வங்கியின் முன்கூட்டியே அங்கீகாரமின்றி மீட்க முடியாது;

(iv) வங்கி, வியாபாரத்தை நிறுத்த கடமைப்படாவிட்டாலும் நட்டத்தை பங்கு கொள்ள தயாராக இருத்தல்;

(v) வங்கியின் இலாபம் வட்டி செலுத்துவதற்கு போதுமற்றதாக இருக்குமாயின் அவ்வட்டி செலுத்துவதற்கான கடமைப்பாட்டை பிற்போட முடியும்;

(vi) முன்மதியுடைய நோக்காக இலங்கை மத்திய வங்கியால் முன் வைக்கப்படும் சகலவித நிபந்தனைகள்.

4. இ பிரிவின் 40ஆவது விடயத்தை ரத்து செய்து கீழ்வரும் விடயங்களை மாற்றீடு செய்க:

40 அங்கீகரிக்கப்பட்ட கீழ்படிவுடைய தவணைக் கடன்

கீழ்வரும் நிபந்தனைகளை திருப்திப்படுத்தும் கீழ்படிவுடைய தவணைக் கடன்:

(i) அடுக்கு II மூலதனத்தில் உள்ளடக்குவதற்காக இலங்கை மத்திய வங்கியின் முன்கூட்டிய எழுத்து மூலமான **அங்கீகாரம்** பெறப்பட்டிருத்தல்;

(ii) பிணையற்ற, கடன் கொடுநரின் உரிமைகளுக்கு கீழ்பட்டிருத்தல், கூப்பன் முறியாயின் முற்றிலும் செலுத்தப்பட்ட பெறுமதி அல்லது பூச்சியக் கூப்பன் முறியாயின் செலுத்தப்பட்ட பெறுமதியுடன் அட்டுரு வட்டியும் சேர்த்து;

(iii) குறைந்தது 5 வருட மூல முதிர்வு;

(iv) இலங்கை மத்திய வங்கியின் முன்கூட்டிய இணக்கமின்றி, முன்கூட்டிய மீள்செலுத்துதல் அல்லது மீட்கப்படுதல் முடியாது;

(v) மூலதனமாக கணக்கெடுக்கப்பட்ட தொகை, முதிர்வு வருடத்திலிருந்து தொடர்ச்சியாக 4 வருடங்களுக்குள் 1/5 பகுதியாக கழிக்கப்படுதல் வேண்டும்;

(vi) அங்கீகரிக்கப்பட்ட கீழ்படிவுடைய தவணைக் கடனின் மொத்தம், மொத்த அடுக்கு I மூலதனத்தின் 50% விட கூட முடியாது;

(vii) முன்மதியுடைய நோக்காக இலங்கை மத்திய வங்கியால் முன் வைக்கப்படும் சகலவித நிபந்தனைகள்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1)இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

ஒப்பம்
நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
ஆளுநர்

கொழும்பு
2007 நவெம்பர் 01

## பணிப்புரைகள்

## 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் கொடுகடன்களின் அதிகூடிய தொகை

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) இனாலும், இறுதியாக திருத்தப்பட்டவாறு 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினாலும் அளிக்கப்பட்ட அதிகாரத்தை நடைமுறைக்கிடுதலுக்கமைய நாணயச்சபையால் பின்வரும் பணிப்புரைகள் விடுக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டல்

1. இப்பணிப்புரைகள் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளாக குறிப்பிடலாம். இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட பிரிவுகள் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் மற்றும் இறுதியாக திருத்தப்பட்டவாறு 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திலும் காணப்படுவனவாகும்.

46(1)இன் கீழ் அதிகாரமளிப்பு

2. பிரிவு 46(1)இன் நியதிகளின்படி, நாணயசபையானது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அத்தகைய வங்கிகளுடைய வியாபாரங்களின் ஏதாவது விடயம் தொடர்பில் பணிப்புரைகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் நாணயசபையானது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அத்தகைய வங்கிகளால் பின்வருவோருக்கு வழங்கப்படக்கூடிய கொடுகடன்களின் கூட்டு மொத்தம் தொடர்பில் பணிப்புரைகளை வழங்குகிறது.

(i) ஏதாவது தனிக்கம்பனி, அரச கூட்டுத்தாபனம், நிறுவனம், தனிப்பட்டவர்களை கொண்ட அமைப்பு அல்லது ஒரு தனிநபர்; அல்லது

(ii) கூட்டு மொத்தத்தில் -

(அ) ஒரு தனியாள், அவரது நெருங்கிய உறவினர் அல்லது அவர் கணிசமான அக்கறையினை கொண்டுள்ள ஒரு கம்பனி அல்லது நிறுவனம்;

(ஆ) ஒரு கம்பனி மற்றும் பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை:-

(அஅ) அதனுடைய துணை நிறுவனங்கள்
(ஆஆ) அதனுடைய உடமைக் கம்பனி
(இஇ) அதனுடைய இணைக் கம்பனி
(ஈஈ) அதனுடைய உடமைக் கம்பனியின் ஓர் துணை நிறுவனம்; அல்லது
(உஉ) குறித்த கம்பனி அல்லது அதனுடைய துணை நிறுவனம் அல்லது அதனுடைய உடமைக் கம்பனி அல்லது அதனுடைய உடமைக் கம்பனியின் ஓர் துணை நிறுவனம் கணிசமான நலவுரித்துக்களை கொண்டிருக்கக்கூடிய ஓர் கம்பனி.

மேலே பந்திகள் 2(i) மற்றும் 2(ii)இல் குறிப்பிட்ட வாடிக்கை யாளர்களுக்கான கொடுகடன்களின் அதி உச்ச வரையறைகள்

3. அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளால் பணிப்புரைகள் 7,8 மற்றும் 9 ஐ கவனத்தில் கொண்டு வழங்கப்படக்கூடிய கொடுகடன்களின் அதிகூடிய தொகைகள் அத்தகைய அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் அடிப்படை மூலதனத்தின் பின்வரும் வீதங்களுக்கு மேற்படலாகாது.

(அ) மேலே பந்தி 2(i) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் தொடர்பில் 30 சதவீதம்.

(ஆ) மேலே பந்தி 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் தொடர்பில் 33 சதவீதம்.

மேலே பந்தி 2(ii)இல் குறிப்பிட்ட வாடிக்கையாளர்களின் கூட்டு மொத்த கொடுகடன்களின் வரையறைகளுக்கான அதிகரிப்பு

4. (1) மேலே 3(ii) இல் கூறப்பட்ட பணிப்புரையின் விதிகளுக்கு புறம்பாக ஓர் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கி மேலே பந்தி 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளருக்கு அத்தகைய அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் மூலதனத்தளத்தின் 33 சதவீதத்திலும் மேலதிகமான கொடுகடன்களை, கீழே பணிப்புரை 4(2) இல்

குறித்துரைக்கப்பட்டவாறு பின்வருவனவற்றுக்காக ஒதுக்கப்பட்ட கணிப்பீடுகளின் கூட்டு மொத்தத்தின் அடிப்படையில் வழங்கலாம்.

(i) கொடுகடன்களை வழங்குகின்ற கம்பனியினுடைய மூலதனப் போதுமை விகிதம் மற்றும் கடன் தரமிடல்கள்

(ii) மேலே பந்தி 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர்களுடைய பிடிப்பு கம்பனியின் கடன் தரமிடல் ஆகும். இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக மேலே பந்தி 2(ii) இல் கூட்டு மொத்தமாக்கப்பட்ட கொடுகடன்களுடைய கம்பனிகளுக்கிடையில் தொடர்புகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் பிடிப்பு கம்பனியை நோக்கி செல்லாது அத்தகைய கூட்டு மொத்தத்தில் உள்ளடங்கும் ஒதுக்கீடு செய்த கம்பனிகளுடைய அதிகுறைந்த கடன் தரமிடலை கவனத்தில் கொள்ள முடியும்.

(2) மேலே பணிப்புரை 4(1) இல் குறிப்பிடப்பட்ட கணிப்பீடுகளை பின்வருமாறு ஒதுக்கீடு செய்யலாம்.

| வங்கியின் தரமிடல் | வாடிக்கையாளரின் கடன் தரமிடல் | வங்கியின் மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் | ஒவ்வொரு நிரலுக்குமாக ஒதுக்கீடு செய்த கணிப்பீடு |
|---|---|---|---|
| AAA இருந்து AA- அல்லது சமனானவை | AAA இருந்து AA- அல்லது சமனானவை | > 12 | 1 |
| A+ இருந்து A- வரை அல்லது சமனானவை | A+ இருந்து A- வரை அல்லது சமனானவை | 11% - 12% | 2 |
| BBB+ அல்லது சமனானது மற்றும் குறைவானது | BBB+ அல்லது சமனானது மற்றும் குறைவானது அல்லது தரமிடப்படாதது | 10% - <11% | 3 |

(3) மேலே பணிப்புரை 4(1) இன் கீழ், பந்தி 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளருக்கு ஓர் அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கியால் வழங்கப்படக்கூடிய கொடுகடன்களின் அதிகூடிய தொகையின் அளவு, மேலே பணிப்புரை 4(2) இல் குறிப்பிடப்பட்ட அட்டவணையின் பிரகாரம் மூன்று நிரலுக்காக ஒதுக்கு செய்யப்பட்ட கணிப்பீடுகளின் கூட்டு மொத்தத்தை அடிப்படையாகக் கொண்டு அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினுடைய மூலதன தளத்தின் பின்வரும் சதவீதங்களை விஞ்சக்கூடாது.

(i) கணிப்பீடுகளின் கூட்டு மொத்தம் 3 இற்கும் 5 இற்கும் இடைப்பட்டதாயின் 40 சதவீதம்.

(ii) கணிப்பீடுகளின் கூட்டு மொத்தம் 6 இற்கும் 8 இற்கும் இடைப்பட்டதாயின் 36 சதவீதம்.

பாரிய கொடுகடன்களின் கூட்டுமொத்த எல்லை

5. அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினுடைய மூலதனத்தளத்தின் 15 சதவீதத்திற்கு மேலதிகமாக, இலங்கை அரசாங்கம் தவிர மேலே பந்திகள் 2(i) மற்றும் 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர்களுடைய ஏதாவது வகுதியினருக்கு ஏதாவது தரப்பட்ட திகதியில் வழங்கப்பட்ட கொடுகடன்களின் தொகையின் விடயத்தில், அத்தகைய வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட கொடுகடன்களின் வெளிநின்ற தொகைகளின் கூட்டு மொத்தம் உடனடியாக தொடர்ந்து வரும் மாதத்தில் இறுதியில் உள்ளதாக இலங்கை அரசாங்கம் தவிர அவ் உரிமம் பெற்ற வர்த்த வங்கியால் அனைத்து வாடிக்கையாளருக்கும் வழங்கப்பட்ட கொடுகடன்களின் கூட்டு மொத்த வெளிநின்ற தொகைகளின் 55 சதவீதத்தை விஞ்சக்கூடாது.

குறிப்பிட்ட வரையறைகளுக்கு மேற்பட்ட கொடுகடன்களுக்கு நாணயசபையின் அனுமதி

6. (1) மேலே கூறப்பட்ட பணிப்புரை 3 மற்றும் 4 இனுடைய விதிகளுக்கு புறம்பாக ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியானது நாணய சபையினுடைய முன் அனுமதி கோரி பெற்றுக் கொண்டதற்கிணங்க மேலே பந்திகள் 2(i) மற்றும் 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் பகுதியினருக்கு பணிப்புரை 3 மற்றும் 4 இன் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகூடிய வரையறைகளுக்கு மேலாக கொடுகடன்களை வழங்கலாம். நாணயசபையானது அத்தகைய அனுமதிகளை விடயத்திற்கு விடய அடிப்படையில் தேசிய முன்னுரிமைகள் மற்றும்/ அல்லது தேசிய நலன்களின் சந்தர்ப்பங்களை கவனத்தில் கொண்டும் அத்தகைய உயர் தரப்பட்ட கொடுகடன்களின் தாக்கத்திலிருந்து எழக்கூடிய எதிர் நேரிடக்கூடிய இடர்நேர்வுகளுக்கு அல்லது அவ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் இயலுமையை கவனத்தில் கொண்டு இதனால் பொருந்தும் எனக் கருதுகின்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்கு அத்தகைய கொடுகடன்களிலிருந்து எழுகின்ற இடர்நேர்வுகளின் மதிப்பீட்டை விரிவாக ஆராய்ந்து நாணயச்சபையிடமிருந்து அனுமதியை எதிர்பார்க்கும் போது அவ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியால் அம்மதிப்பீடு நாணயச்சபைக்கு வழங்கப்படும் என்ற அடிப்படையில் வழங்கப்படலாம்.

(2) மேலே கூறப்பட்ட பணிப்புரை 6(1) இனை கருத்திற் கொண்டு ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியானது மேலே பந்திகள் 2(i) மற்றும் 2(ii) இல் குறித்துரைக்கப்பட்ட வாடிக்கையாளர் வகையினருக்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியினுடைய மூலதனத்தளத்தின் 50 சதவீதம் வரையிலான கடன் வசதிகளை, இத்தோடு இணைக்கப்பட்ட இணைப்பு 2 இல் குறிப்பிடப்படும் உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல் அல்லது விரிவாக்கல் போன்றவற்றின் நேரடி நிதியிடல் நோக்கத்திற்காக பின்வரும் நடைமுறைக்கு அமைய வழங்கலாம்.

(i) இலங்கையில் ஓர் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் நேரடியாக ஈடுபடுவதற்கான ஒப்பந்தத்தை வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளர்கள் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

(ii) அத்தகைய நிகழ்ச்சித்திட்டமானது இலங்கைக்கு வெளியேயான மூலங்களின் மூலமாக அல்லது வங்கியால் வழங்கப்படும் கடன் பெறுகைகள் தவிர உரிமம் பெற்ற வங்கிகளின் கூட்டால் ஆகக் குறைந்தது 50 சதவீதம் நிதியிடப்பட வேண்டும்.

பணிப்புரைகள் 3 மற்றும் 4 இன் கீழ் அதிகூடிய எல்லைகளிலிருந்து கொடுகடன்களுக்கான விலக்களிப்பு

7. மேலே பந்திகள் 2(i) மற்றும் 2(ii)இல் குறித்துரைக்கப்பட்ட ஏதாவது வாடிக்கையாளர் வகையினருக்கு மேலே பணிப்புரைகள் 3 மற்றும் 4 இன் கீழ் கடன் பெறுதிகளின் அதிகூடிய தொகைகளை கணிக்கும் போது பின்வரும் கடன் வசதிகளை நீக்கிக் கொள்ள முடியும்.

(i) பணம், தங்கம், அரச பிணையங்கள், மத்திய வங்கி பிணையங்கள், திறைசேரி உத்தரவாதங்கள், மத்திய வங்கி உத்தரவாதங்கள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி கூட்டமைப்பு அல்லது வங்கி மேற்பார்வை பணிப்பாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது ஏனைய சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றால் வழங்கப்படும் உத்தரவாதங்கள் என்பவற்றின் எதிராக வழங்கப்படும் கடன் வசதிகள்.

(ii) பின்வருவனவற்றை கருத்துக் கொண்டு வங்கி மேற்பார்வை பணிப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கடன் வழங்கும் வங்கி தவிர்ந்த வங்கியால் வழங்கப்படும் உத்தரவாதங்கள் அல்லது அதையொத்த சாதனங்களுக்கு எதிராக வழங்கப்படும் கடன் சாதனங்கள்.

(அ) AAA தொடக்கம் A- வரையான அல்லது அதற்கு சமனான கொடுகடன் தரமிடலை கொண்டிருக்கும் வங்கியால் வழங்கப்படும் உத்தரவாதம்.

(ஆ) AAA தொடக்கம் AA- அல்லது சமனானதுமான கொடுகடன் தரமிடலையுடைய வங்கியால் வழங்கப்படும் உத்தரவாதங்களையுடைய சந்தர்ப்பத்தில் கடன்வசதிகளின் 80 சதவீதத்தையும் A+ தொடக்கம் A- அல்லது சமமானதுமான கொடுகடன் தரமிடலைக் கொண்ட வங்கியின் சந்தர்ப்பத்தில் 50 சதவீதத்தையும் கடன்வசதிக் கணிப்பீட்டிலிருந்து நீக்கம் செய்தல் முடியும்.

(இ) அத்தகைய சந்தர்ப்பம் அனைத்தினதும் தொடர்பில் நீக்கம் செய்யக்கூடிய எல்லாக் கடன்வசதிகளுடைய கூட்டு மொத்தத் தொகையற்ற வர்த்தக வங்கியின் அடிப்படை மூலதனத்தின் 100 சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது.

(ஈ) உத்தரவாதத்தை வழங்குகின்ற வங்கியின் கொடுகடன் தரமிடலானது கடன் வழங்கலிலிருந்து 15 மாதத்திற்குள் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதை உரிமம் பெற்ற வர்த்தக வங்கியானது திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டும். அத்துடன் அத்தகைய கொடுகடன் தரமிடலில் ஏதாவது மாற்றம் இடம் பெறுமாயின் கொடுகடன் உடனடியாக மீளமைக்கப்பட வேண்டும்.

பணிப்புரைகள் 3 மற்றும் 4 இன் கீழ் அதிகூடிய எல்லைகளிலிருந்து ஆட்களுக்கு/ நிறுவனங்களுக்கு விலக்களிப்பு

8. இந்த பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட கடன்வசதிகளின் அதிகூற்று எல்லைகளானது பின்வரும் நபர்களுக்கு/ நிறுவனங்களுக்கு பிரயோகிக்கப்படமாட்டது.

(i) இலங்கை அரசாங்கம்.

(ii) ஆகக் கூடுதலாக இந்த பணிப்புரைகளின் திகதியிலிருந்து இரண்டு வருடங்களுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை.

(iii) இரண்டு வருடங்களுக்கு உட்பட்ட முதிர்வு காலத்தைக் கொண்ட கடன்வசதி வழங்குதல் தொடர்பில் ஏனைய அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள்.

வரைவிலக்கணங்கள்

9. கீழ்வரும் வரைவிலக்கணங்கள் இப்பணிப்புரைகளை நோக்காக கொண்டு உட்படுத்தப்பட்டுள்ளது.

(i) கடன் வசதிகள்: வங்கித்தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவின்படி வரையறுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ள பிரகாரம், கடன் வசதிகளானது கீழ் கூறப்பட்டுள்ள கடன் வெளிப்படுத்துகை, முதலீட்டு வெளிப்படுத்துகை என்பவற்றை குறிக்கும்.

(அ) கடன் வெளிப்படுத்துகையானது ஐந்தொகையில் உள்வாங்கப்பட்ட அனைத்து கடன் வசதிகளான கடன்கள், மேலதிக பற்றுகள் அல்லது நிதி குத்தகை உள்ளடங்கலான முற்பணங்கள், வாடகை கொள்வனவுகள் மற்றும் கடன் பிணைகளுக்கெதிரான எதிர்மாறான மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் என்பவற்றுடன் ஐந்தொகையில் உள்வாங்கப்படாத அனைத்து கடன் வசதிகளான கடன் வழங்குவதற்கான இணக்கப்பாடு, மேலதிகப்பற்று அல்லது முற்பணங்கள் அல்லது உறுதியற்ற பொறுப்புக்களை ஏற்பதற்கான இணக்கப்பாடு உள்ளடங்கலான ஏனைய வசதிகள்.

(ஆ) முதலீடு வெளிப்படுத்துகையானது உரிமை மீதான தவிர்த்து (சாதாரண பங்குகள் மாத்திரம்) ஏனைய அனைத்து நிதி முதலீடுகளையும் உள்ளடக்கும்.

(ii) கடன் வசதிகளின் பெறுமதி: கடன் வசதிகளின் பெறுமதியானது அனைத்து ஐந்தொகையில் உள்வாங்கப்பட்ட கடன் வசதிகளையும் அனைத்து ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளையும் குறிக்கும்.

(அ) ஐந்தொகையில் உள்வாங்கப்பட்ட கடன் வசதிகளின் பெறுமதி: ஐந்தொகையில் உள்வாங்கப்பட்ட கடன் வசதிகளின் பெறுமதியானது ஒரு குறித்த நேரத்தில் இருக்கக்கூடிய கடன்வசதிகளின் வரையறையின் மொத்தம் அல்லது அனைத்து கடன் வசதிகளினதும் நிலுவைகளின் மொத்தம் என்பவற்றுள் கூடியதைக் குறிக்கும். முழுமையாக பற்று மேற்கொள்ளப்பட்ட தவணைக் கடன்களாயின், அக்கடன்வசதிகளின் நிலுவைப் பெறுமதி, கடன்வசதிகளின் பெறுமதியாகக் ஏற்றுக் கொள்ளப்படும்.

(ஆ) ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளின் பெறுமதி: ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளின் பெறுமதியானது ஒரு குறித்த நேரத்தில் இருக்கக்கூடிய கடன்வசதிகள் வரையறையின் மொத்தத்திற்கு சமனான கொடுகடன் அல்லது அனைத்து கடன்வசதிகளினதும் நிலுவைகளின் மொத்தம் என்பவற்றுள் கூடியதைக் குறிக்கும்.

(iii) கடன் வசதிகளின் நிலுவைப் பெறுமதி: கடன் வசதிகளின் நிலுவைப்பெறுமதியானது ஐந்தொகையில் உள்வாங்கப்பட்ட கடன் வசதிகளின் மொத்த நிலுவைகளையும் ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளின் மொத்த நிலுவைகளையும் குறிக்கும்.

(அ) ஐந்தொகையில் உள்வாங்கப்பட்ட கடன் வசதிகளின் நிலுவை: ஐந்தொகையில் உள்வாங்கப்பட்ட கடன்வசதிகளின் நிலுவையானது, மூலதன நிலுவையினைக் குறிக்கும்.

(ஆ) ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளின் நிலுவை: ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளின் நிலுவையானது, ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளின் நிலுவைக்கு சமனான கொடுகடனைக் குறிக்கும்.

(iv) ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளுக்கு சமனான கொடுகடன் பெறுமதி: மூலதன போதுமை விகித கணிப்பீட்டிற்காக உள்வாங்கப்படாத கடன் வசதிகளுக்கான கொடுகடன் மாற்று விகிதங்களை பாவித்து கணிக்கப்பட்ட அளவுக்கு சமனான கொடுகடன்.

(v) மூலதன ஆதாரம் மற்றும் மூலதன போதுமை விகிதம்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் வெளிவாரி கணக்காய்வாளரால் உறுதி செய்யப்பட்ட கைவசமுள்ள கடந்த நிதி வருட இறுதியிலுள்ளவாறான அல்லது நேர் முன்னைய காலாண்டுப் பகுதிக்குரிய அல்லது பொருத்தமான காலாண்டுப்பகுதிக்கு முன்னைய காலாண்டுப் பகுதிக்கான மூலதனப் போதுமை விகிதத்தைக் கணிப்பிட பயன்படுத்திய மூலதன ஆதாரம் மற்றும் மூலதனப் போதுமை விகிதம் என்பவற்றைக் குறிக்கும்.

**கடன்வசதியின் மீளாய்வு**

10\. (1) பிரயோகிக்கத்தக்க கடன்வசதியின் எல்லையின் குறைத்தல் காரணமாக ஓர் வாடிக்கையாருக்கு வழங்கப்பட்ட கடன்வசதிகளை மீளாய்வு செய்ய வேண்டிய சந்தர்ப்பத்தில், அடுத்த கடன்வசதி மீளாய்வு திகதி அல்லது ஆறு மாதங்கள் இவற்றில் முன்னதாக ஏற்படும் திகதியில் வழங்கப்பட்ட கொடுகடன் குறைக்கப்படலாம்.

(2) ஏதாவது வாடிக்கையாளருக்கிடையிலான ஓர் இணைப்பு அல்லது கையகப்படுத்தல் பிரயோகித்திலுள்ள அதிகூடிய கொடுகடன்களின் தொகையில் மேலதிகத்தை உருவாக்கும் சந்தர்ப்பத்தில், உரிமம் பெற்ற வர்த்தக வங்கியானது அத்தகைய இணைப்பு அல்லது கையப்படுத்தல் திகதியிலிருந்து ஆறுமாத காலத்திற்குள் குறித்த கடன்வசதிகளை பிரயோகித்த எல்லைக்கு குறைக்க முடியும்.

**மாற்றத்திற்கு உள்ளாக்கும் ஏற்பாடுகள்**

11\. இப்பணிப்புரைகளின் திகதியில் மேலே பந்திகள் 2(i) மற்றும் 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் வகையினர் எவர்க்கேனும் வழங்கப்பட்ட கடன்வசதிகளை இப்பணிப்புரையில் குறிப்பிடப்பட்ட எல்லைகளை விஞ்சும் சந்தர்ப்பத்தில், அத்தகைய அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் இப்பணிப்புரைத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அத்தகைய கடன்வசதிகளை குறித்த எல்லைகளுக்கு குறைத்துக் கொள்ள முடியும்.

**பணிப்புரைகளுடன் இணங்கி நடப்பதை உறுதிப்படுத்து வதற்கான நடவடிக்கைகள்**

12\. ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி இத்தகைய பணிப்புரைகளை மீறுகின்றது என நாணயசபை கருதுகின்ற போது மற்றும் அத்தகைய மீறுதல்களின் கருத்துக்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்கு கூறப்பட்ட சந்தர்ப்பத்தில் அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மீறுகைகளை திருத்தி அத்தகைய திருத்தங்கள் வங்கி மேற்பார்வையாளர் திணைக்கள பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்படும் வரை பங்கிலாபங்களை செலுத்த அல்லது இலாபங்களை வெளியே அனுப்பமுடியாது.

**முன்னைய பணிப்புரைகளின் அகற்றல்**

13\. 20 பெப்புருவரி 2007 ஆம் திகதியிடப்பட்ட 2007இல் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் இத்தால் நீக்கம் செய்யப்படுகிறது.

**இணைப்பு 1**

## பணிப்புரைகள்

## 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் கொடுகடன்களின் அதிகூடிய தொகை

## உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களின் வரைவிலக்கணம்

அபிவிருத்தி அல்லது தொழில்படுத்தல் மற்றும் பேணுதல் அல்லது கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட ஏதாவது உட்கட்டமைப்பு வசதியினை அபிவிருத்தி செய்தல், செயற்படுத்துதல், தரமுயர்த்தல் மற்றும் பேணுதல் போன்ற ஏதாவது செயற்றிட்டங்கள் மேலே உள்ள பணிப்புரைகளின் பணிப்புரை 8 (ஈ) இன் கீழான கொடுகடன்களுக்கான தகைமையுடையனவாக உள்ள பணிப்புரையில் குறிப்பிடப்பட்டவாறு கொடுகடன்களினது செயற்றிட்டத்தில் நேரடிச் செலவினை மேற்கொள்ளும் நோக்கத்துக்காக இருக்க வேண்டும். அத்துடன் இவை ஏனைய வங்கிகளால் அல்லது நிதியியல் நிறுவனங்கள் அல்லது ஏற்கனவே செயற்பாட்டிலுள்ள ஓர் செயற்றிட்டத்தின் கொள்வனவு செய்வதற்கான கிரயத்தை சந்திப்பதற்கு ஏதாவது ஏற்கனவே வழங்கப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்த வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்க முடியாது.

(i) சுங்க வீதிகள் உட்பட்ட வீதி, பாலம் அல்லது புகைவண்டி அமைப்பு

(ii) நெடுஞ்சாலை செயற்றிட்டத்தின் முக்கிய பகுதியாக விளங்கும் ஏனைய நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு நெடுஞ்சாலைச் செயற்றிட்டம்

(iii) துறைமுகம், வானூர்தி, உள்நாட்டு நீர்வழி அல்லது உள்நாட்டு துறைமுகம்

(iv) நீர் வழங்கல் செயற்றிட்டம், நீர்ப்பாசனச் செயற்றிட்டம், நீர் சுத்திகரிப்பு முறை, சுகாதாரம் மற்றும் வடிகாலமைப்பு அல்லது திண்ம கழிவு முகாமைத்துவ அமைப்பு

(v) வானொலி, பேஜிங், தூர இடங்களுக்கான வலையமைப்பு, அகன்ற வழிகளைக் கொண்ட வலையமைப்பு மற்றும் இணையத்தள வசதிகள் உள்ளிட்ட அடிப்படை அல்லது செலூலர் எதனையும் கொண்ட தொலைத்தொடர்பூட்டல் பணிகள்

(vi) கைத்தொழில் பூங்கா அல்லது சிறப்பு பொருளாதார வலயம்

(vii) வலு உருவாக்கம் அல்லது வலு உருவாக்கமும் விநியோகமும்

(viii) புதிய மின்கடத்தலின் வலயமைப்பினை அல்லது விநியோக வழிகளை ஏற்படுத்துவதன் மூலமாக வலுவினைக் கொண்டு செல்லல் அல்லது விநியோகித்தல்

(ix) வேளாண்மை பொருட்களைப் பதனிடுவதுடன் தொடர்பான செயற்றிட்டங்களுடன் தொடர்பான கட்டுமானம் மற்றும் வேளாண்மைக்கான உள்ளீடுகளை வழங்குதல்

(x) கல்விசார் நிறுவனங்களையும் வைத்தியசாலைகளையும் நிருமாணித்தல்

(xi) இதே தன்மைகளைக் கொண்ட வேறு ஏதாவது வசதிகள்

**இணைப்பு 2**

## பணிப்புரைகள்

## 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள்
## கொடுகடன்களின் அதிகூடிய தொகை

### நாணயசபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொடுகடன் தரமிடல் முகவர்களின் அட்டவணை

1. பிச் றேட்டிங்ஸ் லங்கா லிமிட்டெட்
2. லங்கா றேட்டிங் ஏஜென்சி லிமிட்டெட்
3. ஸ்ராண்டட் சாா்ட்டட் அன்ட் புவர்ஸ்
4. மூடிஸ் இன்வஸ்ரேஸ் சேர்விஸ்
5. கிறடிட் றேட்டிங் இன்போமேசன் சேர்விஸ் ஒவ் இந்தியா
6. இன்வஸ்மென் இன்போமேசன் அன்ட் கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி
7. பிச் றேட்டிங்ஸ் இந்தியா லிமிட்டெட்
8. பாகிஸ்தான் இன்ரநஷனல் கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி
9. றேட்டிங் ஏஜென்சி மலேசியா
10. யப்பான் கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி லிமிடெட்
11. காலத்துக்குக் காலம் நாணயசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது ஏனைய கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1)இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

ஒப்பம்
**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
ஆளுநர்

கொழும்பு
2007 நவெம்பர் 01

**பணிப்புரைகள்**

**2007ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள்**
**கொடுகடன்களின் அதிகூடிய தொகை**

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1) இனாலும், இறுதியாக திருத்தப்பட்டவாறு 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினாலும் அளிக்கப்பட்ட அதிகாரத்தை நடைமுறைக்கிடுதலுக்கமைய நாணயச்சபையால் பின்வரும் பணிப்புரைகள் விடுக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டல்

1. இப்பணிப்புரைகள் 2007ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளாக குறிப்பிடலாம். இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட பிரிவுகள் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் மற்றும் இறுதியாக திருத்தப்பட்டவாறு 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்திலும் காணப்படுவனவாகும்.

76ஜே(1)இன் கீழ் அதிகாரமளிப்பு

2. பிரிவு 76ஜே(1)இன் நியதிகளின்படி, நாணயசபையானது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கு அத்தகைய வங்கிகளுடைய வியாபாரங்களின் ஏதாவது விடயம் தொடர்பில் பணிப்புரைகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் நாணயசபையானது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கு அத்தகைய வங்கிகளால் பின்வருவோருக்கு வழங்கப்படக்கூடிய கொடுகடன்களின் கூட்டு மொத்தம் தொடர்பில் பணிப்புரைகளை வழங்குகிறது.

(i) ஏதாவது தனிக்கம்பனி, அரச கூட்டுத்தாபனம், நிறுவனம், தனிப்பட்டவர்களை கொண்ட அமைப்பு அல்லது ஒரு தனிநபர்; அல்லது

(ii) கூட்டு மொத்தத்தில் -

(அ) ஒரு தனியாள், அவரது நெருங்கிய உறவினர் அல்லது அவர் கணிசமான அக்கறையினை கொண்டுள்ள ஒரு கம்பனி அல்லது நிறுவனம்;

(ஆ) ஒரு கம்பனி மற்றும் பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை:-

(அஅ) அதனுடைய துணை நிறுவனங்கள்
(ஆஆ) அதனுடைய உடமைக் கம்பனி
(இஇ) அதனுடைய இணைக் கம்பனி
(ஈஈ) அதனுடைய உடமைக் கம்பனியின் ஓர் துணை நிறுவனம்; அல்லது
(உஉ) குறித்த கம்பனி அல்லது அதனுடைய துணை நிறுவனம் அல்லது அதனுடைய உடமைக் கம்பனி அல்லது அதனுடைய உடமைக் கம்பனியின் ஓர் துணை நிறுவனம் கணிசமான நலவுரித்துக்களை கொண்டிருக்கக்கூடிய ஓர் கம்பனி.

மேலே பந்திகள் 2(i) மற்றும் 2(ii)இல் குறிப்பிட்ட வாடிக்கை யாளர்களுக்கான கொடுகடன்களின் அதி உச்ச வரையறைகள்

3. அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளால் பணிப்புரைகள் 7,8 மற்றும் 9 ஐ கவனத்தில் கொண்டு வழங்கப்படக்கூடிய கொடுகடன்களின் அதிகூடிய தொகைகள் அத்தகைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளின் அடிப்படை மூலதனத்தின் பின்வரும் வீதங்களுக்கு மேற்படலாகாது.

(அ) மேலே பந்தி 2(i) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் தொடர்பில் 30 சதவீதம்.

(ஆ) மேலே பந்தி 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் தொடர்பில் 33 சதவீதம்.

4. (1) மேலே 3(ii) இல் கூறப்பட்ட பணிப்புரையின் விதிகளுக்கு புறம்பாக ஓர் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கி மேலே பந்தி 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளருக்கு அத்தகைய அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின்

மேலே பந்தி 2(ii)இல் குறிப்பிட்ட வாடிக்கையாளர்களின் கூட்டு மொத்த கொடுகடன்களின் வரையறைகளுக்கான அதிகரிப்பு

மூலதனத்தளத்தின் 33 சதவீதத்திலும் மேலதிகமான கொடுகடன்களை, கீழே பணிப்புரை 4(2) இல் குறித்துரைக்கப்பட்டவாறு பின்வருவனவற்றுக்காக ஒதுக்கப்பட்ட கணிப்பீடுகளின் கூட்டு மொத்தத்தின் அடிப்படையில் வழங்கலாம்.

(i) கொடுகடன்களை வழங்குகின்ற கம்பனியினுடைய மூலதனப் போதுமை விகிதம் மற்றும் கடன் தரமிடல்கள்

(ii) மேலே பந்தி 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர்களுடைய பிடிப்பு கம்பனியின் கடன் தரமிடல் ஆகும். இப்பணிப்புரைகளின் நோக்கத்திற்காக மேலே பந்தி 2(ii) இல் கூட்டு மொத்தமாக்கப்பட்ட கொடுகடன்களுடைய கம்பனிகளுக்கிடையில் தொடர்புகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் பிடிப்பு கம்பனியை நோக்கி செல்லாது அத்தகைய கூட்டு மொத்தத்தில் உள்ளடங்கும் ஒதுக்கீடு செய்த கம்பனிகளுடைய அதிகுறைந்த கடன் தரமிடலை கவனத்தில் கொள்ள முடியும்.

(2) மேலே பணிப்புரை 4(1) இல் குறிப்பிடப்பட்ட கணிப்பீடுகளை பின்வருமாறு ஒதுக்கீடு செய்யலாம்.

| வங்கியின் தரமிடல் | வாடிக்கையாளரின் கடன் தரமிடல் | வங்கியின் மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் | ஒவ்வொரு நிரலுக்குமாக ஒதுக்கீடு செய்த தொகை |
|---|---|---|---|
| AAA இருந்து AA- அல்லது சமனானவை | AAA இருந்து AA- அல்லது சமனானவை | > 12 | 1 |
| A+ இருந்து A- வரை அல்லது சமனானவை | A+ இருந்து A- வரை அல்லது சமனானவை | 11% - 12% | 2 |
| BBB+ அல்லது சமனானது மற்றும் குறைவானது | BBB+ அல்லது சமனானது மற்றும் குறைவானது அல்லது தரமிடப்படாதது | 10% - <11% | 3 |

(3) மேலே பணிப்புரை 4(1) இன் கீழ், பந்தி 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளருக்கு ஓர் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியால் வழங்கப்படக்கூடிய கொடுகடன்களின் அதிகூடிய தொகையின் அளவு மேலே பணிப்புரை 4(2) இல் குறிப்பிடப்பட்ட அட்டவணையின் பிரகாரம் மூன்று நிரலுக்காக ஒதுக்கு செய்யப்பட்ட புள்ளிகளுடைய கூட்டு மொத்தத்தை அடிப்படையாகக் கொண்டு அனுமதியளிக்கப்பட்ட சிறப்பியல்பு வங்கியினுடைய மூலதன தளத்தின் பின்வரும் சதவீதங்களை விஞ்சக்கூடாது.

(i) கணிப்பீடுகளின் கூட்டு மொத்தம் 3 இற்கும் 5 இற்கும் இடைப்பட்டதாயின் 40 சதவீதம்.

(ii) கணிப்பீடுகளின் கூட்டு மொத்தம் 6 இற்கும் 8 இற்கும் இடைப்பட்டதாயின் 36 சதவீதம்.

பாரிய கொடுகடன்களின் கூட்டுமொத்த எல்லை

5. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியினுடைய மூலதனத்தளத்தின் 15 சதவீதத்திற்கு மேலதிகமாக, இலங்கை அரசாங்கம் தவிர மேலே பந்திகள் 2(i) மற்றும் 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர்களுடைய ஏதாவது வகுதியினருக்கு ஏதாவது தரப்பட்ட திகதியில் வழங்கப்பட்ட கொடுகடன்களின் தொகையின் விடயத்தில், அத்தகைய வாடிக்கையளருக்கு வழங்கப்பட்ட கொடுகடன்களின் வெளிநின்ற தொகைகளின் கூட்டு மொத்தம் உடனடியாக தொடர்ந்து வரும் மாதத்தில் இறுதியில் உள்ளதாக இலங்கை அரசாங்கம் தவிர அவ் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியால் அனைத்து வாடிக்கையாளருக்கும் வழங்கப்பட்ட கொடுகடன்களின் கூட்டு மொத்த வெளிநின்ற தொகைகளின் 55 சதவீதத்ததை விஞ்சக்கூடாது.

குறிப்பிட்ட வரையறைகளுக்கு மேற்பட்ட கொடுகடன்களுக்கு நாணயசபையின் அனுமதி

6. (1) மேலே கூறப்பட்ட பணிப்புரை 3 மற்றும் 4 இனுடைய விதிகளுக்கு புறம்பாக ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியானது நாணய சபையினுடைய முன் அனுமதி கோரி பெற்றுக் கொண்டதற்கிணங்க மேலே பந்திகள் 2(i) மற்றும் 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் பகுதியினருக்கு பணிப்புரை 3 மற்றும் 4 இன் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகூடிய வரையறைகளுக்கு மேலாக கொடுகடன்களை வழங்கலாம். நாணயசபையானது அத்தகைய அனுமதிகளை விடயத்திற்கு விடய அடிப்படையில் தேசிய முன்னுரிமைகள் மற்றும்/ அல்லது தேசிய நலன்களின் சந்தர்ப்பங்களை கவனத்தில் கொண்டும் அத்தகைய உயர் தரப்பட்ட கொடுகடன்களின் தாக்கத்திலிருந்து எழக்கூடிய எதிர் நேரிடக்கூடிய இடர்நேர்வுகளுக்கு அல்லது அவ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் இயலுமையை கவனத்தில் கொண்டு இதனால் பொருந்தும் எனக் கருதுகின்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப ஓர் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிக்கு அத்தகைய கொடுகடன்களிலிருந்து எழுகின்ற இடர்நேர்வுகளின் மதிப்பீட்டை விரிவாக ஆராய்ந்து நாணயச்சபையிடமிருந்து அனுமதியை எதிர்பார்க்கும் போது அவ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியால் அம்மதிப்பீடு நாணயச்சபைக்கு வழங்கப்படும் என்ற அடிப்படையில் வழங்கப்படலாம்.

(2) மேலே கூறப்பட்ட பணிப்புரை 6(1) இனை கருத்திற் கொண்டு ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியானது மேலே பந்திகள் 2(i) மற்றும் 2(ii) இல் குறித்துரைக்கப்பட்ட வாடிக்கையாளர் வகையினருக்கு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியினுடைய மூலதனத்தளத்தின் 50 சதவீதம் வரையினை கடன் வசதிகளை, இத்தோடு இணைக்கப்பட்ட

இணைப்பு 2 இல் குறிப்பிடப்படும் உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல் அல்லது விரிவாக்கல் போன்றவற்றின் நேரடி நிதியிடல் நோக்கத்திற்காக பின்வரும் நடைமுறைக்கு அமைய வழங்கலாம்.

(i) இலங்கையில் ஓர் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் நேரடியாக ஈடுபடுவதற்குமான ஒப்பந்தத்தை வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளர்கள் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

(ii) அத்தகைய நிகழ்ச்சித்திட்டமானது இலங்கைக்கு வெளியேயான மூலங்களின் மூலமாக அல்லது வங்கியால் வழங்கப்படும் கடன் பெறுகைகள் தவிர உரிமம் பெற்ற வங்கிகளின் கூட்டால் ஆகக் குறைந்தது 50 சதவீதம் நிதியிடப்பட வேண்டும்.

பணிப்புரைகள் 3 மற்றும் 4 இன் கீழ் அதிகூடிய எல்லைகளிலிருந்து கொடுகடன்களுக்கான விலக்களிப்பு

7. மேலே பந்திகள் 2(i) மற்றும் 2(ii)இல் குறித்துரைக்கப்பட்ட ஏதாவது வாடிக்கையாளர் வகையினருக்கு மேலே பணிப்புரைகள் 3 மற்றும் 4 இன் கீழ் கடன் பெறுதிகளின் அதிகூடிய தொகைகளை கணிக்கும் போது பின்வரும் கடன் வசதிகளை நீக்கிக் கொள்ள முடியும்.

(i) பணம், தங்கம், அரச பிணையங்கள், மத்திய வங்கி பிணையங்கள், திறைசேரி உத்தரவாதங்கள், மத்திய வங்கி உத்தரவாதங்கள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி கூட்டமைப்பு அல்லது வங்கி மேற்பார்வை பணிப்பாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது ஏனைய சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றால் வழங்கப்படும் உத்தரவாதங்கள் என்பவற்றின் எதிராக வழங்கப்படும் கடன் வசதிகள்.

(ii) பின்வருவனவற்றை கருத்துக் கொண்டு வங்கி மேற்பார்வை பணிப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கடன் வழங்கும் வங்கி தவிர்ந்த வங்கியால் வழங்கப்படும் உத்தரவாதங்கள் அல்லது அதையொத்த சாதனங்களுக்கு எதிராக வழங்கப்படும் கடன் சாதனங்கள்.

(அ) AAA தொடக்கம் A- வரையான அல்லது அதற்கு சமனான கொடுகடன் தரமிடலை கொண்டிருக்கும் வங்கியால் வழங்கப்படும் உத்தரவாதம்.

(ஆ) AAA தொடக்கம் AA- அல்லது சமனானதுமான கொடுகடன் தரமிடலையுடைய வங்கியால் வழங்கப்படும் உத்தரவாதங்களையுடைய சந்தர்ப்பத்தில் கடன் வசதிகளின் 80 சதவீதத்தையும் A+ தொடக்கம் A- அல்லது சமமானதுமான கொடுகடன் தரமிடலைக் கொண்ட வங்கியின் சந்தர்ப்பத்தில் 50 சதவீதத்தையும் கடன் வசதிகளின் கணிப்பீட்டிலிருந்து நீக்கம் செய்தல் முடியும்.

(இ) அத்தகைய சந்தர்ப்பம் அனைத்தினதும் தொடர்பில் நீக்கம் செய்யக்கூடிய எல்லாக் கடன் வசதிகளுடைய கூட்டு மொத்தத் தொகையற்ற வர்த்தக வங்கியின் அடிப்படை மூலதனத்தின் 100 சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது.

(ஈ) உத்தரவாதத்தை வழங்குகின்ற வங்கியின் கொடுகடன் தரமிடலானது கடன் வழங்கலிலிருந்து 15 மாதத்திற்குள் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதை உரிமம் பெற்ற வர்த்தக வங்கியானது திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டும். அத்துடன் அத்தகைய கொடுகடன் தரமிடலில் ஏதாவது மாற்றம் இடம் பெறுமாயின் கொடுகடன் உடனடியாக மீளமைக்கப்பட வேண்டும்.

பணிப்புரைகள் 3 மற்றும் 4 இன் கீழ் அதிகூடிய எல்லைகளிலிருந்து ஆட்களுக்கு/ நிறுவனங்களுக்கு விலக்களிப்பு

8. இந்த பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட கடன்வசதிகளின் அதிகூற்று எல்லைகளானது பின்வரும் நபர்களுக்கு/ நிறுவனங்களுக்கு பிரயோகிக்கப்படமாட்டது.

(i) இலங்கை அரசாங்கம்.

(ii) ஆகக் கூடுதலாக இந்த பணிப்புரைகளின் திகதியிலிருந்து இரண்டு வருடங்களுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை.

(iii) இரண்டு வருடங்களுக்கு உட்பட்ட முதிர்வு காலத்தைக் கொண்ட கடன் வசதி வழங்குதல் தொடர்பில் ஏனைய அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள்.

வரைவிலக்கணங்கள்

9. கீழ்வரும் வரைவிலக்கணங்கள் இப்பணிப்புரைகளை நோக்காக கொண்டு உட்படுத்தப்பட்டுள்ளது.

(i) கடன் வசதிகள்: வங்கித்தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவின்படி வரையறுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ள பிரகாரம், கடன் வசதிகளானது கீழ் கூறப்பட்டுள்ள கடன் வெளிப்படுத்துகை, முதலீட்டு வெளிப்படுத்துகை என்பவற்றை குறிக்கும்.

(அ) கடன் வெளிப்படுத்துகையானது ஐந்தொகையில் உள்வாங்கப்பட்ட அனைத்து கடன் வசதிகளான கடன்கள், மேலதிக பற்றுகள் அல்லது நிதி குத்தகை உள்ளடங்கலான முற்பணங்கள், வாடகை கொள்வனவுகள் மற்றும் கடன் பிணைகளுக்கெதிரான எதிர்மாறான மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் என்பவற்றுடன் ஐந்தொகையில் உள்வாங்கப்படாத அனைத்து கடன் வசதிகளான கடன் வழங்குவதற்கான

இணக்கப்பாடு, மேலதிகப்பற்று அல்லது முற்பணங்கள் அல்லது உறுதியற்ற பொறுப்புக்களை ஏற்பதற்கான இணக்கப்பாடு உள்ளடங்கலான ஏனைய வசதிகள்.

(ஆ) முதலீடு வெளிப்படுத்துகையானது உரிமை மீதான தவிர்த்து (சாதாரண பங்குகள் மாத்திரம்) ஏனைய அனைத்து நிதி முதலீடுகளையும் உள்ளடக்கும்.

(ii) கடன் வசதிகளின் பெறுமதி: கடன் வசதிகளின் பெறுமதியானது அனைத்து ஐந்தொகையில் உள்வாங்கப்பட்ட கடன் வசதிகளையும் அனைத்து ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளையும் குறிக்கும்.

(அ) ஐந்தொகையில் உள்வாங்கப்பட்ட கடன் வசதிகளின் பெறுமதி: ஐந்தொகையில் உள்வாங்கப்பட்ட கடன் வசதிகளின் பெறுமதியானது ஒரு குறித்த நேரத்தில் இருக்கக்கூடிய கடன்வசதிகளின் வரையறையின் மொத்தம் அல்லது அனைத்து கடன் வசதிகளினதும் நிலுவைகளின் மொத்தம் என்பவற்றுள் கூடியதைக் குறிக்கும். முழுமையாக பற்று மேற்கொள்ளப்பட்ட தவணைக் கடன்களாயின், அக்கடன்வசதிகளின் நிலுவைப் பெறுமதி, கடன்வசதிகளின் பெறுமதியாகக் ஏற்றுக் கொள்ளப்படும்.

(ஆ) ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளின் பெறுமதி: ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளின் பெறுமதியானது ஒரு குறித்த நேரத்தில் இருக்கக்கூடிய கடன்வசதிகள் வரையறையின் மொத்தத்திற்கு சமனான கொடுகடன் அல்லது அனைத்து கடன்வசதிகளினதும் நிலுவைகளின் மொத்தம் என்பவற்றுள் கூடியதைக் குறிக்கும்.

(iii) கடன் வசதிகளின் நிலுவைப் பெறுமதி: கடன் வசதிகளின் நிலுவைப்பெறுமதியானது ஐந்தொகையில் உள்வாங்கப்பட்ட கடன் வசதிகளின் மொத்த நிலுவைகளையும் ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளின் மொத்த நிலுவைகளையும் குறிக்கும்.

(அ) ஐந்தொகையில் உள்வாங்கப்பட்ட கடன் வசதிகளின் நிலுவை: ஐந்தொகையில் உள்வாங்கப்பட்ட கடன்வசதிகளின் நிலுவையானது, மூலதன நிலுவையினைக் குறிக்கும்.

(ஆ) ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளின் நிலுவை: ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளின் நிலுவையானது, ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளின் நிலுவைக்கு சமனான கொடுகடனைக் குறிக்கும்.

(iv) ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகளுக்கு சமனான கொடுகடன் பெறுமதி: மூலதன போதுமை விகித கணிப்பீட்டிற்காக உள்வாங்கப்படாத கடன் வசதிகளுக்கான கொடுகடன் மாற்று விகிதங்களை பாவித்து கணிக்கப்பட்ட அளவுக்கு சமனான கொடுகடன்.

(v) மூலதன ஆதாரம் மற்றும் மூலதன போதுமை விகிதம்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் வெளிவாரி கணக்காய்வாளரால் உறுதி செய்யப்பட்ட கைவசமுள்ள கடந்த நிதி வருட இறுதியிலுள்ளவாறான அல்லது நேர் முன்னைய காலாண்டுப் பகுதிக்குரிய அல்லது பொருத்தமான காலாண்டுப்பகுதிக்கு முன்னைய காலாண்டுப் பகுதிக்கான மூலதனப் போதுமை விகிதத்தைக் கணிப்பிட பயன்படுத்திய மூலதன ஆதாரம் மற்றும் மூலதனப் போதுமை விகிதம் என்பவற்றைக் குறிக்கும்.

கடன்வசதியின் மீளாய்வு

10. (1) பிரயோகிக்கத்தக்க கடன் வசதியின் எல்லையின் குறைத்தல் காரணமாக ஓர் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளை மீளாய்வு செய்ய வேண்டிய சந்தர்ப்பத்தில், அடுத்த கடன் வசதி மீளாய்வு திகதி அல்லது ஆறு மாதங்கள் இவற்றில் முன்னதாக ஏற்படும் திகதியில் வழங்கப்பட்ட கொடுகடன் குறைக்கப்படலாம்.

(2) ஏதாவது வாடிக்கையாளருக்கிடையிலான ஓர் இணைப்பு அல்லது கையகப்படுத்தல் பிரயோகித்திலுள்ள அதிகூடிய கொடுகடன்களின் தொகையில் மேலதிகத்தை உருவாக்கும் சந்தர்ப்பத்தில், உரிமம் பெற்ற வர்த்தக வங்கியானது அத்தகைய இணைப்பு அல்லது கையப்படுத்தல் திகதியிலிருந்து ஆறுமாத காலத்திற்குள் குறித்த கடன் வசதிகளை பிரயோகித்த எல்லைக்கு குறைக்க முடியும்.

மாற்றத்திற்கு உள்ளாக்கும் ஏற்பாடுகள்

11. இப்பணிப்புரைகளின் திகதியில் மேலே பந்திகள் 2(i) மற்றும் 2(ii) இல் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் வகையினர் எவர்க்கேனும் வழங்கப்பட்ட கடன் வசதிகள் இப்பணிப்புரையில் குறிப்பிடப்பட்ட எல்லைகளை விஞ்சும் சந்தர்ப்பத்தில், அத்தகைய அனுமதியளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் இப்பணிப்புரைத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அத்தகைய கடன் வசதிகளை குறித்த எல்லைகளுக்கு குறைத்துக் கொள்ள முடியும்.

பணிப்புரைகளுடன் இணங்கி நடப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

12. ஓர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி இத்தகைய பணிப்புரைகளை மீறுகின்றது என நாணயச்சபை கருதுகின்ற போது மற்றும் அத்தகைய மீறுதல்களின் கருத்துக்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்கு கூறப்பட்ட சந்தர்ப்பத்தில் அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மீறுகைகளை திருத்தி அத்தகைய திருத்தங்கள் வங்கி மேற்பார்வையாளர் திணைக்கள பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்படும் வரை பங்கிலாபங்களை செலுத்த அல்லது இலாபங்களை வெளியே அனுப்ப முடியாது.

முன்னைய பணிப்புரைகளின் அகற்றல்

13. 20 பெப்புருவரி 2007 ஆம் திகதியிடப்பட்ட 2007இல் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் இத்தால் நீக்கம் செய்யப்படுகிறது.

இணைப்பு 1

## பணிப்புரைகள்

## 2007ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் கொடுகடன்களின் அதிகூடிய தொகை

## உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களின் வரைவிலக்கணம்

அபிவிருத்தி அல்லது தொழில்படுத்தல் மற்றும் பேணுதல் அல்லது கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட ஏதாவது உட்கட்டமைப்பு வசதியினை அபிவிருத்தி செய்தல், செயற்படுத்துதல், தரமுயர்த்தல் மற்றும் பேணுதல் போன்ற ஏதாவது செயற்றிட்டங்கள் மேலே உள்ள பணிப்புரைகளின் பணிப்புரை 8 (ஈ) இன் கீழான கொடுகடன்களுக்கான தகமையுடையனவாக உள்ள பணிப்புரையில் குறிப்பிடப்பட்டவாறு கொடுகடன்களினது செயற்றிட்டத்தில் நேரடிச் செலவினை மேற்கொள்ளும் நோக்கத்துக்காக இருக்க வேண்டும். அத்துடன் இவை ஏனைய வங்கிகளால் அல்லது நிதியியல் நிறுவனங்கள் அல்லது ஏற்கனவே செயற்பாட்டிலுள்ள ஓர் செயற்றிட்டத்தின் கொள்வனவு செய்வதற்கான கிரயத்தை சந்திப்பதற்கு ஏதாவது ஏற்கனவே வழங்கப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்த வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்க முடியாது.

(i) சுங்க வீதிகள் உட்பட்ட வீதி, பாலம் அல்லது புகைவண்டி அமைப்பு

(ii) நெடுஞ்சாலை செயற்றிட்டத்தின் முக்கிய பகுதியாக விளங்கும் ஏனைய நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு நெடுஞ்சாலைச் செயற்றிட்டம்

(iii) துறைமுகம், வானூர்தி, உள்நாட்டு நீர்வழி அல்லது உள்நாட்டு துறைமுகம்

(iv) நீர் வழங்கல் செயற்றிட்டம், நீர்ப்பாசனச் செயற்றிட்டம், நீர் சுத்திகரிப்பு முறை, சுகாதாரம் மற்றும் வடிகாலமைப்பு அல்லது திண்ம கழிவு முகாமைத்துவ அமைப்பு

(v) வானொலி பேஜிங், தூர இடங்களுக்கான வலையமைப்பு, அகன்ற வழிகளைக் கொண்ட வலையமைப்பு மற்றும் இணையத்தள வசதிகள் உள்ளிட்ட அடிப்படை அல்லது செலூலர் எதனையும் கொண்ட தொலைத்தொடர்பூட்டல் பணிகள்

(vi) கைத்தொழில் பூங்கா அல்லது சிறப்பு பொருளாதார வலயம்

(vii) வலு உருவாக்கம் அல்லது வலு உருவாக்கமும் விநியோகமும்

(viii) புதிய மின்கடத்தலின் வலயமைப்பினை அல்லது விநியோக வழிகளை ஏற்படுத்துவதன் மூலமாக வலுவினைக் கொண்டு செல்லல் அல்லது விநியோகித்தல்

(ix) வேளாண்மை பொருட்களைப் பதனிடுவதுடன் தொடர்பான செயற்றிட்டங்களுடன் தொடர்பான கட்டுமானம் மற்றும் வேளாண்மைக்கான உள்ளீடுகளை வழங்குதல்

(x) கல்விசார் நிறுவனங்களையும் வைத்தியசாலைகளையும் நிருமாணித்தல்

(xi) இதே தன்மைகளைக் கொண்ட வேறு ஏதாவது வசதிகள்

**இணைப்பு 2**

## பணிப்புரைகள்

## 2007ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள்
## கொடுகடன்களின் அதிகூடிய தொகை

### நாணயசபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொடுகடன் தரமிடல் முகவர்களின் அட்டவணை

1. பிச் றேட்டிங்ஸ் லங்கா லிமிட்டெட்
2. லங்கா றேட்டிங் ஏஜென்சி லிமிட்டெட்
3. ஸ்ராண்டட் சார்ட்டட் அன்ட் புவர்ஸ்
4. மூடிஸ் இன்வஸ்ரேஸ் சேர்விஸ்
5. கிறடிட் றேட்டிங் இன்போமேசன் சேர்விஸ் ஒவ் இந்தியா
6. இன்வஸ்மென் இன்போமேசன் அன்ட் கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி
7. பிச் றேட்டிங்ஸ் இந்தியா லிமிட்டெட்
8. பாகிஸ்தான் இன்ரநஷனல் கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி
9. றேட்டிங் ஏஜென்சி மலேசியா
10. யப்பான் கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி லிமிடெட்
11. காலத்துக்குக் காலம் நாணயசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது ஏனைய கிறேடிட் றேட்டிங் ஏஜென்சி

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2007 திசெம்பர் 26

**உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளினதும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு**

அன்புள்ள ஐயா/ அம்மணி

**2008ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து பாசல் IIஇன் மூலதன போதுமை கட்டமைப்பினைப் பின்பற்றுதல்**

மத்திய வங்கியினால் 2007 சனவரி 2ஆம் நாளன்று வெளியிடப்பட்ட "வழிகாட்டல்: 2007இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல்துறைக் கொள்கைகள்" இல் அறிவிக்கப்பட்டவாறு, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் முறையே 46(1) மற்றும் 76ஜே(1) என்பனவற்றின் கீழான ஏற்பாட்டு நியதிகளில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றிற்கான பாசல் IIஇன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை மூலதன போதுமை விகிதத்தினைப் பேணுவது தொடர்பாக வழங்கியிருக்கும் பணிப்புரைகள் 2008 சனவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். இப்பணிப்புரைகள் 2004 யூனில் பன்னாட்டு தீர்ப்பனவிற்கான வங்கியின் வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழுவினால் வழங்கப்பட்ட, பாசல் II என நன்கறியப்பட்ட "மூலதன வழிமுறைகள் மற்றும் மூலதன நியமங்களின் பன்னாட்டு ஒருங்கமைப்பு - திருத்தப்பட்ட கட்டமைப்பொன்று" என்பதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இது பின்னர் 2006 யூனில் திருத்தப்பட்டது.

2. பாசல் II இனைப் பின்பற்றுதல்

உங்களினால் அறியப்பட்டதற்கமைய பாசல் II ஆனது இக்கட்டமைப்பின் நடைமுறைப்படுத்தலுக்காக ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு, மேற்பார்வை மீளாய்வு செயற்பாடு மற்றும் சந்தை நடத்தை எனும் "மூன்று தூண்கள்" இனைத் தருகின்றது. இருப்பினும் 2007ஆம் ஆண்டு நவெம்பர் 22இல் வங்கி முகாமையாளர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, மத்திய வங்கியானது ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடான தூண் 1இனை 2008ஆம் ஆண்டு சனவரி 1 திகதியிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கும் மிகுதி இரண்டு தூண்களையும் நடுத்தரக் காலத்தில் பின்பற்றுவதற்கும் தீர்மானித்தது. பாசல் II இனைப் பின்பற்றுவதற்கான அணுகுமுறை பின்வருமாறு.

**2.1 தூண் I இனைப் பின்பற்றுதல் - ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு**

இலாவகமானதும் அபிவிருத்தி செய்யப்பட்டதுமான வங்கி முறைமையின் அடிப்படையில் தூண் 1இனை அமுல்படுத்துவது தொடர்பாக பாசல் II ஆனது சில தெரிவுகளை வழங்குகின்றது. அதன் பிரகாரம் 2008ஆம் ஆண்டு சனவரி 1ஆம் திகதியிலிருந்து அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் கொடுகடன் இடர்நேர்வுக்காக நியமப்படுத்தப்பட்ட முறைமையினையும், சந்தை இடர்நேர்வுக்காக நியமப்படுத்தப்பட்ட அளவீட்டு முறைமையினையும், செயற்பாட்டு இடர்நேர்வுக்கான அடிப்படைக் குறியீட்டு முறையையும் மூலதனத் தேவைப்பாட்டுக் கணிப்பீட்டின் போது பயன்படுத்துமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

(i) நாணயச்சபையினால் 2007ஆம் ஆண்டு திசெம்பர் 26ஆம் திகதி வெளியிடப்பட்ட வங்கித்தொழில் சட்டத்தின் பணிப்புரைகள் எண் 9 (உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்) உம் எண் 10 (உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்).

(ii) மூலதனப் போதுமை விகிதத்தினைக் கணிப்பீடு செய்வதற்கான வழிகாட்டிகள் (அட்டவணை I)

(iii) மூலதனப் போதுமை விகிதத்தின் மீது சமர்ப்பிக்கப்பட வேண்டிய கூற்றுக்கள் (அட்டவணை II)

**2.2 முன்னேற்றகரமான அணுகு முறைகளுக்கு புலம் பெயர்தல்**

2013ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து உள்ளகத் தரமிடல் அடிப்படையிலான முன்னேற்றகரமான அணுகு முறையினை பின்பற்றுவதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. வங்கிகள் பொருத்தமான மாதிரியினையும், இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளுக்கான இயலுமையினையும் கொண்டிருக்கின்றன என மத்திய வங்கி திருப்திப்படுத்தப்படுமானால் உள்ளகத் தரமிடல் அடிப்படையிலான முறைமையினைப் பின்பற்ற அனுமதியளிக்கப்படும். அத்தகைய புலம் பெயர்தலுக்காக மத்திய வங்கியிடம் பெறப்பட வேண்டிய அங்கீகாரம் பற்றிய முன் தேவைப்பாடுகளும் படிமுறைகளும் தொடர்பான வழிகாட்டிகள் பின்னர் வெளியிடப்படும்.

### 2.3 மூல வளத் தேவைப்பாடுகள்: தரவுகள், தகவல் தொழில்நுட்ப தேவைகள் மற்றும் பயிற்சி

**தரவுகளும் தகவல் தொழில்நுட்ப தேவைகளும்**: வங்கிகளானது இலகுபடுத்தப்பட்ட அணுகுமுறை தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்கும் எதிர்காலத்தில் முன்னேற்றம் கண்ட அணுகுமுறைகளுக்கு நகருவதற்குமாக எல்லா வகையான இடர்நேர்வினை அடையாளப்படுத்தவும், அளவீடு செய்யவும், அறிக்கை மேற்கொள்வதற்கும், மூலதனத்தை மதிப்பீடு செய்து இடர்நேர்வுக்கு எதிராக ஒழுங்குமுறையில் ஒதுக்கீடு செய்வதற்குமாக அனைத்தையுமுள்ளடக்கிய தரவுகள் சேகரிக்கும் முறையினை ஆரம்பித்தல் வேண்டும். இதற்கமைவாக முன்னேற்றம் கண்ட முறைமைக்கு நகர்வதற்கு வங்கிகளானது மாற்றங்களை நடைமுறைப்படுத்துமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றது, சிறப்பாக ஒருங்கிணைத்தல் முறைமைக்கான திட்டம், உள்ளக முறைமையினை நவீனமயப்படுத்தல் பொருத்தமான தரவுகளைச் சேகரிப்பதற்கு புதிய மென்பொருளைப் பாவித்தல் என்பவற்றினை உள்ளடக்கும். இதன் பிரகாரம் வங்கி தரவுகளைச் சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், தவறிய தரவுகளை சிறந்த முறையில் வரைதல் போன்றவற்றிற்காக வங்கிகளானது ஓர் இடத்தினை அல்லது தரவுக் களஞ்சியம் ஒன்றினை அபிவிருத்தி செய்யுமாறு எதிர்பார்க்கப்படுகின்றன. இணைப்பு I இல் இதற்கான வழிகாட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

**பயிற்சிகள்**: வெற்றிகரமாக பாசல் II இனை நடைமுறைப்படுத்துவதற்கு கொடுகடன் இடர்நேர்வு மாதிரிகள் தொடர்பான திறனை உயர்த்துதல், மூலதன மதிப்பீட்டுத் தந்திரோபாயங்கள், கொடுகடன் இடர்நேர்வுகளைத் தணித்தல், சந்தை மற்றும் செயற்பாட்டு இடர்நேர்வினை அளவிடல் என்பன மிக முக்கியமானவைகளாகவுள்ளன.

### 2.4 ஏனைய இரு தூண்களையும் பின்பற்றுதல்

#### 2.4.1 தூண் II மேற்பார்வை மீளாய்வு செய்முறை

மேற்பார்வை மீளாய்வு செய்முறையின் முக்கிய நோக்கமானது, வங்கிகள் இடர்நேர்வுகளை எதிர் கொள்வதற்கு போதிய மூலதனத்தை வைத்திருக்க வேண்டும் என்பதையும் அனைத்து இடர்நேர்வினை முகாமை செய்வதற்கும் மற்றும் கண்காணிப்பதற்கும் ஏற்ப இலாவகமான நுட்பங்களை பின்பற்றுவதற்கு அவர்களை ஊக்குவிப்பதுமேயாகும். இந்நோக்கத்திற்காக, வங்கிகள் தமக்கிடையில் நன்கு வடிவமைக்கப்பட்ட உள்ளக மதிப்பீட்டு செயற்பாடுகளையும் மற்றும் அவைகள் அனைத்தும் அவற்றின் பொருள் ரீதியான இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளில் போதுமான மூலதனம் வைக்கப்பட்டுள்ளது என்பதனை மத்திய வங்கிக்கு உறுதிப்படுத்தக் கூடியனவாகவும் இருத்தல் வேண்டும். வங்கிகளின் தற்போதைய உள்ளக முறைமைகளை கருத்தில் கொண்டு தூண் III இனை 2010இலிருந்து நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

#### 2.4.2 தூண் III சந்தை நடத்தை

திருத்தப்பட்ட கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்டு, வங்கிகளுக்காக வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளை அறிமுகப்படுத்தும் புதிய பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களை, அதாவது பன்னாட்டு நிதிசார் அறிக்கையிடல் நியமங்களைப் பின்பற்றுவதுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கமைவாக, தூண் IIIஇனை பின்பற்றத் தொடங்கும் வரையில் தற்போது நடைமுறையில் உள்ள வெளிப்படுத்தல் முறைமைகளைப் பின்பற்றுமாறு வங்கிகள் வேண்டப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**பீ. டி. டபிள்யு. ஏ சில்வா**

பதில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

படி: செயலாளர் நாயகம்/ இலங்கை வங்கித்தொழில் சங்கம்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1)இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

ஒப்பம்
**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
ஆளுநர்

கொழும்பு
2007 திசெம்பர் 26

**பணிப்புரைகள்**

**2007ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள்**
**மூலதன போதுமை விகிதத்தை பேணுதல்**

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 19(அ) இனால் அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய நாணயச் சபையானது பாசலில் உள்ள பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கியின் மூலதனப் போதுமை தொடர்பான வழிகாட்டல்களின் அடிப்படையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான மூலதன போதுமை விகிதத்தை பேணுதல் தொடர்பாக ஒரு தீர்மானத்திற்கு வந்ததுடன்,

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) இனால் அளிக்கப்பட்ட அதிகாரத்தை நடைமுறைக்கிடுதலுக்கமைய நாணயச்சபையினால் பின்வரும் பணிப்புரைகள் விடுக்கப்படுகின்றன.

மிகக் குறைந்த மூலதனப் போதுமை விகிதம்

1(1) 2008 சனவரி 1ஆம் நாள் தொடக்கத்திலிருந்து எல்லா உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலும் எல்லா வேளைகளிலும் அடிப்படை மூலதனம் மொத்த இடர் நிறைப்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக 5 சதவீதத்திற்கு குறைவாக இல்லாமலும் மூலதன போதுமை விகிதம் மொத்த இடர் நிறைப்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக 10 சதவீதத்திற்குக் குறைவாக இல்லாமலும் பேணப்படுதல் வேண்டும்.

1(2) மேலே குறிப்பிடப்பட்ட பணிப்புரை 1(1)இல் உள்ள மூலதன போதுமை விகிதங்கள், பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கியில் அமைந்துள்ள வங்கி மேற்பார்வை மீதான பாசல் (Basle) செயற்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பாசல் II (Basle II) மூலதன ஒப்பந்தத்தின் "மூலதன அளவீடு மற்றும் மூலதன நியதிகளுக்கான பன்னாட்டு ஒருங்கமைப்பு - மீள்பார்வை செய்யப்பட்ட ஒரு வடிவமைப்பு" அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அட்டவணை 1இல் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு அமைவாக, கணிக்கப்பட வேண்டும்.

அறிக்கையிடும் வழிமுறை

2. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், அட்டவணை I இல் தரப்பட்டுள்ள மூலதனப் போதுமை விகிதங்களை குறிப்பிட்ட கால அடிப்படையில் அறிவிப்பதற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை II இல் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறையைப் பாவிக்க வேண்டும்.

பணிப்புரைகளுடன் இணங்கி நடப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை

3. இந்த பணிப்புரைகளுடன் இணங்கி நடப்பதற்கு எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கி தவறுமாயின் அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கியானது குறிப்பிட்ட இணங்கி நடத்தலானது மேற்கொள்ளப்பட்டதுடன் அது வங்கி மேற்பார்வை திணைக்கள பணிப்பாளரால் உறுதி செய்யப்படும் வரை பங்கு இலாபங்களை செலுத்த அல்லது இலாபங்களை வெளியில் மீளனுப்ப முடியாது.

முன்னைய தீர்மானங்களின் அகற்றல்

4(1) வங்கித்தொழில் சட்டம் பிரிவு 19(7) அல்லது 46(1)இன் கீழ் நாணயச்சபையினால் மூலதன போதுமை விகிதம் பேணுதல் தொடர்பாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட முன்னைய எல்லா தீர்மானங்கள், பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டிகள் என்பன யாவும் இத்தால் அகற்றப்படுகின்றன.

4(2) அகற்றல் தொடர்பாக மேற்குறிப்பிட்ட பணிப்புரை 4(1) இற்கு புறம்பாக அடிப்படையில் கால எல்லை வங்கித்தொழில் சட்டப் பிரிவு 19(7)(ஆ)இன் வர்த்தக வங்கிகள் மேற்குறிப்பிட்ட முன்னைய எல்லா தீர்மானங்கள், பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டிகளிலுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக அக்கால எல்லை முடிவடையும் வரை இணங்கி நடக்க வேண்டும்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1)இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

ஒப்பம்
**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
ஆளுநர்

கொழும்பு
2007 திசெம்பர் 26

## பணிப்புரைகள்

## 2007ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் மூலதன போதுமை விகிதத்தை பேணுதல்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1) இனால் அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய நாணயச் சபையானது பாசலில் உள்ள பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கியின் மூலதனப் போதுமை தொடர்பான வழிகாட்டல்களின் அடிப்படையில் உரிமம் பெற்ற விசேட வங்கிகளுக்கான மூலதன போதுமை விகிதத்தை பேணுதல் தொடர்பாக ஒரு தீர்மானத்திற்கு வந்ததுடன்,

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1) இனால் அளிக்கப்பட்ட அதிகாரத்தை நடைமுறைக்கிடுதலுக்கமைய நாணயச்சபையினால் பின்வரும் பணிப்புரைகள் விடுக்கப்படுகின்றன.

மிகக் குறைந்த மூலதனப் போதுமை விகிதம்

1(1) 2008 சனவரி 1ஆம் நாள் தொடக்கத்திலிருந்து எல்லா உரிமம் பெற்ற விசேட வங்கிகளும் எல்லா வேளைகளிலும் அடிப்படை மூலதனம் மொத்த இடர் நிறைப்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக 5 சதவீதத்திற்கு குறைவாக இல்லாமலும் மூலதன போதுமை விகிதம் மொத்த இடர் நிறைப்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக 10 சதவீதத்திற்குக் குறைவாக இல்லாமலும் பேணப்படுதல் வேண்டும்.

1(2) மேலே குறிப்பிடப்பட்ட பணிப்புரை 1(1)இல் உள்ள மூலதன போதுமை விகிதங்கள், பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கியில் அமைந்துள்ள வங்கி மேற்பார்வை மீதான பாசல் (Basle) செயற்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பாசல் II (Basle II) மூலதன ஒப்பந்தத்தின் "மூலதன அளவீடு மற்றும் மூலதன நியதிகளுக்கான பன்னாட்டு ஒருங்கமைப்பு - மீள்பார்வை செய்யப்பட்ட ஒரு வடிவமைப்பு" அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அட்டவணை 1இல் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு அமைவாக, கணிக்கப்பட வேண்டும்.

அறிக்கையிடும் வழிமுறை

2. உரிமம் பெற்ற விசேட வங்கிகள், அட்டவணை I இல் தரப்பட்டுள்ள மூலதனப் போதுமை விகிதங்களை குறிப்பிட்ட கால அடிப்படையில் அறிவிப்பதற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை II இல் கொடுக்கப்பட்டுள்ள வடி முறையைப் பாவிக்க வேண்டும்.

பணிப்புரைகளுடன் இணங்கி நடப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை

3. இந்த பணிப்புரைகளுடன் இணங்கி நடப்பதற்கு எந்தவொரு உரிமம் பெற்ற விசேட வங்கி தவறுமாயின் அத்தகைய உரிமம் பெற்ற விசேட வங்கியானது குறிப்பிட்ட இணங்கி நடத்தலானது மேற்கொள்ளப்பட்டதுடன் அது வங்கி மேற்பார்வை திணைக்கள பணிப்பாளரால் உறுதி செய்யப்படும் வரை பங்கு இலாபங்களை செலுத்த அல்லது இலாபங்களை வெளியில் மீளனுப்ப முடியாது.

மாற்றத்திற்கு உள்ளாக்கும் ஏற்பாடுகள்

4. இந்த பணிப்புரைகளின் தேவைக்கமைய மூலதனத்தை சமன் செய்யவுள்ள ஒவ்வொரு உரிமம் பெற்ற விசேட வங்கியும் அத்தகைய தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்ட பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாத அல்லது அத்தகைய நீண்ட கால எல்லையைக் கொண்ட மேலதிக காலத்தை பெற்றுக் கொள்ள நாணயச் சபைக்கு விண்ணப்பிக்கலாம்.

முன்னைய தீர்மானங்களின் அகற்றல்

5(1) வங்கித்தொழில் சட்டம் பிரிவு 76(ஜ)இன் கீழ் நாணயச்சபையினால் மூலதன போதுமை விகிதம் பேணுதல் தொடர்பாக உரிமம் பெற்ற விசேட வங்கிகளுக்கு வழங்கப்பட்ட முன்னைய எல்லா தீர்மானங்கள், பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டிகள் என்பன யாவும் இத்தால் அகற்றப்படுகின்றன.

5(2) அகற்றல் தொடர்பாக மேற்குறிப்பிட்ட பணிப்புரை 5(1) இற்கு புறம்பாக மேற்குறிப்பிட்ட பணிப்புரை 4இற்கு அமைவாக நாணயச்சபையினால் கால எல்லை வழங்கப்பட்ட உரிமம் பெற்ற விசேட வங்கிகள் மேற்குறிப்பிட்ட முன்னைய எல்லா தீர்மானங்கள், பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டிகளிலுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக அக்கால எல்லை முடிவடையும் வரை இணங்கி நடக்க வேண்டும்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1)இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்.

ஒப்பம்
**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
ஆளுநர்

கொழும்பு
2007 திசெம்பர் 26

## பணிப்புரைகள்

## 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் இலங்கையின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை

2006ஆம் ஆண்டில் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தால் இறுதியாகத் திருத்தப்பட்ட, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப்பிரிவு 46(1) இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்டபடி, நாணயச்சபையானது இலங்கையின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை சம்பந்தமாக பின்வரும் பணிப்புரைகளை விடுக்கின்றது. இப்பணிப்புரைகள் 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை என குறிப்பிடப்படும். இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்படும் பிரிவுகள் 2006ஆம் ஆண்டில் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்ட, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டவையாகும்.

**1. வங்கித்தொழில் சட்டம், நாணய விதிச் சட்டம் என்பனவற்றின் கீழான பொறுப்புக்களும் அதிகாரமளிப்புகளும்**

1(1) 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தால் இறுதியாகத் திருத்தப்பட்ட 1988ஆம் ஆண்டின் 30ஆவது இலக்க வங்கித்தொழில் சட்டப்பிரிவு 46(1)இன் கீழ், வங்கித்தொழில் முறையின் செயல் திறனை உறுதிப்படுத்தும் பொருட்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் எந்தவொரு அம்சத்தினையும் நடைமுறைப்படுத்தும் முறை சம்பந்தமான பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச்சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

1(2) 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 5ஆம் பிரிவின்படி, இலங்கை மத்திய வங்கியானது அச் சட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்டபடி தனது நடவடிக்கை மூலமாக (அ) பொருளாதார மற்றும் விலை உறுதித்தன்மை மற்றும் (ஆ) நிதித் தொழில்துறை உறுதித்தன்மை என்ற இரு குறிக்கோள்களையும் இயலுமானவரை நிறைவேற்றுவதற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

1(3) இலங்கை மத்திய வங்கியானது தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளை பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அல்லது நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றின் போது அவற்றை பாதிக்கும்; அல்லது அதனுடன் தொடர்புடைய அல்லது அதனால் ஏற்படுகின்ற ஏதாவது ஒரு விடயம் தொடர்பாக நாணயவிதிச் சட்ட 10(இ) பிரிவின் கீழ் அதிகாரப் பிரயோகம், கடமைகள், தொழிற்பாடுகள், பொறுப்புகள் சம்பந்தமாக அவசியம் எனக் கருதும் சட்ட ஒழுங்கு விதிகளை உருவாக்குவதற்கு நாணயச்சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

1(4) 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய நாணய விதிச் சட்டத்துக்கான ஜோன் எக்ஸ்டர் அறிக்கையில் குறிப்பிட்ட விசேட காரணங்களுக்காக வங்கிகள் மேற்பார்வை என்பது இலங்கை மத்திய வங்கியின் கடமையாக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்படுபவை "வங்கித்தொழில் என்பது பொதுமக்களின் நலன்களை உயர் அளவில் பாதிக்கக்கூடிய பொருளாதார தொழிற்பாடாக இருப்பதுடன் நாட்டின் பொருளாதார வாழ்வின் எல்லா கட்டங்களையும் ஏதோ ஒரு வழியில் தொட்டுச் செல்கின்றது. ஆரோக்கியமான மற்றும் துடிப்பாற்றல் மிக்க பொருளாதார வளர்ச்சிக்கு செயல் திறன்மிக்க வங்கித்தொழில் அவசியமாகிறது. மேற்பார்வை திறனற்ற முகாமைத்துவம், வங்கி தோல்விகள் மற்றும், வங்கித்தொழிலில் நம்பிக்கை இழப்பு என்பனவற்றுக்கு எதிராக மக்களைக் காக்க உதவுகிறது. அது வைப்பாளர்களையும் பங்குதாரர்களையும் நட்டத்திலிருந்து பாதுகாக்க உதவுவதுடன் வங்கிப் பணிப்பாளர்களையும் மற்றும் அலுவலர்களையும் வங்கி முகாமைத்துவ பணிகளை அறிவாற்றல் மற்றும் விவேகத்துடனும் மேற்கொள்ள உதவுகின்றது."

1(5) இதன் அடிப்படையில், நிதிமுறை உறுதித்தன்மைக்கு அடிப்படையான மொத்த வங்கித்தொழில் துறை உறுதித் தன்மையை உயர்த்துவதற்கு ஏதுவாக, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கம்பனி ஆளுமை செயல்முறைகள் மற்றும் செயற்பாடுகளை அபிவிருத்தி அடையச் செய்வதற்கும் அதனைத் தொடர்ந்து பேணுவதற்கும், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட 46(1)ஆம் பிரிவின் கீழ் நாணயச் சபையானது இப் பணிப்புரைகளை விடுக்கின்றது.

1(6) வங்கித்தொழிலை பொறுப்பாகவும் மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய விதத்திலும் நடத்திச் செல்ல உதவுவதன் மூலம், தனி வங்கிகளின் பாதுகாப்பு, செயற்றிறன் என்பனவற்றை விருத்தி செய்து அதன் மூலம் அனைத்து வங்கித்துறை உறுதிப்பாட்டை

அடைவதற்கு ஏதுவாக, இப்பணிப்புரையின் நோக்கங்களுக்காக இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கம்பனி ஆளுமை செயல்முறைகள், நடைமுறைகள் முகாமைத்துவ கட்டமைப்பு ஆகக் கொள்ளப்பட வேண்டும்.

1(7) மத்திய வங்கியின் அடிப்படை மேற்பார்வை பொறுப்புகளில் உதவும் பொருட்டும், வங்கித்தொழில் முறையின் பாதுகாப்பு மற்றும் செயற்றிறன் என்பனவற்றை விருத்தி செய்யும் பொருட்டும், இப்பணிப்புரைகளில், 3ஆம் பணிப்புரையில் உள்ளடக்கப்பட்ட கம்பனி ஆளுகை விதிகள், 2ஆம் பணிப்புரையின் சில மூலக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.

**2. ஆதாரமாகக் கொள்ளப்பட்டு விருத்தி செய்யப்பட்ட கம்பனி ஆளுகையின் விதிகளுக்கு அடிப்படையாக அமைந்த கொள்கைகள் பின்வருமாறு:**

**பணிப்புரை 3இல் உள்ளடக்கப்பட்ட விதிகளின் நியாயத்தன்மையை விளங்கிக் கொள்வதற்காக, இவ்விரண்டாம் பணிப்புரையில் குறிப்பிடப்பட்ட கொள்கைகள் விளக்கம் அல்லது தெளிவுரை .நோக்கங்களுக்காக மட்டும் உபயோகிக்கப்பட வேண்டும். எனவே, இப் பணிப்புரைகளின் கீழான கண்டிப்பான கடப்பாடானது பணிப்புரை 3இல் தரப்பட்டுள்ள விதிகள் சம்பந்தமானதாக மட்டுமே அமையும்.**

**2(1) கோட்பாடு: சபையின் பொறுப்புகள்**

2(1)(i) (அ) வங்கி நடவடிக்கைகள் சம்பந்தமான நிருவாகம், உ-ம்: வர்த்தகத்தை நடத்துதல், முன்னெச்சரிக்கையான இடர் நிருவாக நடைமுறைகளை பராமரித்தல், அத்துடன் (ஆ) வங்கியின் பாதுகாப்பு மற்றும் செயற்றிறன் என்பன தொடர்பான மொத்த பொறுப்புக்களையும் மற்றும் பொறுப்புக் கூறும் விதத்திலும் பணிப்பாளர் சபை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

2(1)(ii) இதன் முடிவாக சபை செய்ய வேண்டியவையாவன: (அ) வங்கி நடவடிக்கைகளுக்கான முகாமைத்துவ கட்டமைப்பைத் தீர்மானித்தல்; (ஆ) வங்கி செயற்பாட்டு முறையினை, சபையால் நியமிக்கப்பட்ட முதன்மை நிறைவேற்று அலுவலர் வழி நடத்தப்படும் பிரதான முகாமைத்துவ ஆளணிக்கு கையளித்தல்; (இ) அலுவல்களுக்கான கொள்கை வகுப்பு மற்றும் இடர் நிருவாகம் என்பனவற்றை ஏற்றுக் கொள்ளல்; அத்துடன் (ஈ) பிரதான முகாமைத்துவ ஆளணியினர் வினைத்திறனாற்றல் பங்கினை உறுதிப்படுத்தல். பிரதான முகாமைத்துவ ஆளணி என்பதன் கருத்தானது பன்னாட்டு கணக்கியல் நியமங்களினால் குறிக்கப்படும் பிரதான நிறைவேற்று அதிகாரிகள் என்பதாகும்.

2(1)(iii) சபையின் மொத்த பொறுப்புக்கள் என்பது அன்றாட நடவடிக்கைகளை பரிசோதிக்கும் கடமைப்பாடு எனப் பொருள் கொள்ளல் ஆகாது. ஆனால் பிரதான முகாமைத்துவ ஆளணியானது சபையினால் வகுக்கப்பட்ட கொள்கைகளுக்கு அமைவாக வங்கியின் நடவடிக்கைகளை பாதுகாப்பாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் மேற்கொள்வதை மேற்பார்வை செய்யும் கடமைப்பாடு என விளங்கிக் கொள்ள வேண்டும்.

2(1)(iv) பணிப்பாளர்கள் வங்கியின் வியாபாரம் மற்றும் இடர்நிருவாகக் கட்டமைப்பினை விளங்கிக் கொள்வதுடன் வங்கியின் பண வைப்பாளர்கள், கடன் கொடுத்தோர், பங்கு தாரர்கள் மற்றும் உரித்தாளர்களின் நன்மை பொருட்டு தெளிவான தீர்மானங்களை எடுத்தல் வேண்டும். அத்துடன் வைப்பாளர்கள், கடனளித்தோர் என்போரது நலன்கள், கடமைப்பாடுகள் என்பனவற்றுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய அல்லது தவறான அபிப்பிராயத்தை உண்டாக்கக்கூடிய விதமாக வங்கி நடந்து கொள்ளாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

2(1)(v) சபையானது ஏற்றுக் கொள்ளப்பட்ட கம்பனி ஆளுகை ஒழுங்கு விதிகளுடன் இணங்கி நடக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளவேண்டும். ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகியவற்றின் எல்லா தேவைகளுக்கும் இணங்கி நடத்தலை உறுதிப்படுத்தல் வேண்டும். மேலும், வங்கித்தொழில், நிதியியல், பொருளியல், வியாபார முகாமைத்துவம், மனிதவள முகாமை அவர்கள் நீதி, சந்தைப்படுத்தல், தகவல் தொழில் நுட்பம் அல்லது வங்கித்தொழில் தொழிற்பாடுகளுக்கு தொடர்புடைய அல்லது இணையான ஏதாவதொரு துறைகளில் நடைமுறை அனுபவம் மிக்க தொழில்சார் நிபுணர்கள் உள்ளடக்கிய ஒரு செயற்றிறனுள்ள குழுவொன்று வங்கியில் தொழிற்பாடுகளை பொறுப்பேற்பதற்கும் மற்றும் அதன் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கும், வங்கியில் கிடைப்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.

2(1)(vi) பணிப்பாளர்கள் தங்களது கடமையினை சிரத்தையுடன் மேற்கொள்ளத் தவறும் போது ஏற்படக்கூடிய சிவில் மற்றும் குற்றவியல் பொறுப்புகள் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். முன் ஜாக்கிரதையுடனும் உரிய கவனத்துடனும் நடந்து கொள்ளல் பற்றியும் அவர்கள் அறிந்திருத்தல் வேண்டும். மேலும் அரசுடைமையான வங்கிகளின் பணிப்பாளர்கள், அவ் வங்கிகள் அரசுக்கு சொந்தமான தாபனங்கள் என்ற வகையில் எழக்கூடிய மேலதிக பொறுப்புகள் பற்றியும், அது தொடர்பாக பொது மக்களுக்கு பொறுப்புக் கூறக்கூடிய நிலை பற்றியும் தெரிந்திருத்தல் வேண்டும். எனவே, வங்கி நடவடிக்கைகளை அவதானத்துடன் நிருவகித்து சபையின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு பணிப்பாளர்கள் போதிய நேரத்தினையும் சக்தியையும் ஈடுபடுத்த வேண்டும்.

**2(2) கோட்பாடு: சபையின் உள்ளமைப்பு**

2(2)(i) பணிப்பாளர் சபையானது நிறைவேற்று பணிப்பாளர்களையும், நிறைவேற்று தரம் அல்லாத பணிப்பாளர்களையும் கொண்ட ஒரு ஆரோக்கியமான கலவையாக உருவாக்கப்பட வேண்டும். வலுவான சுதந்திர மூலகங்கள், தீர்மானம் எடுக்கும் நடைமுறையில் உள்ளடக்கப்படுவதற்கு ஏதுவாக சில நிருவாக தரமற்ற பணிப்பாளர்களும் சுதந்திரமானவர்களாக இருக்க வேண்டும்.

2(2)(ii) வங்கியினால் வேண்டப்படும் பொருத்தமானதும் விருப்பத்தக்கனவானதுமான தேவைகளுக்கு அமைவாக தேர்ச்சி அனுபவம் கலந்த வகையில் சபை அமைந்திருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

2(2)(iii) புதிய கண்டுபிடிப்புகள், கருவிகள், தொழில் நுட்பங்கள், ஆக்கங்கள், அமைப்பு முறைகளும் செயற்படுத்தலும் ஆகியனவை சீராக அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம் வங்கித்தொழில் துறை உலகளாவிய ரீதியில் பாரிய முன்னேற்றத்தை உண்டாக்குவதுடன் விரைவான மாறுதல்களுக்கும் உள்ளாகின்றது. எனவே (அ) இம் மாறுதல்களுக்கு ஈடுகொடுக்கக் கூடியவர்களான மற்றும் (ஆ) சபையின் தீர்மானம் எடுக்கும் நடைமுறைக்கு தொடர் பங்களிப்பை மற்றும் வழிகாட்டல்களை வழங்கக் கூடியவர்களுமான நபர்கள் பணிப்பாளர்களாக இருத்தல் அத்தியாவசியமானது.

2(2)(iv) சபைக்குள் புதிய எண்ணங்களின் படிப்படியான உள்ளீடு இருத்தல் வேண்டும். பணிப்பாளர்களிற்கிடையிலான உறவுகள் மற்றும் பணிப்பாளர்களுக்கும் பிரதான முகாமைத்துவ ஆளணிகளுக்கும் இடையிலான உறவுகள் என்பனவற்றிற்கு மிகக் கூடிய பரிச்சயம், அளவுக்கு அதிகமான செல்வாக்கு அல்லது கட்டாயப்படுத்தல் ஆகியன அனுமானிக்கக் கூடிய மட்டத்தில் இல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். இந்நிலையில் மிக நீண்ட கால உறவுகள், வங்கிப் பணிப்பாளரது கடமையை ஆற்ற தேவைப்படும் உயர்ந்த உணர்வு பூர்வமான தகுதிகள், சுதந்திரம் மற்றும் குறிக்கோளை அடையும் தன்மை என்பனவற்றை சில வேளைகளில் பாதிக்கும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**2(3) கோட்பாடு: பணிப்பாளர்களின் பொருத்தம், தகுதி என்பனவற்றை மதிப்பிடுவதற்கான பிரமாணம்**

2(3)(i) சபையின் உள்ளமைப்பு சம்பந்தமான மேற்கூறிய பணிப்புரை 2(2)இன் கொள்கைகளுக்கு மேலதிகமாக, வங்கி பணிப்பாளர் பதவியை வகிப்பதற்கு, பொருத்தமான மற்றும் தகுதியான நபர்களாக இருப்பதுடன், பொருத்தம் மற்றும் தகுதியற்ற நபர்கள் பணிப்பாளர்களாகச் செயற்படக்கூடாது.

2(3)(ii) வங்கி அலுவல்களில் முன்யோசனையான முகாமைத்துவத்திற்கு அர்ப்பணிப்பு மற்றும் செயற்றினுள்ள பங்களிப்பு என்பனவற்றின் திடமான தேவை உண்டு. பணிப்பாளரது வயது முதிர்ச்சி காரணமாக, குறிப்பாக நாட்டின் பொதுவான ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓய்வு பெறும் வயதை மிகவும் கடந்த பணிப்பாளரின் வயது காரணமாக அர்ப்பணிப்பு மற்றும் செயற்றினுள்ள பங்களிப்பு என்பனவற்றின் ஆற்றல் குறைந்து செல்லக்கூடிய சாத்தியமுண்டு.

**2(4) கோட்பாடு: சபையால் ஒப்படைக்கப்பட்ட முகாமைத்துவ தொழிற்பாடுகள்**

2(4)(i) சபையின் தீர்மானத்திற்கென விசேடமாக ஒதுக்கப்பட்ட விவகாரங்கள் உள்ள மாதிரி விபரப்பட்டியல் ஒன்றை சபை கொண்டிருக்க வேண்டும். வங்கியின் சார்பாக பிரதான முகாமைத்துவ ஆளணியினால் முடிவுகள் எட்டப்படு முன்னதாக, சபையால் அனுமதி கொடுக்கப்படும் அலுவல்கள் பற்றி, பிரதான முகாமைத்துவ ஆளணிக்கு சபை தெளிவான பணிப்புரைகளைக் கொடுக்க வேண்டும்.

**2(5) கோட்பாடு: தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்**

2(5)(i) ஒவ்வொரு வங்கியிலும் நிருவாகத்தில் இரண்டு பிரதான அம்சங்கள் உள்ளன. அதாவது (அ) சபையின் முழுமையான ஆளுகை மற்றும் (ஆ) சபை அனுமதிக்கும் செயற்றிட்ட நோக்கங்கள், கம்பனி மதிப்புக்கள், முழுமையான இடர் கொள்கை, இடர் முகாமைத்துவ நடைமுறைகள் என்பனவற்றுக்கு அமைவான, முதன்மை நிறைவேற்று அலுவலரின் வங்கியின் வியாபாரத்தின் அன்றாட முகாமைத்துவம்.

2(5)(ii) அதிகார வலிமை தனி நபரிடம் குவிக்கப்படாமல், உயர்ந்த சம வலிமை மற்றும் அதிகாரம் என்பனவற்றை உறுதிப்படுத்தும் முகமாக, சபை மட்டத்திலும் மற்றும் முகாமைத்துவ அதிகார மட்டத்திலும் இப்பொறுப்புக்கள் தொடர்பான தெளிவான வேறுபாடுகள் இருக்க வேண்டும்.

2(5)(iii) சபையானது ஒரு தலைவரையும் முதன்மை நிறைவேற்று அலுவலரையும் நியமிக்க வேண்டும். தலைவருக்கும், முதன்மை நிறைவேற்று அலுவலருக்கும் உள்ள பொறுப்புகளின் வேறுபாடுகள் தெளிவாக உருவாக்கப்பட்டு எழுத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

**2(6) கோட்பாடு: சபை நியமித்த குழுக்கள்**

2(6)(i) வங்கி அலுவல்கள் மீதான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக, கணக்காய்வு, நியமனம், கொடுப்பனவு, ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் சபையால் தீர்மானிக்கப்படும் ஏனைய தலைப்புக்கள் தொடர்பாக சபையானது வெவ்வேறான குழுக்களை நியமிக்க வேண்டும்.

2(6)(ii) சபை குழுவினை நியமிக்கும் போது குறிப்பாக குழுவானது சபையின் சார்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரமுடையதா அல்லது சாதாரணமாக ஒரு குறிப்பிட்ட விடயத்தை பரிசோதித்து அதன் பரிந்துரைகளை சபைக்கு அறிக்கையிடும் அதிகாரம் உடையதா என நிர்ணயித்து அதன் அதிகாரத்தை நிர்ணயம் செய்ய வேண்டும்.

2(6)(iii) குறிப்பிட்ட விடயத்தில் ஓரளவு தேர்ச்சி பெற்றவரும் மற்றும் விரும்பத்தக்க விதத்தில் சுதந்திரமானவருமான நிருவாகத் தரத்தில் அல்லாதவருமான பணிப்பாளரால் ஒவ்வொரு குழுத் தலைமைப் பதவியும் ஏற்கப்பட வேண்டும். சபை குழுவானது நிருவாகத் தரமற்ற பணிப்பாளர்களை பெரும்பான்மையாக கொண்டிருக்கும் அதேவேளை குறைந்தது ஒரு சுதந்திரமான

பணிப்பாளரை உள்ளடக்கியிருக்க வேண்டும். தேவையேற்படின் குழுவில் சேவை புரிவதற்கு வெளியிலிருந்து நிபுணர்கள் அழைக்கப்பட அல்லது சேவைக்கு அமர்த்தப்படலாம். ஆலோசனைக்காகவும் மற்றும் விசேட பணிகளுக்காகவும், அழைப்பின் பேரில் வங்கி அலுவலர்கள் சபை குழுக்களில் பிரசன்னமாயிருக்கலாம்.

**2(7) கோட்பாடு: தொடர்பான தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்**

2(7)(i) "தொடர்புபட்ட தரப்பினர்" கொடுக்கல்வாங்கல்களில், வங்கியானது மற்ற வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதை விட "மிகச் சாதகமான வசதி" வழங்கும் விதத்திலான கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடாதிருப்பதை சபை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**2(8) கோட்பாடு: வெளிப்படுத்தல்கள்**

2(8)(i) வெளிப்படுத்துகையின் நோக்கமானது, குறித்த வங்கிகளின் சந்தை ஒழுங்கு முறையினை விருத்தி செய்ய உதவும். வங்கி அலுவல்கள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான தகவல்களின் வெளிப்படைத் தன்மை ஆகும்.

2(8)(ii) சந்தை வெளிப்படுத்துகை என்பது பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கியில் (இது வங்கி மேற்பார்வை தொடர்பாக பன்னாட்டு நியதிகளை அறிமுகப்படுத்தும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும்.) அமைந்துள்ள வங்கி மேற்பார்வை மீதான பாசல் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட பாசல் II என அறியப்படும் இடர்நேர்வு முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட மூலதன நியதியின் மூன்றாவது தூணின் (தூண் iii) மையமானதால் வெளிப்படுத்துகையின் விரிவானது வங்கியின் அளவு, உரிமை கட்டமைப்பு, முறைமை முக்கியத்துவம், இடர்நேர்வு தோற்றம் மற்றும் வியாபார மாதிரி என்பனவற்றிற்கு ஈடாக அமைய வேண்டும். இதன் அடிப்படையில் வங்கிகள் தொடர்பான தகவல்கள் சம்பந்தமான நிறைவான, கால அவகாசத்துடனான பொது வெளிப்படுத்துகையானது சந்தை ஒருங்கிணை மேம்படுத்தலுடன் சிறந்த, கூடிய திறனாற்றல் மிக்க கம்பனி ஆளுகைக்கு இட்டுச் செல்லும் என அறியப்பட வேண்டும்.

2(8)(iii) வங்கிகளின் வெளிப்படுத்தல்களானது, மூலதனப் போதுமை, முக்கிய நடவடிக்கை குறிகாட்டிகள், வர்த்தக செறிவுகள், தொடர்பான தரப்பினர்களுடனான கொடுக்கல்வாங்கல்கள், கம்பனி ஆளுகை அறிக்கைகள், நிதி அறிக்கைகள் என்பனவற்றை பொதுவாக உள்ளடக்குவதுடன் கணக்கியல் தரம், ஒழுங்கமைப்பு தேவைகள் மற்றும் சுயவிருப்பின் அடிப்படையில் வெளிப்படுத்தும் எத்தகவல்களுக்கும் ஏற்ற வகையில் அமைந்திருக்க வேண்டும்.

**3. கம்பனி ஆளுகையில் கீழ்வரும் விதிகளுக்கு அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் இணங்கி நடப்பதுடன், அத்தகைய இணக்கம், இதன் கீழ் உள்ள பணிப்புரை 3(9)(i)இல் குறிப்பிட்டவாறு அமையும்.**

**3(1) சபையின் பொறுப்புக்கள்**

3(1)(i) கீழ்வருவனவற்றை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்தல் மூலம் சபையானது வங்கியின் பாதுகாப்பையும் செயற்றிறனையும் பலப்படுத்த வேண்டும்.

(அ) வங்கியின் முக்கிய நோக்கங்கள், கம்பனி தகுதிகள் என்பவற்றுக்கு அனுமதியளித்தல் மற்றும் மேற்பார்வை செய்தலுடன் இவை வங்கியின் அனைத்து பகுதிகளுக்கும் அறிவிக்கப்படுதலை உறுதி செய்தல்;

(ஆ) அளவிடக்கூடிய நோக்கங்களுடனான இடர்நேர்வு கொள்கை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் கட்டமைப்புகள் உள்ளடங்கலான குறைந்தது அடுத்த மூன்று வருடங்களுக்கான வியாபார நோக்கத்தினை வங்கியின் முழுமையான வர்த்தக உபாயத்தினை அனுமதித்தல்;

(இ) முதன்மையான இடர்நேர்வுகளை இனங்காணுதல் மற்றும் இடர்நேர்வுகளை அறிவார்ந்த விதத்தில் முகாமைத்துவம் செய்ய பொருத்தமான முறைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்தல்;

(ஈ) வைப்பாளர்கள், கடன் கொடுத்தோர், பங்குதாரர்கள், கடன்பட்டோர் என்போரை உள்ளடக்கிய அனைத்து பங்களிப்போருடனான தகவல் பரிமாற்றுக் கொள்கையை நடைமுறைப்படுத்தலை அனுமதியளித்தல்;

(உ) வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைகள் என்பனவற்றின் போதுமான தன்மையையும் நம்பிக்கை தன்மையையும் மீளாய்வு செய்தல்;

(ஊ) (i) கொள்கையில் குறிப்பிடத்தக்க செல்வாக்கை செலுத்தக் கூடிய, (ii) நடவடிக்கைகள் வழிப்படுத்தக் கூடிய, (iii) வர்த்தக நடைமுறைகள், இடர்நேர்வு முகாமைத்துவம் என்பனவற்றில் கட்டுப்பாடு செலுத்தக்கூடிய, நிலையில் உள்ள, சர்வதேச கணக்கியல் நியதிகளில் விபரிக்கப்பட்ட பிரதான முகாமைத்துவ ஆளணியை இனங் காணுதலும், பதவி நிலை அளித்தலும்;

(எ) சபையின் பணிப்பாளர்கள் தங்களுக்கும், பிரதான முகாமைத்துவ ஆளணிக்குமான அதிகாரப் பரப்பினையும் முக்கிய பொறுப்புகளையும் விபரித்தல்;

(ஏ) சபையின் கொள்கைக்கு அமைவான, பிரதான முகாமைத்துவ ஆளணியினால் வங்கி நடவடிக்கைகள் சம்பந்தமான பொருத்தமான மேற்பார்வை இருத்தலை உறுதிப்படுத்தல்;

(ஐ) (i) சபை பணிப்பாளர்களினதும் பிரதான முகாமைத்துவ ஆளணியினதும் தெரிவு, நியமன தேர்தல், (ii) நலன்களின் முரண்பாடுகள் சம்பந்தமான முகாமைத்துவம், (iii) பலவீனங்களைத் தீர்மானித்தல், தேவைப்படுமிடத்து மாற்றங்களை நடைமுறைப்படுத்தல் என்பன உள்ளடங்கலாக காலத்துக்குக் காலம் சபை பணிப்பாளர்களது சொந்த ஆளுமை பழக்கங்களை மதிப்பிடுதல்;

(ஒ) பிரதான முகாமைத்துவ ஆளணி தொடர்பான பொருத்தமான அடுத்த வரிசையினர் பற்றிய திட்டம் வங்கியிடம் இருப்பதை உறுதிப்படுத்தல்;

(ஓ) கொள்கைகளை மீளாய்வு செய்வதற்காக, தேவை அடிப்படையில் பிரதான முகாமைத்துவ ஆளணியுடனான தொடர்ச்சியான சந்திப்புகள், தகவல் பரிமாற்ற தொடர்புகளை அமைத்தல், கம்பனி நோக்கங்களை நோக்கிய முன்னேற்றத்தினை பரிசீலித்தல்;

(ஔ) ஒழுங்கமைப்பு சூழ்நிலையை விளங்கிக் கொள்வதுடன், வங்கி ஒழுங்கமைப்பாளருடன் திறனாற்றல்மிக்க உறவினைப் பேணுவதை உறுதிப்படுத்தல்;

(க) வெளிக் கணக்காய்வாளரின் சேவையை பெற்றுக் கொள்வதிலும், மேற்பார்வை செய்தலிலும் உரிய அவதானத்தை பிரயோகித்தல்.

3(1)(ii) இப் பணிப்புரைகளின், 3(5)ஆம் பணிப்புரைக்கு இசைவாக சபை வங்கி தலைவரையும் முதன்மை நிறைவேற்று அலுவலரையும் நியமிப்பதுடன் தலைவரதும் முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் கடமைகளையும் பொறுப்புகளையும் வரையறுத்து அனுமதித்தல் வேண்டும்.

3(1)(iii) சபை தொடர்ச்சியாக சந்திப்பதுடன் சபை கூட்டங்கள் பொதுவாக ஒரு மாத இடைவெளியில், வருடத்திற்கு குறைந்தது 12 தடவைகள் நடத்தப்பட வேண்டும். அத்தகைய தொடர் சபை கூட்டங்கள், பிரசன்னமாக உரித்துள்ள பணிப்பாளர்களின் பெரும்பான்மையினரின் நேர்முகமாக பங்குபற்றுதலை கொண்டிருக்க வேண்டும். எழுத்து மூலமான யோசனைகள்/ பத்திரிகைகள் சுற்றறிக்கை செய்யப்படுவதன் மூலமாக சபையின் ஒப்புதலைப் பெறுதலை கூடுமானவரை தவிர்க்க வேண்டும்.

3(1)(iv) தொடர் கூட்டங்களின் கூட்ட நிகழ்ச்சி நிரலில் அனைத்து பணிப்பாளர்களின் விடயங்களையும் மற்றும் யோசனைகளையும், அத்தகைய விடயங்களும் யோசனைகளும் வங்கியின் வர்த்தக முன்னேற்றம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் என்பன சம்பந்தமானதாக இருக்கும் பட்சத்தில், உள்ளடக்க ஏதுவாக தக்க ஒழுங்கு முறைகள் இருப்பதை சபை உறுதிப்படுத்த வேண்டும்.

3(1)(v) வழமையான சபை கூட்டங்களுக்கு அனைத்து பணிப்பாளர்களும் பிரசன்னமாகவிருக்கும் சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக, குறைந்தது 7 நாட்கள் முன்னறிவித்தல் கொடுப்பதை சபை நடைமுறைகள் உறுதிப்படுத்த வேண்டும். மற்றைய அனைத்து சபை கூட்டங்களுக்கும் நியாயமான முன்னறிவித்தல் கொடுக்கப்படலாம்.

3(1)(vi) ஒரு பணிப்பாளர் மிக அண்மையிலான கடந்த 12 மாத காலத்தில் மூன்றில் இரண்டு பங்கு கூட்டங்களில் பிரசன்னமாக இல்லாது இருந்தால் அல்லது மிக அண்மையான மூன்று தொடர்ச்சியான் கூட்டங்களில் பிரசன்னமாக இல்லாத இருந்தால் அவரது பணிப்பாளர் பதவியிலிருந்து நிறுத்தப்படுவார் என்பதை சபை ஒழுங்கு விதிகள் உறுதி செய்யவேண்டும். எனினும், பதில் பணிப்பாளர் மூலமாக, பணிப்பாளர் கூட்டங்களில் பங்குபற்றல் வருகை என ஏற்றுக் கொள்ளப்படும்.

3(1)(vii) 1988ஆம் ஆண்டின் 30ஆவது வங்கித்தொழில் சட்டப்பிரிவு 43இன் விதிகளை திருப்திப்படுத்தும் கம்பனி செயலாளர் ஒருவரை சபை நியமிக்க வேண்டும். அவரது பிரதான பொறுப்புக்களானது சபையினதும் பங்குதாரர்களின் கூட்டங்களினதும் செயலாளர் சேவையை கையாளுவதுடன் சட்டத்திலும் மற்றும் ஒழுங்கு விதிகளிலும் குறிப்பிட்ட ஏனைய பணிகளை நிறைவேற்றுவதாகும்.

3(1)(viii) சபை நடைமுறைகளை மற்றும் ஏற்புடைய சட்ட ஒழுங்கு விதிகளை ஏற்று வழி நடத்தலை உறுதிப்படுத்தும் பொருட்டு அனைத்து பணிப்பாளர்களும் கம்பனி செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவைகள் என்பனவற்றைப் பெறும் உரித்துடையவர்களாவர்.

3(1)(ix) கம்பனி செயலாளர், சபை, கூட்டங்களின் குறிப்புக்களை பராமரிப்பதுடன், அக்குறிப்புக்களானது எந்தப் பணிப்பாளருடைய நியாயமான முன்னறிவித்தலின் அடிப்படையில் எந்தவொரு நியாயமான காலத்திற்குள் பரிசோதனைக்காகத் திறந்திருக்கும்.

3(1)(x) சபை அதன் கடமைகளைச் செய்யும் போது உரிய கவனத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் நடந்து கொண்டதா என குறிப்புகளிலிருந்து பெறக் கூடிய விதமாக தேவையான விபரங்களுடன், சபை கூட்டங்களின் குறிப்புகள் பதியப்பட வேண்டும். மேலும் ஒழுங்கமைத்தல், மற்றும் மேற்பார்வை செய்யும் அதிகாரிகளால் சபைக் கூட்டங்களின் தீர்மானங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் ஆழத்தை மதிப்பிடுவதற்கு அக்குறிப்புகள் அத்தாட்சிகளாக பயன்படும். எனவே சபை கூட்டத்தின் குறிப்புகள், தெளிவாகவும் பின்வருவனவற்றை உள்ளடக்குவனவாகவும் அமைய வேண்டும். (அ) சபை அதன் தீர்மானம் எடுத்தலில் உபயோகப்படுத்தப்பட்ட தரவுகள், தகவல்களின் சுருக்கம்; (ஆ) சபையால் கருத்தில் கொள்ளப்பட்ட விடயங்கள் (இ) சபை அதன் கடமைகளை உரிய கவனத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் எடுத்ததென விளக்கும். உண்மையை அறிதலுக்கான கலந்துரையாடல்களும், ஒத்த எதிர்மறையான தொடர்புபட்ட விடயங்களும் (ஈ) சபையின் திட்டங்கள் கொள்கைகள் என்பனவற்றுக்குக் கீழ்ப்படிதலையும், தொடர்புபட்ட சட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய ஒழுகுவதையும் குறிக்கும் தொடர்புபட்ட நிருவாக

அதிகாரிகளின் ஒப்புதல்களும் சான்றிதழ்களும் (உ) வங்கி எதிர்நோக்கும் இடர்நேர்வு பற்றிய சபையின் அறிவும், விளங்கிக் கொள்ளும் தன்மையும், மேற்கொள்ளும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் பற்றிய பொதுநோக்கு (ஊ) சபையின் முடிவுகளும் தீர்மானங்களும்.

3(1)(xi) நியாயமான வேண்டுகோளின் பேரில் பணிப்பாளர்களுக்கு உதவும் முகமாக, பொருத்தமான சந்தர்ப்பங்களில், சுதந்திரமான நிபுணர்களின் ஆலோசனையை வங்கியின் செலவில் பெறுவதற்காக சபை ஏற்றுக் கொண்ட நடைமுறை இருத்தல் வேண்டும். தொடர்புபட்ட பணிப்பாளர்களுக்கு அவர்களது வங்கி கடமைகளை ஆற்றுவதற்கு உதவும் முகமாக, பணிப்பளர்களுக்கு தனிப்பட்ட, சுதந்திர, நிபுணத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொடுப்பதற்கு வங்கி தீர்மானம் எடுக்க வேண்டும்.

3(1)(xii) பணிப்பாளர்கள் அவர்களது நடவடிக்கைகளில் அல்லது ஈடுபாடுகளில் ஏனைய தாபனங்களுடன் அல்லது தொடர்புபட்ட பகுதியினருடன் நலன்களின் முரண்பாடுகளை அல்லது நலன்களின் முரண்பாடுகள் தோற்றம் பெறுதலைத் தவிர்த்தல் வேண்டும். சபையினால் கவனத்தில் எடுக்கப்படக்கூடிய ஒரு விடயத்தில் ஒரு பணிப்பாளரின் நலன்கள் முரண்பாட்டை கொண்டிருப்பதானது குறிப்பிடத்தக்க அளவிலானது எனச் சபை தீர்மானித்தல், அந்நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க ஈடுபாடு இல்லாத சுதந்திரமான நிறைவேற்று தரத்தில் அல்லாத பணிப்பாளர்கள் (இப் பணிப்புரைகளின், 3(2)(iv)ஆம் பணிப்புரையை பார்க்க பிரசன்னமாக உள்ள சபை கூட்டத்தில் அவ்விடயம் பரிசீலிக்கப்பட வேண்டும். மேலும், ஒரு பணிப்பாளர் அவர்/ அவள், அல்லது அவர்/ அவளது நெருங்கிய உறவினர்கள் தொடர்புபட்ட, அல்லது அவர் ஒரு பணிப்பாளராக இருக்கும் தாபனம் தொடர்புபட்ட எந்தவொரு சபை தீர்மானித்திலும் வாக்களிப்பதிலிருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் குறித்த விடயம் சம்பந்தமான சபை கூட்ட நடவடிக்கை அட்டவணையில் அவர்/அவள் கோரம் சம்பந்தமாக கணக்கெடுக்கப்படக் கூடாது.

3(1)(xiii) வங்கியின் நோக்கு, கட்டுப்பாடு என்பன அதன் உறுதியான அதிகாரத்தின் கீழ் இருப்பதை உறுதிப்படுத்த, சபையானது, தீர்மானம் எடுப்பதற்காக விசேடமாக ஒதுக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமான மாதிரி அட்டவணை ஒன்றை கொண்டிருக்க வேண்டும்.

3(1)(xiv) வங்கி தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு முடியாமல் போனால் அல்லது முடியாமல் போகக்கூடும் என்று கருதினால், அல்லது முறிவடைந்து போனால் அல்லது வைப்பாளர்களுக்கும் கடன் கொடுத்தோருக்கும் கொடுப்பனவுகளை இடைநிறுத்தம் செய்யக்கூடும் எனக் கண்டால் பணிப்பாளர் சபையானது எத்தீர்மானத்தையும் நடவடிக்கையையும் எடுக்க முன்னர் உடனடியாக வங்கி மேற்பார்வை திணைக்களப் பணிப்பாளருக்கு வங்கியின் நிலை பற்றி அறியத் தரவேண்டும்.

3(1)(xv) மூலதனப் போதுமை விகிதம் மற்றும் அவதான அடிப்படைகளின்படி நாணயச்சபைக்குத் தேவையான மட்டத்தில் மூலதனத் தன்மை உடையதாக, வங்கி இருப்பதை சபை உறுதிப்படுத்த வேண்டும்.

3(1)(xvi) இப்பணிப்புரைகளில், பணிப்புரை 3 இற்குக் கீழ்ப்படிந்து ஒழுகும் வருடாந்த கம்பனி ஆளுமை பற்றிய அறிக்கையை சபை வங்கி ஆண்டு அறிக்கையில் பிரசுரிக்க வேண்டும்.

3(1)(xvii) ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பணிப்பாளராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுய மதிப்பீட்டுத் திட்டம் ஒன்றை சபை நடைமுறைப்படுத்தலும், அத்தகைய மதிப்பீடு சம்பந்தமான அறிக்கைகளைப் பேணுதலும் வேண்டும்.

**3(2) சபையின் உள்ளமைப்பு**

3(2)(i) சபை பணிப்பாளர்களது எண்ணிக்கை 7இற்கு குறையாமலும் 13இற்கு மேற்படாததாகவும் இல்லாமல் இருத்தல் வேண்டும்.

3(2)(ii) (அ) பிரதான நிறைவேற்று அதிகாரப் பொறுப்பை வகிக்கும் பணிப்பாளர் நீங்கலாக, ஒரு பணிப்பாளரது மொத்த சேவைக்காலம் 9 வருடத்திற்கு மேற்படலாகாது. அத்தகைய பதவிக் காலமானது 01.01.2008 வரையுள்ள அப்பணிப்பாளரது மொத்த பதவிக் காலத்தை உள்ளடக்குவதாக இருக்கும்.

(ஆ) இவ்விடயத்தில், கீழ்வரும் மாற்று விதி முறைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

அ) ஒரு பணிப்பாளர் மட்டும் 01.01.2008இல் சபையில் 9 வருடத்திற்கு மேற்பட்ட காலம் பதவி வகிக்கும் பட்சத்தில் அவர்/ அவள் 31.12.2008இல் பதவி நீங்கியவராகக் கொள்ளப்படுவார்.

ஆ) இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட பணிப்பாளர்கள் சபையில் 9 வருடத்துக்கு மேற்பட்ட காலம் பதவி வகிக்கும் பட்சத்தில், கீழ்வரும் விதிகள் நடைமுறைப்படுத்தப்படும்.

I. அத்தகைய பணிப்பாளர்களில் சேவை காலம் 9 வருடத்திற்கு மேற்படும் போது ஆகக் கூடிய சேவைக் காலத்தை உடைய பணிப்பாளர் 31.12.2008இல் பதவி நீங்கியவராகக் கொள்ளப்படுவார்.

II. அதன் பின்பு, அடுத்த வருட இறுதியில், 01.01.2008இல் 9 வருடத்துக்கு மேற்பட்ட சேவைக்காலம் உடைய எல்லாப் பணிப்பாளர்களும் பதவி இழக்கும் வரை, மிகுதியான பணிப்பாளர்கள் (பணிப்பாளராக ஆகக் கூடிய சேவைக்காலத்திலிருந்து ஆகக் குறைந்த சேவைக்காலம் என்ற அடிப்படையில்) தொடர்ந்து, குறைந்தது ஒரு வருடத்துக்கு ஒரு பணிப்பாளராவது பதவியிழந்தவராகக் கொள்ளப்படுவர். அத்தோடு 01.01.2008இல் 9 வருட காலத்துக்கு மேற்பட்ட சேவை செய்தல் வங்கியின் அனைத்துப் பணிப்பாளர்களும் 31.12.2011இல் பதவி இழந்தவர்களாகக் கொள்ளப்பட வேண்டும்.

(இ) பணிப்புரை 3(2)(ii)(ஆ)(ஆ) இன் கீழ் குறிப்பிட்ட பணிப்பாளர்கள் பதவி நீங்கிய பின்னர், 9 வருட சேவைக் காலத்தை 01.01.2008 இற்கும் 31.12.2010 இற்கும் இடைப்பட்ட காலத்தில் பூர்த்தி செய்யும் எப் பணிப்பாளராவது இருக்கும் பட்சத்தில் அத்தகைய பணிப்பாளர்களும் (பணிப்பாளராக ஆகக் கூடிய சேவைக் காலத்திலிருந்து ஆகக் குறைந்த சேவைக் காலம் என்ற அடிப்படையில்) தொடரான முறையில் ஒரு வருடத்துக்கு குறைந்தது ஒரு பணிப்பாளர் என்ற வகையில் பதவி இழந்தவராகக் கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும் 31.12.2011இல், இத்துணைப் பணிப்புரை (இ)இல் உள்ளடக்கப்பட்ட அனைத்து பணிப்பாளர்களும், பதவி நீங்கியவர்களாகக் கொள்ளப்பட வேண்டும்.

3(2)(iii) ஒரு வங்கி அலுவலகர் சபை பணிப்பாளராக (இதன் பின்னர் நிறைவேற்றுப் பணிப்பாளர் எனக் குறிக்கப்பெறும்) நியமனம் செய்யப்பட்ட, பணிப்பாளர் எனக் குறிக்கப்பெறும்) நியமனம் செய்யப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட, நியமிக்கப்படக்கூடும். அத்தகைய நிறைவேற்றுப் பணிப்பாளர் தொகை சபை பணிப்பாளர்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேற்படாத வகையில் அமையும். அவ்வாறான பட்சத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவர் வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக இருக்க வேண்டும்.

3(2)(iv) சுதந்திரமான நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்களாக குறைந்தது மூன்று பேரை அல்லது மொத்த பணிப்பாளர்களில் மூன்று ஒரு பங்கினரை எது கூடியதோ அத்தொகையை சபை கொண்டிருக்கும். இத்துணைப் பணிப்புரை 01.01.2010 முதல் நடைமுறைக்கு ஏற்புடையதாகும்.

ஒரு நிறைவேற்று தரத்திலில்லாத பணிப்பாளர் சுதந்திரமானவராகக் கொள்ளப்படக்கூடாது. எவ்வாறெனின் அவர்/ அவள்

(அ) வங்கியின் 1% பங்குடமைக்கு மேல் நேரடியாகவோ மறைமுகமாகவோ கொண்டிருந்தால்;

(ஆ) வங்கியின் சீராக்கப்பட்ட மூலதனத்தில் 10% க்கு மேற்பட்டதாக இப்பணிப்புரை 3(7)இல் குறிப்பிட்டவாறாக வங்கியுடன் ஏதாவது ஒரு வர்த்தக நடவடிக்கையை தற்போது அல்லது பணிப்பாளர் நியமிக்கப்பட முன்னரான கடந்த இரு வருட காலத்துக்குள் மேற்கொண்டிருந்தால்;

(இ) பணிப்பாளராக நியமிக்கப்பட முன்னரான கடந்த இரு வருட காலத்துக்குள் வங்கியில் பணியாற்றியிருந்தால்;

(ஈ) வங்கியின் அல்லது பிறிதொரு வங்கியின் பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அதிகாரி, முக்கிய முகாமைத்துவ அதிகார உறுப்பினர், வெளிப்படையான பங்குதாரர் ஆகிய எவருடையதான நெருங்கிய உறவினராக இருந்தால், இந்நோக்கத்துக்காக நெருங்கிய உறவினர் என்பது கணவன் அல்லது மனைவி அல்லது அவரது நிதியில் தங்கியிருக்கும் பிள்ளை என்பதாகும்.

(உ) ஒரு கம்பனி வியாபார நிறுவனத்தின் பணியாளர், பணிப்பாளர் அல்லது வெளிப்படையான பங்குதாராக இருத்தல்:

I. அது பணிப்புரை 3(7)இல் குறிப்பிட்டவாறு வங்கியின் சீராக்கப்பட்ட மூலதனத்தில் 10% க்கு மேற்பட்டதாக, வங்கியுடன் தற்போது ஒரு நடவடிக்கையினைக் கொண்டிருத்தல்;

II அதில் ஏதாவது ஏனைய பணிப்பாளர்கள் பணியாற்றினால் அல்லது பணிப்பாளர்களாக வெளிப்படையான பங்குதாரர்களாக இருந்தால்;

III அதில் பணிப்புரை 3(7)இல் குறிப்பிட்டவாறு வங்கியின் சீராக்கப்பட்ட மூலதனத்தில் 10% க்கு மேற்பட்டதாக வங்கியின் ஏதாவது ஏனைய பணிப்பாளர்கள், நடவடிக்கையொன்றினை மேற்கொண்டிருந்தால்;

3(2)(v) சுதந்திரமான பணிப்பாளருக்குப் பதிலாக மாற்றுப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும் பட்சத்தில், அவ்வாறு நியமிக்கப்பட்டவர் சுதந்திரமான பணிப்பாளருக்கு பொருந்தக்கூடிய அடிப்படைகளைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

3(2)(vi) நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்கள் நேர்மையான பின்னணி உடையவராக இருப்பதுடன், வழிமுறைகள், செயற்பாடுகள், வளங்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் சுதந்திரமான தீர்ப்புகளை அளிக்கக்கூடிய தேவையான தேர்ச்சி, அனுபவம் உடையவராக இருக்க வேண்டும்.

3(2)(vii) பிரசன்னமான பணிப்பாளர்களில் அரைவாசிப் பேர் நிறைவேற்று அதிகார தரத்தில் அல்லாத பணிப்பாளர்களாக இல்லாதவிடத்து, கூட்டத்திற்கு தேவையான குறைந்தளவு (கோரம்) பணிப்பாளர்கள் பிரசன்னமாகி இருந்தாலும், கூட்டம் முறையாகக் கூட்டப்பட்டதாக கொள்ளப்படலாகாது. இத் துணைப் பணிப்புரை 01.01.2010 முதல் ஏற்புடையதாகும்.

3(2)(viii) வங்கி பணிப்பாளர்களின் பெயர்களை வெளிப்படுத்தும் அனைத்து கம்பனி தகவல் தொடர்புகளிலும் சுதந்திரமான நிறைவேற்றுத் தரத்திலல்லாத பணிப்பாளர்கள் வெளிப்படையாக அடையாளம் காட்டப்பட வேண்டும். தனது வருடாந்த கம்பனி ஆளுமை அறிக்கையில் வங்கி தலைவர், நிருவாகப் பணிப்பாளர், நிருவாகத் தரமற்ற பணிப்பாளர், சுதந்திரமான நிருவாகத் தரமற்ற பணிப்பாளர் ஆகியோரது பெயர்கள் உள்ளடங்கலாக, பணிப்பாளர் வர்க்கப்படியான சபை கட்டமைப்பை, வங்கி வெளிப்படுத்த வேண்டும்.

3(2)(ix) சபையின் புதிய பணிப்பாளர்கள் நியமனங்களில் கவனத்தில் கொள்ளப்பட்ட, வெளிப்படையான முன்மாதிரியான நடைமுறை இருக்க வேண்டும். சபையின் முறையான தொடர்ந்து வரும் நியமனங்கள் சம்பந்தமாக நடைமுறைகள் இருக்க வேண்டும்.

3(2)(x) தற்காலிக வெற்றிடம் ஒன்றை நிரப்ப நியமிக்கப்பட்ட அனைத்து பணிப்பாளர்களும் அவர்களது நியமனங்களின் பின்னர், முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் தேர்தலுக்கு உட்படக்கூடியவர்களாகும்.

3(2)(xi) ஒரு பணிப்பாளர் பதவியிலிருந்து இராஜினமா செய்தால் அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்டால், சபையானது (அ) பணிப்பாளரின் இராஜினாமா, பதவி நீக்கம், இராஜினாமா அல்லது பதவி நீக்கப்பட்டமைக்கான காரணங்களுடன், தொடர்புபட்ட பணிப்பாளருக்கு வங்கியுடனான முரண்பாடு ஏதும் இருப்பின் அது உள்ளடங்கலாக மற்றும் அதனுடன் மட்டும் மட்டுப்படாத தகவல்களை அறிவிப்பதடன், (ஆ) பங்குதாரர்களின் அவதானத்திற்கு கொண்டு வரப்பட வேண்டிய ஏதும் விடயங்கள் உள்ளனவா, இல்லையா என்று அறிக்கை ஒன்றையும் வெளியிடவேண்டும்.

**3(3) பணிப்பாளர்களின் பொருத்தம், தகுதி என்பவற்றை மதிப்பிடுவதற்கான பிரமாணம்**

வங்கி சபை பணிப்பாளராக பணியாற்றும், பணியாற்ற விரும்பும் நபரின் பொருத்தம் நன்னடத்தை என்பனவற்றை தீர்மானிக்க 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பிரிவு 42இன் விதிகளுக்கு மேலதிகமாக கீழ் குறிக்கப்பட்ட பிரமாணங்கள் பிரயோகிக்கப்படும். இங்கு குறிப்பிடப்படும் ஏதாவது ஒரு பிரமாணத்துக்கு இணங்கி ஒழுகாமை, ஒரு நபர் பணியாளராக நியமனம் செய்யப்பட, தேர்ந்தெடுக்கப்பட, நியமிக்கப்படத் தகுதியற்றவர், அல்லது பணிப்பாளராகக் தொடர்வதற்குத் தகுதியற்றவராக்கும்.

3(3)(i) பணிப்பாளராக சேவையாற்றும் நபர் ஒருவர் 70 வயதுக்கு மேற்படலாகாது.

(அ) வங்கியில் தற்போது சேவையிலுள்ள பணிப்பாளர் 01.01.2008இல் 70 வயதுக்கு மேற்பட்டவராயிருப்பின், பணிப்புரை 32(ii) க்கு அமைவாக, கீழ்வரும் மாற்று ஏற்பாடுகள் பொருந்தும்.

அ) ஒரு பணிப்பாளர் 01.01.2008இல் 75 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால் அத்தகைய பணிப்பாளர் 31.12.2008 க்கு மேற்படாத காலம் வரை தொடர்ந்தும் பணிப்பாளராகச் சேவையாற்றலாம். அவர் 31.12.2008இல் பதவியில் இருந்து நீங்கியவராகக் கொள்ளப்படுவார்.

ஆ) ஒரு பணிப்பாளர் 01.01.2008இல் வயது 70 க்கும் 75 க்கும் இடைப்பட்டவராக இருந்தால் அத்தகைய பணிப்பாளர் 31.12.2009 க்கு மேற்படாத காலம் வரை தொடர்ந்து பணிப்பாளராகச் சேவையாற்றலாம். அவர் 31.12.2009இல் பதவியிலிருந்து நீங்கியவராகக் கொள்ளப்படுவார்.

(ஆ) தற்போது சேவையிலிருக்கும் பணிப்பாளர் 01.01.2008 முதல் 31.12.2009 வரையிலான காலப்பகுதியில் 70 வயதை அடைவாராயின் அத்தகைய பணிப்பாளர், பணிப்புரை 3(2)(ii) க்கு அமைவாக 31.12.2010 க்கு மேற்படாத காலம் வரை பணிப்பாளராகத் தொடர்ந்தும் சேவையாற்றலாம். அவர் 31.12.2010இல் பதவியிலிருந்து நீங்கியவராகக் கொள்ளப்படுவார்.

3(3)(ii) ஒருவர் வங்கியின் துணைக் கம்பனிகள் சகோதர கம்பனிகள் உள்ளடங்கலாக 20 க்கும் மேற்பட்ட கம்பனிகள்/ சபைகள்/ தாபனங்களில் பணிப்பாளர்களாகப் பதவி வகிக்கக்கூடாது. அத்தகைய, 1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு, கணக்காய்வு நியமங்கள் சட்ட விதிகளின்படி விசேடமாகக் குறிப்பிடப்பட்ட வியாபார சபைகளாக வர்க்கப்படுத்தப்பட்ட 10 கம்பனிகளுக்கு மேற்படாதவாறாக இருக்கவேண்டும்.

**3(4) சபையினால் ஒப்படைக்கப்பட்ட முகாமைத்துவ தொழிற்பாடுகள்**

3(4)(i) பணிப்பாளர்கள் நடைமுறைகளிலுள்ள ஒப்படைக்கப்பட்ட ஒழுங்குகளை கவனமாக ஆராய்ந்து தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

3(4)(ii) அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் சபையின் இயலாற்றலுக்கு முட்டுக்கட்டையாகவோ அல்லது அதனைக் குறைப்பதாகவோ பொதுவாக அதன் தொழிற்பாடுகளைப் பாதிக்கின்ற அளவிற்கு சபையானது சபைக் குழுவிற்கோ, முதன்மை நிறைவேற்று அலுவலருக்கோ, நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கோ அல்லது முதன்மை முகாமைத்துவ ஆளணியினருக்கோ எந்த ஒரு விடயத்தையும் ஒப்படைக்கக்கூடாது.

3(4)(iii) வங்கியின் தேவைப்பாடுகளுடன் தொடர்புடைய விதத்தில் அவை இருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக, காலாந்தர அடிப்படையில் சபை ஒப்படைப்பு செயற்பாடுகளை மீளாய்வு செய்தல் வேண்டும்.

**3(5) தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்**

3(5)(i) தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் பணி வெவ்வேறாக இருக்க வேண்டியதுடன் தனிப்பட்ட ஒரே ஆளினால் செயற்படுத்தப்படவும் கூடாது.

3(5)(ii) தலைவர் நிறைவேற்று அல்லா பணிப்பாளராகவும் அதேபோன்று பெரும்பாலும் சுதந்திரமானதொரு பணிப்பாளராகவும் இருத்தல் வேண்டும். தலைவர் சுதந்திரமான பணிப்பாளராக இல்லாதவிடத்து, பெருமளவு சுதந்திரமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக சபையானது சுதந்திரமான பணிப்பாளர் ஒருவரை மூத்த பணிப்பாளராக பொருத்தமான காலமொன்றிற்கு நியமிக்கலாம். மூத்த பணிப்பாளரின் பதவி வங்கியின் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

3(5)(iii) சபையானது அதன் ஆண்டறிக்கையின் மிக முக்கியமானதொரு பகுதியாக இருக்கக்கூடிய கம்பனி ஆளுகை அறிக்கையில், தலைவரினதும் முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் தனித்தன்மையினையும் தலைவருக்கும் முதன்மை நிறைவேற்று அலுவலருக்குமிடையில் ஏதாவது உறவுமுறை இருப்பின் (நிதிசார், வியாபாரம், குடும்பம் அல்லது தொடர்பான உறவுமுறைகள் உட்பட) அதன் தன்மைகளையும் சபையின் உறுப்பினர்களிடையேயான உறவுமுறைகளையும் வெளிப்படுத்துதல் வேண்டும்.

3(5)(iv) தலைவர் (அ) சபைக்கு தலைமைத்துவதனையும் (ஆ) சபை வேலைகள் காத்திரமான முறையில் நடைபெறுவதனையும் அதன் பொறுப்புக்கள் ஆற்றப்பட்டு வருவதனை உறுதிப்படுத்துபவராகவும் அனைத்து முக்கியமானதும் பொருத்தமானதுமான விடயங்கள் சபையினால் சரியான நேரத்தில் கலந்துரையாடப்பட்டமையினை உறுதிப்படுத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

3(5)(v) தலைவர், நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படுவதற்காக மற்றைய பணிப்பாளர்களினால் முன்மொழியப்பட்ட விடயங்கள் ஏதுமிருப்பின், பொருத்தமானவிடத்து அவற்றினையும் கவனத்திற் கொண்டு, ஒவ்வொரு சபைக் கூட்டத்திற்குமான நிகழ்ச்சி நிரலை வரைந்து ஒப்புதலளிப்பதில் முக்கிய பொறுப்புடையவராயிருத்தல் வேண்டும். தலைவர் நிகழ்ச்சி நிரலை தயாரிக்கும் பொறுப்பினை கம்பனிச் செயலாளருக்கும் வழங்கலாம்.

3(5)(vi) சபைக் கூட்டங்களில் எழுகின்ற பிரச்சனைகள் பற்றி அனைத்து பணிப்பாளர்களுக்கும் சரியான முறையில் விளக்கமளிக்கப்பட்டமையை தலைவர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் பணிப்பாளர்கள் உரிய நேரத்தில் போதுமான தகவல்கள் பெற்றுக் கொண்டமையினையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

3(5)(vii) தலைவர் சபை விடயங்களில் அனைத்து பணிப்பாளர்களும் முழுமையானதும் தீவிரமானதுமான பங்களிப்பினை வழங்கும் விதத்தில் அவர்களை ஊக்குவிக்க வேண்டியதுடன் சபையானது வங்கியின் மிகச் சிறந்த நலன்களைக் கருத்திற் கொண்டு இயங்குவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் தலைமை தாங்குதலும் வேண்டும்.

3(5)(viii) தலைவர் குறிப்பாக நிறைவேற்று அல்லா பணிப்பாளர்களின் காத்தரமான பங்களிப்பிற்கு வசதியளிக்கின்ற விதத்தில் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களிடையே இறுக்கமான உறவுமுறையொன்று ஏற்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3(5)(ix) தலைவர் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் அல்லது நிறைவேற்றுப் பணிகள் எவற்றினதும் நேரடி மேற்பார்வை தொடர்பான நடவடிக்கைகளில் தலையிடக்கூடாது.

3(5)(x) தலைவர், பங்குடமையாளர்களுடன் காத்திரமான தொடர்பூட்டல்களை பேணுவதற்கும் பங்குடமையாளர்களின் கருத்துக்களை சபைக்கு தெரிவிப்பதற்கும் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை அவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3(5)(xi) முதன்மை நிறைவேற்று அலுவலர், வங்கியின் தொழிற்பாடுகள் மற்றும் வியாபாரங்களின் நாளாந்த முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான உச்ச நிறைவேற்று அலுவலராகத் தொழிற்படலாம்.

**3(6) சபை நியமித்த குழுக்கள்**

3(6)(i) இப்பணிப்புரைகளின் 3(6)(ii), 3(6)(iii), 3(6)(iv) மற்றும் 3(6)(v) இல் எடுத்துக் காட்டப்பட்டவாறு, ஒவ்வொரு வங்கியும் குறைந்தது நான்கு சபைக்குழுக்களை கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழுவும் சபைக்கு நேரடியாக அறிக்கையளிக்க வேண்டும். அனைத்துக் குழுக்களும், குழுவினது தலைவரின் மேற்பார்வையின் கீழ் கூட்டத்தைக் கூட்டவும், கூட்ட நிகழ்ச்சிகளையும் அறிக்கைகள் போன்றவற்றைப் பேணவும் செயலாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். சபையானது, ஒவ்வொரு குழுவினதும் கடமைகள், ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அவற்றின் பங்கு என்பன மீதான செயலாற்ற அறிக்கையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

3(6)(ii) கணக்காய்வு குழு தொடர்பாக பின்வரும் விதிகள் ஏற்புடைத்தனவாக இருக்கும்:

அ) குழுவின் தலைவராக, கணக்காய்வு அத்துடன் அல்லது கணக்காய்வில் தகமைகளைக் கொண்டுள்ள சுதந்திரமான நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

ஆ) குழுவின் அனைத்து உறுப்பினர்களும் நிறைவேற்று அல்லாப் பணிப்பாளர்களாக இருத்தல் வேண்டும்.

இ) குழு (i) தொடர்பான சட்ட நியதிகளுக்கிணங்க கணக்காய்வு பணிகளை வழங்கும் விதத்தில் வெளிக் கணக்காய்வாளர்களை நியமித்தல் (ii) கணக்காய்வாளருக்கு காலத்திற்குக் காலம் வழங்கப்பட்ட மத்திய வங்கியின் வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தல் (iii) தொடர்பான கணக்கீட்டு நியமங்களை பிரயோகித்தல்; மற்றும் (iv) கணக்காய்வுப் பங்காளர் ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதிக்கு கணக்காய்வில் ஈடுபட்டும் குறிப்பிட்ட கணக்காய்வு பங்காளர் முன்னைய காலம் முடிவடையும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னும் கணக்காய்வில் ஈடுபட்டிருக்குமிடத்து பணிக்காலம், கணக்காய்வுக் கட்டணம் மற்றும் கணக்காய்வாளரின் ஏதாவது பதவி விலகல் அல்லது பதவி நீக்கம் என்பன தொடர்பான விடயங்களின் மீது விதந்துரைப்புக்களைச் செய்யலாம்.

ஈ) பிரயோகிக்கத்தக்க நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கிணங்க குழு வெளிக்கணக்காய்வாளரின் சுதந்திரத்தையும் குறிக்கோளையும் கணக்காய்வு செய்முறையின் காத்திரமான தன்மையினையும் மீளாய்வு செய்து கண்காணித்தல் வேண்டும்.

உ) தொடர்பான சட்ட நியதிகள், ஒழுங்கு விதிகள், தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களினால் அனுமதிக்கப்பட்ட கணக்காய்வு அல்லாத பணிகளை வழங்குவதற்காக வெளிக்கணக்காய்வொன்றில் ஈடுபடுவது மீதான கொள்கையொன்றினை குழு உருவாக்கி நடைமுறைப்படுத்தும். அவ்வாறு செய்யும் போது குழுவினது, கணக்காய்வல்லா பணிகளின் வெளிக்கணக்காய்வாளர் ஒருவரின் ஏற்பாடுகள் கணக்காய்வாளர் சுதந்திரத்திற்கோ அல்லது பாரபட்சமற்ற தன்மைகளுக்கோ சேதமேற்படுத்தாத தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கணக்காய்வு அல்லாத பணிகளின் ஏற்பாடுகள் தொடர்பில் வெளிக்கணக்காய்வாளரின் சுதந்திரமான தன்மை அல்லது பாரபட்சமற்ற தன்மையினை மதிப்பிடும் பொழுது குழு பின்வருவனவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

(i) கணக்காய்வு நிறுவனத்தின் தேர்ச்சியும் அனுபவமும் கணக்காய்வு அல்லாத பணிகளின் பொருத்தமான ஏற்பாட்டாளர் என்ற தன்மையினை வழங்குமா என்பது பற்றியும்

(ii) வெளிக் கணக்காய்வாளர்களினால் மேற்கொள்ளப்படும் அத்தகைய பணிகளின் ஏற்பாடுகளின் மூலம் கணக்காய்வுகளின் பாரபட்சமற்ற அல்லது சுதந்திரமான தன்மைக்கு அச்சுறுத்தல் இல்லை என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் பாதுகாப்புக்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது பற்றியும்; அத்துடன்

(iii) கணக்காய்வு அல்லாத பணிகளின் தன்மை, தொடர்பான கட்டண அளவுகள், கணக்காய்வு நிறுவனம் தொடர்பில் தனிப்பட்ட மற்றும் கூட்டுக் கட்டளை அளவுகள் என்பன வெளிக் கணக்காய்வாளரின் பாரபட்சமற்றதன்மை அத்துடன்/ அல்லது சுதந்திரமான தன்மைக்கு அச்சுறுத்தல் எதனையும் ஏற்படுத்துமா என்பது பற்றியும்.

(ஊ) குழுவானது, கணக்காய்வு தொடங்குவதற்கு முன்னதாக, பின்வருவன உட்பட வெளிக் கணக்காய்வாளருடன் கணக்காய்வின் தன்மை மற்றும் செயற்பரப்பு பற்றி கலந்துரையாடி இறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். (i) கம்பனி ஆளுகை மற்றும் நிதிசார் அறிக்கையிடல் மீதான முகாமைத்துவ உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான பணிப்புரைகளுக்கு வங்கிகள் இணங்கியொழுகுவது பற்றிய மதிப்பீடொன்று (ii) தொடர்பான கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் அறிக்கையிடும் கடப்பாடுகள் என்பனவற்றிற்கிணங்க, வெளி நோக்கங்களுக்காக நிதியியல் கூற்றுகளைத் தயாரித்தல்; அத்துடன் (iii) ஒன்றிற்கு கூடுதலான கணக்காய்வு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளவிடத்து நிறுவனங்களிடையே இணைப்புக்களை ஏற்படுத்துதல்.

(எ) வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் முழுமையான தன்மையினைக் கண்காணிக்கும் பொருட்டு, அதன் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் வெளிப்படுத்துகைகளுக்காக தயாரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகள் மற்றும் அதில் உள்ளடக்கியுள்ள குறிப்பிடத்தக்க நிதிசார் அறிக்கையிடல் தீர்ப்புக்கள் என்பன தொடர்பாக வங்கியின் நிதிசார் தகவல்களை குழு மீளாய்வு செய்தல் வேண்டும். சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் வங்கியின் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகளை மீளாய்வு செய்கையில் குழுவானது (i) முக்கிய தீர்ப்புக்குரிய துறைகள் (ii) கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நடைமுறைகளிலுள்ள ஏதாவது மாற்றங்கள் (iii) கணக்காய்விலிருந்து தோன்றுகின்ற குறிப்பிடத்தக்க சீராக்கங்கள் (iv) நிகழ்ந்து கொண்டிருக்கும் கரிசனைக்குரிய எடுகோள்கள் மற்றும் ஏனைய சட்ட தேவைப்பாடுகள் என்பனவற்றுடன் இணங்கி ஒழுகுதல் என்பனவற்றில் குறிப்பாக கவனம் செலுத்தல் வேண்டும்.

(ஏ) இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வுகளிலிருந்து தோன்றுகின்ற விடயங்கள், பிரச்சனைகள் மற்றும் ஒதுக்குகள் என்பனவற்றையும், தேவையானவிடத்து முதன்மையான முகாமைத்துவ ஆளணியினர் சமூகமளிக்காத போது கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் உட்பட கணக்காளர் கலந்துரையாட விரும்புகின்ற விடயங்களையும் குழு கலந்துரையாடுதல் வேண்டும்.

(ஐ) வெளிக் கணக்காய்வாளரின் முகாமைத்துவ கடிதத்தினையும் அதற்கான முகாமைத்துவத்தின் பிரதிபலிப்பினையும் குழு மீளாய்வு செய்தல் வேண்டும்.

(ஒ) வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் தொடர்பாக குழு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்:

I. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயற்பரப்பு, தொழிற்பாடுகள் மற்றும் மூலவளங்களின் போதுமாந்தன்மையினையும் திணைக்களம் அதன் வேலைகளைச் செய்வதற்கு தேவையான அதிகாரங்கள் கொண்டுள்ளமையினைப் பற்றிய திருப்தியடைவது பற்றியும் மீளாய்வு செய்தல்;

II. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தையும் உள்ளகக் கணக்காய்வு செய்முறைகளையும் மீளாய்வு செய்வதுடன், தேவையானவிடத்து, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் விதந்துரைப்புக்களின் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையினையும் உறுதிப்படுத்தல்;

III. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர் மற்றும் மூத்த அலுவலர்களின் செயலாற்றத்தின் கணிப்பீடு அல்லது மதிப்பீடு பற்றிய மீளாய்வு;

IV. தலைவர், மூத்த அலுவலர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடுகளுக்கு வெளியிலிருந்து பணிகளை வழங்குவோர் தொடர்பான நியமனம் அல்லது முடிவுறுத்தலை விதந்துரைத்தல்;

V. உள்ளக முதன்மைக் கணக்காய்வாளர் மற்றும் வெளியிலிருந்து பணிகளை வழங்குவோர் யாரும் இருப்பின் அவர்கள் உட்பட உள்ளக கணக்காய்வாளர் புதிய திணைக்களத்தின் மூத்த அலுவலர்களின் பதவி விலகல்களை குழு மதிப்பீடு செய்தது என்பதனையும் பதவி விலகும் மூத்த அலுவலர்களும் வெளியிலிருந்து

பதவி விலகுவோரும் தமது பதவி விலகல் தொடர்பான காரணங்களைச் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பத்தினை வழங்குதல்;

VI. உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் அதன் கணக்காய்வு நடவடிக்கைகளில் சுதந்திரமானது என்பதனையும் இது பக்க சார்பற்ற முறையில், தேர்ச்சியுடனும், தொழில்சார் நிபுணத்துவத்துடனும் தொழிற்படுவதனை உறுதிப்படுத்தல்

(ஓ) குழு உள்ளக புலனாய்வுகள் தொடர்பாக முக்கியமாகக் கண்டறியப்பட்டவைகளையும் அதற்கான முகாமைத்துவத்தின் பிரதிபலிப்புக்களையும் ஆலோசனையில் கொள்ள வேண்டும்.

(ஔ) முதன்மை நிதி அலுவலர், முதன்மை உள்ளக கணக்காய்வாளர் மற்றும் வெளிக் கணக்காய்வாளர்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பொதுவாகக் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். குழுவின் அழைப்பின் பேரில் ஏனைய சபை உறுப்பினர்களும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களும் கூட கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். எனினும், குறைந்தது, ஆண்டிற்கு இரு தடவைகள், நிறைவேற்று பணிப்பாளர்களின் பிரசன்னம் இல்லாமலே குழுவானது வெளிக்கணக்காய்வாளர்களைச் சந்திக்க வேண்டும்.

(க) குழுவானது (i) தொடர்பான நியதிகளுக்குட்பட்ட எந்தவொரு விடயத்தையும் புலனாய்வு செய்வதற்கான தெளிவான அதிகாரத்தினையும் (ii) அவ்வாறு செய்வதற்கான வளங்களையும் (iii) தகவல்களைப் பெறுவதற்கான முழு வசதிகளையும், தேவையானவிடத்து (iv) தேவையான அனுபவங்களுடன் வெளிநாட்டிலிருந்து தொழில்சார் நிபுணர்களின் ஆலோசனைகளையும் அத்துடன் வெளிநாட்டவர்களை அழைப்பதற்கும் அதிகாரங்களை கொண்டுள்ளது.

(ந) கலந்துரையாடப்படவுள்ள விடயங்களை உரிய நேரத்தில் அறிவிப்பதுடன், குழுவானது கிரமமாக கூட வேண்டுமென்பதுடன் அதன் கடமைகளை நிறைவேற்றுவதிலும் பொறுப்புக்களிலும் அதன் முடிவுரையினை பதிவு செய்தல் வேண்டும்.

(ச) குழுவானது, முறைசாராத வழிகளில் (i) கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகளினது விபரம் (ii) ஆண்டொன்றில் நடத்தப்பட்ட கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அத்தகைய கூட்டங்களில் கலந்து கொண்ட தனிப்பட்ட பணிப்பாளர் ஒவ்வொருவரினதும் விபரங்கள் என்பனவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

(ஞ) குழுவின் செயலாளர் (இவர் கம்பனியின் செயலாளராகவோ அல்லது உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளின் தலைவராகவோ இருக்கலாம்) குழுக் கூட்டத்தின் விபரமான நிகழ்ச்சிகளை பதிவு செய்து வைத்திருத்தல் வேண்டும்.

(ட) குழுவானது வங்கியின் அலுவலர்களின் ஒழுங்குகள், நம்பிக்கைகள், நிதியியல் அறிக்கையிடலில் ஏற்படக்கூடிய ஒழுங்கீனங்கள் பற்றி எழுப்பிய கருத்துக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகள் அல்லது ஏனைய விடயங்களை பற்றி மீளாய்வு செய்தல் வேண்டும். இதன்படி, அத்தகைய விடயங்கள் தொடர்பான நியாயமானதும் சுதந்திரமானதுமான புலனாய்வுகளின் பொருட்டு குழு இடம் பெறுகின்ற சரியான ஒழுங்குகளையும் பொருத்தமன பின் தொடர் நடவடிக்கைகளையும், வெளிக் கணக்காய்வாளருடனான வங்கியின் உறவு முறையினை மேற்பார்வை செய்கின்ற முக்கிய பிரதிநிதித்துவ சபையாக தொழிற்படுவதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

3(6)(iii) பின்வரும் விதிகள் மனித வளங்கள் மற்றும் ஊதிய குழுக்கள் தொடர்பிலும் ஏற்புடைத்தாக இருக்கும்.

(அ) குழுவானது பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் வங்கியின் முதன்மையான முகாமைத்துவ ஆளணியினருடன் தொடர்பான வருமானக் கொள்கையினை (சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய நிதியியல் கொடுப்பனவுகள்) தீர்மானிக்கலாம்.

(ஆ) குழுவானது பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரின் குறிக்கோள்களையும் இலக்குகளையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(இ) குழு, நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுக்கெதிராக முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரதும் செயலாற்றத்தினை காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்ய வேண்டியதுடன் வருமானம், நன்மைகள் போன்றவற்றை திருத்துவதற்கான அடிப்படைகளையும் செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட ஏனைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளையும் நிருணயித்தல் வேண்டும்.

(ஈ) முதன்மை நிறைவேற்று அலுவலர் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படுகின்ற குழுக்கூட்டம் தவிர, மற்றைய குழுக் கூட்டங்கள் அனைத்திலும் முதன்மை நிறைவேற்று அலுவலரின் பிரசன்னம் இருத்தல் வேண்டும்.

3(6)(iv) நியமனக்குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடைத்தாதல் வேண்டும்:

(அ) புதிய பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரை தெரிவு செய்வதற்கு/ நியமிப்பதற்கு குழுவானது நடைமுறையொன்றினை நடைமுறைக்கிடல் வேண்டும்.

(ஆ) சபையின் பொறுப்புக்கள் ஒட்டு மொத்தமாக ஆற்றப்படுகின்றதனைக் கருத்திற் கொண்டு பணிப்பாளரினால் ஆற்றப்பட்ட செயலாற்றம் மற்றும் பங்களிப்பினை கணக்கிலெடுத்து பரிசீலனையின் அடிப்படையில் தற்போதைய பணிப்பாளர்களை மீள நியமிப்பதற்கு குழு விதந்துரைத்தல் (அல்லது விதந்துரைக்காமல் விடல்) வேண்டும்.

(இ) முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்கு அல்லது பதவி உயர்த்தப்படுவதற்கு பரிசீலனையில் கொள்ளப்படுவதற்கு தகமை பெறுவதற்கான தகமைகள், அனுபவம் மற்றும் முக்கியமான மனச்சால்பு போன்ற பிரமாணங்களை குழு நிர்ணயித்தல் வேண்டும்.

(ஈ) பணிப்புரை 3(3)இல் தரப்பட்ட பிரமாணங்களில் குறித்துரைக்கப்பட்டவாறும் நியதிச் சட்டங்களில் குறிப்பிட்டவாறும் அலுவலகங்களில் தொழிலாற்றுவதற்கு பணிப்பாளர்களும், முதன்மை நிறைவேற்று அலுவலரும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரும் ஏற்ற பொருத்தமான ஆட்களாக இருக்கிறார்களென்பதனை குழு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(உ) ஓய்வு பெறுகின்ற பணிப்பாளர்கள் மற்றும் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் ஓய்வு பெறும் போது அவர்களின் பணிகளைத் தொடர்வதற்கான மேலதிக புதிய நிபுணர்களுக்கான தேவைப்பாடுகளைக் குழு பரிசீலித்து விதந்துரைத்தல் வேண்டும்.

(ஊ) குழு சுதந்திரமான பணிப்பாளர் ஒருவரினால் தலைமை தாங்கப்பட வேண்டியதுடன் பெரும்பாலும் சுதந்திரமான பணிப்பாளர்களையே பெரும்பான்மையாகவும் கொண்டிருத்தல் வேண்டும். முதன்மை நிறைவேற்று அலுவலர் அழைப்பின் பேரில் கூட்டத்திற்கு பிரசன்னமாகலாம்.

3(6)(v) ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(அ) குழுவானது குறைந்தபட்சம் மூன்று நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களையும் முதன்மை நிறைவேற்று அலுவலரையும் அதாவது கொடுகடன், சந்தை, திரவத்தன்மை தொழிற்பாடு மற்றும் உபாய இடர்நேர்வு போன்ற விரிந்த இடர்நேர்வு வகைகளை மேற்பார்வை செய்கின்ற முக்கியமான முகாமைத்துவ ஆளணியினரையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். குழு முக்கியமான முகாமைத்துவ ஆளணியினருடன் மிக நெருக்கமாக பணியாற்ற வேண்டியுள்ளதுடன் அதிகாரசபையின் உட்கட்டமைப்பு மற்றும் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களுக்குட்பட்டு சபையின் சார்பாக தீர்மானங்களையும் எடுத்தல் வேண்டும்.

(ஆ) குழுவானது, வங்கிக்கு நேரக்கூடிய அனைத்து இடர்நேர்வுகளையும் அதாவது கொடுகடன் சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாட்டு மற்றும் உபாய இடர்நேர்வுகளையும் மாதாந்த அடிப்படையில் பொருத்தமான இடர்நேர்வு குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்களினூடாக மதிப்பீடு செய்தல் வேண்டும். துணைக்கம்பனிகள் மற்றும் இணைக்கம்பனிகளைப் பொறுத்தவரையில், இடர்நேர்வு முகாமைத்துவம் வங்கி அடிப்படையிலும், குழும அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும்.

(இ) குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகளை கட்டுப்படுத்துவதற்கும் குழுவினால் குறித்துரைக்கப்பட்டவாறு கணியம்சார் மற்றும் தரம் சார்ந்த இடர்நேர்வு வரையறைகளுக்குள் முகாமைப்படுத்துவதற்காக கொடுகடன் குழு மற்றும் சொத்து பொறுப்புக்குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்ட குழுக்களின் போதுமாந்தன்மையினையும் காத்திரமான தன்மையினையும் குழு மீளாய்வு செய்தல் வேண்டும்.

(ஈ) வங்கியின் கொள்கைகள், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட முன்மதியுடைய மட்டங்களுக்கு அப்பாலுள்ள மட்டங்களில் அத்தகைய இடர்நேர்வுகள் காணப்படுமிடத்து குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளின் தாக்கத்தினை தணிப்பதற்காக குழு பொருத்தமானதும் சரியானதுமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(உ) நாளது வரை பூரணப்படுத்தப்பட்ட தடங்கலற்ற வியாபாரத் திட்டங்கள் உட்பட, இடர்நேர்வு முகாமைத்துவத்தின் அனைத்து அம்சங்களையும் மதிப்பிடுவதற்காக குழு குறைந்த பட்சம் காலாண்டு அடிப்படையில் கூடுதல் வேண்டும்.

(ஊ) குறிப்பிட்ட இடர்நேர்வினை அடையாளம் காண தவறிய மற்றும் குழுவினால் விதந்துரைக்கப்பட்ட அத்துடன் அல்லது வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் பணிக்கப்பட்டவாறு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிய அலுவலர்களுக்கெதிராக குழு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

(எ) குழுவானது ஒவ்வொரு கூட்டமும் முடிவடைந்த ஒரு வாரத்திற்கிடையில், சபையின் கருத்து, இணக்கப்பாடு அத்துடன்/ அல்லது குறித்துரைக்கப்பட்ட பணிப்புக்களுக்காக இடர்நேர்வு மதிப்பீட்டு அறிக்கையினைச் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஏ) வியாபாரத் தொழிற்பாடுகளின் அனைத்துத் துறைகள் தொடர்பான சட்டம், ஒழுங்கு விதிகள், ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல்கள் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள் என்பனவற்றுடன் வங்கி இணங்கி ஒழுகுவதனை மதிப்பிடுவதற்காக குழுவானது இணக்க தொழிற்பாடொன்றினை நிறுவுதல் வேண்டும். முக்கிய முகாமைத்துவ ஆளணியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறப்பு இணங்குவிப்பு அலுவலர் இணங்குவிப்பு தொழிற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியதுடன் காலத்திற்கு காலம் அறிக்கை சமர்ப்பிக்கவும் அவர் கடமைப்பட்டவராக இருப்பார்.

**3(7) தொடர்பான தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்**

3(7)(i) எந்த ஒரு ஆளுடனும் குறிப்பாக, இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "தொடர்புபட்ட தரப்பினர்கள்" எனக் கருதப்படக்கூடிய ஆட்களின் பின்வரும் வகையினருடனான வங்கியின் எந்த ஒரு கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் எழக்கூடிய நலவுரித்துக்களின் எந்த ஒரு முரண்பாட்டினையும் தவிர்ப்பதற்கு சபை தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(அ) ஏதாவது ஒரு வங்கியின் துணைக் கம்பனிகள்;

(ஆ) ஏதாவது வங்கியின் இணைக் கம்பனிகள்;

(இ) வங்கியின் ஏதாவது பணிப்பாளர்கள்;

(ஈ) ஏதாவது வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்;

(உ) ஏதாவது வங்கியின் பணிப்பாளர்கள் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் நெருங்கிய உறவினரொருவர்;

(ஊ) வங்கியில் பொருள் ரீதியான நலவுரித்துக்களுக்குச் சொந்தமான பங்குடமையாளர்;

(எ) ஏதாவது வங்கியின் பணிப்பாளர்கள் அல்லது ஏதாவது வங்கியின் பணிப்பாளர்களது நெருங்கிய உறவினர் அல்லது கணிசமான நலவுரித்துக்களைக் கொண்ட பொருள் ரீதியான பங்குடமையாளர் பற்றியதொரு கரிசனை.

3(7)(ii) இப்பணிப்புரையினால் உள்ளடக்கப்படக்கூடிய தொடர்பான தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் வகை பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

(அ) உயர்ந்த பட்ச கடன் வதி மீதான நாணயச்சபையின் பணிப்புக்களில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான எந்த வகைக் கடன்வசதியினையும் வழங்கல்;

(ஆ) வைப்புக்கள், கடன்பாடுகள் மற்றும் முதலீடுகளின் வடிவில் வங்கியின் எந்தவொரு பொறுப்புக்களையும் உருவாக்குதல்;

(இ) வங்கிக்கு வழங்கப்பட்ட அல்லது வங்கியிலிருந்து பெறப்பட்ட நிதிசார் அல்லது நிதிசாரா தன்மைகளைக் கொண்ட எந்தவொரு பணியினதும் வழங்கல்;

(ஈ) வங்கிக்கும் எந்தவொரு தொடர்பான தரப்பினர்களுக்குமிடையில் அறிக்கையிடல் வழிகளையும் தகவல் பாய்ச்சல்களையும் உருவாக்குதல் அல்லது பேணுதல், அத்தகைய தொடர்புட்ட தரப்பினர்களுக்கு நன்மை தரத்தக்க உள்ளார்ந்த வளம்மிக்க சொத்துரிமைகளை நம்பிக்கைகளை அல்லது வேறுவிதமான உணர்வு பூர்வமான தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு வழிவகுக்கக்கூடும்.

3(7)(iii) மேலே பணிப்பு 3(7)(i) இல் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு தொடர்பான தரப்பினருடன், இதே வியாபாரத்தினை வங்கிகளுடன் மேற்கொள்கின்ற மற்றையவர்களுக்கு வழங்கப்பட்டதிலும் பார்க்க "மிகச் சாதகமான வசதியை" வழங்கக்கூடிய விதத்தில் எந்தவிதமான கொடுக்கல் வாங்கல்களிலும் வங்கி ஈடுபடவில்லை என்பதனை சபை உறுதிப்படுத்துதல் வேண்டும். இக்கருத்தில் "மிகச் சாதகமான வசதி" என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

(அ) "தொடர்பான தரப்பினருக்கு" மொத்த தேறிய கடன் வசதியை வழங்குகின்றமை சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் முன்மதியுடைய சதவீதத்தினை விஞ்சும். இத்துணைப் பணிப்புரையின் நோக்கத்திற்காக;

(i) "கடன் வசதி" என்பது உச்ச கடன் வசதித்தொகையின் மீது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளில் வரைவலிக்கணப்படுத்தப்பட்டவாறன கடன்வசதியின் கருத்தையே கொண்டிருக்கும்.

(ii) "மொத்த தேறிய கடன்வசதி" மொத்தக்கடன் வசதிகளிலிருந்து வங்கியின் பங்கு மூலதனத்தில் அத்தகைய தொடர்பான தரப்பினர்களினால் செய்யப்பட்ட காசுப் பிணையங்கள் மற்றும் முதலீடுகள் மற்றும் 5 ஆண்டுகள் அல்லது அதற்கும் கூடுதலான முதிர்ச்சியுடன் கூடிய படுகடன் சாதனங்கள் என்பனவற்றைக் கழிப்பதன் மூலம் கணிக்கப்படுகின்றது.

(ஆ) தொடர்பற்ற ஒப்பிடத்தக்க இணைக்கிணைத் தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களுடன் ஒப்பிடுகையில் வங்கியின் மிகச் சிறந்த கடன் வழங்கல் வீதத்திலும் பார்க்க குறைந்த வட்டி வீதத்தினை விதித்தல் அல்லது வங்கி வைப்புக்களுக்குக் கூடுதலான வீதத்தினைச் செலுத்துதல்;

(இ) சாதகமான நியதிகள், வர்த்தக இழப்புக்களை உள்ளடக்குதல் அத்துடன்/ அல்லது கட்டணங்களை/ தரகுகளைத் தளர்த்துதல் போன்ற முன்னுரிமை ரீதியில் நடத்துதல்; தொடர்புபடாத தரப்பினரினால் மேற்கொள்ளப்படும் வழமையான வியாபார காலத்திற்கு கூடுதலாக காலப்பகுதியை நீடித்தல்;

(ஈ) மதிப்பீட்டு நடைமுறைகள் ஏதுவுமில்லாமல் தொடர்பான தரப்பினருக்கு பணிகளை வழங்குதல் அல்லது அவர்களிடமிருந்து பெறுதல்;

(உ) அறிக்கையிடும் வழிகளையும் தகவல் பாய்ச்சல்களையும் பேணுதல் சட்ட ரீதியான கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளின் செயலாற்றத்திற்காக தேவைப்படுத்தப்பட்டவை நீங்கலாக தொடர்பான தரப்பினருடன் உள்ளார்ந்த வளம்மிக்க சொத்துரிமைகள் நம்பிக்கைகள் அல்லது வேறுவிதமான உணர்வு பூர்வமான தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு வழிவகுக்கும்.

3(7)(iv) இதன் எந்தவொரு பணிப்பாளருக்கும் அல்லது நெருங்கிய உறவினருக்குமான கடன் வசதிகள், அத்தகைய கடன் வசதிகளுக்கு பணிப்பாளர் சபையின் கூட்டத்தில், குறிப்பிட்ட பணிப்பாளர் இல்லாமல், மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்ட பணிப்பாளர்கள் சாதகமான முறையில் வாக்களித்தாலொழிய, வங்கிகளினால் அக்கடன்வசதி வழங்கப்படமாட்டாது. அத்தகைய கடன் வசதிகள் நாணயச் சபையினால் காலத்திற்குக்காலம் நிர்ணயிக்கப்படக்கூடிய பிணையங்களினால் பிணையிடப்படும்.

3(7)(v) (அ) ஆளொருவருக்கு அல்லது, ஆளொருவரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது குறிப்பிட்ட ஆள் கணிசமான ஈடுபாடுகளைக் கொண்டுள்ள எந்தவொரு விடயத்திற்கும் வங்கியொன்று ஏதாவது கடன்வசதிகளை வழங்கிய பின்னர் அத்தகைய ஆள் வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆண் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்குள் நாணயச்சபையினால் அத்தகைய நோக்கத்திற்காக ஒப்புதலளிக்கப்படக்கூடிய தேவையான பிணையத்தினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை வங்கி மேற்கொள்ளல் வேண்டும்.

(ஆ) மேலேயுள்ள பணிப்புரை 3(7)vஆ இல் வழங்கப்பட்டுள்ளவாறு அக்காலப்பகுதியில் அத்தகைய பிணையம் வழங்கப்பட்டிருக்காதவிடத்து, எந்த ஒரு கடன்வசதியினதும் கணக்கிற்கு வரவேண்டிய ஏதாவது தொகையினையும், வட்டி ஏதுமிருப்பின், அதனையும் சேர்த்து கடன் வழங்கப்பட்ட நேரத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அல்லது அத்தகைய பணிப்பாளர் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து பதினெட்டு மாத காலப்பகுதி முடிவடைந்ததும் இவற்றில் எது முந்தியதோ, அக்காலப்பகுதிக்குள் அத்தொகையினை அளவிடுவதற்கு வங்கி நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(இ) மேலேயுள்ள துணைப் பணிப்புக்களுக்கு இணங்கியொழுக தவறுகின்ற எந்தவொரு பணிப்பாளரும், பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து வெளியேறுவதற்கு முடிவு செய்ய வேண்டியதுடன் வங்கி அத்தகைய உண்மைத் தன்மையினை பொதுமக்களுக்கு வெளிப்படுத்துதலும் வேண்டும்.

(ஈ) எனினும், இத்துணைப் பணிப்பு, பணிப்பாளரானவர் இக்கடன் வசதி வழங்கப்பட்ட வேளையில் வங்கியின் ஊழியராக இருந்து அத்தகைய வங்கியின் எல்லா ஊழியர்களுக்கும் ஏற்புடைத்தான திட்டமொன்றின் கீழ் இக்கடன் வசதிகள் வழங்கப்பட்டிருக்குமிடத்து ஏற்புடையதாகாது.

3(7)(vi) வங்கியொன்று எந்தவொரு ஊழியருக்கும் அல்லது அத்தகைய ஊழியரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது ஊழியர் அல்லது நெருங்கிய உறவினர் கணிசமான ஈடுபாடுகளைக் கொண்டுள்ள எந்தவொரு விடயத்திலும் ஏதாவது அத்தகைய வங்கியின் ஊழியர்களுக்கு ஏற்புடைத்தான திட்டத்தின் அடிப்படையில் அல்லது மேலேயுள்ள பணிப்புரை 3(7)(v)இல் குறிப்பிடப்பட்டவாறு வழங்கப்பட்ட கடன்வசதிகள் தொடர்பாக நாணயச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பிணையத்தினால் பிணையிடப்பட்டிருந்தாலன்றி கடன் வசதியையோ அல்லது கட்டணங்கள் அத்துடன்/ அல்லது தரகுகளுடன் தொடர்பான "கூடியளவு சாதகமான வசதிகளையோ" வழங்கக்கூடாது.

3(7)(vii) நாணயச்சபையின் முன் அனுமதி இல்லாமல் மேலேயுள்ள பணிப்புரை 3(7)(v) மற்றும் 3(7)(vi) என்பனவற்றின் கீழ் வங்கியொன்றினால் கடன்வசதிகளோ அல்லது அத்தகைய கடன்வசதிகளின் ஏதாவதொரு பகுதியினை வழங்கவோ அல்லது அதன் மீது வரவேண்டிய வட்டியையோ அனுப்பவோ, அத்தகைய ஒப்புதலில்லாமல் எந்தவொரு கடன் குறைப்பு தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும் அல்லது நடைமுறைப்படுத்தக் கூடாது.

3(8) **வெளிப்படுத்துதல்கள்**

3(8)(i) (அ) கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்புடைத்தான, மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளினால் விபரிக்கப்பட்ட படிவங்களுக்கு இணங்க கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கூற்றுக்களையும் காலாண்டு நிதியியல் கூற்றுக்களையும் தயாரித்து பிரசுரிப்பதனையும் அத்துடன் (ஆ) அத்தகைய கூற்றுக்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சுருக்கமான வடிவத்தில் வெளியிடப்பட வேண்டும் என்பதனையும் அவை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

3(8)(ii) ஆண்டறிக்கையில் பின்வரும் குறைந்த பட்ச வெளிப்படுத்துதல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையினை சபை உறுதிப்படுத்தல் வேண்டும்:

(அ) கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் ஏற்புடைத்தான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இசைவாக, குறித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதற்கான கூற்றொன்று.

(ஆ) நிதிசார் அறிக்கையிடல் முறையானது நிதிசார் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை பற்றிய நியாயமான உறுதிகளை வழங்குவதற்காகவும் வெளிநோக்கங்களுக்கான நிதிகள் கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்குமாக வடிவமைக்கப்பட்டுள்ளமையினை வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறியினை உறுதிப்படுத்துவது பற்றிய கூற்றொன்று

(இ) 2008 திசெம்பர் 31இற்கு பின்னர் தயாரிக்கப்பட்டு அல்லது வெளியிடப்படும் எந்தவொரு கூற்றுத் தொடர்பாகவும், மேலே பணிப்புரை 3(8)(ii) (ஆ)இல் குறிப்பிடப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையின் பயன்பாடு மீதான வெளிக் கணக்காய்வாளரின் சான்றிதழ்.

(ஈ) பெயர்கள், பொருத்தம், தகுதி, வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வங்கியில் செலுத்தப்பட்ட மொத்தக் கட்டணம் ஊதியங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய பணிப்பாளர்களின் விபரங்கள்.

(உ) 3(7)(iii)இல் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு தொடர்பான தரப்பினரின் ஒவ்வொரு வகைக்கும் வழங்கப்பட்ட மொத்த தேறிய கடன் வசதி தொடர்பான தரப்பினரின் ஒவ்வொரு வகைக்கும் வழங்கப்பட்ட மொத்த தேறிய கடன் வசதி. தொடர்பான தரப்பினரின் ஒவ்வொரு வகைக்கும் வழங்கப்பட்ட தேறிய கடன் வசதியினை வங்கியின் ஒழுங்கு முறைப்படுத்தல் மூலதனத்தின் சதவீதமாகவும் வெளிப்படுத்தல் வேண்டும்.

(ஊ) வங்கியினால் அதன் முதன்மை முகாமைத்துவ ஆளணியினருக்கு செலுத்தப்பட்ட ஊதியங்களின் மொத்தப் பெறுமதி மற்றும் வங்கி அதன் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி என்பன செலுத்தப்பட்ட ஊதியங்கள், வழங்கப்பட்ட கடன்வசதி, வங்கியில் செய்யப்பட்ட வைப்புக்கள் அல்லது முதலீடுகள் போன்ற வகைகளில் சபையினால் காட்டப்படுதல் வேண்டும்.

(எ) ஆண்டு கம்பனி ஆளுகை அறிக்கையில் இப்பணிப்புரைகளுக்கு இணங்கி ஒழுகுகின்றமை தொடர்பான வெளிக் கணக்காய்வாளர் சான்றுபடுத்தலை 2010 சனவரி 1ஆம் நாளுக்கு பின்னர் பிரசுரித்தல்.

(ஏ) முன்மதியுடைய தேவைப்பாடுகள், ஒழுங்கு விதிகள், சட்டம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளுடன் இணங்கி ஒழுகுவது தொடர்பான விபரங்களையும் இணங்கி ஒழுகாமை பற்றிய விடயங்களைச் சரி செய்வதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகளையும் குறிப்பிடுகின்ற ஒரு அறிக்கை.

(ஐ) வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவத்தில் காணப்படும் குறைபாடுகள் அல்லது வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் எடுத்துக் காட்டப்பட்ட இப்பணிப்புரைகளுக்கு இணங்கி ஒழுகாமை பற்றிய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தொடர்பான கூற்று அவ்வாறிருப்பின் அத்தகைய கரிசனைக்குரிய விடயங்களைக் கட்டுப்படுத்துவதற்கு வங்கியினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளுடன் சேர்த்து நாணயச்சபை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தும்.

**3(9) இடை மாறுபாட்டிற்குரிய மற்றும் ஏனைய பொதுவான ஏற்பாடுகள்**

3(9)(i) இப்பணிப்புரைக்கான இணங்குவிப்புக்களை 2008 சனவரியிலிருந்து தொடங்க வேண்டியதுடன் இப்பணிப்புரைக்கு இணங்கி இணங்கி ஒழுகுவதற்கு குறிப்பாக காலம் நீடிக்கப்பட்டிருந்தாலொழிய அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 2009 சனவரி 1 நாளுக்கு முன்போ அல்லது அன்றோ இப்பணிப்புரையின் ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

3(9)(ii) இலங்கையிலுள்ள குறித்துரைக்கப்பட்ட நியதிச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டுள்ள வங்கிகளைப் பொறுத்தவரையில் தொடர்பான நியதிச்சட்டங்களின் ஏற்பாடுகளுடன் முரண்படாத இப்பணிப்புரைகளின் அனைத்து ஏற்பாடுகளுடனும் இணங்கி ஒழுக நடவடிக்கை எடுக்குமிடத்து அத்தகைய நியதிச் சட்டங்களில் குறித்துரைக்கப்பட்டவாறு சபைகள் தொடர்பான நியதிச்சட்டங்களின் ஏற்பாடுகளினது நியதிகளில் தொடர்ந்தும் தொழிற்படலாம்.

3(9)(iii) இப்பணிப்புரையினை, இலங்கையில் தொழிற்படுகின்ற வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளுக்கு, அத்தகைய வங்கிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு ஏற்புடைத்தான ஒழுங்கு விதிகள் மற்றும் சட்டங்களுக்கு முரண்படாத அளவு வரைக்கும் பிரயோகிக்கலாம், வெளிநாட்டு வங்கியொன்றின் கிளை அதன் தாய் வங்கியின் ஆண்டு கம்பனி ஆளுகை அறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கலாம்.

3(9)(iv) இப்பணிப்புரையின் எந்தவொரு ஏற்பாடுகளுக்கும் எந்த வங்கி தொடர்பான அமைப்பு அகவிதிகளுக்கும் (அல்லது உள்ளக விதிகள்) இடையில் முரண்பாடுகள் தோன்றும் சந்தர்ப்பத்தில் இப்பணிப்புரையின் ஏற்பாடுகளே மேலோங்கி நிற்றல் வேண்டும். எனினும், தனிப்பட்ட வங்கியொன்றின் உள்ளக விதிகள் குறிப்பிட்ட இப்பணிப்புரையிலும் பார்க்க மிகக் கடுமையானதாக இருக்குமிடத்து உள்ள அமைப்பு விதியின் அத்தகைய ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும்.

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1)இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்.

ஒப்பம்
**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
ஆளுநர்

கொழும்பு
2007 திசெம்பர் 26

## பணிப்புரைகள்

## 2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள்
## இலங்கையின் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை

2006ஆம் ஆண்டில் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தால் இறுதியாகத் திருத்தப்பட்ட, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப்பிரிவு 76ஜே(1) இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்டபடி, நாணயச்சபையானது இலங்கையின் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை சம்பந்தமாக பின்வரும் பணிப்புரைகளை விடுக்கின்றது. இப்பணிப்புரைகள் 2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை என குறிப்பிடப்படும். இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்படும் பிரிவுகள் 2006ஆம் ஆண்டில் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்ட, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டவையாகும்.

1. **வங்கித்தொழில் சட்டம், நாணய விதிச் சட்டம் என்பனவற்றின் கீழான பொறுப்புக்களும் அதிகாரமளிப்புகளும்**

1(1) 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தால் இறுதியாகத் திருத்தப்பட்ட 1988ஆம் ஆண்டின் 30ஆவது இலக்க வங்கித்தொழில் சட்டப்பிரிவு 76ஜே(1)இன் கீழ், வங்கித்தொழில் முறையின் செயல் திறனை உறுதிப்படுத்தும் பொருட்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் எந்தவொரு அம்சத்தினையும் நடைமுறைப்படுத்தும் முறை சம்பந்தமான பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச்சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

1(2) 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 5ஆம் பிரிவின்படி, இலங்கை மத்திய வங்கியானது அச் சட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்டபடி தனது நடவடிக்கை மூலமாக (அ) பொருளாதார மற்றும் விலை உறுதித்தன்மை மற்றும் (ஆ) நிதித் தொழில்துறை உறுதித்தன்மை என்ற இரு குறிக்கோள்களையும் இயலுமானவரை நிறைவேற்றுவதற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

1(3) இலங்கை மத்திய வங்கியானது தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளை பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அல்லது நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றின் போது அவற்றை பாதிக்கும்; அல்லது அதனுடன் தொடர்புடைய அல்லது அதனால் ஏற்படுகின்ற ஏதாவது ஒரு விடயம் தொடர்பாக நாணயவிதிச் சட்ட 10(இ) பிரிவின் கீழ் அதிகாரப் பிரயோகம், கடமைகள், தொழிற்பாடுகள், பொறுப்புகள் சம்பந்தமாக அவசியம் எனக் கருதும் சட்ட ஒழுங்கு விதிகளை உருவாக்குவதற்கு நாணயச்சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

1(4) 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய நாணய விதிச் சட்டத்துக்கான ஜோன் எக்ஸ்டர் அறிக்கையில் குறிப்பிட்ட விசேட காரணங்களுக்காக வங்கிகள் மேற்பார்வை என்பது இலங்கை மத்திய வங்கியின் கடமையாக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்படுபவை “வங்கித்தொழில் என்பது பொதுமக்களின் நலன்களை உயர் அளவில் பாதிக்கக்கூடிய பொருளாதார தொழிற்பாடாக இருப்பதுடன் நாட்டின் பொருளாதார வாழ்வின் எல்லா கட்டங்களையும் ஏதோ ஒரு வழியில் தொட்டுச் செல்கின்றது. ஆரோக்கியமான மற்றம் துடிப்பாற்றல் மிக்க பொருளாதார வளர்ச்சிக்கு செயல் திறன்மிக்க வங்கித்தொழில் அவசியமாகிறது. மேற்பார்வை திறனற்ற முகாமைத்துவம், வங்கி தோல்விகள் மற்றும், வங்கித்தொழிலில் நம்பிக்கை இழப்பு என்பனவற்றுக்கு எதிராக மக்களைக் காக்க உதவுகிறது. அது வைப்பாளர்களையும் பங்குதாரர்களையும் நட்டத்திலிருந்து பாதுகாக்க உதவுவதுடன் வங்கிப் பணிப்பாளர்களையும் மற்றும் அலுவலர்களையும் வங்கி முகாமைத்துவ பணிகளை அறிவாற்றல் மற்றும் விவேகத்துடனும் மேற்கொள்ள உதவுகின்றது.”

1(5) இதன் அடிப்படையில், நிதிமுறை உறுதித்தன்மைக்கு அடிப்படையான மொத்த வங்கித்தொழில் துறை உறுதித் தன்மையை உயர்த்துவதற்கு ஏதுவாக, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கம்பனி ஆளுமை செயல்முறைகள் மற்றும் செயற்பாடுகளை அபிவிருத்தி அடையச் செய்வதற்கும் அதனைத் தொடர்ந்து பேணுவதற்கும், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட 76ஜே(1)ஆம் பிரிவின் கீழ் நாணயச் சபையானது இப் பணிப்புரைகளை விடுக்கின்றது.

1(6) வங்கித்தொழிலை பொறுப்பாகவும் மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய விதத்திலும் நடத்திச் செல்ல உதவுவதன் மூலம், தனி வங்கிகளின் பாதுகாப்பு, செயற்றிறன் என்பனவற்றை விருத்தி செய்து அதன் மூலம் அனைத்து வங்கித்துறை உறுதிப்பாட்டை

அடைவதற்கு ஏதுவாக, இப்பணிப்புரையின் நோக்கங்களுக்காக இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கம்பனி ஆளுமை செயல்முறைகள் நடைமுறைகள் முகாமைத்தவ கட்டமைப்பு ஆகக் கொள்ளப்பட வேண்டும்.

1(7) மத்திய வங்கியின் அடிப்படை மேற்பார்வை பொறுப்புகளில் உதவும் பொருட்டும், வங்கித்தொழில் முறையின் பாதுகாப்பு மற்றும் செயற்றிறன் என்பனவற்றை விருத்தி செய்யும் பொருட்டும், இப்பணிப்புரைகளில், 3ஆம் பணிப்புரையில் உள்ளடக்கப்பட்ட கம்பனி ஆளுகை விதிகள், 2ஆம் பணிப்புரையின் சில மூலக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.

**2. ஆதாரமாகக் கொள்ளப்பட்டு விருத்தி செய்யப்பட்ட கம்பனி ஆளுகையின் விதிகளுக்கு அடிப்படையாக அமைந்த கொள்கைகள் பின்வருமாறு:**

**பணிப்புரை 3இல் உள்ளடக்கப்பட்ட விதிகளின் நியாயத்தன்மையை விளங்கிக் கொள்வதற்காக, இவ்விரண்டாம் பணிப்புரையில் குறிப்பிடப்பட்ட கொள்கைகள் விளக்கம் அல்லது தெளிவுரை நோக்கங்களுக்காக மட்டும் உபயோகிக்கப்பட வேண்டும். எனவே, இப் பணிப்புரைகளின் கீழான கண்டிப்பான கடப்பாடானது பணிப்புரை 3இல் தரப்பட்டுள்ள விதிகள் சம்பந்தமானதாக மட்டுமே அமையும்.**

**2(1) கோட்பாடு: சபையின் பொறுப்புகள்**

2(1)(i) (அ) வங்கி நடவடிக்கைகள் சம்பந்தமான நிருவாகம், உ-ம்: வர்த்தகத்தை நடத்துதல், முன்னெச்சரிக்கையான இடர் நிருவாக நடைமுறைகளை பராமரித்தல், அத்துடன் (ஆ) வங்கியின் பாதுகாப்பு மற்றும் செயற்றிறன் என்பன தொடர்பான மொத்த பொறுப்புக்களையும் மற்றும் பொறுப்புக் கூறும் விதத்திலும் பணிப்பாளர் சபை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

2(1)(ii) இதன் முடிவாக சபை செய்ய வேண்டியவையாவன: (அ) வங்கி நடவடிக்கைகளுக்கான முகாமைத்துவ கட்டமைப்பைத் தீர்மானித்தல்; (ஆ) வங்கி செயற்பாட்டு முறையினை, சபையால் நியமிக்கப்பட்ட முதன்மை நிறைவேற்று அலுவலர் வழி நடத்தப்படும் பிரதான முகாமைத்துவ ஆளணிக்கு கையளித்தல்; (இ) அலுவல்களுக்கான கொள்கை வகுப்பு மற்றும் இடர் நிருவாகம் என்பனவற்றை ஏற்றுக் கொள்ளல்; அத்துடன் (ஈ) பிரதான முகாமைத்துவ ஆளணியினர் வினைத்திறனாற்றல் பங்கினை உறுதிப்படுத்தல். பிரதான முகாமைத்துவ ஆளணி என்பதன் கருத்தானது பன்னாட்டு கணக்கியல் நியமனங்களினால் குறிக்கப்படும் பிரதான நிறைவேற்று அதிகாரிகள் என்பதாகும்.

2(1)(iii) சபையின் மொத்த பொறுப்புக்கள் என்பது அன்றாட நடவடிக்கைகளை பரிசோதிக்கும் கடமைப்பாடு எனப் பொருள் கொள்ளல் ஆகாது. ஆனால் பிரதான முகாமைத்துவ ஆளணியானது சபையினால் வகுக்கப்பட்ட கொள்கைகளுக்கு அமைவாக வங்கியின் நடவடிக்கைகளை பாதுகாப்பாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் மேற்கொள்வதை மேற்பார்வை செய்யும் கடமைப்பாடு என விளங்கிக் கொள்ள வேண்டும்.

2(1)(iv) பணிப்பாளர்கள் வங்கியின் வியாபாரம் மற்றும் இடர்நிருவாகக் கட்டமைப்பினை விளங்கிக் கொள்வதுடன் வங்கியின் பண வைப்பாளர்கள், கடன் கொடுத்தோர், பங்கு தாரர்கள் மற்றும் உரித்தாளர்களின் நன்மை பொருட்டு தெளிவான தீர்மானங்களை எடுத்தல் வேண்டும். அத்துடன் வைப்பாளர்கள், கடனளித்தோர் என்போரது நலன்கள், கடமைப்பாடுகள் என்பனவற்றுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய அல்லது தவறான அபிப்பிராயத்தை உண்டாக்கக்கூடிய விதமாக வங்கி நடந்து கொள்ளாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

2(1)(v) சபையானது ஏற்றுக் கொள்ளப்பட்ட கம்பனி ஆளுகை ஒழுங்கு விதிகளுடன் இணங்கி நடக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளவேண்டும். ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகியவற்றின் எல்லா தேவைகளுக்கும் இணங்கி நடத்தலை உறுதிப்படுத்தல் வேண்டும். மேலும், வங்கித்தொழில், நிதியியல், பொருளியல், வியாபார முகாமைத்துவம், மனிதவள முகாமை அவர்கள் நீதி, சந்தைப்படுத்தல், தகவல் தொழில் நுட்பம் அல்லது வங்கித்தொழில் தொழிற்பாடுகளுக்கு தொடர்புடைய அல்லது இணையான ஏதாவதொரு துறைகளில் நடைமுறை அனுபவம் மிக்க தொழில்சார் நிபுணர்கள் உள்ளடக்கிய ஒரு செயற்றிறனுள்ள குழுவொன்று வங்கியில் தொழிற்பாடுகளை பொறுப்பேற்பதற்கும் மற்றும் அதன் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கும், வங்கியில் கிடைப்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.

2(1)(vi) பணிப்பாளர்கள் தங்களது கடமையினை சிரத்தையுடன் மேற்கொள்ளத் தவறும் போது ஏற்படக்கூடிய சிவில் மற்றும் குற்றவியல் பொறுப்புகள் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். முன் ஜாக்கிரதையுடனும் உரிய கவனத்துடனும் நடந்து கொள்ளல் பற்றியும் அவர்கள் அறிந்திருத்தல் வேண்டும். மேலும் அரசுடைமையான வங்கிகளின் பணிப்பாளர்கள், அவ் வங்கிகள் அரசுக்கு சொந்தமான தாபனங்கள் என்ற வகையில் எழக்கூடிய மேலதிக பொறுப்புகள் பற்றியும், அது தொடர்பாக பொது மக்களுக்கு பொறுப்புக் கூறக்கூடிய நிலை பற்றியும் தெரிந்திருத்தல் வேண்டும். எனவே, வங்கி நடவடிக்கைகளை அவதானத்துடன் நிருவகித்து சபையின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு பணிப்பாளர்கள் போதிய நேரத்தினையும் சக்தியையும் ஈடுபடுத்த வேண்டும்.

**2(2) கோட்பாடு: சபையின் உள்ளமைப்பு**

2(2)(i) பணிப்பாளர் சபையானது நிறைவேற்று பணிப்பாளர்களையும், நிறைவேற்று தரம் அல்லாத பணிப்பாளர்களையும் கொண்ட ஒரு ஆரோக்கியமான கலவையாக உருவாக்கப்பட வேண்டும். வலுவான சுதந்திர மூலகங்கள், தீர்மானம் எடுக்கும் நடைமுறையில் உள்ளடக்கப்படுவதற்கு ஏதுவாக சில நிருவாக தரமற்ற பணிப்பாளர்களும் சுதந்திரமானவர்களாக இருக்க வேண்டும்.

2(2)(ii) வங்கியினால் வேண்டப்படும் பொருத்தமானதும் விருப்பத்தக்கனவானதுமான தேவைகளுக்கு அமைவாக தேர்ச்சி அனுபவம் கலந்த வகையில் சபை அமைந்திருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

2(2)(iii) புதிய கண்டுபிடிப்புகள், கருவிகள், தொழில் நுட்பங்கள், ஆக்கங்கள், அமைப்பு முறைகளும் செயற்படுத்தலும் ஆகியனவை சீராக அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம் வங்கித்தொழில் துறை உலகளாவிய ரீதியில் பாரிய முன்னேற்றத்தை உண்டாக்குவதுடன் விரைவான மாறுதல்களுக்கும் உள்ளாகின்றது. எனவே (அ) இம் மாறுதல்களுக்கு ஈடுகொடுக்கக் கூடியவர்களான மற்றும் (ஆ) சபையின் தீர்மானம் எடுக்கும் நடைமுறைக்கு தொடர் பங்களிப்பை மற்றும் வழிகாட்டல்களை வழங்கக் கூடியவர்களுமான நபர்கள் பணிப்பாளர்களாக இருத்தல் அத்தியாவசியமானது.

2(2)(iv) சபைக்குள் புதிய எண்ணங்களின் படிப்படியான உள்ளீடு இருத்தல் வேண்டும். பணிப்பாளர்களிற்கிடையிலான உறவுகள் மற்றும் பணிப்பாளர்களுக்கும் பிரதான முகாமைத்துவ ஆளணிகளுக்கும் இடையிலான உறவுகள் என்பனவற்றிற்கு மிகக் கூடிய பரிச்சயம், அளவுக்கு அதிகமான செல்வாக்கு அல்லது கட்டாயப்படுத்தல் ஆகியன அனுமானிக்கக் கூடிய மட்டத்தில் இல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். இந்நிலையில் மிக நீண்ட கால உறவுகள், வங்கிப் பணிப்பாளரது கடமையை ஆற்ற தேவைப்படும் உயர்ந்த உணர்வு பூர்வமாக தகுதிகள், சுதந்திரம் மற்றும் குறிக்கோளை அடையும் தன்மை என்பனவற்றை சில வேளைகளில் பாதிக்கும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**2(3) கோட்பாடு: பணிப்பாளர்களின் பொருத்தம், தகுதி என்பனவற்றை மதிப்பிடுவதற்கான பிரமாணம்**

2(3)(i) சபையின் உள்ளமைப்பு சம்பந்தமான மேற்கூறிய பணிப்புரை 2(2)இன் கொள்கைகளுக்கு மேலதிகமாக, வங்கி பணிப்பாளர் பதவியை வகிப்பதற்கு, பொருத்தமான மற்றும் தகுதியான நபர்களாக இருப்பதுடன், பொருத்தம் மற்றும் தகுதியற்ற நபர்கள் பணிப்பாளர்களாகச் செயற்படக்கூடாது.

2(3)(ii) வங்கி அலுவல்களில் முன்யோசனையான முகாமைத்துவத்திற்கு அர்ப்பணிப்பு மற்றும் செயற்றினுள்ள பங்களிப்பு என்பனவற்றின் திடமான தேவை உண்டு. பணிப்பாளரது வயது முதிர்ச்சி காரணமாக, குறிப்பாக நாட்டின் பொதுவான ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓய்வு பெறும் வயதை மிகவும் கடந்த பணிப்பாளரின் வயது காரணமாக அர்ப்பணிப்பு மற்றும் செயற்றினுள்ள பங்களிப்பு என்பனவற்றின் ஆற்றல் குறைந்து செல்லக்கூடிய சாத்தியமுண்டு.

**2(4) கோட்பாடு: சபையால் ஒப்படைக்கப்பட்ட முகாமைத்துவ தொழிற்பாடுகள்**

2(4)(i) சபையின் தீர்மானத்திற்கென விசேடமாக ஒதுக்கப்பட்ட விவகாரங்கள் உள்ள மாதிரி விபரப்பட்டியல் ஒன்றை சபை கொண்டிருக்க வேண்டும். வங்கியின் சார்பாக பிரதான முகாமைத்துவ ஆளணியினால் முடிவுகள் எட்டப்படு முன்னதாக, சபையால் அனுமதி கொடுக்கப்படும் அலுவல்கள் பற்றி, பிரதான முகாமைத்துவ ஆளணிக்கு சபை தெளிவான பணிப்புரைகளைக் கொடுக்க வேண்டும்.

**2(5) கோட்பாடு: தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்**

2(5)(i) ஒவ்வொரு வங்கியிலும் நிருவாகத்தில் இரண்டு பிரதான அம்சங்கள் உள்ளன. அதாவது (அ) சபையின் முழுமையான ஆளுகை மற்றும் (ஆ) சபை அனுமதிக்கும் செயற்றிட்ட நோக்கங்கள், கம்பனி மதிப்புக்கள், முழுமையான இடர் கொள்கை, இடர் முகாமைத்துவ நடைமுறைகள் என்பனவற்றுக்கு அமைவான, முதன்மை நிறைவேற்று அலுவலரின் வங்கியின் வியாபாரத்தின் அன்றாட முகாமைத்துவம்.

2(5)(ii) அதிகார வலிமை தனி நபரிடம் குவிக்கப்படாமல், உயர்ந்த சம வலிமை மற்றும் அதிகாரம் என்பனவற்றை உறுதிப்படுத்தும் முகமாக, சபை மட்டத்திலும் மற்றும் முகாமைத்துவ அதிகார மட்டத்திலும் இப்பொறுப்புக்கள் தொடர்பான தெளிவான வேறுபாடுகள் இருக்க வேண்டும்.

2(5)(iii) சபையானது ஒரு தலைவரையும் முதன்மை நிறைவேற்று அலுவலரையும் நியமிக்க வேண்டும். தலைவருக்கும், முதன்மை நிறைவேற்று அலுவலருக்கும் உள்ள பொறுப்புகளின் வேறுபாடுகள் தெளிவாக உருவாக்கப்பட்டு எழுத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

**2(6) கோட்பாடு: சபை நியமித்த குழுக்கள்**

2(6)(i) வங்கி அலுவல்கள் மீதான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக, கணக்காய்வு, நியமனம், கொடுப்பனவு, ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் சபையால் தீர்மானிக்கப்படும் ஏனைய தலைப்புக்கள் தொடர்பாக சபையானது வெவ்வேறான குழுக்களை நியமிக்க வேண்டும்.

2(6)(ii) சபை குழுவினை நியமிக்கும் போது குறிப்பாக குழுவானது சபையின் சார்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரமுடையதா அல்லது சாதாரணமாக ஒரு குறிப்பிட்ட விடயத்தை பரிசோதித்து அதன் பரிந்துரைகளை சபைக்கு அறிக்கையிடும் அதிகாரம் உடையதா என நிர்ணயித்து அதன் அதிகாரத்தை நிர்ணயம் செய்ய வேண்டும்.

2(6)(iii) குறிப்பிட்ட விடயத்தில் ஓரளவு தேர்ச்சி பெற்றவரும் மற்றும் விரும்பத்தக்க விதத்தில் சுதந்திரமானவருமான நிருவாகத் தரத்தில் அல்லாதவருமான பணிப்பாளரால் ஒவ்வொரு குழுவுத் தலைமைப் பதவியும் ஏற்கப்பட வேண்டும். சபை குழுவானது நிருவாகத் தரமற்ற பணிப்பாளர்களை பெரும்பான்மையாக கொண்டிருக்கும் அதேவேளை குறைந்தது ஒரு சுதந்திரமான பணிப்பாளரை உள்ளடக்கியிருக்க வேண்டும். தேவையேற்படின் குழுவில் சேவை புரிவதற்கு வெளியிலிருந்து நிபுணர்கள்

அழைக்கப்பட அல்லது சேவைக்கு அமர்த்தப்படலாம். ஆலோசனைக்காகவும் மற்றும் விசேட பணிகளுக்காகவும், அழைப்பின் பேரில் வங்கி அலுவலர்கள் சபை குழுக்களில் பிரசன்னமாயிருக்கலாம்.

**2(7) கோட்பாடு: தொடர்பான தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்**

2(7)(i) "தொடர்புபட்ட தரப்பினர்" கொடுக்கல்வாங்கல்களில், வங்கியானது மற்ற வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதை விட "மிகச் சாதகமான வசதி" வழங்கும் விதத்திலான கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடாதிருப்பதை சபை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**2(8) கோட்பாடு: வெளிப்படுத்தல்கள்**

2(8)(i) வெளிப்படுத்துகையின் நோக்கமானது, குறித்த வங்கிகளின் சந்தை ஒழுங்கு முறையினை விருத்தி செய்ய உதவும். வங்கி அலுவல்கள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான தகவல்களின் வெளிப்படைத் தன்மை ஆகும்.

2(8)(ii) சந்தை வெளிப்படுத்துகை என்பது பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கியில் (இது வங்கி மேற்பார்வை தொடர்பாக பன்னாட்டு நியதிகளை அறிமுகப்படுத்தும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும்.) அமைந்துள்ள வங்கி மேற்பார்வை மீதான பாசல் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட பாசல் II என அறியப்படும் இடர்நேர்வு முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட மூலதன நியதியின் மூன்றாவது தூணின் (தூண் iii) மையமானதால் வெளிப்படுத்துகையின் விரிவானது வங்கியின் அளவு, உரிமை கட்டமைப்பு, முறைமை முக்கியத்துவம், இடர்நேர்வு தோற்றம் மற்றும் வியாபார மாதிரி என்பனவற்றிற்கு ஈடாக அமைய வேண்டும். இதன் அடிப்படையில் வங்கிகள் தொடர்பான தகவல்கள் சம்பந்தமான நிறைவான, கால அவகாசத்துடனான பொது வெளிப்படுத்துகையானது சந்தை ஒருங்கிணை மேம்படுத்தலுடன் சிறந்த, கூடிய திறனாற்றல் மிக்க கம்பனி ஆளுகைக்கு இட்டுச் செல்லும் என அறியப்பட வேண்டும்.

2(8)(iii) வங்கிகளின் வெளிப்படுத்தல்களானது, மூலதனப் போதுமை, முக்கிய நடவடிக்கை குறிகாட்டிகள், வர்த்தக செறிவுகள், தொடர்பான தரப்பினர்களுடனான கொடுக்கல்வாங்கல்கள், கம்பனி ஆளுகை அறிக்கைகள், நிதி அறிக்கைகள் என்பனவற்றை பொதுவாக உள்ளடக்குவதுடன் கணக்கியல் தரம், ஒழுங்கமைப்பு தேவைகள் மற்றும் சுயவிருப்பின் அடிப்படையில் வெளிப்படுத்தும் எத்தகவல்களுக்கும் ஏற்ற வகையில் அமைந்திருக்க வேண்டும்.

**3. கம்பனி ஆளுகையில் கீழ்வரும் விதிகளுக்கு அனைத்து உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் இணங்கி நடப்பதுடன், அத்தகைய இணக்கம், இதன் கீழ் உள்ள பணிப்புரை 3(9)(i)இல் குறிப்பிட்டவாறு அமையும்.**

**3(1) சபையின் பொறுப்புக்கள்**

3(1)(i) கீழ்வருவனவற்றை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்தல் மூலம் சபையானது வங்கியின் பாதுகாப்பையும் செயற்றினையும் பலப்படுத்த வேண்டும்.

(அ) வங்கியின் முக்கிய நோக்கங்கள், கம்பனி தகுதிகள் என்பவற்றுக்கு அனுமதியளித்தல் மற்றும் மேற்பார்வை செய்தலுடன் இவை வங்கியின் அனைத்து பகுதிகளுக்கும் அறிவிக்கப்படுதலை உறுதி செய்தல்;

(ஆ) அளவிடக்கூடிய நோக்கங்களுடனான இடர்நேர்வு கொள்கை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் கட்டமைப்புகள் உள்ளடங்கலான குறைந்தது அடுத்த மூன்று வருடங்களுக்கான வியாபார நோக்கத்தினை வங்கியின் முழுமையான வர்த்தக உபாயத்தினை அனுமதித்தல்;

(இ) முதன்மையான இடர்நேர்வுகளை இனங்காணுதல் மற்றும் இடர்நேர்வுகளை அறிவார்ந்த விதத்தில் முகாமைத்துவம் செய்ய பொருத்தமான முறைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்தல்;

(ஈ) வைப்பாளர்கள், கடன் கொடுத்தோர், பங்குதாரர்கள், கடன்பட்டோர் என்போரை உள்ளடக்கிய அனைத்து பங்களிப்போருடனான தகவல் பரிமாற்றுக் கொள்கையை நடைமுறைப்படுத்தலை அனுமதியளித்தல்;

(உ) வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைகைள் என்பனவற்றின் போதுமான தன்மையையும் நம்பிக்கை தன்மையையும் மீளாய்வு செய்தல்;

(ஊ) (i) கொள்கையில் குறிப்பிடத்தக்க செல்வாக்கை செலுத்தக் கூடிய, (ii) நடவடிக்கைகள் வழிப்படுத்தக் கூடிய, (iii) வர்த்தக நடைமுறைகள், இடர்நேர்வு முகாமைத்துவம் என்பனவற்றில் கட்டுப்பாடு செலுத்தக்கூடிய, நிலையில் உள்ள, சர்வதேச கணக்கியல் நியதிகளில் விபரிக்கப்பட்ட பிரதான முகாமைத்துவ ஆளணியை இனங் காணுதலும், பதவி நிலை அளித்தலும்;

(எ) சபையின் பணிப்பாளர்கள் தங்களுக்கும், பிரதான முகாமைத்துவ ஆளணிக்குமான அதிகாரப் பரப்பினையும் முக்கிய பொறுப்புகளையும் விபரித்தல்;

(ஏ) சபையின் கொள்கைக்கு அமைவான, பிரதான முகாமைத்துவ ஆளணியினால் வங்கி நடவடிக்கைகள் சம்பந்தமான பொருத்தமான மேற்பார்வை இருத்தலை உறுதிப்படுத்தல்;

(ஐ) (i) சபை பணிப்பாளர்களினதும் பிரதான முகாமைத்துவ ஆளணியினதும் தெரிவு, நியமனம் தேர்தல், (ii) நலன்களின் முரண்பாடுகள் சம்பந்தமான முகாமைத்துவம், (iii) பலவீனங்களைத் தீர்மானித்தல், தேவைப்படுமிடத்து மாற்றங்களை நடைமுறைப்படுத்தல் என்பன உள்ளடங்கலாக காலத்துக்குக் காலம் சபை பணிப்பாளர்களது சொந்த ஆளுமை பழக்கங்களை மதிப்பிடுதல்;

(ஒ) பிரதான முகாமைத்துவ ஆளணி தொடர்பான பொருத்தமான அடுத்த வரிசையினர் பற்றி திட்டம் வங்கியிடம் இருப்பதை உறுதிப்படுத்தல்;

(ஓ) கொள்கைகளை மீளாய்வு செய்வதற்காக, தேவை அடிப்படையில் பிரதான முகாமைத்துவ ஆளணியுடனான தொடர்ச்சியான சந்திப்புகள், தகவல் பரிமாற்ற தொடர்புகளை அமைத்தல், கம்பனி நோக்கங்களை நோக்கிய முன்னேற்றத்தினை பரிசீலித்தல்;

(ஔ) ஒழுங்கமைப்பு சூழ்நிலையை விளங்கிக் கொள்வதுடன், வங்கி ஒழுங்கமைப்பாளருடன் திறனாற்றல்மிக்க உறவினைப் பேணுவதை உறுதிப்படுத்தல்;

(க) வெளிக் கணக்காய்வாளரின் சேவையை பெற்றுக் கொள்வதிலும், மேற்பார்வை செய்தலிலும் உரிய அவதானத்தை பிரயோகித்தல்.

3(1)(ii) இப் பணிப்புரைகளின், 3(5)ஆம் பணிப்புரைக்கு இசைவாக சபை வங்கி தலைவரையும் முதன்மை நிறைவேற்று அலுவலரையும் நியமிப்பதுடன் தலைவரதும் முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் கடமைகளையும் பொறுப்புகளையும் வரையறுத்து அனுமதித்தல் வேண்டும்.

3(1)(iii) சபை தொடர்ச்சியாக சந்திப்பதுடன் சபை கூட்டங்கள் பொதுவாக ஒரு மாத இடைவெளியில், வருடத்திற்கு குறைந்தது 12 தடவைகள் நடத்தப்பட வேண்டும். அத்தகைய தொடர் சபை கூட்டங்கள், பிரசன்னமாக உரித்துள்ள பணிப்பாளர்களின் பெரும்பான்மையினரின் நேர்முகமாக பங்குபற்றுதலை கொண்டிருக்க வேண்டும். எழுத்து மூலமான யோசனைகள்/ பத்திரிகைகள் சுற்றறிக்கை செய்யப்படுவதன் மூலமாக சபையின் ஒப்புதலைப் பெறுதலை கூடுமானவரை தவிர்க்க வேண்டும்.

3(1)(iv) தொடர் கூட்டங்களின் கூட்ட நிகழ்ச்சி நிரலில் அனைத்து பணிப்பாளர்களில் விடயங்களையும் மற்றும் யோசனைகளையும், அத்தகைய விடயங்களும் யோசனைகளும் வங்கியின் வர்த்தக முன்னேற்றம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் என்பன சம்பந்தமானதாக இருக்கும் பட்சத்தில், உள்ளடக்க ஏதுவாக தக்க ஒழுங்கு முறைகள் இருப்பதை சபை உறுதிப்படுத்த வேண்டும்.

3(1)(v) வழமையான சபை கூட்டங்களுக்கு அனைத்து பணிப்பாளர்களும் பிரசன்னமாகவிருக்கும் சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக, குறைந்தது 7 நாட்கள் முன்னறிவித்தல் கொடுப்பதை சபை நடைமுறைகள் உறுதிப்படுத்த வேண்டும். மற்றைய அனைத்து சபை கூட்டங்களுக்கும் நியாயமான முன்னறிவித்தல் கொடுக்கப்படலாம்.

3(1)(vi) ஒரு பணிப்பாளர் மிக அண்மையிலான கடந்த 12 மாத காலத்தில் மூன்றில் இரண்டு பங்கு கூட்டங்களில் பிரசன்னமாக இல்லாது இருந்தால் அல்லது மிக அண்மையான மூன்று தொடர்ச்சியான கூட்டங்களில் பிரசன்னமாக இல்லாது இருந்தால் அவரது பணிப்பாளர் பதவியிலிருந்து நிறுத்தப்படுவார் என்பதை சபை ஒழுங்கு விதிகள் உறுதி செய்யவேண்டும். எனினும், பதில் பணிப்பாளர் மூலமாக, பணிப்பாளர் கூட்டங்களில் பங்குபற்றல் வருகை என ஏற்றுக் கொள்ளப்படும்.

3(1)(vii) 1988ஆம் ஆண்டின் 30ஆவது வங்கித்தொழில் சட்டப்பிரிவு 76(எச்) உடன் சேர்த்து 43இன் விதிகளை திருப்திப்படுத்தும் கம்பனி செயலாளர் ஒருவரை சபை நியமிக்க வேண்டும். அவரது பிரதான பொறுப்புக்களானது சபையினதும் பங்குதாரர்களின் கூட்டங்களினதும் செயலாளர் சேவையை கையாளுவதுடன் சட்டத்திலும் மற்றும் ஒழுங்கு விதிகளிலும் குறிப்பிட்ட ஏனைய பணிகளை நிறைவேற்றுவதாகும்.

3(1)(viii) சபை நடைமுறைகளை மற்றும் ஏற்புடைய சட்ட ஒழுங்கு விதிகளை ஏற்று வழி நடத்தலை உறுதிப்படுத்தும் பொருட்டு அனைத்து பணிப்பாளர்களும் கம்பனி செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவைகள் என்பனவற்றைப் பெறும் உரித்துடையவர்களாவர்.

3(1)(ix) கம்பனி செயலாளர், சபை, கூட்டங்களின் குறிப்புக்களை பராமரிப்பதுடன், அக்குறிப்புக்களானது எந்தப் பணிப்பாளருடைய நியாயமான முன்னறிவித்தலின் அடிப்படையில் எந்தவொரு நியாயமான காலத்திற்குள் பரிசோதனைக்காகத் திறந்திருக்கும்.

3(1)(x) சபை அதன் கடமைகளைச் செய்யும் போது உரிய கவனத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் நடந்து கொண்டதா என குறிப்புகளிலிருந்து பெறக் கூடிய விதமாக தேவையான விபரங்களுடன், சபை கூட்டங்களின் குறிப்புகள் பதியப்பட வேண்டும். மேலும் ஒழுங்கமைத்தல், மற்றும் மேற்பார்வை செய்யும் அதிகாரிகளால் சபைக் கூட்டங்களின் தீர்மானங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் ஆழத்தை மதிப்பிடுவதற்கு அக்குறிப்புகள் அத்தாட்சிகளாக பயன்படும். எனவே சபை கூட்டத்தின் குறிப்புகள், தெளிவாகவும் பின்வருவனவற்றை உள்ளடக்குவனவாகவும் அமைய வேண்டும். (அ) சபை அதன் தீர்மானம் எடுத்தலில் உபயோகப்படுத்தப்பட்ட தரவுகள், தகவல்களின் சுருக்கம்; (ஆ) சபையால் கருத்தில் கொள்ளப்பட்ட விடயங்கள் (இ) சபை அதன் கடமைகளை உரிய கவனத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் எடுத்ததென விளக்கும். உண்மையை அறிதலுக்கான கலந்துரையாடல்களும், ஒத்த எதிர்மறையான தொடர்புபட்ட விடயங்களும் (ஈ) சபையின் திட்டங்கள் கொள்கைகள் என்பனவற்றுக்குக்

கீழ்ப்படிதலையும், தொடர்புபட்ட சட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய ஒழுகுவதையும் குறிக்கும் தொடர்புபட்ட நிருவாக அதிகாரிகளின் ஒப்புதல்களும் சான்றிதழ்களும் (உ) வங்கி எதிர்நோக்கும் இடர்நேர்வு பற்றிய சபையின் அறிவும், விளங்கிக் கொள்ளும் தன்மையும், மேற்கொள்ளும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் பற்றிய பொதுநோக்கு (ஊ) சபையின் முடிவுகளும் தீர்மானங்களும்.

3(1)(xi) நியாயமான வேண்டுகோளின் பேரில் பணிப்பாளர்களுக்கு உதவும் முகமாக, பொருத்தமான சந்தர்ப்பங்களில், சுதந்திரமான நிபுணர்களின் ஆலோசனையை வங்கியின் செலவில் பெறுவதற்காக சபை ஏற்றுக் கொண்ட நடைமுறை இருத்தல் வேண்டும். தொடர்புபட்ட பணிப்பாளர்களுக்கு அவர்களது வங்கி கடமைகளை ஆற்றுவதற்கு உதவும் முகமாக, பணிப்பாளர்களுக்கு தனிப்பட்ட, சுதந்திர, நிபுணத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொடுப்பதற்கு வங்கி தீர்மானம் எடுக்க வேண்டும்.

3(1)(xii) பணிப்பாளர்கள் அவர்களது நடவடிக்கைகளில் அல்லது ஈடுபாடுகளில் ஏனைய தாபனங்களுடன் அல்லது தொடர்புபட்ட பகுதியினருடன் நலன்களின் முரண்பாடுகளை அல்லது நலன்களின் முரண்பாடுகள் தோற்றம் பெறுதலைத் தவிர்த்தல் வேண்டும். சபையினால் கவனத்தில் எடுக்கப்படக்கூடிய ஒரு விடயத்தில் ஒரு பணிப்பாளரின் நலன்கள் முரண்பாட்டை கொண்டிருப்பதானது குறிப்பிடத்தக்க அளவிலானது எனச் சபை தீர்மானித்தல், அந்நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க ஈடுபாடு இல்லாத சுதந்திரமான நிறைவேற்று தரத்தில் அல்லாத பணிப்பாளர்கள் (இப் பணிப்புரைகளின், 3(2)(iv)ஆம் பணிப்புரையை பார்க்க பிரசன்னமாக உள்ள சபை கூட்டத்தில் அவ்விடயம் பரிசீலிக்கப்பட வேண்டும். மேலும், ஒரு பணிப்பாளர் அவர்/ அவள், அல்லது அவர்/ அவளது நெருங்கிய உறவினர்கள் தொடர்புபட்ட, அல்லது அவர் ஒரு பணிப்பாளராக இருக்கும் தாபனம் தொடர்புபட்ட எந்தவொரு சபை தீர்மானித்திலும் வாக்களிப்பதிலிருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் குறித்த விடயம் சம்பந்தமான சபை கூட்ட நடவடிக்கை அட்டவணையில் அவர்/அவள் கோரம் சம்பந்தமாக கணக்கெடுக்கப்படக் கூடாது.

3(1)(xiii) வங்கியின் நோக்கு, கட்டுப்பாடு என்பன அதன் உறுதியான அதிகாரத்தின் கீழ் இருப்பதை உறுதிப்படுத்து, சபையானது, தீர்மானம் எடுப்பதற்காக விசேடமாக ஒதுக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமான மாதிரி அட்டவணை ஒன்றை கொண்டிருக்க வேண்டும்.

3(1)(xiv) வங்கி தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு முடியாமல் போனால் அல்லது முடியாமல் போகக்கூடும் என்று கருதினால், அல்லது முறிவடைந்து போனால் அல்லது வைப்பாளர்களுக்கும் கடன் கொடுத்தோருக்கும் கொடுப்பனவுகளை இடைநிறுத்தம் செய்யக்கூடும் எனக் கண்டால் பணிப்பாளர் சபையானது எத்தீர்மானத்தையும் நடவடிக்கையையும் எடுக்க முன்னர் உடனடியாக வங்கி மேற்பார்வை திணைக்களப் பணிப்பாளருக்கு வங்கியின் நிலை பற்றி அறியத் தரவேண்டும்.

3(1)(xv) மூலதனப் போதுமை விகிதம் மற்றும் அவதான அடிப்படைகளின்படி நாணயச்சபைக்குத் தேவையான மட்டத்தில் மூலதனத் தன்மை உடையதாக, வங்கி இருப்பதை சபை உறுதிப்படுத்த வேண்டும்.

3(1)(xvi) இப்பணிப்புரைகளில், பணிப்புரை 3 இற்குக் கீழ்ப்படிந்து ஒழுகும் வருடாந்த கம்பனி ஆளுமை பற்றிய அறிக்கையை சபை வங்கி ஆண்டு அறிக்கையில் பிரசுரிக்க வேண்டும்.

3(1)(xvii) ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பணிப்பாளராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுய மதிப்பீட்டுத் திட்டம் ஒன்றை சபை நடைமுறைப்படுத்தலும், அத்தகைய மதிப்பீடு சம்பந்தமான அறிக்கைகளைப் பேணுதலும் வேண்டும்.

**3(2) சபையின் உள்ளமைப்பு**

3(2)(i) சபை பணிப்பாளர்களது எண்ணிக்கை 7இற்கு குறையாமலும் 13இற்கு மேற்படாததாகவும் இல்லாமல் இருத்தல் வேண்டும்.

3(2)(ii) (அ) பிரதான நிறைவேற்று அதிகாரப் பொறுப்பை வகிக்கும் பணிப்பாளர் நீங்கலாக, ஒரு பணிப்பாளரது மொத்த சேவைக்காலம் 9 வருடத்திற்கு மேற்படலாகாது. அத்தகைய பதவிக் காலமானது 01.01.2008 வரையுள்ள அப்பணிப்பாளரது மொத்த பதவிக் காலத்தை உள்ளடக்குவதாக இருக்கும்.

(ஆ) இவ்விடயத்தில், கீழ்வரும் மாற்று விதி முறைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

அ) ஒரு பணிப்பாளர் மட்டும் 01.01.2008இல் சபையில் 9 வருடத்திற்கு மேற்பட்ட காலம் பதவி வகிக்கும் பட்சத்தில் அவர்/ அவள் 31.12.2008இல் பதவி நீங்கியவராகக் கொள்ளப்படுவார்.

ஆ) இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட பணிப்பாளர்கள் சபையில் 9 வருடத்துக்கு மேற்பட்ட காலம் பதவி வகிக்கும் பட்சத்தில், கீழ்வரும் விதிகள் நடைமுறைப்படுத்தப்படும்.

I. அத்தகைய பணிப்பாளர்களில் சேவை காலம் 9 வருடத்திற்கு மேற்படும் போது ஆகக் கூடிய சேவைக் காலத்தை உடைய பணிப்பாளர் 31.12.2008இல் பதவி நீங்கியவராகக் கொள்ளப்படுவார்.

II. அதன் பின்பு, அடுத்த வருட இறுதியில், 01.01.2008இல் 9 வருடத்துக்கு மேற்பட்ட சேவைக்காலம் உடைய எல்லாப் பணிப்பாளர்களும் பதவி இழக்கும் வரை, மிகுதியான பணிப்பாளர்கள் (பணிப்பாளராக ஆகக் கூடிய சேவைக்காலத்திலிருந்து ஆகக் குறைந்த சேவைக்காலம் என்ற அடிப்படையில்) தொடர்ந்து, குறைந்தது ஒரு வருடத்துக்கு ஒரு பணிப்பாளராவது பதவியிழந்தவராகக் கொள்ளப்படுவர். அத்தோடு 01.01.2008இல் 9 வருட காலத்துக்கு மேற்பட்ட சேவை செய்தல் வங்கியின் அனைத்துப் பணிப்பாளர்களும் 31.12.2011இல் பதவி இழந்தவர்களாகக் கொள்ளப்பட வேண்டும்.

(இ) பணிப்புரை 3(2)(ii)(ஆ)(ஆ) இன் கீழ் குறிப்பிட்ட பணிப்பாளர்கள் பதவி நீங்கிய பின்னர், 9 வருட சேவைக் காலத்தை 01.01.2008 இற்கும் 31.12.2010 இற்கும் இடைப்பட்ட காலத்தில் பூர்த்தி செய்யும் எப் பணிப்பாளராவது இருக்கும் பட்சத்தில் அத்தகைய பணிப்பாளர்களும் (பணிப்பாளராக ஆகக் கூடிய சேவைக் காலத்திலிருந்து ஆகக் குறைந்த சேவைக் காலம் என்ற அடிப்படையில்) தொடரான முறையில் ஒரு வருடத்துக்கு குறைந்தது ஒரு பணிப்பாளர் என்ற வகையில் பதவி இழந்தவராகக் கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும் 31.12.2011இல், இத்துணைப் பணிப்புரை (இ)இல் உள்ளடக்கப்பட்ட அனைத்து பணிப்பாளர்களும், பதவி நீங்கியவர்களாகக் கொள்ளப்பட வேண்டும்.

3(2)(iii) ஒரு வங்கி அலுவலகர் சபை பணிப்பாளராக (இதன் பின்னர் நிறைவேற்றுப் பணிப்பாளர் எனக் குறிக்கப்பெறும்) நியமனம் செய்யப்பட்ட, பணிப்பாளர் எனக் குறிக்கப்பெறும்) நியமனம் செய்யப்பட, தேர்ந்தெடுக்கப்பட, நியமிக்கப்படக்கூடும். அத்தகைய நிறைவேற்றுப் பணிப்பாளர் தொகை சபை பணிப்பாளர்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேற்படாத வகையில் அமையும். அவ்வாறான பட்சத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவர் வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக இருக்க வேண்டும்.

3(2)(iv) சுதந்திரமான நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்களாக குறைந்தது மூன்று பேரை அல்லது மொத்த பணிப்பாளர்களில் மூன்று ஒரு பங்கினரை எது கூடியதோ அத்தொகையை சபை கொண்டிருக்கும். இத்துணைப் பணிப்புரை 01.01.2010 முதல் நடைமுறைக்கு ஏற்புடையதாகும்.

ஒரு நிறைவேற்று தரத்திலில்லாத பணிப்பாளர் சுதந்திரமானவராகக் கொள்ளப்படக்கூடாது. எவ்வாறெனின் அவர்/ அவள்

(அ) வங்கியின் 1% பங்குடமைக்கு மேல் நேரடியாகவோ மறைமுகமாகவோ கொண்டிருந்தால்;

(ஆ) வங்கியின் சீராக்கப்பட்ட மூலதனத்தில் 10% க்கு மேற்பட்டதாக இப்பணிப்புரை 3(7)இல் குறிப்பிட்டவாறாக வங்கியுடன் ஏதாவது ஒரு வர்த்தக நடவடிக்கையை தற்போது அல்லது பணிப்பாளர் நியமிக்கப்பட முன்னரான கடந்த இரு வருட காலத்துக்குள் மேற்கொண்டிருந்தால்;

(இ) பணிப்பாளராக நியமிக்கப்பட முன்னரான கடந்த இரு வருட காலத்துக்குள் வங்கியில் பணியாற்றியிருந்தால்;

(ஈ) வங்கியின் அல்லது பிறிதொரு வங்கியின் பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அதிகாரி, முக்கிய முகாமைத்துவ அதிகார உறுப்பினர், வெளிப்படையான பங்குதாரர் ஆகிய எவருடையதான நெருங்கிய உறவினராக இருந்தால், இந்நோக்கத்துக்காக நெருங்கிய உறவினர் என்பது கணவன் அல்லது மனைவி அல்லது அவரது நிதியில் தங்கியிருக்கும் பிள்ளை என்பதாகும்.

(உ) ஒரு கம்பனி வியாபார நிறுவனத்தின் பணியாளர், பணிப்பாளர் அல்லது வெளிப்படையான பங்குதாராக இருத்தல்:

I. அது பணிப்புரை 3(7)இல் குறிப்பிட்டவாறு வங்கியின் சீராக்கப்பட்ட மூலதனத்தில் 10% க்கு மேற்பட்டதாக, வங்கியுடன் தற்போது ஒரு நடவடிக்கையினைக் கொண்டிருத்தல்;

II அதில் ஏதாவது ஏனைய பணிப்பாளர்கள் பணியாற்றினால் அல்லது பணிப்பாளர்களாக வெளிப்படையான பங்குதாரர்களாக இருந்தால்;

III அதில் பணிப்புரை 3(7)இல் குறிப்பிட்டவாறு வங்கியின் சீராக்கப்பட்ட மூலதனத்தில் 10% க்கு மேற்பட்டதாக வங்கியின் ஏதாவது ஏனைய பணிப்பாளர்கள், நடவடிக்கையொன்றினை மேற்கொண்டிருந்தால்;

3(2)(v) சுதந்திரமான பணிப்பாளருக்குப் பதிலாக மாற்றுப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும் பட்சத்தில், அவ்வாறு நியமிக்கப்பட்டவர் சுதந்திரமான பணிப்பாளருக்கு பொருந்தக்கூடிய அடிப்படைகளைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

3(2)(vi) நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்கள் நேர்மையான பின்னணி உடையவராக இருப்பதுடன், வழிமுறைகள், செயற்பாடுகள், வளங்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் சுதந்திரமான தீர்ப்புகளை அளிக்கக்கூடிய தேவையான தேர்ச்சி, அனுபவம் உடையவராக இருக்க வேண்டும்.

3(2)(vii) பிரசன்னமான பணிப்பாளர்களில் அரைவாசிப் பேர் நிறைவேற்று அதிகார தரத்தில் அல்லாத பணிப்பாளர்களாக இல்லாதவிடத்து, கூட்டத்திற்கு தேவையான குறைந்தளவு (கோரம்) பணிப்பாளர்கள் பிரசன்னமாகி இருந்தாலும், கூட்டம் முறையாகக் கூட்டப்பட்டதாக கொள்ளப்படலாகாது. இத் துணைப் பணிப்புரை 01.01.2010 முதல் ஏற்புடையதாகும்.

3(2)(viii) வங்கி பணிப்பாளர்களின் பெயர்களை வெளிப்படுத்தும் அனைத்து கம்பனி தகவல் தொடர்புகளிலும் சுதந்திரமான நிறைவேற்றுத் தரத்திலல்லாது பணிப்பாளர்கள் வெளிப்படையான அடையாளம் காட்டப்பட வேண்டும். தனது வருடாந்த கம்பனி ஆளுமை அறிக்கையில் வங்கி தலைவர், நிருவாகப் பணிப்பாளர், நிருவாகத் தரமற்ற பணிப்பாளர், சுதந்திரமான நிருவாகத் தரமற்ற பணிப்பாளர் ஆகியோரது பெயர்கள் உள்ளடங்கலாக, பணிப்பாளர் வர்க்கப்படியான சபை கட்டமைப்பை, வங்கி வெளிப்படுத்த வேண்டும்.

3(2)(ix) சபையின் புதிய பணிப்பாளர்கள் நியமனங்களில் கவனத்தில் கொள்ளப்பட்ட, வெளிப்படையான முன்மாதிரியான நடைமுறை இருக்க வேண்டும். சபையின் முறையான தொடர்ந்து வரும் நியமனங்கள் சம்பந்தமாக நடைமுறைகள் இருக்க வேண்டும்.

3(2)(x) தற்காலிக வெற்றிடம் ஒன்றை நிரப்ப நியமிக்கப்பட்ட அனைத்து பணிப்பாளர்களும் அவர்களது நியமனங்களின் பின்னர், முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் தேர்தலுக்கு உட்படக்கூடியவர்களாகும்.

3(2)(xi) ஒரு பணிப்பாளர் பதவியிலிருந்து இராஜினமா செய்தால் அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்டால், சபையானது (அ) பணிப்பாளரின் இராஜினாமா, பதவி நீக்கம், இராஜினாமா அல்லது பதவி நீக்கப்பட்டமைக்கான காரணங்களுடன், தொடர்புபட்ட பணிப்பாளருக்கு வங்கியுடனான முரண்பாடு ஏதும் இருப்பின் அது உள்ளடங்கலாக மற்றும் அதனுடன் மட்டும் மட்டுப்படாத தகவல்களை அறிவிப்பதுடன், (ஆ) பங்குதாரர்களின் அவதானத்திற்கு கொண்டு வரப்பட வேண்டிய ஏதும் விடயங்கள் உள்ளனவா, இல்லையா என்று அறிக்கை ஒன்றையும் வெளியிடவேண்டும்.

**3(3) பணிப்பாளர்களின் பொருத்தம், தகுதி என்பவற்றை மதிப்பிடுவதற்கான பிரமாணம்**

வங்கி சபை பணிப்பாளராக பணியாற்றும், பணியாற்ற விரும்பும் நபரின் பொருத்தம் நன்னடத்தை என்பனவற்றை தீர்மானிக்க 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பிரிவு 76 (எச்) உடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 42இன் விதிகளுக்கு மேலதிகமாக கீழ் குறிக்கப்பட்ட பிரமாணங்கள் பிரயோகிக்கப்படும். இங்கு குறிப்பிடப்படும் ஏதாவது ஒரு பிரமாணத்துக்கு இணங்கி ஒழுகாமை, ஒரு நபர் பணியாளராக நியமனம் செய்யப்பட, தேர்ந்தெடுக்கப்பட, நியமிக்கப்படத் தகுதியற்றவர், அல்லது பணிப்பாளராகக் தொடர்வதற்குத் தகுதியற்றவராக்கும்.

3(3)(i) பணிப்பாளராக சேவையாற்றும் நபர் ஒருவர் 70 வயதுக்கு மேற்படலாகாது.

(அ) வங்கியில் தற்போது சேவையிலுள்ள பணிப்பாளர் 01.01.2008இல் 70 வயதுக்கு மேற்பட்டவராயிருப்பின், பணிப்புரை 32(ii) க்கு அமைவாக, கீழ்வரும் மாற்று ஏற்பாடுகள் பொருந்தும்.

அ) ஒரு பணிப்பாளர் 01.01.2008இல் 75 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால் அத்தகைய பணிப்பாளர் 31.12.2008 க்கு மேற்படாத காலம் வரை தொடர்ந்தும் பணிப்பாளராகச் சேவையாற்றலாம். அவர் 31.12.2008இல் பதவியில் இருந்து நீங்கியவராகக் கொள்ளப்படுவார்.

ஆ) ஒரு பணிப்பாளர் 01.01.2008இல் வயது 70 க்கும் 75 க்கும் இடைப்பட்டவராக இருந்தால் அத்தகைய பணிப்பாளர் 31.12.2009 க்கு மேற்படாத காலம் வரை தொடர்ந்து பணிப்பாளராகச் சேவையாற்றலாம். அவர் 31.12.2009இல் பதவியிலிருந்து நீங்கியவராகக் கொள்ளப்படுவார்.

(ஆ) தற்போது சேவையிலிருக்கும் பணிப்பாளர் 01.01.2008 முதல் 31.12.2009 வரையிலான காலப்பகுதியில் 70 வயதை அடைவாராயின் அத்தகைய பணிப்பாளர், பணிப்புரை 3(2)(ii) க்கு அமைவாக 31.12.2010 க்கு மேற்படாத காலம் வரை பணிப்பாளராகத் தொடர்ந்தும் சேவையாற்றலாம். அவர் 31.12.2010இல் பதவியிலிருந்து நீங்கியவராகக் கொள்ளப்படுவார்.

3(3)(ii) ஒருவர் வங்கியின் துணைக் கம்பனிகள் சகோதர கம்பனிகள் உள்ளடங்கலாக 20 க்கும் மேற்பட்ட கம்பனிகள்/ சபைகள்/ தாபனங்களில் பணிப்பாளர்களாகப் பதவி வகிக்கக்கூடாது. அத்தகைய, 1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு, கணக்காய்வு நியமங்கள் சட்ட விதிகளின்படி விசேடமாகக் குறிப்பிடப்பட்ட வியாபார சபைகளாக வர்க்கப்படுத்தப்பட்ட 10 கம்பனிகளுக்கு மேற்படாதவாறாக இருக்கவேண்டும்.

**3(4) சபையினால் ஒப்படைக்கப்பட்ட முகாமைத்துவ தொழிற்பாடுகள்**

3(4)(i) பணிப்பாளர்கள் நடைமுறைகளிலுள்ள ஒப்படைக்கப்பட்ட ஒழுங்குகளை கவனமாக ஆராய்ந்து தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

3(4)(ii) அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் சபையின் இயலாற்றலுக்கு முட்டுக்கட்டையாகவோ அல்லது அதனைக் குறைப்பதாகவோ பொதுவாக அதன் தொழிற்பாடுகளைப் பாதிக்கின்ற அளவிற்கு சபையானது சபைக் குழுவிற்கோ, முதன்மை நிறைவேற்று அலுவலருக்கோ, நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கோ அல்லது முதன்மை முகாமைத்துவ ஆளணியினருக்கோ எந்த ஒரு விடயத்தையும் ஒப்படைக்கக்கூடாது.

3(4)(iii) வங்கியின் தேவைப்பாடுகளுடன் தொடர்புடைய விதத்தில் அவை இருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக, காலாந்தர அடிப்படையில் சபை ஒப்படைப்பு செயற்பாடுகளை மீளாய்வு செய்தல் வேண்டும்.

**3(5) தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்**

3(5)(i) தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் பணி வெவ்வேறாக இருக்க வேண்டியதுடன் தனிப்பட்ட ஒரே ஆளினால் செயற்படுத்தப்படவும் கூடாது.

3(5)(ii) தலைவர் நிறைவேற்று அல்லா பணிப்பாளராகவும் அதேபோன்று பெரும்பாலும் சுதந்திரமானதொரு பணிப்பாளராகவும் இருத்தல் வேண்டும். தலைவர் சுதந்திரமான பணிப்பாளராக இல்லாதவிடத்து, பெருமளவு சுதந்திரமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக சபையானது சுதந்திரமான பணிப்பாளர் ஒருவரை மூத்த பணிப்பாளராக பொருத்தமான காலமொன்றிற்கு நியமிக்கலாம். மூத்த பணிப்பாளரின் பதவி வங்கியின் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

3(5)(iii) சபையானது அதன் ஆண்டறிக்கையின் மிக முக்கியமானதொரு பகுதியாக இருக்கக்கூடிய கம்பனி ஆளுகை அறிக்கையில், தலைவரினதும் முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் தனித்தன்மையினையும் தலைவருக்கும் முதன்மை நிறைவேற்று அலுவலருக்குமிடையில் ஏதாவது உறவுமுறை இருப்பின் (நிதிசார், வியாபாரம், குடும்பம் அல்லது தொடர்பான உறவுமுறைகள் உட்பட) அதன் தன்மைகளையும் சபையின் உறுப்பினர்களிடையேயான உறவுமுறைகளையும் வெளிப்படுத்துதல் வேண்டும்.

3(5)(iv) தலைவர் (அ) சபைக்கு தலைமைத்துவதனையும் (ஆ) சபை வேலைகள் காத்திரமான முறையில் நடைபெறுவதனையும் அதன் பொறுப்புக்கள் ஆற்றப்பட்டு வருவதனை உறுதிப்படுத்துபவராகவும் அனைத்து முக்கியமானதும் பொருத்தமானதுமான விடயங்கள் சபையினால் சரியான நேரத்தில் கலந்துரையாடப்பட்டமையினை உறுதிப்படுத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

3(5)(v) தலைவர், நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படுவதற்காக மற்றைய பணிப்பாளர்களினால் முன்மொழியப்பட்ட விடயங்கள் ஏதுமிருப்பின், பொருத்தமானவிடத்து அவற்றினையும் கவனத்திற் கொண்டு, ஒவ்வொரு சபைக் கூட்டத்திற்குமான நிகழ்ச்சி நிரலை வரைந்து ஒப்புதலளிப்பதில் முக்கிய பொறுப்புடையவராயிருத்தல் வேண்டும். தலைவர் நிகழ்ச்சி நிரலை தயாரிக்கும் பொறுப்பினை கம்பனிச் செயலாளருக்கும் வழங்கலாம்.

3(5)(vi) சபைக் கூட்டங்களில் எழுகின்ற பிரச்சனைகள் பற்றி அனைத்து பணிப்பாளர்களுக்கும் சரியான முறையில் விளக்கமளிக்கப்பட்டமையை தலைவர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் பணிப்பாளர்கள் உரிய நேரத்தில் போதுமான தகவல்கள் பெற்றுக் கொண்டமையினையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

3(5)(vii) தலைவர் சபை விடயங்களில் அனைத்து பணிப்பாளர்களும் முழுமையானதும் தீவிரமானதுமான பங்களிப்பினை வழங்கும் விதத்தில் அவர்களை ஊக்குவிக்க வேண்டியதுடன் சபையானது வங்கியின் மிகச் சிறந்த நலன்களைக் கருத்திற் கொண்டு இயங்குவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் தலைமை தாங்குதலும் வேண்டும்.

3(5)(viii) தலைவர் குறிப்பாக நிறைவேற்று அல்லா பணிப்பாளர்களின் காத்திரமான பங்களிப்பிற்கு வசதியளிக்கின்ற விதத்தில் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களிடையே இறுக்கமான உறவுமுறையொன்று ஏற்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3(5)(ix) தலைவர் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் அல்லது நிறைவேற்றுப் பணிகள் எவற்றினதும் நேரடி மேற்பார்வை தொடர்பான நடவடிக்கைகளில் தலையிடக்கூடாது.

3(5)(x) தலைவர், பங்குடமையாளர்களுடன் காத்திரமான தொடர்பூட்டல்களை பேணுவதற்கும் பங்குடமையாளர்களின் கருத்துக்களை சபைக்கு தெரிவிப்பதற்கும் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை அவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3(5)(xi) முதன்மை நிறைவேற்று அலுவலர், வங்கியின் தொழிற்பாடுகள் மற்றும் வியாபாரங்களின் நாளாந்த முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான உச்ச நிறைவேற்று அலுவலராகத் தொழிற்படலாம்.

**3(6) சபை நியமித்த குழுக்கள்**

3(6)(i) இப்பணிப்புரைகளின் 3(6)(ii), 3(6)(iii), 3(6)(iv) மற்றும் 3(6)(v) இல் எடுத்துக் காட்டப்பட்டவாறு, ஒவ்வொரு வங்கியும் குறைந்தது நான்கு சபைக்குழுக்களை கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழுவும் சபைக்கு நேரடியாக அறிக்கையளிக்க வேண்டும். அனைத்துக் குழுக்களும், குழுவினது தலைவரின் மேற்பார்வையின் கீழ் கூட்டத்தைக் கூட்டவும், கூட்ட நிகழ்ச்சிகளையும் அறிக்கைகள் போன்றவற்றைப் பேணவும் செயலாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். சபையானது, ஒவ்வொரு குழுவினதும் கடமைகள், ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அவற்றின் பங்கு என்பன மீதான செயலாற்ற அறிக்கையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

3(6)(ii) கணக்காய்வு குழு தொடர்பாக பின்வரும் விதிகள் ஏற்புடைத்தனவாக இருக்கும்:

அ) குழுவின் தலைவராக, கணக்காய்வு அத்துடன் அல்லது கணக்காய்வில் தகமைகளைக் கொண்டுள்ள சுதந்திரமான நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

ஆ) குழுவின் அனைத்து உறுப்பினர்களும் நிறைவேற்று அல்லாப் பணிப்பாளர்களாக இருத்தல் வேண்டும்.

இ) குழு (i) தொடர்பான சட்ட நியதிகளுக்கிணங்க கணக்காய்வு பணிகளை வழங்கும் விதத்தில் வெளிக் கணக்காய்வாளர்களை நியமித்தல் (ii) கணக்காய்வாளருக்கு காலத்திற்குக் காலம் வழங்கப்பட்ட மத்திய வங்கியின் வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தல் (iii) தொடர்பான கணக்கீட்டு நியமங்களை பிரயோகித்தல்; மற்றும் (iv) கணக்காய்வுப் பங்காளர் ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதிக்கு கணக்காய்வில் ஈடுபட்டும் குறிப்பிட்ட கணக்காய்வு பங்காளர் முன்னைய காலம் முடிவடையும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னும் கணக்காய்வில் ஈடுபட்டிருக்குமிடத்து பணிக்காலம், கணக்காய்வுக் கட்டணம் மற்றும் கணக்காய்வாளரின் ஏதாவது பதவி விலகல் அல்லது பதவி நீக்கம் என்பன தொடர்பான விடயங்களின் மீது விதந்துரைப்புக்களைச் செய்யலாம்.

ஈ) பிரயோகிக்கத்தக்க நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கிணங்க குழு வெளிக்கணக்காய்வாளரின் சுதந்திரத்தையும் குறிக்கோளையும் கணக்காய்வு செய்முறையின் காத்திரமான தன்மையினையும் மீளாய்வு செய்து கண்காணித்தல் வேண்டும்.

உ) தொடர்பான சட்ட நியதிகள், ஒழுங்கு விதிகள், தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களினால் அனுமதிக்கப்பட்ட கணக்காய்வு அல்லாத பணிகளை வழங்குவதற்காக வெளிக்கணக்காய்வொன்றில் ஈடுபடுவது மீதான கொள்கையொன்றினை குழு உருவாக்கி நடைமுறைப்படுத்தும். அவ்வாறு செய்யும் போது குழுவினது, கணக்காய்வல்லா பணிகளின் வெளிக்கணக்காய்வாளர் ஒருவரின் ஏற்பாடுகள் கணக்காய்வாளர் சுதந்திரத்திற்கோ அல்லது பாரபட்சமற்ற தன்மைகளுக்கோ சேதமேற்படுத்தாத தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கணக்காய்வு அல்லாத பணிகளின் ஏற்பாடுகள் தொடர்பில் வெளிக்கணக்காய்வாளரின் சுதந்திரமான தன்மை அல்லது பாரபட்சமற்ற தன்மையினை மதிப்பிடும் பொழுது குழு பின்வருவனவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

(i) கணக்காய்வு நிறுவனத்தின் தேர்ச்சியும் அனுபவமும் கணக்காய்வு அல்லாத பணிகளின் பொருத்தமான ஏற்பாட்டாளர் என்ற தன்மையினை வழங்குமா என்பது பற்றியும்

(ii) வெளிக் கணக்காய்வாளர்களினால் மேற்கொள்ளப்படும் அத்தகைய பணிகளின் ஏற்பாடுகளின் மூலம் கணக்காய்வுகளின் பாரபட்சமற்ற அல்லது சுதந்திரமான தன்மைக்கு அச்சுறுத்தல் இல்லை என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் பாதுகாப்புக்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது பற்றியும்; அத்துடன்

(iii) கணக்காய்வு அல்லாத பணிகளின் தன்மை, தொடர்பான கட்டண அளவுகள், கணக்காய்வு நிறுவனம் தொடர்பில் தனிப்பட்ட மற்றும் கூட்டுக் கட்டளை அளவுகள் என்பன வெளிக் கணக்காய்வாளரின் பாரபட்சமற்றதன்மை அத்துடன்/ அல்லது சுதந்திரமான தன்மைக்கு அச்சுறுத்தல் எதனையும் ஏற்படுத்துமா என்பது பற்றியும்.

(ஊ) குழுவானது, கணக்காய்வு தொடங்குவதற்கு முன்னதாக, பின்வருவன உட்பட வெளிக் கணக்காய்வாளருடன் கணக்காய்வின் தன்மை மற்றும் செயற்பரப்பு பற்றி கலந்துரையாடி இறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். (i) கம்பனி ஆளுகை மற்றும் நிதிசார் அறிக்கையிடல் மீதான முகாமைத்துவ உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான பணிப்புரைகளுக்கு வங்கிகள் இணங்கியொழுகுவது பற்றிய மதிப்பீடொன்று (ii) தொடர்பான கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் அறிக்கையிடும் கடப்பாடுகள் என்பனவற்றிற்கிணங்க, வெளி நோக்கங்களுக்காக நிதியியல் கூற்றுகளைத் தயாரித்தல்; அத்துடன் (iii) ஒன்றிற்கு கூடுதலான கணக்காய்வு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளவிடத்து நிறுவனங்களிடையே இணைப்புக்களை ஏற்படுத்துதல்.

(எ) வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் முழுமையான தன்மையினைக் கண்காணிக்கும் பொருட்டு, அதன் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் வெளிப்படுத்துகைகளுக்காக தயாரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகள் மற்றும் அதில் உள்ளடக்கியுள்ள குறிப்பிடத்தக்க நிதிசார் அறிக்கையிடல் தீர்ப்புக்கள் என்பன தொடர்பாக வங்கியின் நிதிசார் தகவல்களை குழு மீளாய்வு செய்தல் வேண்டும். சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் வங்கியின் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகளை மீளாய்வு செய்கையில் குழுவானது (i) முக்கிய தீர்ப்புக்குரிய துறைகள் (ii) கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நடைமுறைகளிலுள்ள ஏதாவது மாற்றங்கள் (iii) கணக்காய்விலிருந்து தோன்றுகின்ற குறிப்பிடத்தக்க சீராக்கங்கள் (iv) நிகழ்ந்து கொண்டிருக்கும் கரிசனைக்குரிய எடுகோள்கள் மற்றும் ஏனைய சட்ட தேவைப்பாடுகள் என்பனவற்றுடன் இணங்கி ஒழுகுதல் என்பனவற்றில் குறிப்பாக கவனம் செலுத்தல் வேண்டும்.

(ஏ) இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வுகளிலிருந்து தோன்றுகின்ற விடயங்கள், பிரச்சனைகள் மற்றும் ஒதுக்குகள் என்பனவற்றையும், தேவையானவிடத்து முதன்மையான முகாமைத்துவ ஆளணியினர் சமூகமளிக்காத போது கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் உட்பட கணக்காளர் கலந்துரையாட விரும்புகின்ற விடயங்களையும் குழு கலந்துரையாடுதல் வேண்டும்.

(ஐ) வெளிக் கணக்காய்வாளரின் முகாமைத்துவ கடிதத்தினையும் அதற்கான முகாமைத்துவத்தின் பிரதிபலிப்பினையும் குழு மீளாய்வு செய்தல் வேண்டும்.

(ஒ) வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் தொடர்பாக குழு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்:

I. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயற்பரப்பு, தொழிற்பாடுகள் மற்றும் மூலவளங்களின் போதுமாந்தன்மையினையும் திணைக்களம் அதன் வேலைகளைச் செய்வதற்கு தேவையான அதிகாரங்கள் கொண்டுள்ளமையினைப் பற்றிய திருப்தியடைவது பற்றியும் மீளாய்வு செய்தல்;

II. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தையும் உள்ளகக் கணக்காய்வு செய்முறைகளையும் மீளாய்வு செய்வதுடன், தேவையானவிடத்து, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் விதந்துரைப்புக்களின் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையினையும் உறுதிப்படுத்தல்;

III. உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர் மற்றும் மூத்த அலுவலர்களின் செயலாற்றத்தின் கணிப்பீடு அல்லது மதிப்பீடு பற்றிய மீளாய்வு;

IV. தலைவர், மூத்த அலுவலர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடுகளுக்கு வெளியிலிருந்து பணிகளை வழங்குவோர் தொடர்பான நியமனம் அல்லது முடிவுறுத்தலை விதந்துரைத்தல்;

V. உள்ளக முதன்மைக் கணக்காய்வாளர் மற்றும் வெளியிலிருந்து பணிகளை வழங்குவோர் யாரும் இருப்பின் அவர்கள் உட்பட உள்ளக கணக்காய்வாளர் புதிய திணைக்களத்தின் மூத்த அலுவலர்களின் பதவி விலகல்களை குழு மதிப்பீடு செய்தது என்பதனையும் பதவி விலகும் மூத்த அலுவலர்களும் வெளியிலிருந்து

பதவி விலகுவோரும் தமது பதவி விலகல் தொடர்பான காரணங்களைச் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பத்தினை வழங்குதல்;

VI. உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் அதன் கணக்காய்வு நடவடிக்கைகளில் சுதந்திரமானது என்பதனையும் இது பக்க சார்பற்ற முறையில், தேர்ச்சியுடனும், தொழில்சார் நிபுணத்துவத்துடனும் தொழிற்படுவதனை உறுதிப்படுத்தல்

(ஓ) குழு உள்ளக புலனாய்வுகள் தொடர்பாக முக்கியமாகக் கண்டறியப்பட்டவைகளையும் அதற்கான முகாமைத்துவத்தின் பிரதிபலிப்புக்களையும் ஆலோசனையில் கொள்ள வேண்டும்.

(ஔ) முதன்மை நிதி அலுவலர், முதன்மை உள்ளக கணக்காய்வாளர் மற்றும் வெளிக் கணக்காய்வாளர்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பொதுவாகக் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். குழுவின் அழைப்பின் பேரில் ஏனைய சபை உறுப்பினர்களும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களும் கூட கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். எனினும், குறைந்தது, ஆண்டிற்கு இரு தடவைகள், நிறைவேற்று பணிப்பாளர்களின் பிரசன்னம் இல்லாமலே குழுவானது வெளிக்கணக்காய்வாளர்களைச் சந்திக்க வேண்டும்.

(க) குழுவானது (i) தொடர்பான நியதிகளுக்குட்பட்ட எந்தவொரு விடயத்தையும் புலனாய்வு செய்வதற்கான தெளிவான அதிகாரத்தினையும் (ii) அவ்வாறு செய்வதற்கான வளங்களையும் (iii) தகவல்களைப் பெறுவதற்கான முழு வசதிகளையும், தேவையானவிடத்து (iv) தேவையான அனுபவங்களுடன் வெளிநாட்டிலிருந்து தொழில்சார் நிபுணர்களின் ஆலோசனைகளையும் அத்துடன் வெளிநாட்டவர்களை அழைப்பதற்கும் அதிகாரங்களை கொண்டுள்ளது.

(ங) கலந்துரையாடப்படவுள்ள விடயங்களை உரிய நேரத்தில் அறிவிப்பதுடன், குழுவானது கிரமமாக கூட வேண்டுமென்பதுடன் அதன் கடமைகளை நிறைவேற்றுவதிலும் பொறுப்புக்களிலும் அதன் முடிவுரையினை பதிவு செய்தல் வேண்டும்.

(ச) குழுவானது, முறைசாராத வழிகளில் (i) கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகளினது விபரம் (ii) ஆண்டொன்றில் நடத்தப்பட்ட கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அத்தகைய கூட்டங்களில் கலந்து கொண்ட தனிப்பட்ட பணிப்பாளர் ஒவ்வொருவரினதும் விபரங்கள் என்பனவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

(ஞ) குழுவின் செயலாளர் (இவர் கம்பனியின் செயலாளராகவோ அல்லது உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளின் தலைவராகவோ இருக்கலாம்) குழுக் கூட்டத்தின் விபரமான நிகழ்ச்சிகளை பதிவு செய்து வைத்திருத்தல் வேண்டும்.

(ட) குழுவானது வங்கியின் அலுவலர்களின் ஒழுங்குகள், நம்பிக்கைகள், நிதியியல் அறிக்கையிடலில் ஏற்படக்கூடிய ஒழுங்கீனங்கள் பற்றி எழுப்பிய கருத்துக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகள் அல்லது ஏனைய விடயங்களை பற்றி மீளாய்வு செய்தல் வேண்டும். இதன்படி, அத்தகைய விடயங்கள் தொடர்பான நியாயமானதும் சுதந்திரமானதுமான புலனாய்வுகளின் பொருட்டு குழு இடம் பெறுகின்ற சரியான ஒழுங்குகளையும் பொருத்தமன பின் தொடர் நடவடிக்கைகளையும், வெளிக் கணக்காய்வாளருடனான வங்கியின் உறவு முறையினை மேற்பார்வை செய்கின்ற முக்கிய பிரதிநிதித்துவ சபையாக தொழிற்படுவதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

3(6)(iii) பின்வரும் விதிகள் மனித வளங்கள் மற்றும் ஊதிய குழுக்கள் தொடர்பிலும் ஏற்புடைத்தாக இருக்கும்.

(அ) குழுவானது பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் வங்கியின் முதன்மையான முகாமைத்துவ ஆளணியினருடன் தொடர்பான வருமானக் கொள்கையினை (சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய நிதியியல் கொடுப்பனவுகள்) தீர்மானிக்கலாம்.

(ஆ) குழுவானது பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரின் குறிக்கோள்களையும் இலக்குகளையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(இ) குழு, நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுக்கெதிராக முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரதும் செயலாற்றத்தினை காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்ய வேண்டியதுடன் வருமானம், நன்மைகள் போன்றவற்றை திருத்துவதற்கான அடிப்படைகளையும் செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட ஏனைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளையும் நிருணயித்தல் வேண்டும்.

(ஈ) முதன்மை நிறைவேற்று அலுவலர் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படுகின்ற குழுக்கூட்டம் தவிர, மற்றைய குழுக் கூட்டங்கள் அனைத்திலும் முதன்மை நிறைவேற்று அலுவலரின் பிரசன்னம் இருத்தல் வேண்டும்.

3(6)(iv) நியமனக்குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடைத்தாதல் வேண்டும்:

(அ) புதிய பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரை தெரிவு செய்வதற்கு/ நியமிப்பதற்கு குழுவானது நடைமுறையொன்றினை நடைமுறைக்கிடல் வேண்டும்.

(ஆ) சபையின் பொறுப்புக்கள் ஒட்டு மொத்தமாக ஆற்றப்படுகின்றதனைக் கருத்திற் கொண்டு பணிப்பாளரினால் ஆற்றப்பட்ட செயலாற்றம் மற்றும் பங்களிப்பினை கணக்கிலெடுத்து பரிசீலனையின் அடிப்படையில் தற்போதைய பணிப்பாளர்களை மீள நியமிப்பதற்கு குழு விதந்துரைத்தல் (அல்லது விதந்துரைக்காமல் விடல்) வேண்டும்.

(இ) முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்கு அல்லது பதவி உயர்த்தப்படுகிவதற்கு பரிசீலனையில் கொள்ளப்படுவதற்கு தகமை பெறுவதற்கான தகமைகள், அனுபவம் மற்றும் முக்கியமான மனச்சால்பு போன்ற பிரமாணங்களை குழு நிர்ணயித்தல் வேண்டும்.

(ஈ) பணிப்புரை 3(3)இல் தரப்பட்ட பிரமாணங்களில் குறித்துரைக்கப்பட்டவாறும் நியதிச் சட்டங்களில் குறிப்பிட்டவாறும் அலுவலகங்களில் தொழிலாற்றுவதற்கு பணிப்பாளர்களும், முதன்மை நிறைவேற்று அலுவலரும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரும் ஏற்ற பொருத்தமான ஆட்களாக இருக்கிறார்களென்பதனை குழு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(உ) ஓய்வு பெறுகின்ற பணிப்பாளர்கள் மற்றும் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் ஓய்வு பெறும் போது அவர்களின் பணிகளைத் தொடர்வதற்கான மேலதிக புதிய நிபுணர்களுக்கான தேவைப்பாடுகளைக் குழு பரிசீலித்து விதந்துரைத்தல் வேண்டும்.

(ஊ) குழு சுதந்திரமான பணிப்பாளர் ஒருவரினால் தலைமை தாங்கப்பட வேண்டியதுடன் பெரும்பாலும் சுதந்திரமான பணிப்பாளர்களையே பெரும்பான்மையாகவும் கொண்டிருத்தல் வேண்டும். முதன்மை நிறைவேற்று அலுவலர் அழைப்பின் பேரில் கூட்டத்திற்கு பிரசன்னமாகலாம்.

3(6)(v) ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(அ) குழுவானது குறைந்தபட்சம் மூன்று நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களையும் முதன்மை நிறைவேற்று அலுவலரையும் அதாவது கொடுகடன், சந்தை, திரவத்தன்மை தொழிற்பாடு மற்றும் உபாய இடர்நேர்வு போன்ற விரிந்த இடர்நேர்வு வகைகளை மேற்பார்வை செய்கின்ற முக்கியமான முகாமைத்துவ ஆளணியினரையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். குழு முக்கியமான முகாமைத்துவ ஆள்ணியினருடன் மிக நெருக்கமாக பணியாற்ற வேண்டியுள்ளதுடன் அதிகாரசபையின் உட்கட்டமைப்பு மற்றும் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களுக்குட்பட்டு சபையின் சார்பாக தீர்மானங்களையும் எடுத்தல் வேண்டும்.

(ஆ) குழுவானது, வங்கிக்கு நேரக்கூடிய அனைத்து இடர்நேர்வுகளையும் அதாவது கொடுகடன் சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாட்டு மற்றும் உபாய இடர்நேர்வுகளையும் மாதாந்த அடிப்படையில் பொருத்தமான இடர்நேர்வு குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்களினூடாக மதிப்பீடு செய்தல் வேண்டும். துணைக்கம்பனிகள் மற்றும் இணைக்கம்பனிகளைப் பொறுத்தவரையில், இடர்நேர்வு முகாமைத்துவம் வங்கி அடிப்படையிலும், குழும அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும்.

(இ) குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகளை கட்டுப்படுத்துவதற்கும் குழுவினால் குறித்துரைக்கப்பட்டவாறு கணியம்சார் மற்றும் தரம் சார்ந்த இடர்நேர்வு வரையறைகளுக்குள் முகாமைப்படுத்துவதற்காக கொடுகடன் குழு மற்றும் சொத்து பொறுப்புக்குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்ட குழுக்களின் போதுமாந்தன்மையினையும் காத்திரமான தன்மையினையும் குழு மீளாய்வு செய்தல் வேண்டும்.

(ஈ) வங்கியின் கொள்கைகள், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட முன்மதியுடைய மட்டங்களுக்கு அப்பாலுள்ள மட்டங்களில் அத்தகைய இடர்நேர்வுகள் காணப்படுமிடத்து குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளின் தாக்கத்தினை தணிப்பதற்காக குழு பொருத்தமானதும் சரியானதுமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(உ) நாளது வரை பூரணப்படுத்தப்பட்ட தடங்கலற்ற வியாபாரத் திட்டங்கள் உட்பட, இடர்நேர்வு முகாமைத்துவத்தின் அனைத்து அம்சங்களையும் மதிப்பிடுவதற்காக குழு குறைந்த பட்சம் காலாண்டு அடிப்படையில் கூடுதல் வேண்டும்.

(ஊ) குறிப்பிட்ட இடர்நேர்வினை அடையாளம் காணத்தவறிய மற்றும் குழுவினால் விதந்துரைக்கப்பட்ட அத்துடன் அல்லது வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் பணிக்கப்பட்டவாறு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிய அலுவலர்களுக்கெதிராக குழு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

(எ) குழுவானது ஒவ்வொரு கூட்டமும் முடிவடைந்த ஒரு வாரத்திற்கிடையில், சபையின் கருத்து, இணக்கப்பாடு அத்துடன்/ அல்லது குறித்துரைக்கப்பட்ட பணிப்புக்களுக்காக இடர்நேர்வு மதிப்பீட்டு அறிக்கையினைச் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஏ) வியாபாரத் தொழிற்பாடுகளின் அனைத்துத் துறைகள் தொடர்பான சட்டம், ஒழுங்கு விதிகள், ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல்கள் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள் என்பனவற்றுடன் வங்கி இணங்கி ஒழுகுவதனை மதிப்பிடுவதற்காக குழுவானது இணக்க தொழிற்பாடொன்றினை நிறுவுதல் வேண்டும். முக்கிய முகாமைத்துவ ஆளணியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறப்பு இணங்குவிப்பு அலுவலர் இணங்குவிப்பு தொழிற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியதுடன் காலத்திற்கு காலம் அறிக்கை சமர்ப்பிக்கவும் அவர் கடமைப்பட்டவராக இருப்பார்.

**3(7) தொடர்பான தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்**

3(7)(i) எந்த ஒரு ஆளுடனும் குறிப்பாக, இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "தொடர்புபட்ட தரப்பினர்கள்" எனக் கருதப்படக்கூடிய ஆட்களின் பின்வரும் வகையினருடனான வங்கியின் எந்த ஒரு கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் எழக்கூடிய நலவுரித்துக்களின் எந்த ஒரு முரண்பாட்டினையும் தவிர்ப்பதற்கு சபை தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(அ) ஏதாவது ஒரு வங்கியின் துணைக் கம்பனிகள்;

(ஆ) ஏதாவது வங்கியின் இணைக் கம்பனிகள்;

(இ) வங்கியின் ஏதாவது பணிப்பாளர்கள்;

(ஈ) ஏதாவது வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்;

(உ) ஏதாவது வங்கியின் பணிப்பாளர்கள் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் நெருங்கிய உறவினரொருவர்;

(ஊ) வங்கியில் பொருள் ரீதியான நலவுரித்துக்களுக்குச் சொந்தமான பங்குடமையாளர்;

(எ) ஏதாவது வங்கியின் பணிப்பாளர்கள் அல்லது ஏதாவது வங்கியின் பணிப்பாளர்களது நெருங்கிய உறவினர் அல்லது கணிசமான நலவுரித்துக்களைக் கொண்ட பொருள் ரீதியான பங்குடமையாளர் பற்றியதொரு கரிசனை.

3(7)(ii) இப்பணிப்புரையினால் உள்ளடக்கப்படக்கூடிய தொடர்பான தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் வகை பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

(அ) உயர்ந்த பட்ச கடன் வசதி மீதான நாணயச்சபையின் பணிப்புக்களில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான எந்த வகைக் கடன்வசதியினையும் வழங்கல்;

(ஆ) வைப்புக்கள், கடன்பாடுகள் மற்றும் முதலீடுகளின் வடிவில் வங்கியின் எந்தவொரு பொறுப்புக்களையும் உருவாக்குதல்;

(இ) வங்கிக்கு வழங்கப்பட்ட அல்லது வங்கியிலிருந்து பெறப்பட்ட நிதிசார் அல்லது நிதிசாரா தன்மைகளைக் கொண்ட எந்தவொரு பணியினதும் வழங்கல்;

(ஈ) வங்கிக்கும் எந்தவொரு தொடர்பான தரப்பினர்களுக்குமிடையில் அறிக்கையிடல் வழிகளையும் தகவல் பாய்ச்சல்களையும் உருவாக்குதல் அல்லது பேணுதல், அத்தகைய தொடர்புட்ட தரப்பினர்களுக்கு நன்மை தரத்தக்க உள்ளார்ந்த வளம்மிக்க சொத்துரிமைகளை நம்பிக்கைகளை அல்லது வேறுவிதமான உணர்வு பூர்வமான தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு வழிவகுக்கக்கூடும்.

3(7)(iii) மேலே பணிப்பு 3(7)(i) இல் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு தொடர்பான தரப்பினருடன், இதே வியாபாரத்தினை வங்கிகளுடன் மேற்கொள்கின்ற மற்றையவர்களுக்கு வழங்கப்பட்டதிலும் பார்க்க "மிகச் சாதகமான வசதியை" வழங்கக்கூடிய விதத்தில் எந்தவிதமான கொடுக்கல் வாங்கல்களிலும் வங்கி ஈடுபடவில்லை என்பதனை சபை உறுதிப்படுத்துதல் வேண்டும். இக்கருத்தில் "மிகச் சாதகமான வசதி" என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

(அ) "தொடர்பான தரப்பினருக்கு" மொத்த தேறிய கடன் வசதியை வழங்குகின்றமை சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் முன்மதியுடைய சதவீதத்தினை விஞ்சும். இத்துணைப் பணிப்புரையின் நோக்கத்திற்காக;

(i) "கடன் வசதி" என்பது உச்ச கடன் வசதித்தொகையின் மீது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறன கடன்வசதியின் கருத்தையே கொண்டிருக்கும்.

(ii) "மொத்த தேறிய கடன்வசதி" மொத்தக்கடன் வசதிகளிலிருந்து வங்கியின் பங்கு மூலதனத்தில் அத்தகைய தொடர்பான தரப்பினர்களினால் செய்யப்பட்ட காசுப் பிணையங்கள் மற்றும் முதலீடுகள் மற்றும் 5 ஆண்டுகள் அல்லது அதற்கும் கூடுதலான முதிர்ச்சியுடன் கூடிய படுகடன் சாதனங்கள் என்பனவற்றைக் கழிப்பதன் மூலம் கணிக்கப்படுகின்றது.

(ஆ) தொடர்பற்ற ஒப்பிடத்தக்க இணைக்கிணைத் தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களுடன் ஒப்பிடுகையில் வங்கியின் மிகச் சிறந்த கடன் வழங்கல் வீதத்திலும் பார்க்க குறைந்த வட்டி வீதத்தினை விதித்தல் அல்லது வங்கி வைப்புக்களுக்குக் கூடுதலான வீதத்தினைச் செலுத்துதல்;

(இ) சாதகமான நியதிகள், வர்த்தக இழப்புக்களை உள்ளடக்குதல் அத்துடன்/ அல்லது கட்டணங்களை/ தரகுகளைத் தளர்த்துதல் போன்ற முன்னுரிமை ரீதியில் நடத்துதல்; தொடர்புபடாத தரப்பினரினால் மேற்கொள்ளப்படும் வழமையான வியாபார காலத்திற்கு கூடுதலாக காலப்பகுதியை நீடித்தல்;

(ஈ) மதிப்பீட்டு நடைமுறைகள் ஏதுவுமில்லாமல் தொடர்பான தரப்பினருக்கு பணிகளை வழங்குதல் அல்லது அவர்களிடமிருந்து பெறுதல்;

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2007 திசெம்பர் 31

திரு. எஸ். ஏ. வீரசிங்க
பொது முகாமையாளர்
அரச ஈட்டு முதலீட்டு வங்கி
269 காலி வீதி
கொழும்பு - 03

கனம் ஐயா,

**திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரைகள்**

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத் தன்மையை உறுதிப்படுத்துவதை நோக்காகக் கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை, அரச ஈட்டு முதலீட்ட வங்கிக்கு, வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே (3)ஆம் பிரிவின் கீழ் சட்ட ரீதியான திரவச் சொத்துக்களை பேணுதல் தொடர்பாக 21, நவெம்பர் 1997ஆம் திகதி வழங்கிய தனிப்பட்ட பணிப்புரையை இரத்துச் செய்வதோடு 2008 சனவரி 01ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மேற்கூறப்பட்ட பணிப்புரையை ஏனைய உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் மீள் பிரதியீடு செய்கின்றது. வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1) இன் கீழ் வழங்கப்பட்ட உட்படுத்தக்கூடிய பணிப்புரைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் நாணயச் சபையானது புதிய பணிப்புரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்காக, 2008 திசெம்பர் 31 வரை கால அவகாசம் வழங்கவும் தீர்மானித்துள்ளது. அரச ஈட்டு முதலீட்டு வங்கி புதிய பணிப்புரைகளுடன் இணங்க தவறும் பட்சத்தில், புதிய பணிப்புரைகளுடன் இணங்குவதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் முடியும் வரை முன் கூறப்பட்ட பணிப்புரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**பீ. டி. டபிள்யு. ஏ. சில்வா**

பதில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2007 திசெம்பர் 31

திரு. எஸ். எச். பியசிறி
பொது முகாமையாளர்
தேசிய சேமிப்பு வங்கி
255 காலி வீதி
கொழும்பு - 03

கனம் ஐயா,

## தேசிய சேமிப்பு வங்கிக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள்

தேசிய சேமிப்பு வங்கியின் உரிமை மூலதன கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றத்தை கருத்திற் கொண்டும், வங்கியின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத் தன்மையை உறுதிப்படுத்துவதை நோக்காக கொண்டும், இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை, தேசிய சேமிப்பு வங்கிக்கு, வங்கித் தொழில் சட்டத்தின் 76ஜே(1) மற்றும் 76ஜே(3) ஆம் பிரிவின் கீழ் 1999 நவெம்பர் 21ஆம் திகதி வழங்கிய தனிப்பட்ட பணிப்புரையை இரத்து செய்வதோடு 2008 சனவரி 01ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மேல் கூறப்பட்ட பணிப்புரையை வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1)இன் கீழ் ஏனைய உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் மீள் பிரதியீடு செய்கின்றது.

2. தற்போதுள்ள பணிப்புரைகளுக்காக பிரதியீடு செய்யப்பட்ட பணிப்புரைகள் கீழ்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

| தேசிய சேமிப்பு வங்கிக்கு வழங்கப்பட்ட தனிப்பட்ட பணிப்புரைகள் (நடைமுறையிலுள்ள பணிப்புரைகள்) | நடைமுறையிலுள்ள தனிப்பட்ட பணிப்புரைகள் மீள் பிரதியீடு செய்யும் பணிப்புரைகள் |
|---|---|
| (i) 76ஜே(3)ஆம் பிரிவின் கீழ் உள்ள பணிப்புரைகள் மூலதனப் போதுமை | (i) 76ஜே(1)ஆம் பிரிவின் கீழ் உள்ள பணிப்புரைகள் மூலதனப் போதுமை விகிதத்தைப் பேணுதல் 26.12.2007ஆம் திகதி வழங்கப்பட்ட (வங்கித் தொழில் சட்ட கட்டளை இலக்கம் 10) - இணைப்பு 1 |
| (ii) 76ஜே(1)ஆம் பிரிவின் கீழ் உள்ள பணிப்புரைகள் ஒதுக்க நிதி | (ii) 76ஜே(1)ஆம் பிரிவின் கீழ் உள்ள பணிப்புரைகள் ஒதுக்க நிதி - இணைப்பு 2 |
| (iii) 76ஜே(3)ஆம் பிரிவின் கீழ் உள்ள பணிப்புரைகள் திரவச் சொத்துக்கள் | (iii) 76ஜே(1)ஆம் பிரிவின் கீழ் உள்ள பணிப்புரைகள் திரவச் சொத்துக்கள் - இணைப்பு 3 |
| (iv) 76ஜே(1)ஆம் பிரிவின் கீழ் உள்ள பணிப்புரைகள் உரிமைகள் மீதான முதலீடுகள் | (iv) 76ஜே(1)ஆம் பிரிவின் கீழ் உள்ள பணிப்புரைகள் உரிமைகள் மீதான முதலீடுகள் - இணைப்பு 4 |
| (v) 76ஜே(1)ஆம் பிரிவின் கீழ் உள்ள பணிப்புரைகள் தனிப்பட்ட கடன்பெறுநர் எல்லை | (v) 76ஜே(1)ஆம் பிரிவின் கீழ் உள்ள பணிப்புரைகள் அதிகபட்ச கடன் வசதிகளின் பெறுமதி 01.11.2007ஆம் திகதி வழங்கப்பட்ட (வங்கித் தொழில் சட்ட கட்டளைஇலக்கம் 8) - இணைப்பு 5 |
| (vi) 76ஜே(1)ஆம் பிரிவின் கீழ் உள்ள பணிப்புரைகள் நிலையான சொத்துக்கள் கொள்வனவு | (vi) 76ஜே(1)ஆம் பிரிவின் கீழ் உள்ள பணிப்புரைகள் நிலையான சொத்துக்கள் கொள்வனவு - இணைப்பு 6 |

3. மேலும், நாணயச் சபையானது புதிய பணிப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்காக, 2008 திசெம்பர் 31 வரை கால அவகாசம் வழங்கவும் தீர்மானித்துள்ளது. தேசிய சேமிப்பு வங்கி புதிய பணிப்புரைகளுடன் இணங்கத் தவறும் பட்சத்தில், புதிய பணிப்புரைகளுடன் இணங்குவதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் முடியும் வரை முன்கூறப்பட்ட பணிப்புரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்
**பி. டி. டபிள்யு. ஏ. சில்வா**
பதில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2007 திசெம்பர் 31

**02/01/00/0002/001**

*எல்லா உரிமம் பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அதிகாரிகளுக்கு*

**கனம் ஐயா/ அம்மணி**

**வங்கித்தொழில் புரியும் வெளிநாட்டு அலுவலர்களுக்கான வழிகாட்டி**

புதிய வங்கித்தொழில் பொருட்களை அறிமுகப்படுத்தல் மற்றும் வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவம் என்பவற்றிற்கு உதவும் வகையில் விருத்தி செய்யப்பட்ட வங்கித்தொழில் புரியும் வெளிநாட்டு அலுவலர்களுக்கான வழிகாட்டி 2007 நவெம்பர் 22ஆம் நாளன்று முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் கூட்டத்தில் அறிவித்தலிற்ககு இணங்க இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கை கிடைத்தது பற்றி தயவு செய்து அறியத் தரவும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**பி. டி. டபிள்யு. ஏ. சில்வா**

பதில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

## வங்கித்தொழில் புரியும் வெளிநாட்டு அலுவலர்களுக்கான வழிகாட்டி

### 1. தற்போதைய கொள்கை

1.1 தற்போது இலங்கை மத்திய வங்கியானது (இ.ம.வ.) வெளிநாட்டு வங்கிகளின் வெளிநாட்டு அலுவலர்களுக்கான குடிவரவு குடியகல்வு திணைக்கள வதிவிட விசாவிற்கு வங்கிகள் அவர்களை கீழ்வருமாறு தொழில் புரிய இயலுமாக்கும் வகையில் சிபார்சு செய்கின்றது.

(i) எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி ஆகக் கூடுதலாக மூன்று அலுவலர்கள்.

(ii) குறிக்கப்பட்ட ஒரு வருடத்திற்கு மேலாகாத வகையில் அவ்வெளிநாட்டு அலுவலர்களால் முன்னெடுக்கப்படும்/ செயற்படுத்தப்படும் வேலையினை உள்நாட்டு அலுவலர்கள் கையாள்வதற்கு பயிற்சியளிக்கப்படும் என்ற நிபந்தனைக்கு அமைவாக மூன்றிற்கு மேலதிகமாக யாரேனும் அலுவலருக்கு தனித்தனி விடய அடிப்படையில் அனுமதியளிக்கப்படும்.

1.2 இக் கொள்கை உருவாக்கத்தின் குறிக்கோள் உள்நாட்டு அலுவலர்களுக்கு பயிற்சியினையும் மற்றும் அவ் வெளிநாட்டு அலுவலர்கள் கொண்டிருக்கும் தகுதி நிலையினை அடையும் சந்தர்ப்பத்தினையும் வழங்குவதாகும்.

1.3 பொதுவாக உள்நாட்டு வங்கிகள் வெளிநாட்டு அலுவலர்களை வேலைக்கு அமர்த்தாத காரணத்தினால் அவ்வாறானதொரு கொள்கை உள்நாட்டு வங்கிகள் விடயத்தில் இருந்ததில்லை. எவ்வாறாயினும் நான்கு உள்நாட்டு வங்கிகள் குறிக்கப்பட்ட வேலையினை செயற்படுத்துவதற்கு வெளிநாட்டு ஆலோசகர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளது.

### 2. கொள்கைமாற்றத்திற்கான தேவை

வெளிநாட்டு அலுவலர்களை மேலும் அனுமதிப்பதற்கும் உள்நாட்டு வங்கிகள் வெளிநாட்டு வல்லுனர்களை வேலைக்கு அமர்த்துவதனை ஊக்குவிப்பதற்குமாக தற்போதைய கொள்கையை இலகுபடுத்துவதற்கு, கீழ்வரும் காரணிகள் சாதகமாக பரிசீலனையில் எடுக்கப்படுகின்றன.

(i) சில வெளிநாட்டு வங்கிகளின் வியாபார செயற்பாடுகளை விரிவாக்குதல்.

(ii) தற்போது வெளிநாட்டு வங்கிகள் அவைகளின் தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளில் இருந்து கடனாகப் பெற்ற நிதியின் மூலம் இலங்கையில் வியாபாரத்தினை குறிப்பாக உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களை விருத்தி செய்வதற்கு முற்படுகின்றன.

(iii) வெளிநாட்டு வங்கிகளின் சர்வதேச அளவில் அனுபவமுடைய தொழில்சார் நிபுணர்களுடன் கூடிய தீவிரமான பிரசன்னம் இலங்கையினுடைய செல்வாக்கினை முன்னேற்றுவதற்கும் சர்வதேச அளவில் முதலீட்டினை மேம்படுத்துவதற்கும் உதவி புரியும்.

(iv) பிணையமயப்படுத்தல் கூட்டுக்கடன், வெளிநாட்டு கடன் திரட்டல், உட்கட்டமைப்பிற்கான நிதியிடல் மற்றும் பெறுதிச்சாதனங்கள் போன்ற சர்வதேச வங்கியியல் சாதனங்களை அறிமுகப்படுத்துவதற்கான போக்கு.

(v) இலங்கையில் உள்ள வங்கிகள் பிரதானமாக வழமையான வைப்புக்கள் மற்றும் கடன் சாதனங்களில் தங்கியுள்ளன. புதுமை புகுத்தப்பட்ட வங்கியியல் சாதனங்களின் அறிமுகம் நிதியியல்துறை மற்றும் பொருளாதாரம் என்பவற்றின் அபிவிருத்தியை குறித்து நிற்கின்றது. பன்னாட்டு வங்கியியலில் புதிய வங்கியியல் சாதனங்களை அறிமுகப்படுத்துவதற்கு முக்கியமாக வெளிநாட்டு மூலதனத்தை கவருவதற்கு பாண்டித்தியம் தேவைப்படுகின்றது.

(vi) வங்கிகள் இடைக்காலப்பகுதியில் பாசல் IIஇன் முன்னேற்றகரமான அணுகுமுறையினை நிறுவுவதற்கு இடர்நேர்வுமுகாமைத்துவ நிபுணர்களை வேலைக்கமர்த்த வேண்டிய தேவை ஏற்படும். அவ்வாறான நிபுணர்களை பாசல் II நிறுவப்பட்டுள்ள நாடுகளிலிருந்து எதிர்பார்க்கின்ற தேவை ஏற்படலாம்.

(vii) உத்தேச பன்னாட்டு கணக்கியல் நியமங்கள் (ஐஏஎஸ்)/ பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் (ஐஎவ்ஆர்எஸ்) என்பவற்றின் பின்பற்றுதல்களுக்கு பன்னாட்டு கணக்கியல் நியமங்கள்/ பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் என்பவற்றின் பின்பற்றுதல்களில் செய்முறை அனுபவம் கொண்ட வங்கியாளர்கள் தேவைப்படுகின்றன.

(viii) பொதுவாக, இலங்கையில் உள்ள வங்கிகள் நவீன வங்கியியல் சாதனங்கள், தொழில்நுட்பம் மற்றும் இடர்முகாமைத்துவ நுட்பங்கள் என்பவற்றை அறிமுகம் செய்வதாக இருந்தால் வங்கித்துறைக்கு உலகளாவிய வங்கித்துறை அனுபவமுள்ள வல்லுனர்கள் தேவைப்படுவர்.

### 3. கொள்கை வழிகாட்டி

#### 3.1 வெளிநாட்டு வங்கிகளுக்கானது

(i) அனுமதிக்கப்பட்ட ஆகக் கூடுதலான வெளிநாட்டு அலுவலர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு:

(அ) 75இற்கு குறைவான ஊழியர் பலத்தினை கொண்ட வங்கிகளுக்கு 3 பேர்

(ஆ) 75இற்கும் 400 இற்கும் இடைப்பட்ட ஊழியர் பலத்தினை கொண்ட வங்கிகளுக்கு 5 பேர்

(இ) 400இற்கு மேற்பட்ட ஊழியர் பலத்தினை கொண்ட வங்கிகளுக்கு 10 பேர்

(ii) இந்திய வங்கிகள் விடயத்தில் நடந்து கொண்டிருக்கும் முழுமையான பொருளாதார கூட்டு உடன்படிக்கையின் (சிஈபிஏ) மீதான பேரம்பேசலின் அடிப்படையிலான உடன்படிக்கை ஆகக் குறைந்த பிரமாணமாக பின்பற்றப்படும்.

(iii) மேற்குறிப்பிட்ட எல்லைக்கு மேலதிகமான வெளிநாட்டு அலுவலர்களுக்கான அனுமதியானது நியமிக்கப்படவுள்ள வெளிநாட்டு அலுவலரின் குறிக்கப்பட்ட திறமை மற்றும் அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட வேலைகள் என்பவற்றை கவனத்தில் கொண்டு தனித்தனி விடய அடிப்படையில் கருத்தில் எடுக்கப்படும். வங்கியானது குறிப்பிட்ட வியாபாரத்தின் எதிர்வு கூறல்கள் அல்லது வெளிநாட்டு அதிகாரிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் என்பவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) சாதாரண அனுமதிப் பங்கில் அலுவலர்களுக்கான அனுமதியின் செல்லுபடியான காலப்பகுதி 2 வருடங்களாக இருக்கும். மற்றும் மற்றையோருக்கு ஒரு வருடமாக இருக்கும் (தனித்தனி விடய அடிப்படையிலான இரண்டு பிரமாணம்).

(v) பிரதம நிறைவேற்று அதிகாரி தவிர்ந்த சாதாரண அனுமதிப் பங்கின் கீழான வெளிநாட்டு அலுவலரின் அனுமதியானது குறிப்பிட்ட வெளிநாட்டு அலுவலரின் மீதான செயற்பாட்டு மதிப்பீட்டின் பின் மற்றுமொரு இரண்டு வருட காலப்பகுதிக்கு புதுப்பிக்கப்படலாம். பிரதம நிறைவேற்று அதிகாரிக்கான அனுமதி அவரின் செயற்பாட்டு பதிவுகளின் அடிப்படையில் இரண்டு தவணைகளுக்கு (மேலதிக நான்கு வருடங்கள்) நீடிக்கப்படலாம். சாதாரண அனுமதிப் பங்கிற்கு மேலதிகமாக அனுமதியளிக்கப்பட்ட (தனித்தனி விடய அடிப்படையில்) வெளிநாட்டவரின் தவணையினை புதுப்பித்தலானது செயற்றிட்டம்/ கொடுக்கப்பட்ட வேலையின் விரிவாக்கம் அல்லது புதிய செயற்றிட்டம்/ ஒதுக்கப்பட்ட வேலை என்பவற்றை மட்டும் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்படும்.

(vi) சாதாரண அனுமதிப் பங்கின் கீழான வெளிநாட்டு அலுவலர்களுக்கான அனுமதி வழங்கும் அதிகாரம் வங்கி மேற்பார்வை பணிப்பாளரின் கீழானதாக இருக்கும். சாதாரண அனுமதி பங்கிற்கு மேலதிகமான வெளிநாட்டு அலுவலர்களின் அனுமதியானது பிரதி ஆளுநரினால் வழங்கப்படும்.

**3.2 உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளுக்கானது**

அனுமதியானது வங்கியினுடைய குறிப்பிட்ட தேவைகளை கருத்தில் எடுத்து தனித்தனியாக ஆராயப்பட்டு அதன் அடிப்படையில் வழங்கப்படும். கீழ்வரும் துறைகளில் வெளிநாட்டு வல்லுனர்களின் தொழிலுக்கமர்த்துவதின் மீது விசேட அக்கறை செலுத்தப்படும்.

(அ) பாசல் II ஐ அடிப்படையாகக் கொண்ட இடர்நேர்வு முகாமைத்துவம்

(ஆ) பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள்

(இ) இடர்நேர்வு மாதிரி மற்றும் தரவு சேமிப்பகம்

(ஈ) பெறுதிச் சாதனங்களின் கட்டமைப்பு

(உ) கம்பனி ஆளுகை

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0006/12**

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்

2007 சனவரி 11

*உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்*

**நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி**

வர்த்தக வங்கித்தொழில் முறையில் மிகையான திரவத்தன்மை காணப்படுகின்ற நாட்களில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் கிடைக்காது என்பதனை அறிவிக்கின்ற மேற்குறிப்பிட்ட விடயம் மீதான 2006 திசெம்பர் 26ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை எண்: 35/01/005/0006/11 இற்கு மேலதிகமாக.

அவசர திரவத்தன்மை தேவைப்பாடுகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு, இறுதிக் கடன்படும் முறையாக மாத்திரம் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினூடாக உதவியைப் பெற எத்தனிக்குமாறும் வேறு முறைகளில் அவற்றின் திரவப் பிரச்சனைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு வர்த்தக வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. 2007 சனவரி 16ஆம் நாள் தொடக்கம் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டே எந்வொரு நிவாரணமும் வழங்கப்படும் என்பது பற்றி அவற்றிற்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

1. மத்திய வங்கி மதிப்பீடுகளின்படி, வர்த்தக வங்கித்தொழில் முறைகளில் மிகையான திரவசத்தன்மை காணப்படும் நாட்களில் மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் கிடைக்காது.

2. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் குறிப்பிட்ட வங்கியொன்றிற்கு

   ➢ 2007 மாச்சு 31 வரை கலண்டர் மாதமொன்றுக்கு 6 தடவைகள் வரையும், அத்துடன்

   ➢ அதன் பின்னர் கலண்டர் மாதமொன்றிற்கு 3 தடவைகள் வரை மாத்திரம்

3. குறிப்பிட்ட நாளொன்றில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தின் மொத்தத் தொகை, மத்திய வங்கியின் மதிப்பீடுகளின்படி குறிப்பிட்ட நாளில் வர்த்தக வங்கித்தொழில் முறையில் காணப்பட்ட திரவத்தன்மை பற்றாக்குறையினை விஞ்சக்கூடாது

**பதில் பணிப்பாளர்**
உள்நாட்டுத்தொழிற்பாடுகள்

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0010/06**

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்

2007 மாச்சு 29

*உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்*

**நாணயக்கடிதத்திற்கெதிரான வரையறைத் தேவைப்பாடுகள்**

அட்டவணை அ1இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் (இணைக்கப்பட்டுள்ளது) இறக்குமதிக்காக, 2006 ஒத்தோபர் 18ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை எண்: 35/01/005/0010/05 இன் மூலம் விதிக்கப்பட்ட நாணயக்கடிதம் திறக்கப்படுகின்ற நேரத்திலுள்ள பொருள் பட்டியல் பெறுமதியில் 50 சதவீதத்தில் விதிக்கப்பட்டிருந்த அளவு வைப்புத் தேவைப்பாடு 2007 மாச்சு 30ஆம் நாள் தொடக்கம் புறக்கீடு செய்யப்படுவது பற்றி அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**பதில் பணிப்பாளர்/ உள்நாட்டுத்தொழிற்பாடுகள்**
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினது
அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பக்காரர்

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0006/13**

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்

2007 ஓகத்து 23

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்*

## நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி

இலங்கை மத்திய வங்கி அதன் கொள்கை வீதங்களில் நேர்மாற்று கொள்வனவு வசதியினை வழங்குவதிலும் பங்கேற்கும் நிறுவனங்களிடையே (வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள்) நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகளின் கீழ் முன் வைக்கப்பட்ட தொகைகளை ஒதுக்கீடு செய்வதிலும் 2007.08.23ஆம் நாளிலிருந்து மறு அறிவித்தல் வரை பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றும். நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியினைத் தீர்ப்பனவு செய்வது தொடர்பாக 2004.01.27ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை எண்: 35/01/005/006/04 இன் பிரிவு இ (ஆ) இன் விடயம் 5, 6, 7, 8, 9, 10, 11 மற்றும் 12 என்பன ஏற்புடைத்தாக இருக்கும். (இலகுவான உசாத்துணையின் பொருட்டு எமது சுற்றறிக்கையின் பிரதியொன்று இணைக்கப்பட்டுள்ளது.)

1. இலங்கை மத்திய வங்கியின் மதிப்பீடுகளின்படி, மிகையான திரவத்தன்மைகள் இருக்கும் நாட்களில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் கிடைக்காது.

2. இலங்கை மத்திய வங்கியின் மதிப்பீடுகளின்படி, திரவத்தன்மை பற்றாக்குறை காணப்படும் வேளைகளில் முறைமையிலுள்ள பற்றாக்குறையின் முழுத்தொகையினையும் ஈடு செய்யும் விதத்தில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

3. சந்தையில் பற்றாக்குறை நிலவும் நாட்களில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறையில் நிலையியல் வசதியின் கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் மொத்தத் தொகையினை 09.30 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ அறிவிக்கும்.

4. இவ்வசதியினைப் பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் தமது தேவைப்பாடுகளை தொலைபேசி மூலம் அல்லது தொலைநகல் செய்தி மூலம் 10.30 மணிக்கு முன்னர் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

5. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனங்களினாலும் கேட்டுக் கொள்ளப்பட்ட தொகையின் அடிப்படையில் வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட மொத்தத் தொகையினை ஒதுக்கீடு செய்யும். கேட்டுக் கொள்ளப்பட்ட மொத்தத் தொகை வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட மொத்தத் தொகையினைவிட உயர்வாக இருப்பின் ஒதுக்கீடு விகிதசம அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

6. பெறுபேறுகள் ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனத்திற்கும் 11.00 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ தொலைபேசி அல்லது தொலைநகல் மூலமாக அறிவிக்கப்படும்.

7. பங்கேற்கும் நிறுவனங்கள், ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகையினையும் பத்திரங்களற்ற பிணையங்களின் விபரங்களையும் உடனடியான இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள வசதியைப் பயன்படுத்தி 12.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

8. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படும் -

   அ. குறிப்பிட்ட பங்கேற்பாளரின் அவசர திரவத் தேவைப்பாடொன்றினைக் கட்டுப்படுத்துவதற்காக இறுதிக்கடன் ஈவோன் என்ற முறையில் மாத்திரம் வசதியைக் கிடைக்கச் செய்தல்.

   ஆ. வசதியைக் கோருகின்ற பங்கேற்பாளர் அதே நாளன்று பணச்சந்தையில் கடன்வழங்குநராக இருக்கக்கூடாது.

   இ. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் கீழ் கடன்பட்ட நிதியத்தினை, மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் ஒதுக்கு கணக்கிலுள்ள மிகையான ஒதுக்குகளைக் கட்டியெழுப்பப் பயன்படுத்தக்கூடாது

**பணிப்பாளர்**
**உள்நாட்டுக் தொழிற்பாடுகள்**

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0006/14**

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்

2007 நவெம்பர் 21

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்*

**நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி**

இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வீதங்களில் நேர்மாற்று கொள்வனவு வசதியினை வழங்குவதிலும் பங்கேற்கும் நிறுவனங்களிடையே (வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள்) நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகளின் கீழ் முன் வைக்கப்பட்ட தொகைகளை ஒதுக்கீடு செய்வதிலும் **2007 திசெம்பர் 3** ஆம் நாளிலிருந்து மறு அறிவித்தல் வரை பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றும். நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியினைத் தீர்ப்பனவு செய்வது தொடர்பாக 2004.01.27ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை எண்: 35/01/005/006/04 இன் பிரிவு இ (ஆ) இன் விடயம் 5, 6, 7, 8, 9, 10, 11 மற்றும் 12 என்பன ஏற்புடைத்தாக இருக்கும். (இலகுவான உசாத்துணையின் பொருட்டு எமது சுற்றறிக்கையின் பிரதியொன்று இணைக்கப்பட்டுள்ளது.)

1. இலங்கை மத்திய வங்கியின் மதிப்பீடுகளின்படி மிகையான திரவத்தன்மைகள் இருக்கும் நாட்களில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் கிடைக்காது.

2. இலங்கை மத்திய வங்கியின் மதிப்பீடுகளின்படி திரவத்தன்மை பற்றாக்குறை காணப்படும் வேளைகளில் முறைமையிலுள்ள பற்றாக்குறையின் முழுத்தொகையினையும் ஈடு செய்யும் விதத்தில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

3. சந்தையில் பற்றாக்குறை நிலவும் நாட்களில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறையில் நிலையியல் வசதியின் கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் மொத்தத் தொகையினை 09.30 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ முன் அறிவிக்கும்.

4. இவ்வசதியினைப் பயன்படுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் தமது தேவைப்பாடுகளை தொலைபேசி மூலம் அல்லது தொலைநகல் செய்தி மூலம் 10.30 மணிக்கு முன்னர் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

5. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனங்களினாலும் கேட்டுக் கொள்ளப்பட்ட தொகையின் அடிப்படையில் வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட மொத்தத் தொகையினை ஒதுக்கீடு செய்யும். கேட்டுக் கொள்ளப்பட்ட மொத்தத் தொகை வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட மொத்தத் தொகையினைவிட உயர்வாக இருப்பின் ஒதுக்கீடு விகிதசம அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

6. பெறுபேறுகள் ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனத்திற்கும் 11.00 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ தொலைபேசி அல்லது தொலைநகல் மூலமாக அறிவிக்கப்படும்.

7. பங்கேற்கும் நிறுவனங்கள், ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகையினையும் பத்திரங்களற்ற பிணையங்களின் விபரங்களையும் உடனடி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள வசதியைப் பயன்படுத்தி 12.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

8. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படும் -

   அ. குறிப்பிட்ட பங்கேற்கும் நிறுவனமொன்றிற்கு அப்போது நிலவும் மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் கலண்டர் மாதமொன்றிற்கு நான்கு (4) தடவைகள் மாத்திரமே நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி கிடைக்கத்தக்கதாக இருக்கும். கலண்டர் மாதமொன்றில் குறிப்பிட்ட பங்கேற்கும் நிறுவனம் 4 தடவைகளுக்கும் கூடுதலாகக் கடன்பாடுகளை மேற்கொள்ளின் ஆண்டொன்றிற்கு 19 சதவீதமாக தண்ட வீதத்தில் அது வழங்கப்படும். அத்தகைய தண்ட வீதம் 2008 சனவரி 31 வரை ஏற்புடையதாயிருக்கும்.

   ஆ. தண்ட வீதம் காலத்திற்குக் காலம் மீளாய்விற்கு உட்படும் என்பதுடன் அப்போது நிலவும் நாணய நிலைகளுக்குஅமைய மாற்றமடையக்கூடும்.

   இ. குறிப்பிட்ட பங்கேற்பாளரின் அவசர திரவத் தேவைப்பாடொன்றினைக் கட்டுப்படுத்துவதற்காக இறுதிக்கடன் ஈதல் என்ற முறையில் மாத்திரம் வசதியைக் கிடைக்கச் செய்தல்.

   ஈ. வசதியைக் கோருகின்ற பங்கேற்பாளர் அதே நாளன்று பணச்சந்தையில் தேறிய கடன்வழங்குநராக இருக்கக்கூடாது.

   உ. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் கீழ் கடன்பட்ட நிதியத்தினை, மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் ஒதுக்கு கணக்கிலுள்ள மிகையான ஒதுக்குகளைக் கட்டியெழுப்பப் பயன்படுத்தக் கூடாது.

**பணிப்பாளர்**
**உள்நாட்டுக் தொழிற்பாடுகள்**

**தொடர்பு: 06/04/01/2007**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 1.

2007 சனவரி 08

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

## இரட்டைப் பிரசாவுரிமையுடைய விண்ணப்பத்தாரர்களுக்கான வெளிநாட்டு நாணய நிலையான வைப்புக் கணக்குகள்

இரட்டைப் பிரசாவுரிமை அந்தஸ்திற்காக விண்ணப்பிக்கக்கூடிய முன்னாள் இலங்கையர்/ இலங்கையர்களுக்காக இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு நாணய நிலையான வைப்புத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், பிரதான விண்ணப்பதாரர், குறைந்தபட்சம் 3 ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 50,000 இனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் நிலையான வைப்பிலிடுவாராயின் குடும்ப அலகிற்கு அல்லது தனிப்பட்ட ஒருவருக்கு இரட்டை பிரசாவுரிமை வழங்குவதற்காக விதிக்கப்படும் எந்த ஒரு கட்டண விதிப்பிலிருந்தும் விலக்களிக்கப்படுகின்ற வேளையில், முதன்மை விண்ணப்பதாரர் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் ஐ.அ.டொலர் 25,000 இனை நிலையான வைப்பிலிடுவாராயின் குடும்ப அலகொன்றிற்கு அல்லது தனிப்பட்ட விண்ணப்பதாரர் மீது ரூ.200,000 கொண்ட கட்டணம் விதிக்கப்படும்.

2. அத்தகைய வெளிநாட்டு நாணய வைப்புக்களை ஏற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தமது உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் இரட்டைப் பிரசாவுரிமை கொண்ட விண்ணப்பதாரர்களின் சார்பில் நிலையான வைப்புக் கணக்குகளை திறப்பதற்கு இத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

3. இரட்டை பிரசாவுரிமைக்காக பிரதான விண்ணப்பதாரரின் பெயரில் வெளிநாட்டு நாணய வைப்புக் கணக்கினை திறக்கலாம் என விதந்துரைத்து குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட கடிதத்தினை சமர்ப்பிப்பதன் மூலம் ஒன்றில் ஐ.அ.டொலர் 50,000 அல்லது ஐ.அ.டொலர் 25,000 (அல்லது இதற்கு சமமான வேறு எந்தவொரு மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்திலும்) கொண்ட குறைந்த மூலதனத்துடன் இக்கணக்குகளைத் திறக்க முடியும்.

4. இக் கணக்குகளின் தொழிற்பாடு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டதாக இருக்கும்.

**அ. வரவுகள்**

(i) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களூடாக பெறப்பட்ட மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்திலான உள்வரும் பணவனுப்பல் அல்லது கணக்கு வைத்திருப்பவர் அவரது இலங்கைக்கான தற்காலிக விஜயத்தின் போது நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்.

(ii) கணக்கு வைத்திருப்பவரின் ஏற்கனவேயுள்ள வதியாதோர் வெளிநாட்டு நாணய கணக்குகளிலிருந்து மாற்றல் செய்யப்பட்ட நிதியம்.

(iii) கணக்கிலுள்ள நிதியத்தின் மீது வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்பட்ட வட்டி.

**ஆ. பற்றுக்கள்**

(i) வைப்புக்களின் மீது ஒன்று சேர்ந்த வட்டி

5. வைப்புக்கள் மீதான ஒன்று சேர்ந்த வட்டியை எவ்விதமான கட்டுப்பாடுமின்றி அனுப்பலாம். கணக்காளரின் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு மாற்றம் செய்யலாம் அல்லது கணக்கு வைத்திருப்பவரின் உள்ளூர் செலவுகளுக்காக மாற்றிக் கொள்ளலாம்.

6. செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் அனுமதி இல்லாமல் வைப்பின் முதிர்ச்சிக் காலத்திற்கு முன்னதாக வைப்பினையோ அல்லது அதன் ஒரு பகுதியினையோ மீளப் பெறுவதற்கு அனுமதியளிக்கக்கூடாது.

7. **அறிக்கையிடும் தேவைப்பாடு**

இத்திட்டத்தின் கீழ் திறக்கப்பட்ட வெளிநாட்டு நாணய நிலையான வைப்புக் கணக்கு ஒவ்வொன்றும் தொடர்பான பின்வரும் தகவல்களை கணக்குத் திறக்கப்பட்டு ஒருவார காலத்திற்குள், குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கான ஒரு பிரதியுடன் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 'டி' கிளைக்கு சமர்ப்பிக்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(அ) கணக்குத் திறக்கப்பட்ட நாளும் கணக்கு வைத்திருப்பவரின் பெயர் மற்றும் முகவரி, அத்துடன்

(ஆ) வைப்பிலிடப்பட்ட நிதியின் தொகையும் வைப்பின் முதிர்ச்சித் திகதியும்

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதி விசேடமானது**

**இல. 1481/1 திங்கட்கிழமை, சனவரி 22, 2007**

**பகுதி I: தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

இலங்கை மத்திய வங்கி

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (423ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7, 10, 11 மற்றும் 15ஆம் பிரிவுகள் தொடர்பிலான அனுமதி

1. **அனுமதி:-** இலங்கை செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் தொடர்பில் ஏற்புடையதாயிருக்கின்ற 7ஆம், 10ஆம், 11ஆம் மற்றும் 15ஆம் பிரிவுகளின் நோக்கங்களின் பொருட்டு, இதனகத்துப்பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நிதியங்கள், பிரதேச நிதியங்கள் அல்லது ஒத்துழைப்பு நிதியங்களுக்கும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களுக்கும் அத்துடன் வெளிநாட்டுப் பிரசைகளுக்கும் இலங்கை ரூபாவினால் குறித்துரைக்கப்பட்டுள்ள திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்தல், உரிமை மாற்றம் செய்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் சார்பில் கொடுப்பனவு செய்யும் பொருட்டு இத்தால் அனுமதியளிக்கப்படுகின்றது.

2. **நிபந்தனைகள்:-** (அ) மேற்குறிப்பிட்ட வெளிநாட்டு முதலீட்டாளர் வகையினரால் கொள்வனவு செய்யப்படும் எந்த ஒரு திறைசேரி முறியும் தற்போதுள்ள பொதுப்படுடன் முறையினைப் பயன்படுத்தி, முதலாந்தர அல்லது இரண்டாந்தர சந்தைகளூடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய திறைசேரி முறிபொன்றினை கொள்வனவு செய்யும் வெளிநாட்டு முதலீட்டாளர் வைத்திருக்க வேண்டிய காலப்பகுதி ஒன்றுமில்லாமலே இரண்டாந்தரச் சந்தையில், ஒன்றில் இலங்கையில் வதிகின்ற அல்லது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற எந்த ஒரு ஆளுக்கும் திறைசேரி முறிகளை விற்க அல்லது மாற்றல் செய்யக்கூடியவராக இருப்பார்.

(ஆ) இதன் கீழ் அனுமதியளிக்கப்பட்டுள்ள, இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற திறைசேரி முறிகள் தொடர்பிலான ஏதேனும் வெளியிடுதல் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவானது, வெளிநாட்டு முதலீட்டாளரின் பெயரில் இலங்கையின் வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்படுகின்ற "திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிவாரி ரூபாய்க் கணக்குக்கு" (திமுவெரூக) அல்லது அக்கணக்கிலிருந்து மாத்திரமே நடைபெறுதல் வேண்டும்.

(இ) இதன் கீழ் அனுமதியளிக்கப்படுகின்ற ஏதேனுமொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான முறிகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற மூலதனத்தொகையை மற்றும் முறிகள் தொடர்பிலான வட்டித் தொகையைச் செலுத்துதல் தொடர்பான பொறுப்பு ஒப்புடைக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கி அல்லது உரிமம் பெற்ற முதனிலை வணிகர் அல்லது தரகர் அல்லது வேறு ஆள் எவரும் மேற்படி துணைப்பந்தி (ஆ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிவாரி ரூபாய்க் கணக்குக்கு (திமுவெரூக) அல்லது அக்கணக்கிலிருந்து மாத்திரமே கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்.

(ஈ) கணக்கு உரிமையாளரால் செய்யப்படவேண்டியுள்ள உள்நாட்டுக் கொடுப்பனவுகள் ஏதேனும் இருப்பின், அக்கொடுப்பனவுகளைச் செய்ததன் பின்னர் திமுவெரூக கணக்கிலுள்ள நிதியங்களைத் தடையின்றி அனுப்பீடு செய்யலாம்.

***வரைவிலக்கணம்:*** மேற்படி பொது அனுமதியின் நோக்கத்தின் பொருட்டு -

"வெளிநாட்டு முதலீட்டாளர்" என்பது பின்வரும் முதலீட்டாளர்களை உள்ளடக்குகின்றது.

(அ) இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நிதியங்கள், பிரதேச நிதியங்கள் அல்லது ஒத்துழைப்பு நிதியங்கள்;

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனங்கள்; மற்றும்

(இ) வெளிநாட்டுப் பிரசைகள்

**டீ.வசந்த.**

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

கொழும்பு,

2007 சனவரி 22

தொடர்பு: 06/04/03/2007

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 1.

2007 சனவரி 22

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா,

**வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் செய்யப்படும் முதலீடு**

1. இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாடுகளின் நிதிகள், பிராந்திய நிதிகள் அல்லது இருவாயினொத்த நிதியங்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச்சபைகள், மற்றும் வெளிநாடுகளின் பிரசைகள் ஆகியோர் ரூபா நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளை குறிப்பிட்ட எந்த ஒரு நேரத்திலும் வெளிநிற்கும் திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியில் 5% இனை விஞ்சாத விதத்தில் கொள்வனவு செய்யவும் வைத்திருக்கவும் அனுமதிப்பதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. ஆகவே, வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கொண்ட மேலேயுள்ள வகையினர், தற்போதுள்ள பொதுப்படுகடன் கணனி முறையினைப் பயன்படுத்தி முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைகளூடாக திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யவும், வைத்திருக்கவும் மாற்றல் செய்யவும் அனுமதிக்கப்பட்டனர். அத்தகைய திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்த வெளிநாட்டு முதலீட்டாளர் இம்முறியினை எந்தவொரு ஆளுக்கும், அவர் இலங்கையில் வதிபவராயினும் சரி இலங்கைக்கு வெளியில் வதிபவராயினும் சரி வைத்திருக்கும் எந்தவொரு காலப்பகுதியின் தேவைப்பாடுமின்றி விற்பனை செய்யலாம் அல்லது மாற்றல் செய்யலாம்.

2. இத் தீர்மானத்திற்கு வலுவளிக்கும் பொருட்டு 2007.01.22ஆம் நாளிடப்பட்ட எண் 1481/1 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலொன்றில் என்னால் பொது அனுமதியொன்று வழங்கப்பட்டிருக்கிறது.

3. இதன்படி, திறைசேரி முறிகளில் அவர்களது முதலீடுகளை வசதிப்படுத்தும் நோக்கத்திற்காக பின்வரும் வழிகாட்டல்களுக்கு உட்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பின்வரும் வகைகளின் பெயர்களில் திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளை திறக்கவும் தொழிற்படுத்தவும் இத்தால் அனுமதியளிக்கப்படுகிறது.

(அ) இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாடுகளினது நிதியங்கள், பிராந்திய நிதியம் அல்லது இருவாயினொத்த நிதியங்கள்

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச்சபைகள்; அத்துடன்

(இ) வெளிநாட்டு பிரசைகள்

I) கணக்குகளுக்கான வரவுகளும் பற்றுக்களும் பின்வருவனவற்றிற்கு கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

**வரவுகள்:**

i) வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உள்வரும் பணவனுப்பல்கள் அத்துடன்/ அல்லது பங்குகளில் முதலீடு செய்வதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் திறக்கப்பட்ட பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளிலிருந்தான மாற்றல்கள்.

ii) முதிர்ச்சி நாளன்று பெறப்பட்ட திறைசேரி முறிகளின் விற்பனைப் பெறுகைகளும் முதல் தொகையும்.

iii) கணக்கு வைத்திருப்பவர் வசமுள்ள திறைசேரி முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவு.

**பற்றுக்கள்**

i) திறைசேரி முறிகளில் முதலீடு செய்வதற்கான கொடுப்பனவுகள்.

ii) வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளுக்கான மாற்றல்கள்.

iii) முதனிலை வணிகர்கள் மற்றும் வங்கிக் கட்டணங்களுக்கான கொடுப்பனவுகள்.

iv) வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உள்ளூர் செலவினங்கள்.

v) திறைசேரி முறிகளின் விற்பனைப் பெறுகைகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல்.

vi) திறைசேரி முறிகளின் மீது ஈட்டப்பட்ட வட்டியினை வெளிநாட்டிற்கு அனுப்புதல்.

II) **அறிக்கையிடும் தேவைப்பாடுகள்**

i) பற்றுக்கள் மற்றும் வரவுகளின் விபரங்களை எடுத்துக் காட்டுகின்ற ஒவ்வொரு மாதத்திற்குமான திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கின் கூற்றுக்களை செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு (சி மற்றும் எவ் கிளை) அடுத்து வரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைக்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ii) நாளொன்றின் முடிவில் ஒவ்வொரு திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளுக்கும் செய்யப்பட்ட வரவுகள் மற்றும் பற்றுக்களின் விபரங்களை/ பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளுடாக பங்குகளில் செய்யப்பட்ட முதலீடுகளை அறிவிப்பதற்காக ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள உடனடிக் கணனி முறையினைப் பயன்படுத்தி உடனடி கணனி முறையூடாக சமர்ப்பிக்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

4. 2006.11.01 நாளிடப்பட்ட தொடர்பு எண்: 06/04/07/2006 இன் கீழ் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக வழங்கப்பட்ட முன்னைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

படி: ஆளுநர்

ப.ஆ. (டபிள்யூ)

ப.ஆ. (ஜே)

உ.ஆ. (ஜி)

தொடர்பு: 06/07/04/2007

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

த.பெ. 590

கொழும்பு 1.

2007 மாச்சு 02

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**பயன்படுத்தப்பட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான ஏற்றுமதி பரிசோதனைச் சான்றிதழ்**

மேற்குறிப்பிட்ட விடயம் பற்றிய 2006 ஓகத்து 1ஆம் நாளிடப்பட்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: 06/07/04/2006 தொடர்பானது.

இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரினால் அவரின் 26.01.2007 நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் மூலம் தங்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு 21.07.2006ஆம் நாளிடப்பட்ட எண் 1454/30 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் 2007 மாச்சு 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

ஆகவே, 2007 மாச்சு 01ஆம் நாள் தொடக்கம் மேலேயுள்ள தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் 2006 ஓகத்து 1ஆம் நாளிடப்பட்ட எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் 06/07/04/2006 இன் விடயம் 4 இற்கு பின்வருவனவற்றைப் பதிலீடு செய்வதன் மூலம் பின்பற்றுமாறு இத்தால் நீங்கள் அறிவிக்கப்படுகின்றீர்கள்.

> **"4. உந்து ஊர்திகள் 2007 மாச்சு 1ஆம் நாளன்று கப்பற்படுத்தப்படாது இருக்கும் விடயத்தினைப் பொறுத்தவரை, அத்தகைய நாணயக்கடிதம், மேலே இல. 2 மற்றும் 3இல் தேவைப்படுத்தப்பட்டவாறு திருத்தப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும்"**

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

தொடர்பு: 06/07/05/2007

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 1.

2007 மார்சு 05

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**இலத்திரனியல் பயணச்சீட்டினை சமர்ப்பிப்பதன் மூலம் பயணத்திற்கான வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குதல் (ஈ பயணச்சீட்டு)**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 1994.03.19ஆம் நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் ஈசி/06/94 இன் எனது வழிகாட்டல்களின் பந்தி 2இன் ''இ'' விடயத்தின் பால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. இதில் வெளிநாட்டில் கல்வி மற்றும் மருத்துவ சிகிச்சை பெறுவது உட்பட எந்த ஒரு நோக்கத்திற்குமான வெளிநாட்டு பயணத்திற்கான வெளிநாட்டுச் செலாவணியினை, அவற்றிற்கான கோரிக்கையின் உண்மைத் தன்மையினை சரிபார்த்து வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளில், இலங்கையில் வசிப்பவர்களான பயணிகளுக்கு, திரும்பி வருவதற்கான வான் பயணச் சீட்டு மற்றும் கடவுச்சீட்டுடன் கூடிய செல்லுபடியாகும் விசா என்பனவற்றை சமர்ப்பிப்பதன் மீது வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஆலோசனை வழங்கப்பட்டனர். எனினும், தற்பொழுது வான் வழி தொழில் துறையினர் மரபு வழி தாள் பயணச் சீட்டுகளுக்குப் பதிலாக **ஈ பயணச்சீட்டுக்களை** வழங்குவதற்கு மாறியிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

ஆகவே, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் திரும்பி வரக்கூடிய **ஈ பயணச்சீட்டு** அல்லது தாள் வடிவ பயணச்சீட்டுக்களையும் கடவுச்சீட்டுடன் கூடிய செல்லுபடியாகும் விசா என்பனவற்றையும் அவர்களின் கோரிக்கையின் உண்மைத் தன்மையினையும் சரிபார்த்து பயண நோக்கங்களுக்கான வெளிநாட்டுச் செலவாணியினை வழங்குவதற்கு இத்தால் அனுமதிக்கப்படுகின்றனர்.

எனினும், வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குவதற்கு **ஈ பயணச்சீட்டினை** ஏற்றுக் கொள்கின்ற வேளையில், தொடர்பான வான் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பயணச்சீட்டின் விபரங்களைத் தாங்கிய அச்சுத்தாளைப் பெற்றுக் கொள்வதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**சுற்றறிக்கை எண்: 06/04/06/2007**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

த.பெ. 590

கொழும்பு-1

2007 மார்ச் 19

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

**வதியும் விருந்தினர் திட்டம் - சிறப்புக் கணக்குகள்**

நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக - கலாச்சார அபிவிருத்திகளுக்கு பங்களிக்கக்கூடிய வாய்ப்புக்களைக் கொண்ட வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்களுக்கான ஊக்குவிப்புகளைக் கொண்ட பொதியின் ஒரு பகுதியாக, 1991இல் இலங்கை அரசாங்கத்தினால் வதியும் விருந்தினர் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் தொழில்சார் நிபுணர்களும் முதலீட்டு நோக்கங்களுக்காக நிதிகளை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதுடன் இலங்கையில் அவற்றின் பேணல் பின்வருமாறு இருக்கும்.

**முதலீட்டாளர்கள்**

இலங்கையில் முதலீடு செய்வதற்காக ஐ.அ.டொலர் 250,000 அல்லது மாற்றத்தக்க ஏதாவது வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமனான தொகை, அத்துடன் முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டாளருடன் சேர்ந்துள்ள தங்கியுள்ளவர்களினதும் இலங்கையின் பராமரிப்பிற்காக ஒவ்வொரு ஆளுக்கும் ஐ.அ.டொலர் 35,000 கொண்ட மேலுமொரு தொகை.

**தொழில்சார் நிபுணர்கள்**

இலங்கையில் வதியும் எண்ணம் கொண்டுள்ள தொழில்சார் நிபுணர்களின் வாழ்க்கைச் செலவிற்காக மாதமொன்றிற்கு ஐ.அ.டொலர் 2,000 கொண்ட தொகையும் வாழ்க்கைத் துணைவர் உட்பட தங்கியிருப்போர் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றிற்கு ஐ.அ.டொலர் 1,000 கொண்ட தொகை.

2. இத்திட்டத்தின் கீழ் முதலீட்டாளர்களினாலும் தொழில்சார் நிபுணர்களினாலும் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட நிதியத்தினை வைப்புச் செய்யும் நோக்கத்திற்காக, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தமது உள்நாட்டு பிரிவுகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புக் கணக்குகளை செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் அனுமதியுடன் திறப்பதற்கு இத்தால் அனுமதிக்கப்படுகிறது.

**(I) முதலீட்டாளர்களுக்கான சிறப்புக் கணக்குகள்**

**(i) வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்**

<u>வரவுகள்</u>

இக் கணக்குகள், வங்கித்தொழில் வழிமுறைகளினூடாக இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட அல்லது இலங்கையில் முதலீடு செய்வதற்கென சுங்கத்திற்கு வெளிப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச ஆரம்ப தொகையான ஐ.அ.டொலர் 250,000இனை அல்லது அதற்குச் சமமான மாற்றத்தக்க ஏதாவது வெளிநாட்டு நாணயத்தினை வைப்புச் செய்யும் நோக்கத்திற்காக திறக்கப்படல் வேண்டும்.

<u>பற்றுக்கள்</u>

அ. பின்வரும் நோக்கத்திற்காக செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் அனுமதி இல்லாமலே இக்கணக்கிலிருந்து எடுப்பனவுகளைச் செய்ய அனுமதிக்கப்படும்.

(அஅ) தொடர்பான ஒப்புதல்களைப் பெற்றமைக்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிப்பதற்கு உட்பட்டு "ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில்" முதலீடு

இத்திட்டத்தின் நோக்கத்திற்காக "ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள்" என்பது

(i) இலங்கையின் முதலீட்டுச்சபையினால் அல்லது தொடர்பான அதிகாரசபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட புதிய முயற்சிகள்;

(ii) தொடர்பான அதிகாரசபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் ஈடுபட்டுள்ள ஏற்கனவேயுள்ள அல்லது புதிய கம்பனிகள்; அத்துடன்

(iii) கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட பங்குகள்

(ஆஆ) நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு பயன்படுத்தப்படாது கணக்கில் வைக்கப்பட்டுள்ள ஐ.அ.டொலர் 250,000 இற்கு மிகையான தொகை அல்லது அதற்குச் சமனான மாற்றத்தக்க ஏதாவது வெளிநாட்டு நாணயம்.

ஆ. முதலீடு தவிர்ந்த வேறு எந்த ஒரு நோக்கத்திற்குமான எடுப்பனவுகளும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் அனுமதியுடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும். இது, திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் முகவரின் இணக்கப்பாட்டுடனேயே வழங்கப்படும்.

இக் கணக்கில் பயன்படுத்தப்படாதிருக்கும் நிலுவைக்கு ஆரம்பத்தில் இரண்டாண்டு காலப்பகுதிக்கு, வதியாதோர் வெளிநாட்டு நாணய கணக்கிற்கு செலுத்தத்தக்க வட்டி வீதத்தினை விஞ்சாததொரு வட்டி வீதத்தில் வட்டி செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வட்டி செலுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர். அத்தகைய வட்டிக் கொடுப்பனவுகள் மேலே குறிப்பிடப்பட்ட முதலீட்டாளர் வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட வேண்டும்.

செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் அனுமதி இல்லாமல் ஆரம்ப இரண்டாண்டு காலம் முடிவடைந்த பின்னர் வட்டி எதுவும் செலுத்தப்படக்கூடாது.

## (II) வதிவோர் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்கு - முதலீட்டாளர்கள் (வவிரூநக - முதலீட்டாளர்கள்)

இக்கணக்குகளை நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட குறைந்த பட்சம் ஐ.அ.டொலர் 35,000 அல்லது அதற்கு சமனான மாற்றத்தக்க ஏதாவது வெளிநாட்டு நாணயத்துடன், செலாவணிக் கட்டுப்பாட்டாளர்கள் முன் அனுமதியினைப் பெற்ற பின்னர் திறக்க முடியும்.

<u>வரவுகள்</u>

இக்கணக்குகளுக்கான வரவுகள் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

(i) முதலீட்டாளர்களினால் அவரினதும் அவரில் தங்கியிருப்போரினதும் வாழ்க்கைச் செலவிற்காக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் ரூபாப் பெறுகைகள்

(ii) முதலீட்டாளரின் வதிவோர் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் வைத்திருக்கப்படும் நிதியங்களின் மீது செலுத்தப்பட்ட வட்டியினை இலங்கை ரூபாவிற்கு மாற்றிய தொகை.

(iii) முதலீட்டிலிருந்தான (பங்கிலாபம், இலாபம், வருமானம்) வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான நிதியத்திலிருந்து செய்யப்பட்ட முதலீட்டிலிருந்து பெறப்பட்ட பங்குகளின் விற்பனைப் பெறுகைகள்.

<u>பற்றுக்கள்</u>

(அ) இக்கணக்கிற்கான பற்றுக்கள் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(i) முதலீட்டாளரினதும் அவரில் தங்கியிருப்போரினதும் உள்ளூர் செலவுகள்.

(ii) மேலே பந்தி 2(1) (i) (அ) (அஅ)இல் குறிப்பிடப்பட்ட ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் முதலீடு.

(iii) முதலீட்டாளர் அத்துடன் அல்லது இலங்கையில் வதியும் அவரில் தங்கியிருப்போரின் நடைமுறை பன்னாட்டு கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவுகளுக்கான வெளிச்செல்லும் பணவனுப்பல்கள்.

(ஆ) மேலே (i), (ii) மற்றும் (iii)இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு நோக்கத்திற்குமான எடுப்பனவுகளும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் ஒப்புதலுடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும். இது இத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் முகவரின் இணக்கப்பாட்டுடனேயே வழங்கப்படும்.

## (III) வதியும் விருந்தினர் ரூபா நடைமுறைக் கணக்கு - தொழில்சார் நிபுணர்கள் (வவிரூநக - நிபுணர்கள்)

இக்கணக்குகளை, நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட குறைந்தபட்சம் ஐ.அ.டொலர் 2,000 அல்லது அதற்குச் சமனான மாற்றத்தக்க ஏதாவது வெளிநாட்டு நாணயம் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்ட தொகை என்பனவற்றுடன் வெளிநாட்டு தொழில்சார் நிபுணர்களின் பெயரில் திறக்க முடியும்.

<u>வரவுகள்</u>

இக்கணக்குகளுக்கான வரவுகள் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

(i) கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் அவரில் தங்கியிருப்போரின் வாழ்க்கைச் செலவிற்காக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் ரூபாப் பெறுகைகள்; அத்துடன்

(ii) இலங்கையில் கணக்கு வைத்திருப்பவரினால், வழங்கப்பட்ட தொழில்சார் நிபுணத்துவ பணிகளுக்காக பெறப்பட்ட சம்பளம் மற்றும் ஆலோசனைக் கட்டணம் போன்றவை.

<u>பற்றுக்கள்</u>

(அ) இக்கணக்கிற்கான பற்றுக்கள் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(i) கணக்கு வைத்திருப்பவரினதும் அவரில் தங்கியிருப்போரினதும் உள்ளூர் செலவுகள்; அத்துடன்

(ii) தொழில்சார் நிபுணர் அத்துடன்/ அல்லது இலங்கையில் வதியும் அவரில் தங்கியுள்ளவர்களின் நடைமுறை பன்னாட்டு கொடுக்கல் வாங்கல் கணக்கின் மீதான கொடுப்பனவுகளுக்கான வெளிச் செல்லும் பணவனுப்பல்கள்.

(ஆ) மேலே அ(i) மற்றும் (ii)இல் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த வேறு ஏதாவது நோக்கங்களுக்கான எடுப்பனவுகள் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் ஒப்புதலுடனேயே இடம் பெறல்வேண்டும். இது திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் முகவரின் இணக்கப்பாட்டுடனேயே வழங்கப்படும்.

3. அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் மாச்சு, யூன், செத்தெம்பர் மற்றும் திசெம்பருடன் முடிவடைகின்ற ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்த 15 நாட்களுக்குள் இக்கணக்குகளின் காலாண்டு கூற்றுக்களை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் 'டி' கிளைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 1991.02.20 என்று நாளிடப்பட்ட தொடர்பு எண் ஈசிடி/08/91(சி மற்றும் எப்) இன் கீழ் விடுக்கப்பட்ட முன்னைய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

படி: ஆளுநர்

ப.ஆ. (டபிள்யு)

ப.ஆ. (ஜே)

து. ஆ. (சி)

பொ.ஆ.ப.

வ.மே.ப.

ப.தொ.ப

மு.க.

**தொடர்பு எண்: 06/04/07/2007**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு-1

2007 மே 17

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா,

**சரக்குகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல் மற்றும் உள்நாட்டு வான் வழிக்கட்டணம்/ உள்நாட்டு தரையிறங்கும் கட்டணங்கள்/ கப்பலேற்றுபவர்களின் கப்பற் சரக்கு பற்றுச் சீட்டுக்களை வழங்குதல்**

2006.02.01 இலிருந்து இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்துள்ள பின்வரும் சரக்கு அனுப்புவோரை அவர்களது உள்நாட்டு வான்வழிக் கட்டணங்கள்/ உள்நாட்டு வான் தரையிறங்கும் கட்டணங்களை ஏற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக சரக்கு அனுப்புவோர் பட்டியலில் உள்ளடக்குமாறும் ஏற்றுமதிச் சரக்குகள் தொடர்பில் கொடுக்கல் வாங்கல்களுக்காக கப்பற் சரக்கு பற்றுச்சீட்டுக்களை ஏற்றுக் கொள்ளும்படியும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| கப்பற் சரக்கு அனுப்புவோரின் பெயர்கள் | பதிவு எண் |
|---|---|
| 01. றோயல் ஏசியா ஸிப்பிங் கம்பனி (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0196 |
| 02. சீகெயார் போவேடர்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0197 |
| 03. ஏஎஸ்ரி லொஜிஸ்ரிக்ஸ் இன்ரநஷனல் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0198 |
| 04. சேர்மன்ஸ் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0199 |
| 05. ரான்ஸ்கெயார் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0200 |
| 06. ஈகள் லொஜிஸ்ரிக்ஸ் கொழும்பு (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0201 |
| 07. அசற் லிமிடெட் | 06/07/009/0202 |
| 08. கெல்மன் வேள்ட் வயிட் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0203 |
| 09. பீனிக்ஸ் இன்ரநஷனல் லொஜிஸ்ரிக்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0204 |
| 10. லொஜிஸ்ரிக்ஸ் பிளஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0205 |
| 11. ஸ்பீட் இன்ரநஷனல் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0206 |
| 12. வி.வி.கே. மரிட்ரயிம் ஏஜன்சீஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0207 |
| 13. கொன்ரேயினர் கார்கோ லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0208 |
| 14. ஸ்பென்ஸ் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0209 |
| 15. ஷார்ப் இன்ரநஷனல் ஸிப்பிங் அன்ட் ரேடிங் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0210 |
| 16. ஸிப் எயார் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0211 |
| 17. குளோபல் லொஜிஸ்ரிக்ஸ் அன்ட் ஸிப்பிங் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0212 |
| 18. சிபிடிக்கோன் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0213 |
| 19. கலிபொலிங் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0214 |

| | |
|---|---|
| 20. யுனைட்டட் கார்கோ மனேஜ்மன்ட் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0215 |
| 21. பான் ஓசியானிக் இன்ரநஷனல் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0216 |
| 22. ரான்ஸ்ஏசியா ஸிப்பிங் சேர்விசஸ் கொழும்பு (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0217 |
| 23. கிளாரியன் ஸிப்பிங் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0218 |
| 24. வேர்ள்ட் ஸ்கான் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0219 |
| 25. வோர்ட்டவேஸ் இன்ரநஷனல் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0220 |
| 26. செவின் சீஸ் நவிகேசன் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0221 |
| 27. ஐஜேஎஸ் கோளபல் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0222 |
| 28. செரண்டிப் லொஜிஸ்ரிக்ஸ் சொலுஷன் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0223 |
| 29. ஈயுஆர் சேர்விசஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0224 |
| 30. யேலோ பிறேயிட் இன்ரநஷனல் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0225 |
| 31. ஜேஏஎல் ஸிப்பிங் அன்ட் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0226 |
| 32. ரிறைய் ஸ்ரார் ஸிப்பிங் இன்ரநஷனல் (சிலோன்ட) (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0227 |
| 33. போட்வே ஸிப்பிங் அன்ட் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0228 |
| 34. வோலுசியா பிறேயிட் அன்ட் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0229 |

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு: 06/04/08/2007**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

த.பெ. 590

கொழும்பு 1.

2007 யூன் 14

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

## வெளிநாட்டிற்கு பயணம் செய்யும் இலங்கையர்களுக்கு வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குதல்

தற்போதைய பன்னாட்டு கொடுக்கல் வாங்கல்களை மேலும் தாராளமயப்படுத்தும் வழிமுறையொன்றாகவும் வெளிநாட்டிற்கு பயணிக்கும் இலங்கையர்களுக்கு நன்மைகளை வழங்கும் முறையாகவும், வெளிநாடுகளுக்கு பயணம் செய்யும் இலங்கையர்களுக்கான பயணப்படியின் ஒரு பகுதியாக வெளிநாட்டு நாணயத்தாள்களை வழங்குவது அதன் தற்போதைய மட்டமான 500 ஐ.அ.டொலரிலிருந்து ஐ.அ.டொலர் 1,000 இற்கு அல்லது அதற்குச் சமனான ஏதாவதொரு மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத் தொகைக்கு அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எனினும், பயணப்படிகள் கோரிக்கையின் உண்மைத் தன்மையினை ஆராய்ந்து திருப்தி கொண்ட பின்னர் நுணுகி ஆராய்ந்து தற்றுணிபின் அடிப்படையில் இது வழங்கப்பட வேண்டும்.

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

தொடர்பு: 06/04/09/2007

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 1.

2007 யூன் 15

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

**வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் மூன்றாந்தரப்பு வெளிநாட்டு செலாவணி வைப்புக்களுக்கு அனுமதியளித்தல்**

முறை சார்ந்த துறைக்கு வரும் தொழிலாளர் பணவனுப்பல்களை அதிகரிக்கும் மேலுமொரு வழிமுறையாக, வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும், வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வரவு வைப்பதற்கு கணக்கு வைத்திருப்பவரின் உடனடி குடும்ப அங்கத்தவர்களிடமிருந்து வெளிநாட்டு நாணயங்களை ஏற்றுக் கொள்வதற்கு அனுமதியளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கணக்கு வைத்திருப்பவரின் அத்தகைய குடும்ப அங்கத்தினர்களிடமிருந்து அவ்வாறு சேகரிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் கொடுக்கல் வாங்கலொன்றில் ஐ.அ.டொலர் 1,000 இனை அல்லது வேறு மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தில் இதற்குச் சமனான தொகையினை விஞ்சக்கூடாது.

கணக்கு வைத்திருப்பவரின் உடனடி குடும்ப அங்கத்தவர் என்பது அவரின்/ அவளின் மனைவி/ கணவர், தாய் அல்லது தந்தை, சகோதரன் அல்லது சகோதரி, மகன் அல்லது மகள் எனக் கருதப்படுகிறது. கணக்கு வைத்திருப்பவர் இவ்வசதியைப் பயன்படுத்த விருப்பமுடையவராயிருப்பின் அவரின்/ அவளின் வதியாதோர் வெளிநாட்டு கணக்கிற்கு வெளிநாட்டு நாணய வைப்புக்களைச் செய்வதற்கு அனுமதிக்கப்படவுள்ள அவரின்/ அவளின் உடனடி குடும்ப உறுப்பினர்களை நியமிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். இவ்வசதிகளிலிருந்து எழக்கூடிய சாத்தியமான தவறான நடவடிக்கைகளையும், தவறான பயன்பாட்டினையும் தவிர்ப்பதற்காக, ஏற்கனவேயுள்ள வதியாதோர் வெளிநாட்டு நாணய கணக்காளர்களின் உடனடி குடும்ப உறுப்பினர்/ உறுப்பினர்களின் பின்வரும் விபரங்களை பெற்றுக் கொள்ளுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. புதிய வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு வைத்திருப்போரைப் பொறுத்தவரை இத்தகவல்களை கணக்கினைத் திறக்கும் வேளையில் பெற்றுக் கொள்ளவேண்டும்.

1. வைப்புக்களைச் செய்வதற்கு அனுமதிக்கப்படவுள்ள குடும்ப உறுப்பினர் உறுப்பினர்களின் பெயர்களும் முகவரிகளும்
2. கணக்கு வைத்திருப்பவருக்கு உறவுமுறை
3. தேசியம்
4. குடும்ப உறுப்பினர்/ உறுப்பினர்களின் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு இலக்கம்; அத்துடன்
5. குடும்ப உறுப்பினர்/ உறுப்பினர்களின் தொடர்பு தொலைபேசி இலக்கம்

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதி விசேடமானது**

**இல. 1516/19 செவ்வாய்க்கிழமை, செத்தெம்பர் 25, 2007**

**பகுதி I: தொகுதி (I) - பொது**

**அரசாங்க அறிவித்தல்கள்**

இலங்கை மத்திய வங்கி

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ. ச. வா. 423ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 மற்றும் 48ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அதன் 6 மற்றும் 6(அ) ஆம் பிரிவுகளால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், கீழே குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு வெளிநாட்டுச் செலாவணியை கைவசம் வைத்திருப்பதற்கு அல்லது தேக்கி வைத்திருப்பதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

**வெளிநாட்டுச் செலாவணியைக் கைவசம் வைத்திருத்தல் அல்லது தேக்கி வைத்திருத்தல்**

1. (அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவருக்கு, தமது அதிகாரத்தின் நிபந்தனைகளின் வரையறைகளுக்கு உட்பட்டவாறு வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது தேடிய வெளிநாட்டுச் செலாவணியைக் கைவசம் வைத்திருக்கவும் அத்துடன் தேக்கி வைத்திருக்கவும் முடியுமாயிருக்கும்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு, தமது அதிகாரத்தின் நிபந்தனை வரையறைகளுக்கு உட்பட்டவாறு வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது பெற்ற அல்லது தேடிய வெளிநாட்டு நாணயத்தை கைவசம் வைத்திருக்கவும் அத்துடன் தேக்கி வைத்திருக்கவும் முடியுமாயிருக்கும்.

(இ) இலங்கையில் வதியும் ஒருவர், 2000 அமெரிக்க டொலர் அல்லது வேறேதேனும் நாணய வகையில் அதற்குச் சமமான ஒட்டுமொத்தமான பெறுமதியைக் கொண்ட தொகையை நாணயத்தாளாக அத்துடன்/ அல்லது பயணிகள் காசோலையாக தமது கைவசம் வைத்திருக்கலாம். ஆனால் அத்தகைய வெளிநாட்டு நாணயமானது பின்வரும் தன்மையினைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தின் பொருட்டு ஒருவர் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவரிடமிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரிடமிருந்து கொள்வனவு செய்த வெளிநாட்டு நாணயத்தை பயன்படுத்தாது திரும்பி இலங்கைக்கு வருகின்ற போது எடுத்துவருமிடத்து, அல்லது

(ii) இலங்கைக்கு வெளியே வசிக்கும் ஒருவருக்கு ஆற்றப்பட்ட சேவையின் பொருட்டு ஒருவர் இலங்கைக்கு வெளியே வெளிநாட்டு நாணயத்தைச் சம்பளமாகப் பெற்றுள்ளவிடத்து.

(ஈ) இலங்கைக்கு வெளியே வதிவுடையோராகவுள்ள ஒருவர், அவர் இலங்கைக்கு வெளியே இருந்தபோது உழைத்த வெளிநாட்டு நாணயத்தை இலங்கையில் வரையறையெதுவுமின்றி தமது கைவசம் தேக்கி வைத்திருக்கலாம்.

**வெளிநாட்டு நாணயத்தைத் தேக்கி வைத்திருக்க முடியுமான காலம்**

2. (அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவருக்கு, அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்தின் பொருட்டு வெளிநாட்டு நாணயத்தை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரிடமிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரிடமிருந்து பெற்ற இலங்கையில் வதியும் ஒருவர், அவ்வெளிநாட்டு நாணயத்தைக் குறிப்பிட்ட நோக்கத்தின் பொருட்டு பயன்படுத்தாது இருப்பின், அவை கிடைத்த தினத்திலிருந்து 90 நாட்களுக்கு மேல், அவ்வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாவாக மாற்றாது தம்வசம் வைத்திருத்தலாகாது.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு சமர்ப்பித்துள்ள விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்தின் பொருட்டு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரிடமிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரிடமிருந்து இலங்கையில் வதியும் ஒருவரால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயம், இலங்கைக்குள் திருப்ப எடுத்து வரப்படுமிடத்து, அவர் குறித்த வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாவாக மாற்றாது 90 நாட்களுக்கு மேல் தம்வசம் வைத்திருத்தலாகாது.

(இ) தொழிலொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக, தொழில்சார் பணிக்காக அல்லது வியாபாரத்தினை ஏற்படுத்துவதற்காக வெளிநாட்டிற்குச் செல்லுகின்ற இலங்கையில் வதியும் ஒருவர் அத்தகைய தொழில்வாய்ப்பு, தொழில்சார் நிபுணத்துவம்

அல்லது வியாபாரத்திலிருந்து உழைத்த அல்லது பெற்ற வெளிநாட்டு நாணயத்தினைக் கொண்டுவருமிடத்து, அத்தகைய நாணயத்தினை, அத்தகைய ஆள், அத்தகைய நாணயம் தாய்நாட்டிற்கு வந்த நாளிலிருந்து 90 நாட்களுக்கிடையில் இலங்கை ரூபாவிற்கு மாற்றாமல் அல்லது வெளிநாட்டு நாணய கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமாக செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கிணங்க, அத்தகைய ஆட்களினால் திறக்கப்பட்டு அத்துடன் அல்லது பேணப்படுகின்ற வெளிநாட்டு நாணயக் கணக்கில் வைக்காமல் தம்முடன் வைத்திருப்பதற்கு உரித்துடையவரல்லர்.

(ஈ) இவ்வறித்தலில் 1ஆம் பந்தியின் (இ) உப பந்திக்கு இணங்க, வெளிநாட்டு நாணயங்களைக் கைவசம் வைத்திருக்கும் இலங்கையில் வதிவுடைய ஆளொருவருக்கு இப்பந்தியின் (ஆ) மற்றும் (இ) உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவு ஏற்புடையதாகாது.

மேற்படி அறிவித்தலின் நோக்கங்களுக்கான பொருள்கோடல்:

3. இவ்வறிவித்தலின் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலொழிய -

(i) “அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்” என்பதன் பொருள், தங்கம் அல்லது வெளிநாட்டு நாணயம் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகராக செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ், சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு தற்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கியென்று கருதப்படுகின்றது;

(ii) “அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்” என்பதன் பொருள், அதிகாரம் அளிக்கப்பட்ட வணிகர் ஒருவர் நீங்கலாக, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ், மத்திய வங்கியினால் தற்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள எவரேனும் ஒருவர் எனப் பொருள்படும்;

(iii) “வெளிநாட்டு நாணயம்” என்பது, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(iv) “நாணயம்” என்பது, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(v) “வெளிநாட்டுச் செலாவணி” என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(vi) “இலங்கையில் வதியும் ஒருவர்” அல்லது “இலங்கைக்கு வெளியே வதியும் ஒருவர்” என்பது, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 37(1)ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் வழங்கப்பட்ட பணிப்பிலும், 1972, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதிய 15,007ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. முன்னைய அறிவித்தலை இரத்தாக்குதல் - 2002, மாச்சு மாதம் 16 ஆந் திகதிய 1227/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தல் இத்தால் இரத்தாக்கப்படுகின்றது.

5. இந்த வர்த்தமானியின் உள்ளடக்கமானது 2007ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 5ஆந் திகதி முதல் செயற்பாட்டுக்கு வரும்.

டீ. வசந்த.

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

கொழும்பு,

2007 செத்தெம்பர் 21

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதி விசேடமானது**

**இல. 1516/24 வியாழக்கிழமை, செத்தெம்பர் 27, 2007**

**பகுதி I: தொகுதி (I) - பொது**

**அரசாங்க அறிவித்தல்கள்**

இலங்கை மத்திய வங்கி

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ. ச. வா. 423ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 மற்றும் 48ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அதன் 21ஆம் பிரிவின் 1 (அ) மற்றும் (ஆ) உப பிரிவுகள் அத்துடன் 22ஆம் பிரிவின் 1 (அ) மற்றும் (ஆ) உப பிரிவுகளின் கீழ் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இலங்கை நாணயத் தாள்களை அல்லது வெளிநாட்டு நாணயங்களை கீழே குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு அல்லது இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு பின்வருமாறு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

**இலங்கை நாணயத்தின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி:**

1. இலங்கையின் பிரசையாகவுள்ள அல்லது இலங்கையில் வதியும் ஆளெவரும் -

(அ) தொழிலொன்றில் ஈடுபடும் பொருட்டு அல்லது கல்வியின் பொருட்டு அல்லது விடுமுறை, வியாபாரம் அல்லது மருத்துவ சிகிச்சையின் பொருட்டு தற்காலிக சுற்றுப் பயணத்துக்காக, அல்லது இதற்கு நேரொத்த வேறேதேனும் காரணத்துக்காக இலங்கையிலிருந்து வெளியே செல்கின்றவிடத்து, ஒருவருக்கு ரூ.5,000 ஐ விஞ்சாத அளவிலான இலங்கை நாணயத்தாள்களை, தம்முடன் அல்லது தமது பயணப் பொதியினுள் வைத்திருந்து ஏற்றுமதி செய்யலாம்.

(ஆ) தொழிலொன்றில் ஈடுபட்டதன் பின்னர் அல்லது வெளிநாட்டுக் கல்வியின் பின்னர் அல்லது விடுமுறை, வியாபாரம் அல்லது மருத்துவ சிகிச்சையின் பொருட்டு நாட்டிற்கு வெளியே மேற்கொண்ட தற்காலிக சுற்றுப் பயணத்தின் பின்னர் அல்லது இதற்கு நேரொத்த வேறேதேனும் காரணத்தின் பின்னர் இலங்கைக்குத் திரும்பி வருகின்றவிடத்து, ரூ.5,000 ஐ விஞ்சாத அளவிலான இலங்கை நாணயத் தாள்களை, தம்முடன் அல்லது தமது பயணப் பொதியினுள் வைத்திருந்து இலங்கைக்குள் இறக்குமதி செய்யலாம்.

**வெளிநாட்டு நாணயங்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி:**

வெளிநாட்டு நாணயங்களின் இறக்குமதி

2. ஆளெவரும் -

(அ) பொதுவான வங்கி முறையின் ஊடாக வரையறையின்றி, நாணயத் தாள்கள் மற்றும் பயணிகள் காசோலைகள் தவிர்ந்த வெளிநாட்டு நாணயங்களை வரையறையின்றி இலங்கைக்கு அனுப்பலாம்.

(ஆ) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நாணயத் தொகை தொடர்பாக ஏதேனுமொரு வரையறைக்கு அல்லது வேறு வரையறையொன்றிற்குட்பட்டு வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்ட காசுக் கட்டளைகளை அல்லது அஞ்சல் கட்டளைகளை அஞ்சல் மூலம் இலங்கைக்கு அனுப்பலாம்.

(இ) விபரிக்கப்பட்ட நாணயம் தொடர்பாக நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டதும் அத்துடன் திருத்தப்பட்டவாறான, 1953, ஓகத்து மாதம் 14ஆம் திகதிய 10,564ஆம் இலக்க, அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைகளினதும், அத்துடன் துறைமுகத்தின் ஊடாக மாறிச் செல்கின்ற பயணிகளால் எடுத்துவரப்படுகின்ற விபரிக்கப்பட்ட நாணய வகைகள் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1993, ஒத்தோபர் மாதம் 27ஆம் திகதிய 790/8ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைகளினதும் தேவைப்பாடுகளின் கீழ் வெளிநாட்டு நாணயத்தை தம்முடன் அல்லது தமது பயணப் பொதியினுள் வைத்திருந்து இலங்கைக்குள் எடுத்து வரலாம்;

இலங்கைக்குள் எடுத்து வருகின்ற ஒட்டுமொத்தமான வெளிநாட்டுச் செலவாணியின் பெறுமதி, அமெரிக்க டொலர் 15,000 ஐ அல்லது வேறேதேனும் வெளிநாட்டுச் செலவாணியில் அதற்குச் சமமான தொகையை விஞ்சுகின்ற பட்சத்தின், (துறைமுகம் ஊடாக மாறிச் செல்கின்ற பயணிகள் மற்றும் அவ்வாறான துறைமுகத்தில் மாறிச் செல்லுகின்ற பயணிகளின் பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள அல்லது எல்லை குறிக்கப்பட்ட பிரதேசத்தில் தங்கி நிற்கின்ற பயணிகள் அல்லாத) அவ்வாறான ஒரு பயணி இலங்கைக்குள் வெளிநாட்டு நாணயங்களை இறக்குமதி செய்கின்ற போது, அப்பயணி இலங்கைக்கு

வருகை தருகின்ற போது "பயணிகளின் பயணப் பொதிகள் பற்றிய வெளிப்படுத்தல், உள்வருகை" படிவத்தில் இலங்கைச் சுங்கத்துக்கு வெளிப்படுத்தல் வேண்டும் என்றவாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது;

மேலும், அவ்வாறான ஒருவர் நாட்டினுள் எடுத்துவரும் வெளிநாட்டு நாணயத் தாள்களில், அமெரிக்க டொலர் 5,000 ஐ அல்லது வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகையை விஞ்சுகின்றவிதத்திலான வெளிநாட்டு நாணயங்களை மீளக் கொண்டு செல்லக் கருதுவாரெனில், அது தொடர்பாக அந்நபர் இலங்கைச் சுங்கத்திற்கு வெளிப்படுத்தல் வேண்டும்.

**வெளிநாட்டு நாணய இறக்குமதி:**

3. (அ) அதிகாரமளிக்கப்பட்ட ஒரு வணிகரால், அவருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள நியதிக்குட்பட்டவாறு தமது வழமையான வியாபார நடவடிக்கையின் போது தேடிய வெளிநாட்டு நாணயங்களை இலங்கைக்கு வெளியே அனுப்பலாம்.

(ஆ) இலங்கையில் வதிவுடையவராக உள்ள ஒருவர் -

(i) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அச்சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள், அறிவித்தல்கள் அல்லது பணிப்புரைகளுக்கு இணங்குகின்ற அவர், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவரிடமிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவரிடமிருந்து பெற்றுள்ள வெளிநாட்டு நாணயங்களை இலங்கைக்கு வெளியே எடுத்துச் செல்லலாம் அல்லது அனுப்பலாம்.

(ii) வெளிநாட்டு நாணயங்களைத் தம்வசம் வைத்திருத்தல் அல்லது தேக்கி வைத்திருத்தல் தொடர்பில் செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் வெளியிடப்பட்ட 2007.09.25 ஆம் திகதிய 1516/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலுக்கிணங்க தம்வசம் வைத்திருக்கின்ற வெளிநாட்டுச் செலவாணியை இலங்கைக்கு வெளியே எடுத்துச் செல்லலாம்.

(இ) இலங்கைக்கு வெளியே வதியும் ஒருவர், தாம் இறுதியாக இலங்கைக்கு வருகை தந்த போது அவர் எடுத்து வந்த வெளிநாட்டுச் செலாவணியை விஞ்சாத வகையில், செலவழிக்கப்படாது எஞ்சியுள்ள வெளிநாட்டுத் செலாவணியை இலங்கைக்கு வெளியே எடுத்துச் செல்லலாம்.

மேலும் -

(i) இலங்கைக்கு வெளியே எடுத்துச் செல்லப்படுகின்ற அல்லது அனுப்பப்படுகின்ற வெளிநாட்டுச் செலவாணி ஒட்டுமொத்தமாக அமெரிக்க டொலர் 10,000 ஐ அல்லது ஏதேனுமொரு வெளிநாட்டுச் செலாவணியில் அதற்குச் சமமான பெறுமதியை விஞ்சுவதாயிருப்பின்; அத்துடன் அல்லது

(ii) இலங்கைக்கு வெளியே நாணயத் தாள்களாக எடுத்துச் செல்லப்படுகின்ற அல்லது அனுப்பப்படுகின்ற வெளிநாட்டு நாணயம் ஒட்டுமொத்தமாக அமெரிக்க டொலர் 5,000 ஐ அல்லது வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான பெறுமதியை விஞ்சுவதாயிருப்பின்;

இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதியும் ஒருவரால் வெளிநாட்டு நாணயங்கள் இலங்கைக்கு வெளியே எடுத்துச் செல்லப்படுகின்ற அல்லது அனுப்பப்படுகின்ற போது, (துறைமுகம் ஊடாக மாறிச் செல்கின்ற இடைத்தங்கல் பயணிகள் மற்றும் அவ்வாறான துறைமுகத்தில் மாறிச் செல்லுகின்ற பயணிகளின் பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள அல்லது எல்லை குறிக்கப்பட்ட பிரதேசத்தில் தங்கி நிற்கின்ற பயணிகள் அல்லாத) அவ்வாறான ஒருவர், பயணிகளின் பயணப் பொதிகள் பற்றிய வெளிப்படுத்தல் வெளிச் செல்லல் படிவத்தில் அல்லது குறித்த தேவையின் பொருட்டு இலங்கைச் சுங்கத்தால் விபரிக்கப்பட்டுள்ள வேறேதேனுமொரு படிவத்தில் இலங்கைச் சுங்கத்திற்கு வெளிப்படுத்த வேண்டிய நிபந்தனைக்கு உள்ளாதல் வேண்டும் எனவும் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

**மேற்படி அறிவித்தலின் நோக்கங்களுக்கான பொருள்கோடல்:**

4. இவ்வறிவித்தலின் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலொழிய -

(அ) "அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்" என்பதன் பொருள், தங்கம் அல்லது வெளிநாட்டு நாணயம் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகராக செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ், சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு தற்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்டள்ள வர்த்தக வங்கியென்று கருதப்படுகின்றது;

(ஆ) "அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்" என்பதன் பொருள், அதிகாரம் அளிக்கப்பட்ட வணிகர் ஒருவர் நீங்கலாக, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ், மத்திய வங்கியினால் தற்போதைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள எவரேனும் ஒருவர் எனப் பொருள்படும்;

(இ) "வெளிநாட்டு நாணயம்" என்பது, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஈ) "நாணயம்" என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

(உ) "இலங்கையில் வதியும் ஒருவர்" அல்லது இலங்கைக்கு வெளியே வதியும் ஒருவர் என்பது, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 37 (1) ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் வழங்கப்பட்ட பணிப்பிலும், 1972, ஏப்பிறல் மாதம் 21ஆம் திகதிய 15,007ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. இந்த வர்த்தமானியின் உள்ளடக்கமானது 2007ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 5ஆந் திகதி முதல் செயற்பாட்டுக்கு வரும்.

டீ. வசந்த.

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

கொழும்பு,

2007 செத்தெம்பர் 21

தொடர்பு: 06/04/10/2007

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 883
கொழும்பு 1.

2007 திசெம்பர் 06

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா,

**வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் செய்யப்படும் முதலீடு (ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உடமை வரையறையினை 5% இலிருந்து 10% இற்கு அதிகரித்தல்)**

இது மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2007 சனவரி 22ஆம் நாளிடப்பட்ட எமது தொழிற்பாட்டு இலக்கம் 06/04/03/2007 தொடர்பானது.

இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாடுகளின் நிதிகள், பிராந்திய நிதிகள், அல்லது இருவாயினொத்த நிதியங்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள் மற்றும் வெளிநாட்டுப் பிரசைகள் ஆகியோர் ரூபா நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளை குறிப்பிட்ட எந்தவொரு நேரத்திலும் வெளிநிற்கும் திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியில் 5% இற்கு தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள மட்டத்தினை திறைசேரி முறிகளின் வெளிநிற்கும் மொத்தப் பெறுமதியில் 10% இற்கு மேலும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

மேற்குறிப்பிட்ட தீர்மானத்திற்கமைய மேலே குறிப்பிடப்பட்ட 2007 சனவரி 22ஆம் நாளிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் 3ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு முதலீட்டாளர் வகைகளின் பெயர்களில், அதில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு உட்பட்டு திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாவில் கணக்கினைத் திறப்பதற்கும் தொழிற்படுத்துவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

படி: ஆளுநர்
துஆ(டபிள்யு)
துஆ(ஜே)
உஆ(எஸ்எம்)
கபொக

## வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் செய்யப்படும் முதலீடுகள் தொடர்பாக 2007.01.22ஆம் நாளிடப்பட்ட எண் 06/04/03/2007 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான வழிகாட்டல்கள்

---

(அ) திறைசேரி முறிகளில் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீட்டாளர்கள்

(அ) இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாடுகளினது நிதியங்கள், பிராந்திய நிதியம் அல்லது இருவாயினொத்த நிதியங்கள்

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச்சபைகள்; அத்துடன்

(இ) வெளிநாட்டு பிரசைகள்.

---

(ஆ) திறைசேரி முறிகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட கணக்கு

மேலேயுள்ள வெளிநாட்டு முதலீட்டாளர் வகையினரின் பெயரில் எந்த ஒரு வர்த்தக வங்கியிலும் திறக்கப்பட்ட ''திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு'' என்ற சிறப்பு ரூபாக் கணக்கிலிருந்து அல்லது கணக்கிற்கு மட்டுமே திறைசேரி முறிகளுக்கான முதலீடுகளை மேற்கொள்ளப்பட வேண்டும்.

---

(இ) திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களை உடனடி கணனி முறையில் அறிக்கையிடல்

i) பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கினை ஏற்கனவே வைத்திருக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள்

பங்குகளின் முதலீட்டினை அறிக்கையிடுவதற்கான தற்போதைய உடனடி கணனி முறையில் ''புதிய கணக்குகளை கூட்டுதல்'' என்ற கோவையை செயற்படுத்தி, அதன் பின் திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கினை கூட்டுவதன் வாயிலாக கணக்கு இலக்கத்தினை பதிவு செய்வதன் மூலம் திறைசேரி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கொன்றினைத் திறக்கவும். இரண்டு கணக்குகளும் கணக்கு வைத்திருப்பவரின் பெயரை ஒரே மாதிரியாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

ii) பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு இல்லாத வெளிநாட்டு முதலீட்டாளர்

பங்குகளின் முதலீட்டினை அறிக்கையிடுவதற்கான தற்போதைய உடனடிக் கணனி முறையினைப் பயன்படுத்தி திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கினை உட்புகுத்துவதன் வாயிலாக புதிய கணக்கு இலக்கத்தினை பதிவதன் மூலம் திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு என்ற பெயரைக் கொண்ட கணக்கு திறக்கப்படுகிறது.

---

(ஈ) திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிற்கான வரவுகளும் பற்றுக்களும்

திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிற்கான வரவுகளும் பற்றுக்களும் கட்டாயமாக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையவே மேற்கொள்ளப்பட வேண்டும். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், பங்கு முதலீடுகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளிலேயே பதியப்பட வேண்டும்.

**தொடர்பு எண்: 06/04/11/2007**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு-1

2007 திசெம்பர் 31

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா,

**சரக்குகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல் மற்றும் உள்நாட்டு வான் வழிக்கட்டணம்/ உள்நாட்டு தரையிறங்கும் கட்டணங்கள்/ கப்பலேற்றுபவர்களின் கப்பற் சரக்கு பற்றுச் சீட்டுக்களை வழங்குதல்**

2007.05.17 இலிருந்து இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் சரக்கு அனுப்புவோரை/ அவர்களது உள்நாட்டு வான்வழிக் கட்டணங்களை உள்நாட்டு வான் தரையிறங்கும் கட்டணங்களை/ பெற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக உள்ளடக்கும் படியும் ஏற்றமதிச் சரக்குகள் தொடர்பில் கொடுக்கல் வாங்கல்களுக்காக கப்பற் சரக்கு பற்றுச்சீட்டுக்களை ஏற்றுக் கொள்ளும்படியும் அதிகாரம் பெற்ற வணிகர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| கப்பற் சரக்கு அனுப்புவோரின் பெயர்கள் | பதிவு எண் |
|---|---|
| 01. டெனொவொ ஸிப்பிங் லயின்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0230 |
| 02. எக்ஸ்போ கொன்சொலிடேட்டர்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0231 |
| 03. யுனி வேர்ள்ட் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0232 |
| 04. வொய்ஜெர் ஸிப்பிங் இன்ரநஷனல் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0233 |
| 05. வேர்ள்ட்கேற் எக்ஸ்பிறஸ் லயின்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0234 |
| 06. ரிறைஸ் ஸிப்பிங் கம்பனி (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0235 |
| 07. ரான்ஸ் அற்லான்டிக் குளோபல் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0236 |
| 08. மரிட்ராயிம் ஏஜன்சீஸ் லிமிடெட் | 06/07/009/0237 |
| 09. கியார் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0238 |
| 10. ஜிஜிஎல் லயின் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0239 |
| 11. பசிபிக் கொன்ரேயினர் லயின் ஏஜன்சி கொழும்பு (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0240 |
| 12. அற்லஸ் லொஜிஸ்ரிக்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0241 |
| 13. கிளாரியன் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0242 |
| 14. மொசரி லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0243 |
| 15. பிறேயிட்லொங் ஸிப்பிங் கொழும்பு (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0244 |
| 16. எஸ்அன்ட்ஆர் சுப்பர் லொஜிஸ்ரிக்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0245 |
| 17. கிறவுண் சிற்றி டெவ்லெப்பேர்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0246 |
| 18. ஓசன் லிங்ஸ் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0247 |
| 19. பிறேயிட் மாஸ்ரஸ் இன்ரநஷனல் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0248 |

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாளர்**

நிதியியல் உளவறிதல் பிரிவு

*அனைத்து வர்த்தக வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

**மில்லியன் மெழுகுவர்த்திகளை ஏற்றும் பிரச்சாரம்**

"சிறுவர்களுக்கெதிரான குற்றங்களை" சட்டத்தின் நியதிகளில் சட்ட விரோத நடவடிக்கையாகப் பட்டியலிடும் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கிளை வாசகம் 33இன் பொருள் கோடல் தொடர்பாக அனைத்து வர்த்தக வங்கிகளினதும் அவசர கவனம் ஈர்க்கப்படுகின்றது.

இது தொடர்பாக, சிறுவருக்கெதிரான தவறுகள் தொடர்பான வெப்தளத்திற்கு இலத்திரனியல் கொடுப்பனவு முறை மற்றும் இணையத்தள கொடுக்கல் வாங்கல்கள் என்பனவற்றினூடாக வாடிக்கையாளர்களால் செய்யப்பட்டு வரும் பங்களிப்புகள் தொடர்பாக எங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. கொடுகடன் அட்டைகள் உடனடி கொடுப்பனவுகள் மிகப் பொதுவானதொரு முறையாக வாடிக்கையாளர்களினால் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் சிறுவருக்கெதிரான தவறுகள் தொடர்பான விடயங்களை வழங்குபவர்கள் அதனை உபயோகித்து வருவதாகவும் உணரப்படுகிறது.

இந்நோக்கத்திற்காக நிதிசார் உளவறிதல் பிரிவின் ஒத்துழைப்புடன் நிறுவப்பட்ட இலங்கை வர்த்தக வங்கிகளின் செயலணிக் குழுவொன்று சிறுவர்க்கெதிரான தவறுகளின் வர்த்தக ரீதியான ஆற்றல் தன்மையினை ஒழித்து விடுவதற்காக அவற்றை நிரூபிக்கும் பொறுப்புடன் தொழிற்பட்டு வருகின்றது.

நிதிசார் உளவறிதல் பிரிவு இவ்வுயர்ந்த ஏற்பாட்டிற்கான அதன் கடப்பாட்டினையும் நிதிசார் கொடுக்கல்வாங்கல்களின் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு வலுவளிக்கும் விதத்திலும் பின்வரும் தவிர்க்க முடியாத விடயங்கள் தொடர்பாக அனைத்து வர்த்தக வங்கிகளினதும் கவனம் உடனடியாக ஈர்க்கப்படுகின்றது.

- உடனடியாக, வியாபாரத்தின் தன்மைகளின் மீது சிறப்புக் கவனத்தைச் செலுத்துவதுடன் ஏற்கனவேயுள்ள மற்றும் புதிய கொடுகடன் வணிகத்தளங்களின் மீது மேலதிக உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தலைத் தொடங்குதல்.
- நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 7(1)அ இன் நியதிகளில் மேலே விபரிக்கப்பட்டவாறு சிறுவர்களுக்கெதிரான குற்றங்களுடன் தொடர்புடைய யாராவது வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல் அல்லது வர்த்தகம் பற்றி சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடும் படிவத்தில் நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு உடனடியாக அறிக்கையிடல்

கிடைத்தமை பற்றி தயவு செய்து அறிவிக்கவும்.

பதில் மேலதிக பணிப்பாளர்
நிதிசார் உளவறிதல் பிரிவு

2007 ஏப்பிறல் 4

படி: அனைத்து இணங்குவிப்பு அலுவலர்களுக்கும்
இலங்கை வங்கிகள் சங்கம்
பணிப்பாளர்/ வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

நிதிசார் உளவறிதல் பிரிவு
2007 மே 18

**தொடர்பு எண்: 37/04/001/0001/007**

அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட
நிதிக்கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் - நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2(3) இன் நியதிகளில் உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் தொடர்பான விதிகள்**

நிதிசார் நடவடிக்கை செயலணிக்குழு மற்றும் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் மீதான வங்கி மேற்பார்வை தொடர்பான பாசல் குழு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட விபரமான வழிகாட்டல் மற்றும் விதிகள், பொருத்தமானவிடத்து இலங்கை வங்கியாளர் சங்கத்தினால் செய்யப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட விதந்துரைப்புக்கள் என்பன இணைக்கப்பட்டுள்ளன.

விபரிக்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் விதிகளுக்கு காத்திரமான தன்மையினை வழங்குவதற்காக, சரியான கொள்கைக் கட்டமைப்பும் தொழிற்பாட்டு வழிகாட்டல்களும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பன தொடர்பாக, இந்நோக்கத்திற்காக உங்கள் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட கொள்கைகளுடன் நடைமுறைக்கிடப்படுவதனை உறுதிப்படுத்துமாறு உங்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

**2008 மாச்சு 31ஆம் நாளுக்கு முன்னர் தங்கள் நிறுவனம் இவ்விதிகளுக்கு பூரணமாக இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். புதிய வாடிக்கையாளர்களைப் பொறுத்த வரையில் இவ்விதிகள் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.**

மேலே விபரிக்கப்பட்ட விதிகளுக்கு முரணான அல்லது இணங்கி ஒழுகாமை காணப்படுமிடத்து சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளுக்கிணங்க தண்டனையொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

**பதில் மேலதிகப் பணிப்பாளர்**
நிதிசார் உளவறிதல் பிரிவு

படிகள்: அனைத்து இணங்குவிப்பு அலுவலர்கள்
இலங்கை வங்கியாளர் சங்கம்
நிதி அகச் சங்கம்
ஒப்புதலளிக்கப்பட்ட கணக்காய்வாளர் குழுமம்
பணிப்பாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் நிறுவனங்கள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான வாடிக்கையாளர்களை நெருக்கமாக கவனித்தல் மீதான விதிகள்

**அறிமுகம்**

நிதியியல் நிறுவனங்களிலும் அவற்றின் உறுதிப்பாட்டிலும் பொதுமக்களுக்கிருந்த நம்பிக்கையானது, நிதியியல் நிறுவனங்களின் தொழிற்பாடுகளுக்கு நேரக்கூடிய நிதியியல் இடர்நேர்வுகளைக் குறைத்த ஆற்றல் வாய்ந்த வங்கித்தொழில் நடைமுறைகளின் மூலம் மேலும் உயர்வடைந்துள்ளது. பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பன நாட்டின் நிதியியல் முறைமைகளின் ஆற்றலையும் அதேபோன்று தனிப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் உறுதிப்பாட்டினையும் பல்வேறு வழிகளிலும் பாதிப்பதாகவுள்ளது. “உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள்” என அறியப்படுகின்ற வாடிக்கையாளர்களை அடையாளம் கண்டு நெருக்கமாகக் கவனிக்கின்ற நடைமுறை விதிகள், பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாதத்திற்கான நிதியிடலை ஒழித்தல் சட்ட நடைமுறைப்படுத்தலின் ஒரு பகுதியாக விளங்குகின்றது. இவ்விதிகள் வங்கித்தொழிலினதும் ஏனைய வகை நிதியியல் நிறுவனங்களினதும் பாதுகாப்பான மற்றும் ஆற்றல் வாய்ந்த தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவது மட்டுமன்றி அவற்றினை உயர்த்தவும் உதவும்.

வாடிக்கையாளர்களை அடையாளம் காணுதல் மற்றும் நெருக்கமாகக் கவனித்தல் நடைமுறைகளின் மீதான தொழிற்பாட்டு வழிகாட்டல்களை தயாரிக்கின்ற பொழுது, நிதியியல் நிறுவனங்கள் கணக்குகளைத் திறக்கும் நோக்கத்திற்காக வாடிக்கையாளர்களிடமிருந்து சேகரித்த தகவல்களை இரகசியமாகப் பேணும்படியும் மாற்று நடவடிக்கைகள் அல்லது வேறு எந்த ஒரு நோக்கத்திற்காகவும் அதிலுள்ள விபரங்களை வெளிப்படுத்தக்கூடாது எனவும் கோரப்பட்ட தகவல்கள் மிக உணரத்தக்க இடர்நேர்வுகளுடன் தொடர்பானவையெனவும் இந்நடவடிக்கை மற்றவர் விடயத்தில் தலையிடுமொன்று அல்ல என்பதுடன் இங்கே வெளியிடப்பட்ட விதிகளுடன் இணைந்து செல்லுகின்றதெனவும் அறிவுறுத்தப்படுகின்றன.

இவ்வொழுங்கு விதிகள் 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2 (3) இன் கீழ் வழங்கப்படுவதுடன் இவ்விதிகளுக்கு மாறாக அல்லது இணங்கி நடவாதவர்கள் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளின் கீழ் தண்டனையொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

பதில் மேலதிகப் பணிப்பாளர்கள்

நிதியியல் உளவறிதல் பிரிவு

இலங்கை மத்திய வங்கி

2007 மே 18 ஆம் நாள்

பகுதி 1 - **பொது வழிகாட்டல்**

**அ. இயற்கையான ஆட்கள்**

1. பொருத்தமானவிடத்து இயற்கையான ஆட்களுக்காக பின்வரும் தகவல்கள் பெறப்பட வேண்டும்.

- சட்ட ரீதியான பெயர் மற்றும் பயன்பாட்டிலுள்ள வேறு ஏதாவது பெயர்கள் (கன்னிப்பெயர் போன்றவை)
- சரியான நிரந்தர முகவரி (முழுமையான முகவரி பெறப்பட வேண்டும் அஞ்சல் பெட்டி எண் போதுமானதல்ல)
- தொலைபேசி எண், தொலைநகல் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி
- பிறந்த திகதியும் இடமும்
- தேசியம்
- தொழில், வகிக்கும் பதவி அத்துடன் அல்லது தொழில்தருநரின் பெயர் வாடிக்கையாளரின் புகைப்படத்தை கொண்டுள்ள காலாவதியாகாத அலுவல்சார் ஆவணங்களில் காணப்படுகின்ற அலுவல்சார் தனியாள் அடையாள இலக்கம் அல்லது ஏனைய தனிச் சிறப்பான அடையாளங்கள் (உதாரணம்: கடவுச்சீட்டு, அடையாள அட்டை, வதிவிட அனுமதிப்பத்திரம், சமூக பாதுகாப்பு பதிவேடுகள், ஓட்டுநர் அனுமதிப்பத்திரம்)
- தொடர்பு முறையில் கணக்கின் வகை மற்றும் நிதியியல் நிறுவனத்தின் தன்மை
- கையொப்பம்.

2. நிதியியல் நிறுவனங்கள் இத்தகவல்களை குறைந்தது பின்வரும் முறைகளில் ஏதாவதொன்றின் மூலம் சரிபார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

- அலுவல்சார் ஆவணங்களிலிருந்து பிறந்த திகதியினை உறுதிப்படுத்திக் கொள்ளல் (உ-ம்: பிறப்புச் சான்றிதழ், கடவுச்சீட்டு, அடையாள அட்டை, சமூக பொறுப்பு பதிவேடுகள்)
- நிரந்தர முகவரியினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் (பொது வசதிப்பட்டியல்கள், சோலைவரி, வங்கிக் கூற்றுக்கள், அரச அதிகாரியிடமிருந்தான ஒரு கடிதம்)
- கணக்கொன்றினைத் திறந்த பின்னர் வழங்கப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தொலைபேசி, கடிதம் அல்லது மின்னஞ்சல் மூலமாக வாடிக்கையாளர்களைத் தொடர்பு கொள்ளுதல் (உ-ம்: தொடர்பு துண்டிக்கப்பட்ட தொலைபேசிகள், திருப்பி அனுப்பப்பட்ட அஞ்சல்கள் அல்லது பிழையான மின்னஞ்சல் முகவரி என்பன தொடர்பாக மேலதிக புலனாய்வுகளை மேற்கொள்ளல் வேண்டும்)
- அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் சான்றுபடுத்தப்பட்டமையின் மூலமாக வழங்கப்பட்ட அலுவல்சார் ஆவணப்படுத்தல்களின் செல்லுபடியினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் (உ-ம்: வெளிநாட்டுத் தூதரங்களின் அலுவலர், பிரசித்த நொத்தாரிசு).

3. மேலே குறிப்பிடப்பட்ட உதாரணங்கள் மாத்திரம் சாத்தியமானவைகள் என்றில்லை. குறிப்பாக நியாயாதிக்க சபைகளினால் வழங்கப்படுகின்ற மற்றைய ஆவணங்களும் இவற்றிற்குச் சமமான தன்மையினைக் கொண்டனவாக இருப்பதுடன் இவற்றினையும் வாடிக்கையாளரின் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு திருப்திகரமான சான்றாகக் கொள்ளமுடியும்.

4. நேர்விளம்பல்களுக்கு வரக்கூடியவர்களாகவுள்ள **முகம் காணாத வாடிக்கையாளர்களுக்காக** நிதியியல் நிறுவனங்களும் இதற்குச் சமமான வாடிக்கையாளர் அடையாள நடைமுறைகளையே பின்பற்ற வேண்டும்.

5. பந்தி 10 இல் தரப்பட்டுள்ள தகவல்களிலிருந்து, நிதியியல் நிறுவனங்கள் வாடிக்கையாளர்களின் இடர்நேர்வு தோற்றப்பாடு தொடர்பான ஆரம்ப மதிப்பீடுகளை செய்யக்கூடியனவாக இருத்தல் வேண்டும். குறிப்பாக உயர்ந்த இடர்நேர்வுகளைக் கொண்டிருக்கின்றார்களென அடையாளம் காணப்பட்ட வாடிக்கையாளர் மீது மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும், அல்லது அத்தகைய வாடிக்கையாளர் தொடர்பாக பின்வருவனவற்றை உள்ளடக்கிய விதத்தில் தகவல்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.

- கொடுகடன் தகவல் முகவர் தேடலூடாக அல்லது வீட்டிற்கு விஜயம் செய்து சுதந்திரமான சரிபார்ப்பினூடாக தனிப்பட்டவர்களின் நிரந்தர முகவரிகள் தொடர்பான சான்றுகளைக் கோருதல்;
- தனிப்பட்ட குறிப்புரைகள் (உ-ம்: அதே நிறுவனத்தின் ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளரொருவர் மூலம்);
- வாடிக்கையாளர் பற்றிய நிதியியல் நிறுவனத்திலுள்ள முன்னைய வங்கி குறிப்புரை மற்றும் தொடர்பு;

- செல்வத்தின் மூலம்;
- வகிக்கும் தொழில் நிலை, சமூகத்திலுள்ள அவரின் அந்தஸ்து (பொருத்தமானவிடத்து) என்பனவற்றை சரிபார்த்தல்.

6. ஒரு தடவையில் அல்லது எப்பொழுதுதாவது இடம் பெறும் கொடுக்கல் வாங்கல்களைப் பொறுத்தவரை, கொடுக்கல் வாங்கல்களின் அல்லது இணைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் தொடர்களின் தொகை நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச நாணயப் பெறுமதியினை விஞ்சாதவிடத்து பின்வரும் சந்தர்ப்பங்களில் தேவைப்படுத்தப்பட்ட பெயரையும் முகவரியினையும் மாத்திரம் பதிவு செய்து கொள்வது போதுமானதாகும்.

   - வாடிக்கையாளர் தொடர்பான நம்பகமான தகவல்கள் பகிரங்கமாக வங்கிகள்/ நிதியியல் நிறுவனங்களுக்கு கிடைக்கத்தக்கதாக இருப்பது
   - குறிப்பிட்ட நிதியியல் நிறுவனமானது பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டுப்பாடுகளைக் கொண்ட மற்றொரு வங்கியுடன் தொடர்புகளை மேற்கொண்டு முன்னைய காலகட்டத்தின் தொடர்புகளின் மூலம் நன்கு பழக்கமுற்றிருக்குமிடத்தும்

7. வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளல் கொள்கை மிகக் கட்டுப்பாடானதாக இல்லாமையின் விளைவாக வங்கித்தொழில் பணிகளை பொதுமக்கள் குறிப்பாக, நிதியியல் ரீதியாக அல்லது சமூக ரீதியாக பின் தங்கிய மக்கள் அடைவது மறுக்கப்படுவது மிக முக்கியமானதொரு விடயமாகும்.

**ஆ. நிறுவனங்கள்**

8. இயற்கை ஆட்களுக்காக வாடிக்கையாளர்களை அடையாளம் காணும் அடிப்படைத் தத்துவங்கள் அனைத்து நிறுவனங்களுக்குமான வாடிக்கையாளர் அடையாளம் காணுவது தொடர்பாக சமமான பிரயோகங்களையே கொண்டுள்ளன. இயற்கையான ஆட்களை அடையாளம் காணுதலும் சரி பார்த்தலும் தொடர்புபட்டதாக இருக்குமிடத்து, அத்தகைய ஆட்கள் தொடர்பான முன் சொல்லப்பட்ட வழிகாட்டல் சமமான பிரயோகங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9. தவணை நிறுவனங்கள் உள்ளடக்குகின்ற எந்த உட்பொருளும் இயற்கை ஆளாக இருக்கக்கூடாது. வேறுபட்ட வகை நிறுவனங்களுக்கான வாடிக்கையாளர் அடையாளம் காணுகின்ற வழிகாட்டல்களை பரிசீலிக்கும் போது ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளின் வேறுபட்ட மட்டங்கள் தொடர்பாக குறிப்பாகக் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**இ. கம்பனி தொழில் முயற்சிகள்**

10. கம்பனி தொழில் முயற்சிகளுக்காக (உ-ம் கூட்டுத்தாபனங்கள் மற்றும் பங்குடமைகள்) பின்வரும் தகவல்கள் பெறப்பட வேண்டும்.

   - நிறுவகத்தின் பெயர்;
   - நிறுவகத்தின் வியாபாரம் தொழிற்படுகின்ற பிரதான இடம்;
   - நிறுவகத்தின் அஞ்சல் முகவரி;
   - தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி மற்றும் தொலைநகல் இலக்கங்கள்;
   - கிடைக்கத்தக்கதாக இருப்பின் சில வகை அலுவல்சார் அடையாளம் காணும் இலக்கங்கள் (உ-ம்: வரி அடையாளம் காணும் இலக்கம்);
   - கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழ் அமைப்பு அக மற்றும் புற விதிகள் என்பனவற்றின் மூல அல்லது சான்றுபடுத்தப்பட்ட பிரதி, பொருத்தமானவிடத்து பங்குடமைச் சான்றிதழ் அல்லது பதிவுச் சான்றிதழ்;
   - கணக்கினை திறப்பது மற்றும் கணக்குகளைத் திறப்பதற்கு யாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோ அவர்களின் அடையாளம் என்பன தொடர்பாக பணிப்பாளர் சபையின் தீர்மானம்;
   - வியாபாரத்தின் தன்மை மற்றும் அதன் நோக்கம் மற்றும் அது பற்றிய சட்டபூர்வத் தன்மை

11. நிதியியல் நிறுவனங்கள் பின்வரும் வழிமுறைகளில் குறைந்த பட்சம் ஒன்றை பயன்படுத்தி இத்தகவல்களைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

   - நிறுவப்பட்ட கம்பனி முயற்சிகளைப் பொறுத்தவரை - பிந்திய அறிக்கை மற்றும் கணக்குகளை மீளாய்வு செய்கின்ற பிரதியொன்று (கணக்காய்வு செய்யப்பட்டது கிடைக்கத்தக்கதாயிருப்பின்);
   - வியாபார தகவல் பணியினால் விசாரணையொன்றினை நடத்துதல் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை சட்ட அறிஞர்கள்

அல்லது கணக்காளர்களைக் கொண்ட புகழ்மிக்க நன்கறிந்த நிறுவனங்களினால் உறுதிப்படுத்தப்படுகின்ற உத்தரவாதமொன்றினைப் பெறல்;

- நிறுவனமொன்று செயற்பட்டுக் கொண்டிருக்கிறதா அல்லது செயற்படவில்லையா, கலைக்கப்பட்டுள்ளதா, பிரச்சனைக்குள்ளாகியுள்ளதா, மூடப்பட்டுள்ளதா, முடிவுறுத்தப்பட்டுள்ளதா என்பதனைக் கண்டறிவதற்காக கம்பனி ஆய்வொன்றினையும் அத்துடன் அல்லது வர்த்தக விசாரணையொன்றினை மேற்கொள்ளுதல்;
- பகிரங்க மற்றும் தனிப்பட்ட தரவுத்தளங்களை மதிப்பீடு செய்தல் போன்ற தன்னிச்சையான தகவல் சரிபார்ப்பு செயற்பாடுகளைப் பயன்படுத்துதல்;
- முன் வங்கித் தொடர்புகளைப் பெறுதல்;
- நடைமுறைச் சாத்தியமானவிடத்து கம்பனிதொழில் முயற்சிக்கு விஜயம் செய்தல்;
- தொலைபேசி, அஞ்சல் அல்லது மின்னஞ்சல் என்பனவற்றின் மூலம் கம்பனி முயற்சியினைத் தொடர்பு கொள்ளுதல்.

12. முகவர் கம்பனி, வாடிக்கையாளரின் அலுவலரொருவராக இல்லாதவிடத்து கம்பனி வாடிக்கையாளர் ஒருவரின் சார்பாக கணக்கொன்றினை வைத்திருக்கின்ற எந்தவொரு முகவரும் அடையாளத்தையும் அதன் கீர்த்தியையும் சரிபார்ப்பதற்காக நிதியியல் நிறுவனம் நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**இ1. கம்பனிகள்/ பங்குடமைகள்**

13. கம்பனிகள்/ பங்குடமையினைப் பொறுத்தவரை பிரதான வழிகாட்டலென்பது கம்பனி பங்குடமை வியாபாரத்தினையும் கம்பனி/ பங்குடமைச் சொத்துக்களையும் கட்டுப்படுத்துகின்றவர்களை, இறுதியான கட்டுப்பாடுகளைக் கொண்டிருப்பவர்கள் உட்பட, அவர்கள் யாரென்பதனை அடையாளம் காணும் விதத்தில் நிறுவனத்தினைப் பின்னோக்கிப் பார்ப்பதேயாகும். கூட்டுத்தாபனங்களைப் பொறுத்தவரையில் பங்குடமையாளர்கள், கையொப்பமிடுவோர் அல்லது மூலதனத்தில் அல்லது நிதியியல் உதவியில் குறிப்பிடத்தக்க விதியொன்றினை உள்ளீடு செய்கின்ற அல்லது வேறுவிதமாகக் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளவர்கள் தொடர்பாக குறிப்பாக கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும். சொந்தக்காரர் இன்னொரு கம்பனி முயற்சியாக அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளராக இருக்குமிடத்து குறிக்கோள், கம்பனியின் அல்லது தொழில் முயற்சியினைப் பின்னோக்கிப் பார்ப்பதற்கும் அதிபர்களின் அடையாளத்தினை சரிபார்ப்பதற்குமான வழிமுறைகளைப் பொறுப்பேற்பதுமேயாகும். இந்நோக்கத்திற்கான கட்டுப்பாட்டு அமைப்பு என்பது கம்பனியின் தன்மையில் தங்கியிருப்பதுடன், நிதிகள், கணக்கீடுகள் அல்லது முதலீடுகள் மேலும் அதிகாரமளிக்கும் தேவைப்பாடுகளின்றி முகாமைப்படுத்துவதற்கு பிணிக்கப்பட்டுள்ளவர்கள் எவரோ அவர்களிலும், உள்ளக நடைமுறைகளிலும் கட்டுப்பாட்டு பொறிமுறைகளையும் தொழிற்படுத்தக்கூடிய நிலையிலுள்ளவர்களிலும் தங்கியிருக்கும். பங்குடமையாளர்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு பங்குடமையாளரும் அடையாளம் காணப்பட வேண்டியதுடன், சொத்துடமைக் கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கக்கூடிய உடனடி குடும்ப உறுப்பினர்களை அடையாளம் காண்பதும் முக்கியமானதாகும்.

14. கம்பனியொன்று அங்கீகரிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டிருக்குமிடத்து, அல்லது அத்தகைய கம்பனியின் துணைக்கம்பனியாக இருக்குமிடத்து, இக்கம்பனியானது, அடையாளம் காணப்பட வேண்டிய பிரதான கம்பனியாகக் கருதப்படக்கூடும். எனினும், பட்டியலிடப்பட்ட கம்பனியின் காத்திரமான கட்டுப்பாடுகள் தனிப்பட்ட ஒருவரினால் தனிப்பட்டவர்களைக் கொண்ட சிறிய குழுவினால் அல்லது இன்னொரு கம்பனி முயற்சியினால் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் மேற்கொள்ளப்படுகின்றதா என்பது பற்றி பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும். விடயம் அவ்வாறானதாக இருப்பின் அத்தகைய கட்டுப்பாட்டாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டவராகக் கருதப்பட்டு அதற்கேற்ப அடையாளம் காணப்பட வேண்டும்.

**ஈ. ஓய்வூதிய நன்மை நிகழ்ச்சித்திட்டங்கள்**

15. தொழில் ரீதியான ஓய்வூதிய நிகழ்ச்சித்திட்டமொன்றிருக்குமிடத்து ஊழியர் நம்பிக்கை அல்லது பங்கு தெரிவுத்திட்டக் கணக்கொன்றிற்கான விண்ணப்பத்தாரி ஒருவராக இருப்பதுடன் உறவுமுறைகளின் மீது கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ள நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் வேறு ஏதாவது ஆட்கள் (உ-ம்: நிருவாகர்கள், நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் மற்றும் கணக்கியல் கையொப்பமிடுபவர்) ஆகியோர் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டவராகக் கருதப்பட்டு நிதியியல் நிறுவனங்கள் அவர்களின் அடையாளங்களைச் சரிபார்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

**உ. பரஸ்பர/ சிநேகபூர்வ சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சேமநிதிச் சங்கங்கள்**

16. கணக்கொன்றிற்கான விண்ணப்பதாரர் ஒருவராக இச்சங்கங்கள் இருக்குமிடத்து, அடையாளம் காணப்படவுள்ள பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டவர்கள் அமைப்பின் சொத்துக்களின் மீது கட்டுப்பாடுகளைச் செலுத்துகின்ற அல்லது குறிப்பிடத்தக்க செல்வாக்கினைச் செலுத்துகின்ற அத்தகைய ஆட்களாகக் கருதப்படல் வேண்டும். இது தொடர்பாக பெரும்பாலும் சபை உறுப்பினர்கள் அத்துடன் நிறைவேற்று அலுவலர், கணக்குகளில் கையொப்பமிடுபவர் ஆகியோரை உள்ளடக்கும்.

### ஊ. அறக்கொடைகள், களரிகள் மற்றும் சங்கங்கள்

17. அறக்கொடைகள், களரிகள் மற்றும் சங்கங்களுக்கு திறக்கப்படவுள்ள கணக்குகளைப் பொறுத்தவரையில், நிதியியல் நிறுவனங்கள் கையெழுத்திடுவோரில் குறைந்தது இருவரினையும் நிறுவனத்தினதும் அடையாளம் காண்பதற்கும் சரிபார்ப்பதற்குமான நியாயமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். அடையாளம் காணப்பட வேண்டிய பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டவர்கள் அமைப்பின் சொத்துக்கள் தொடர்பாக கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கக்கூடிய அல்லது குறிப்பிடத்தக்க செல்வாக்கினை செலுத்துகின்ற ஆட்களாகக் கருதுப்பட வேண்டும். இவை பெரும்பாலும் அதிகமாக ஆளும் சபை அல்லது குழு உறுப்பினர்கள், தலைவர் ஏதாவது சபை உறுப்பினர்கள், பொருளாளர் மற்றும் அனைத்து கையொப்பதாரர் ஆகியோரை அடக்கும்.

18. எல்லா விடயங்களிலும் ஈடுபட்டுள்ள உரிய ஆட்கள் நிறுவனத்தின் உண்மையான பிரதிநிதிகள் தான் என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் சுதந்திரமான சரிபார்ப்புக்களை மேற்கொள்ள வேண்டும். நிறுவனத்தின் நோக்கத்திற்காக சுதந்திரமான உறுதிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### எ. நம்பிக்கைப் பொறுப்பு நியமனத்தர் மற்றும் நம்பகமான கணக்குகள்

19. நிதியியல் நிறுவனங்கள், வாடிக்கையாளர் ஒருவர் மற்றொரு வாடிக்கையாளரின் பெயரைக் கொண்டுள்ளாரா, முன்னிலையாளராக தொழிற்படுகின்றாராக அல்லது இன்னொரு ஆளின் சார்பில் நம்பிக்கை பொறுப்பாளராக செயற்படுகின்றாரா நியமனத்தராக அல்லது மற்றைய இடையீட்டாளராகவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். அவ்வாறாயின், இடையீட்டாளர்கள் மற்றும் யாரின் சார்பில் தொழிற்பட்டாளர்களோ அந்த ஆட்கள் அதேபோன்று நம்பிக்கைப் பொறுப்பு அல்லது இடம் பெற்றுவரும் மற்றைய ஒழுங்குகளின் தன்மை பற்றிய விபரங்கள் பற்றிய திருப்திகரமான சான்றுகளைப் பெற்றுக் கொள்வதே அவசியமான முன் நிபந்தனையாகும். குறிப்பாக நம்பிக்கைப் பொறுப்புக்களை அடையாளம் காண்பது நம்பிக்கைப் பொறுப்பாளர்கள்/ தீர்ப்பனவாளர்கள்/ வழங்குவோர் மற்றும் நன்மை பெறுவோர் ஆகியோரை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பொன்றிற்காக கணக்குகளைத் திறக்கும் பொழுது, நிதியியல் நிறுவனங்கள், நம்பிக்கைப் பொறுப்பாளர்(கள்), தீர்ப்பனவாளர்(கள்), நம்பிக்கைப் பொறுப்பு (நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு சொத்துக்களை தீர்ப்பனவு செய்யும் எந்தவொரு ஆளும் உட்பட) பாதுகாப்பாளர்(கள்) எவரும், நன்மைபெறுநர்(கள்), கையொப்பமிடுபவர்(கள்) என்போரை சரிபார்த்துக் கொள்வதற்கு நியாயமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். நிறுவனமொன்றாக இருக்குமிடத்து நிறுவன முகாமையாளர்/ பணிப்பாளர்கள் மற்றும் நன்மை பெறுநர்களைச் சரிபார்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

### ஏ. நன்மை பெறும் உடமையாளர்கள்

20. ஒவ்வொரு விடயத்தினதும் சூழ்நிலையினை கருத்திற் கொண்டு, நிதியியல் நிறுவனங்கள் எடுக்கப்பட்ட வழிமுறைகளின் நியாயமான தன்மைகளை நியாயப்படுத்திக் கொள்ளக் கூடியனவாக இருத்தல் வேண்டும். நிதியியல் நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்ட வாடிக்கையாளர்களிடமிருந்து பொறுப்பு அல்லது பிரகடனமொன்றினையும் நன்மை பெறும் உடமையாளர் தொடர்பான தகவலையும் பெற்றுக் கொள்வதனையும் பரிசீலித்தல் வேண்டும்.

### ஐ. தொழில்சார் நிபுணத்துவ இடையீட்டாளர்கள்

21. சட்ட அறிஞர், நொத்தாரிசு ஏனைய சுதந்திரமான சட்ட நிபுணர்கள் அல்லது கணக்காளர் போன்ற தொழில்சார் நிபுணத்துவ இடையீட்டாளர்கள் ஒருவர் தனியொரு கட்சிக்காரரின் சார்பில் கட்சிக்காரர் கணக்கொன்றினைத் திறக்கும் பொழுது கட்சிக்காரர் கட்டாயம் இனங் காணப்பட வேண்டும். தொழில்சார் நிபுணத்துவ இடையீட்டாளர்கள் நிறுவனங்களினது எண்ணிக்கையின் சார்பில் "கூட்டுக்" கணக்குகளைத் திறக்கலாம். இடையீட்டாளரினால் வைத்திருக்கப்படும் நிதியம் கூட்டாக இல்லாதவிடத்தும் "துணைக் கணக்குகளாக" இருக்குமிடத்து இடையீட்டாளரினால் வைத்திருக்கப்படும் கணக்கின் பயன்பெறும் ஒவ்வொரு உடமையாளரும், அனைத்து பயன்பெறும் உடமையாளரும் அடையாளம் காணப்பட வேண்டும். நிதியங்கள் ஒன்று சேர்க்கப்பட்டவையாக இருக்குமிடத்து, நிதியியல் உடமையாளர்களை நுணுக்கமாக கவனித்தல் வேண்டும், எனினும், நிதியியல் நிறுவனங்கள் இடையீட்டாளருக்கு அப்பால் கவனம் செலுத்தத் தேவையில்லாவிடத்து மேற்பார்வை வழிகாட்டலில் இதனை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை தோன்றக்கூடும் (நிதி நிறுவனங்களைப் போன்றே இடையீட்டாளர்களும் அதன் வாடிக்கையாளர் தளம் தொடர்பாக அதே நெருங்கிய கவனித்தல்களுக்குட்பட்டிருப்பர்).

22. அத்தகைய சூழ்நிலைகள் பிரயோகிக்கப்படுமிடத்து திறந்த அல்லது மூடிய முதலீட்டு கம்பனி, கூறு நம்பிக்கை அல்லது வரையறுக்கப்பட்ட பங்குடமைக்கான கணக்கொன்று திறக்கப்படுமிடத்தும் நிதியியல் நிறுவனங்களைப் போன்றே அதன் கட்சியினர் தொடர்பாக அதே நெருங்கிய கவனிப்பு நியமங்களுக்கு உட்பட்டிருக்கும். பின்வருவன பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டவராக கருதப்பட வேண்டியதுடன் நிதியியல் நிறுவனங்கள் பின்வருவனவற்றை அடையாளம் காண நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

- அதன் நிதி
- கம்பனியொன்றாக இருக்குமிடத்து அதன் பணிப்பாளர்கள் அல்லது ஏதாவது கட்டுப்பாட்டினைக் கொண்டுள்ள சபை
- கூறு நம்பிக்கையாக இருக்குமிடத்து அதன் நம்பிக்கைப் பொறுப்பாளர்சபை
- இது வரையறுக்கப்பட்ட பங்குடமையாளராக இருக்குமிடத்து இதன் முகாமைத்துவ (பொது) பங்காளர்

- கணக்கில் கையெழுத்திடுபவர்கள்
- உறவுமுறையின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள எந்தவொரு ஆளும் அதாவது நிதி நிருவாகத்தில் அல்லது முகாமையாளர்

23. ஏனைய முதலீட்டு கம்பனிகள் தொடர்புடையனவாக இருக்குமிடத்து, அவ்வாறு செய்வதற்கு அவை பொருத்தமானவையாக இருக்குமிடத்து பந்தி 22இல் உள்ளவாறான அதே நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். மேலும் நிதிகளின் நன்மை பெறும் உடமையாளர்களினதும் மற்றும் நிதியத்தின் மீது கட்டுப்பாடு கொண்டிருப்போரினதும் அடையாளங்களைச் சரிபார்ப்பதற்காக அனைத்து நியாயமான நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

24. இடையீட்டாளர்கள், நிதியியல் நிறுவனங்களின் தனிப்பட்ட வாடிக்கையாளர்களாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன் இடையீட்டாளரின் நிலை மேலேயுள்ள பந்திகள் 10 - 11 உட்பட விடயப்படுத்தப்பட்டுள்ள பட்டியல்களிலிருந்து பெறப்பட்ட பொருத்தமான தகவல்களின் மூலம் தனியாகச் சரி பார்க்கப்பட வேண்டும்.

### ஒ. ஏனைய வகை நிறுவனங்கள்

25. மேலேயுள்ள வங்கிகளில் குறிப்பிடப்பட்ட கணக்கு வகைகளுக்காக, பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டவர்களின் அடையாளத்தினை சரி பார்ப்பதற்கான தேவைப்பாடுகளுக்குப் புறம்பாக, பின்வரும் தகவல்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும்:

- கணக்கின் பெயர்
- அஞ்சல் முகவரி
- தொடர்பு கொள்ளும் தொலைபேசி, தொலைநகல் இலக்கங்கள்
- கிடைக்குமிடத்து ஏதாவது விதத்தில் அலுவல்சார் அடையாள இலக்கம் (உ-ம்: வரி அடையாள இலக்கம்)
- கணக்கு வைத்திருப்பவரின் நோக்கம்/ நடவடிக்கையின் விபரம் (உ-ம் வழமையான யாப்பு)
- கணக்கு வைத்திருப்பவரின் சட்ட ரீதியான அந்தஸ்தினை உறுதிப்படுத்துகின்ற ஆவணத்தின் பிரதி (உ-ம்) அறக் கட்டளைகளின் பதிவேடு)

26. நிதியியல் நிறுவனங்கள், குறைந்தது பின்வருவனவற்றில் ஒன்றின் மூலமாவது இத்தகவல்களைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

- சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் புகழ்பெற்ற நன்கறிந்த சட்ட அறிஞர் அல்லது கணக்காளர் நிறுவனத்திலிருந்து சுதந்திரமான உத்தரவாதமொன்றினைப் பெற்றுக் கொள்ளல்
- முன்னைய வங்கி தொடர்பு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளல்
- பொது மற்றும் தனியார் தரவுத் தளங்களை அல்லது அலுவல்சார் மூலங்களை மதிப்பிடல்

### ஓ. அறிமுகப்படுத்தப்பட்ட வியாபாரம்

27. விரைவுபடுத்தலுக்காக, வியாபாரங்களைப் பற்றி குறிப்பிடும் பொழுது ஏனைய நிதியியல் நிறுவனங்கள் அல்லது அறிமுகப்படுத்தலாளர்களினால் பொறுப்பேற்கப்பட்ட நடைமுறைகளில் தங்கியிருப்பது நிதியியல் நிறுவனங்களுக்கு வழமையானதொரு முறையாக மாறியிருக்கிறது. அவ்வாறு செய்யும் போது, அறிமுகப்படுத்துவோர் மேற்கொள்ள வேண்டியது என அவர்கள் எதிர்பார்க்கின்ற நெருக்கமாக கவனிக்கும் நடைமுறைகள் மீது நிதியியல் நிறுவனங்களின் இடர்நேர்வுகள் மிகையான அளவில் காணப்படுகின்றன. புகழ் வாய்ந்தனவாக இருப்பினும், அறிமுகப்படுத்துநர் ஒருவரால் நடத்தப்பட்ட நெருங்கிய கவனிப்பின் மீது தங்கியிருப்பது. அதன் வாடிக்கையாளர் மற்றும் அவர்களின் வியாபாரத்தினை தெரிந்து கொள்வதற்கான பெறுநர் வங்கியின் இறுதியில் பொறுப்பினை எவ்வழியிலேனும் அகற்றாது. குறிப்பாக, நிதியியல் நிறுவனங்களுக்குச் சொந்தமான உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள் என்ற நடைமுறைகளினை ஆளுகின்ற அல்லது நெருங்கிக் கவனிக்கும் ஆவணங்களின் பிரதிகளை பகிர்ந்து கொள்ளவிரும்பாத நிறுவனங்களிலும் பார்க்க நலிந்த தரங்களைக் கொண்ட நிறுவனங்கள் அறிமுகப்படுத்துவரின் மீது நிதியியல் நிறுவனங்கள் தங்கியிருக்கக்கூடாது.

28. அறிமுகப்படுத்துநர்களைப் பயன்படுத்தும் நிதியிடல் நிறுவனங்கள் அறிமுகப்படுத்துநர்கள் "தகுதியான பொருத்தமான" ஆட்களா என்பதனை கவனமாக மதிப்பிட வேண்டியதுடன் இப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களுக்கு இணங்க தேவையான நெருங்கிய ஆவணங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டும். வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்கின்றமைக்கான இறுதிப்பொறுப்பு என்றும் நிதியியல் நிறுவனங்களின் மீதே இருக்கும். அறிமுகப்படுத்துநரை நம்பலாமா என்பதனை தீர்மானிப்பதற்கு நிதியியல் நிறுவனங்கள் பின்வரும் பிரமாணங்களைப் பயன்படுத்த வேண்டும்:

- இப்பத்திரங்களில் அடையாளம், காணப்பட்ட வாடிக்கையாளரின் குறைந்த பட்ச நெருங்கிக் கவனிக்கும் நடைமுறைகளுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும்
- அறிமுகப்படுத்துநரின் வாடிக்கையாளர் நெருங்கி கவனிக்கும் நடைமுறைகள், நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் வாடிக்கையாளர்களுக்காக நடத்துவதனைப் போன்று தீவிரமானதாக இருத்தல் வேண்டும்
- அறிமுகப்படுத்துநர் அவரின் வாடிக்கையாளரின் அடையாளத்தினைச் சரி பார்ப்பதற்காக மேற்கொள்ளும் முறைகளின் நம்பகத்தன்மை பற்றி நிதியியல் நிறுவனங்கள் திருப்திப்படுவனவாக இருத்தல் வேண்டும்

- அறிமுகப்படுத்துநரால் மேற்கொள்ளப்படும் நெருங்கிய கவனிப்பினை எந்த ஒரு சட்டத்திலும் சரி பார்ப்பதற்கு அறிமுகப்படுத்துநர் நிதிக்கம்பனிகளை அனுமதிக்க வேண்டும் என்பது பற்றி நிதிக்கம்பனிகளுடன் உடன்படிக்கையொன்றிற்கு வரவேண்டும் அத்துடன்
- தொடர்பான அனைத்து அறிமுகப்படுத்துகின்ற தரவுகளும் வாடிக்கையாளர் அடையாளம் தொடர்பான ஏனைய ஆவணங்களும் நிதியியல் நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்துநரால் உடனடியாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவர்கள் வழங்கப்பட்ட ஆவணங்களைக் கவனமாக ஆய்வு செய்தல் வேண்டும். பொருத்தமான சட்ட அதிகாரசபை பெற்றிருக்குமிடத்து அத்தகைய தகவல்கள் மேற்பார்வையாளர் மற்றும் நிதிசார் உளவறிதல் பிரிவு அல்லது அதற்குச் சமமான நடைமுறைக்கிடும் முகவரினால் ஆய்வு செய்வதற்கு கிடைக்கத்தக்கனவாக இருத்தல் வேண்டும்.
- மேலும், மேலே குறிப்பிடப்பட்ட பிரமாணங்களை உறுதிப்படுத்துவதில் தொடர்ந்தும் தங்கியிருக்கும் அறிமுகப்படுத்துநரை உறுதிப்படுத்துவதற்காக நிதியியல் நிறுவனங்கள் காலத்திற்குக் காலம் ஆய்வுகளை நடத்துதல் வேண்டும்.

## பகுதி 11 - குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டல்

**அனைத்து நிதியியல் நிறுவனங்களும் பின்வருவனவற்றிற்கு இணங்கி ஒழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன:**

**1) கணக்குகளைத் திறத்தல்**

**அ. தனிப்பட்ட கணக்குகள்**

தகவல்கள் பெறுவதற்கு

- அடையாளப்படுத்தும் ஆவணங்களிலுள்ளவாறு முழுப்பெயர்
- தேசிய அடையாள அட்டை, காலாவதியாகாத கடவுச்சீட்டு, அலுவல்சார் ஓட்டுநர் உரிமம் பத்திரம் போன்ற குறித்துரைக்கப்பட்ட ஆளடையாள ஆவணம்
- அடையாள ஆவணத்தில் காணப்படுகின்றவாறு நிரந்தர முகவரி, ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு ஏதாவது முகவரி இருப்பின் அது மூன்று மாதங்களுக்கு மேல் பழமையான பொதுவசதி பட்டியலின் மூலம் சான்றுபடுத்தப்படல் வேண்டும். பொதுவசதிப் பட்டியல் என்பது மின்பட்டியல், நீர்ப்பட்டியல் அல்லது பொருத்தப்பட்ட ஏதாதொரு தொலைபேசிப் பட்டியல் எனக் குறித்துரைக்கப்படுகிறது. அஞ்சல் பெட்டி எண் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 'மே/பா' என்பதனைப் பொறுத்தவரை, சொத்துரிமையாளர் சம்மதமும் ஏனைய தொடர்பான முகவரி சரி பார்த்தல் ஆவணங்களும் பெறப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றன.
- தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி
- தேசீயம்
- தொழில், வியாபாரம் வகிக்கும் பொதுப்பதவி மற்றும் தொழில் தருணரின் பெயர்
- கணக்கு திறக்கப்பட்டதன் நோக்கம்
- எதிர்பார்க்கப்பட்ட மொத்தப்புரள்வு/ வியாபாரத்தின் அளவு
- வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு/ வதியாதோர் ரூபா கணக்கு என்பனவற்றைப் பொறுத்த வரையில் வெளிநாட்டு நியாயாதிக்கத்தில் கணக்குகளைத் திறப்பதற்கு தெரிந்தெடுக்கப்பட்டமைக்கான காரணம்
- திருப்திகரமான தொடர்புகள்
- கையெழுத்து

பெறப்படவேண்டிய ஆவணங்கள் (ஒவ்வொரு பிரதியும் அதனை வழங்கிய அதிகாரிகளினால் முறையாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

- பணிக்கும்/ கணக்கினைத் திறக்கும் படிவம்
- அடையாள ஆவணத்தின் பிரதி
- முகவரியினைச் சரிபார்க்கும் ஆவணத்தின் பிரதி
- இலங்கையரல்லாதோருக்கான வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு/ வதியாதோர் ரூபாக் கணக்கு/ வதியும் விருந்தினர் வெளிநாட்டுக் கணக்கு
- அத்தகைய நோக்கங்களுக்காக கணக்கு திறக்கப்பட்டிருப்பின் வியாபாரப்பதிவு

**ஆ. உரிமையாளர்/ பங்குடமைக் கணக்குகள்**

பெறப்படவேண்டிய தகவல்கள்

- பதிவு ஆவணத்தில் காணப்படுகின்றவாறு முழுப்பெயர்
- தனிப்பட்ட கணக்குகளைப் போன்று உரிமையாளர்/ பங்காளர்களின் தனியாள் விபரங்கள்
- வியாபாரத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரி அல்லது முக்கியமாக வியாபாரம் இடம்பெறும் மற்றும் உரிமையாளர்/ பங்குடமையாளரின் நிரந்தர முகவரி
- தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி, தொலைநகல் இலக்கங்கள்
- வரிக்கோப்பு இலக்கம்
- திருப்திகரமான தொடர்புகள்
- கையொப்பம்
- சொத்துடமைக் கட்டுப்பாடுகளின் அளவு
- தொடர்புபட்ட ஏனைய வியாபார நலவுரித்துக்கள்

பெறப்பட வேண்டிய ஆவணங்கள்

- பணிக்கும்/ கணக்கினைத் திறக்கும் படிவம்
- வியாபார பதிவு ஆவணம்
- உரிமையாளர்/ பங்காளர் தகவல் ஆவணம்
- அடையாளப்படுத்தல் பிரதி மற்றும் முகவரி சரிபார்த்தல் ஆவணங்கள்

**இ. கூட்டுத்தாபனங்கள்/ வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள்**

பெறப்படவேண்டிய தகவல்கள்

- நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட பெயர்
- நிறுவனத்தின் வியாபாரத் தொழிற்பாடுகள் இடம் பெறும் முதன்மை இடம்
- அஞ்சல் முகவரி, ஏதுமிருப்பின்
- வியாபாரத்தின் தன்மையும் நோக்கமும்
- வருமானவரி சேகரிப்பு இலக்கம்
- வங்கி தொடர்புகள்
- தனிப்பட்ட வாடிக்கையாளர்களைப் போன்று அனைத்துப் பணிப்பாளர்களினதும் தனிப்பட்ட விபரங்கள்
- முக்கியமான பங்குடமையாளாகள் மற்றும் அவர்களது நிதியியல் ஈடுபாடுகள் மற்றும் கட்டுப்பாடு
- துணை/ இணைக்கம்பனிகளின் பட்டியலும் ஏனைய வியாபார தொடர்புகளும்
- கையொப்பங்கள்

பெறப்பட வேண்டிய ஆவணங்கள்

- பணிக்கும்/ கணக்கினைத் திறக்கும் படிவம்
- வியாபார பதிவு ஆவணம்
- அமைப்பு அகவிதிகளின் கூட்டிணைப்பு மற்றும் விஞ்ஞாபனச் சான்றிதழ்களின் மூலப்பிரதி அல்லது சான்றுபடுத்தப்பட்ட பிரதி
- கணக்கின் திறப்பினை உறுதிப்படுத்துகின்ற சபையின் தீர்மானம்
- பணிப்பாளர்களின் ஏனைய வியாபார நலவுரித்துக்கள் உட்பட அவர்களின் தகவல் ஆவணம்
- படிவம் 48இன் பிரதி
- படிவம் 36இன் பிரதி

- முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனியாயின் முதலீட்டுச்சபையின் உடன்படிக்கை
- ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனியாயின் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடிதம்
- பகிரங்க விலைக்குறிப்பீட்டு கம்பனியாயின் வியாபாரம் தொடங்குவதற்கான சான்றிதழ்
- வியாபாரப் பதிவின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி (பங்குடமை/ தனி வர்த்தகராயின்)
- கிடைக்குமிடத்து இறுதிக் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கை
- மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளுக்கும் ஏற்புடைத்தாகும்.
- மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் இல்லாதவிடத்து ஆவணங்களல்லாத முறை கொடுகடன் தகவல் பணியகத்தில் தேடுதல் வங்கித் தொடர்புகள், தலத்திற்கு விஜயம் செய்தல் மற்றும் வாடிக்கையாளரின் வெப்தளத்தினைப் பார்வையிடல் மூலம் தீர்மானித்தல்

**ஈ. களரிகள், சங்கங்கள், அறக்கொடைகள், கூட்டுச் சங்கங்கள் மற்றும் அரசல்லா நிறுவனங்கள்**

பெறப்படவேண்டிய தகவல்கள்

- பட்டயம், யாப்பு போன்றவற்றில் காணப்படுகின்றவாறு பெயர் மற்றும் முகவரி
- கையொப்பமிடுபவர்கள், நிருவாக அலுவலர்கள், ஆளுகைச் சபையிலுள்ள அல்லது குழுவிலுள்ள உறுப்பினர்கள் அல்லது தனிப்பட்டவர்களின் கணக்குகளைப் போன்று கம்பனியின் தொழிற்பாடுகளின் மீது கட்டுப்பாட்டையும் செல்வாக்கையும் கொண்டுள்ள குறைந்தது இரு அலுவலர்களின் விபரமான தகவல்கள்
- கணக்கு திறக்கப்பட்டதன் நோக்கம், குறிக்கோள்கள் மற்றும் நடவடிக்கைத் துறைகள்
- வருமானம்/ நிதியிடலின் மூலமும் மட்டமும்
- ஏனைய தொடர்புபட்ட நிறுவனங்கள்/ சங்கங்கள்/ அமைப்புக்கள்
- தொலைபேசி, தொலைநகல் இலக்கங்கள்/ மின்னஞ்சல் முகவரி

பெறப்பட வேண்டிய ஆவணங்கள்

- பதிவு ஆவணம்/ யாப்பு, பட்டயம் போன்றவை
- தனிப்பட்ட கணக்குகளைப் போன்று சங்க தகவல் படிவம்
- பணிக்கப்பட்ட/ கணக்கு திறப்பு படிவம்

**உ. நம்பிக்கைப் பொறுப்பாளர், நியமனத்தர், நம்பகத்தன்மைக் கணக்குகள்**

பெறப்படவேண்டிய தகவல்கள்

- நம்பிக்கைப் பொறுப்பாளர்களைப் பொறுத்த வரையில், நம்பிக்கை பொறுப்பாளர்/ தீர்ப்பனவாளர், கொடைநர்கள் மற்றும் நன்மை பெறுநர்கள் அனைவரையும் அடையாளம் காணல்
- வாடிக்கையாளர் "முன்னணியாளராக" அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர், நியமனத்தர் அல்லது இடையீட்டாளராக செயற்படுகின்றாரா என்னுமிடத்து

பெறப்பட வேண்டிய ஆவணங்கள்

- பணிக்கப்பட்ட/ கணக்கு திறக்கப்படும் படிவம்
- நம்பிக்கை பொறுப்பு உறுதி
- தனிப்பட்ட ஆட்கள் அனைவரினதும் விபரங்கள்

**2. கணக்குகளைப் பேணுதல்**

1. வாய்ப்புள்ள கட்சிக்காரரின் போதுமான அடையாளங்களைப் பெறும் வரையில் கணக்கெதனையும் திறக்கக்கூடாது. கணக்கைத் திறந்த பின்னர் தகவல்களில் குறைபாடுகள் கண்டறியப்படுமாயின் அத்தகைய தகவல்களின் உண்மையான தன்மை உறுதிப்படுத்தப்படும் வரை கணக்குகளை நிறுத்துதல் வேண்டும்.
2. தொடக்கத்தில் பதியப்படும் பொதுவான வாடிக்கையாளர் தகவல்கள் வாடிக்கையாளர் வியாபாரம்/ தொழில், வருமானமட்டம், பொருளாதார தோற்றப்பாடு, வியாபாரக் கூட்டுக்கள் மற்றும் தொடர்புகள், நிதிகளின் மூலம் மற்றும் கணக்கு திறக்கப்பட்டதன் நோக்கம் என்பனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

3. அனைத்து அடையாளப்படுத்தல்களினதும் முகவரி சரிபார்ப்பு ஆவணங்களினதும் பிரதிகள் சட்ட நியதிகளின்படி வைத்திருக்கப்படல் வேண்டும்.

4. கணக்கொன்றினைத் திறப்பதற்கு கோரிக்கை விடுக்கப்படும் கிளை, விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள நிரந்தர முகவரியிலிருந்து மிகத் தூரத்திலிருக்குமிடத்து ஏற்றுக் கொள்ளத்தக்க செல்லுபடியாகக் கூடிய காரணங்களைத் தெரிவித்தாலொழிய கோரிக்கையினை ஊக்குவிக்காமல்/ அதை நிராகரித்து குறிப்பிட்ட கட்சிக்காரரை அவரின் வசிப்பிடத்திற்கு அல்லது அவரின் வியாபார இடத்திற்கு அண்மையிலுள்ள கிளையில் கணக்கினைத் திறக்குமாறு கோருதல் வேண்டும். அத்தகைய விதிவிலக்கான தன்மைகள் கோவையில் பதிவு செய்யப்படல் வேண்டும். கணக்குத் திறக்கப்பட்ட பின்னர் முகவரி மாற்றப்படுமாயின் கணக்கானது குறிப்பிட்ட வங்கியின் அண்மைய கிளைக்கு மாற்றல் செய்யப்பட வேண்டும்.

5. அதே வங்கியின் இரண்டு அல்லது மூன்று கணக்குகள் திறக்கப்படும் பொழுது, கணக்கு திறக்கப்பட்டதன் குறித்துரைக்கப்பட்ட நோக்கம், அனைத்துக் கணக்குகளையும் நெருங்கிக் கவனிப்பதற்கு உதவும் விதத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

6. குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர், சுங்கம், மத்திய வங்கி போன்ற தேசிய/ அரச அதிகாரிகளினால் வழங்கப்பட்ட சந்தேகத்திற்குரிய பயங்கரவாதப்பட்டியல் அல்லது கவனிப்புப்பட்டியல் ஏதாவதில் வாய்ப்புள்ள வாடிக்கையாளரின் பெயர் காணப்படுகின்றதா என்பதனை பரிசோதித்துக் கொள்ளவும்.

7. கட்சிக்காரனிடமிருந்து நிதிகளை ஒரு கணக்கிலிருந்து மற்றொன்றிற்கு மாற்றுமாறு அறிவுறுத்தல்களைப் பெறும் போது எதிர்கால விசாரணைகளுக்கு உதவும் விதத்தில் இரண்டு இலக்கங்களும் பதிவு செய்யப்படல் வேண்டும்.

8. இலங்கையில் வதிகின்ற இலங்கையரல்லாத வெளிநாட்டுக் கடவுச்சீட்டினை வைத்திருப்பவர்களுக்காக வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் விருந்தினர் வெளிநாட்டு நாணயக் கணக்கு அதே போன்று தற்காலிமான ரூபாக் கணக்குகளைத் திறக்கும் பொழுது அவர்கள் இலங்கையில் இருக்கும் காலத்தில் அவர்களின் நிரந்தர முகவரியாக உள்ளூர் முகவரியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். கடவுச்சீட்டின் பிரதி செல்லுபடியாகக்கூடிய காலப்பகுதிக்குரிய விசா, வெளிநாட்டு முகவரி மற்றும் கணக்குத் திறக்கப்படுவதன் நோக்கம் என்பன கோவையில் கிடைக்கச் செய்யப்படவேண்டும். வேறுவிதமாக பொருத்தமான அறிவுறுத்தல்கள் பெறப்பட்டிருந்தாலொழிய விசா காலாவதியாகும் பொழுது கணக்குகளின் தொழிற்பாடுகளும் நிறுத்தப்படல் வேண்டும். தீவினை விட்டுச் செல்லும் போது கணக்கானது ஒன்றில் மூடப்பட வேண்டும் அல்லது வதியாதோர் கணக்கொன்றிற்கு மாற்றப்பட வேண்டும். கட்சிக்காரர் நிதியியல் நிறுவனங்களுடன் கணக்குகளைத் தொடர்ந்தும் வைத்திருக்கும் காலப்பகுதி முழுவதும் அவர்கள் செல்லுபடியாகக் கூடிய விசாவினை எல்லா நேரமும் வைத்திருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

9. வதிவற்ற ஒருவருக்காக (வெளிநாட்டுக் கடவுச்சீட்டை வைத்திருப்பவர்) ரூபாக் கணக்கொன்று திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் பொழுது அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் வெளிநாட்டு முகவரி நிரந்தர முகவரியாகப் பயன்படுத்தப்படலாம். வெளிநாட்டு நியாயாதிக்கத்தில் கணக்கொன்றினைத் திறப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட காரணங்கள் கோவையொன்றில் பதிவு செய்யப்படல் வேண்டும்.

10. இலங்கையில் வதியும் இலங்கையரல்லாதவர்களுக்கான அனைத்து ரூபாக் கணக்குகளும் இலங்கை முகவரிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். கணக்கு வைத்திருப்பவர் வெளிநாட்டில் வதியும் வரை வெளிநாட்டு முகவரிகளைத் தற்காலிகமாகப் பயன்படுத்தலாம். தற்போது நடைமுறையிலுள்ள கவனிப்பின் கீழ் கட்சிக்காரர் இலங்கை வந்ததும் முகவரியினை மாற்றிக் கொள்வதனை வங்கி உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். கூட்டுக் கணக்கினைப் பொறுத்தவரையில் அனைத்து தரப்பினரும் வெளிநாட்டில் வசிக்கும் பொழுது மட்டுமே வெளிநாட்டு முகவரிகளைப் பயன்படுத்த முடியும். எந்த ஒரு தரப்பினரும் இலங்கையில் வசிப்பின் உள்ளூர் முகவரியினையே பேணி வருதல் வேண்டும்.

11. அறக்கொடை சார்ந்த மற்றும் உதவி அமைப்புக்கள் மற்றும் அரசல்லா நிறுவனங்களுக்கான வங்கிக் கணக்குகள் அரசல்லா நிறுவனங்களின் அதிகாரிகளினது பதிவுகளுடனும் பொருத்தமான நம்பகமான ஆதாரங்களுடனும் திறக்கப்படுதல் வேண்டும். அவர்களின் தொழிற்பாடுகளை ஆளுகை செய்வதற்காக வழங்கப்பட்ட உ-மாக வங்கி மேற்பார்வைத் திணைக்களம்/ செலாவணிக் கட்டுப்பாடு என்பவற்றினால் வழங்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகளில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

12. "அரசியல் ரீதியாகத் தெரிந்த ஆட்களுக்காக" கணக்குகளைத் திறத்தல் மூத்த முகாமைத்துவத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். அரசியல் ரீதியாகத் தெரிந்த ஆட்கள் என்பது "முனைப்பான பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள தனிப்பட்டவர்கள் என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. உ-ம் அரச அல்லது அரசாங்கத் தலைவர், மூத்த அரசியல்வாதிகள், மூத்த அரச, நியாயதிக்க அல்லது படை அலுவலர்கள், அரச கூட்டுத்தாபனங்களின் மூத்த நிறைவேற்று அலுவலர்கள், முக்கியமான அரசியல் கட்சி அலுவலர்கள் என்போர். அரசியல் ரீதியாகத் தெரிந்த ஆட்களின் குடும்ப உறுப்பினர் அல்லது நெருங்கிய சகாக்களுடனான வியாபார உறவு முறைகள் அரசியல் ரீதியாகத் தெரிந்த ஆட்களுடனானதைப் போன்று பெருமதிப்புச் சார்ந்த இடர்நேர்வுகளுடன் தொடர்பானதாகக் காணப்படுகிறது. வரைவிலக்கணமானது மேற்சொன்ன வகையிலுள்ள மத்திய தரத்திலுள்ள அல்லது மிக இளநிலை ஊழியர்களை உள்ளடக்கவில்லை.

13. சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்குகளுக்கு மூன்றாம் தரப்பினரால் செய்யப்படும் ரூ.500,000 இற்கும் கூடுதலான அனைத்து காசு வைப்புக்களும் வைப்பாளரின் அடையாளம் தொடர்பான பதிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம், நோக்கம், கையொப்பம் போன்ற விபரங்கள் தேவைப்படுத்தப்படுகின்றன. எனினும், கணக்குகளைக் கையாள்வதற்கு

அதிகாரமளிக்கப்பட்டுள்ள எழுதுவினைஞர்கள், கணக்காளர்கள் மற்றும் வியாபார நிறுவனத்திலுள்ள ஊழியர்கள் "மூன்றாம் தரப்பினர்கள்" என்ற வரைவிலக்கணத்தின் கீழ் வரமாட்டார்கள்.

14. வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு/ வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு என்பனவற்றிலிருந்து வெளிமுக பணவனுப்பல்களை/ தந்தி மாற்றல்களைச் செய்யும் பொழுது அதனை மேற்கொள்பவர் தொடர்பான முக்கியமானதும் அர்த்தமுடையதுமான பெயர், முகவரி, கணக்கு இலக்கம், அடையாள அட்டை இலக்கம் போன்றவற்றையும் அத்தகைய மாற்றல்களுக்கான காரணத்தை சுருக்கமாக எழுதி அவற்றை உள்ளடக்குகின்ற முழுமையான விண்ணப்பமொன்றினை நிதியியல் நிறுவனங்களுக்கு அனுப்புவது கட்டாயமானதாகும். இது உள்நாட்டு தந்தி மாற்றல்களுக்கும் ஏற்புடைத்தாகும்.

15. வதியாதோர் வெளிநாட்டு நாணய/ வதிவோர் வெளிநாட்டு நாணய கணக்குகளுக்கு செய்யப்பட்ட காசு வைப்புக்கள், கணக்கு வைத்திருப்பவரினால் சான்றுகளுடன் நாட்டிற்குள் எடுத்து வரப்பட்டிருந்தாலொழிய அவற்றிலிருந்து தந்தி மாற்றல்களெதுவும் அனுமதிக்கப்படமாட்டாது. நாட்டிற்கு எடுத்து வரப்பட்ட **வெளிப்படுத்தப்படாத**[1] நாணயத்தாள்கள் இக்கணக்கில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கிரமமான நாணயத்தாள்கள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருக்குமாயின் நிதியியல் நிறுவனங்கள் அவை தொடர்பாகத் திருப்தியடைந்து அத்தகைய வைப்புக்களின் சட்ட பூர்வத் தன்மையினையும் அறிந்திருத்தல் வேண்டும்.

16. நிதியியல் நிறுவனங்களின் தெளிவான ஒப்புதலில்லாமல் **கட்டாய குறைந்த பட்ச அளவை**[2] விஞ்சுகின்ற விதத்தில் தன்னியிக்க கூற்றுப் பொறிகளின் மூலமான வெளிநாட்டு எடுப்பனவுகள் எதுவும் இடம் பெறவில்லை என்பதனை நிதியியல் நிறுவனங்கள் கட்டாயம் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். அறிக்கையிடும் வரையறைகளை ஏமாற்றும் பொருட்டு சிறிய தொகைகளாக வாடிக்கையாளர் கிரமமான எடுப்பனவுகளை செய்வார்களாயின், அத்தகைய சந்தர்ப்பத்தில் எடுப்பனவு வசதிகள் இடைநிறுத்தப்பட்டு சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல் என அறிக்கையிடப்பட வேண்டும். இவ்வசதி தவறாகப் பயன்படுத்தப்படுவதனைத் தடுப்பதற்காக நிதியியல் நிறுவனங்கள் நெருங்கிய கவனிப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும். இது ரூபாக் கணக்குகள் மற்றும் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் இரண்டிற்கும் ஏற்புடைத்தாகும்.

17. செலாவணிக் கட்டுப்பாடு ஒழுங்கு விதிகளின்படி வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு நிதியத்தினை மாற்றல் செய்வது அனுமதிக்கப்பட்டிருக்கின்ற போதும் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு நிதியியல் எதனையும் மாற்றல் செய்யமுடியாது.

18. நிதியியல் நிறுவனங்களின் வாடிக்கையாளரல்லாதவர்களுக்கு சேகரிப்பு அடிப்படையில் இறக்குமதி ஆவணங்களை வழங்கும் போது சரியான வாடிக்கையாளர் அடையாளங்களை அல்லது உறவுமுறையினை நிறுவியிருத்தல் வேண்டும். அடையாளம் காணுதல் ஆளின் சரியான முகவரி அல்லது வியாபாரத்தினை உள்ளடக்கியதாயிருத்தல் வேண்டும்.

19. தொடர்பான தகவல்களுடன் கூடிய அனைத்து கணக்குகளையும் அனைத்து நிதியியல் நிறுவனங்களும் 2008 மாச்சு 31ஆம் நாளளவில் முழுமையாக நாளது வரை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

20. கட்டாய அறிக்கையிடல் தேவைப்பாடுகளை ஏமாற்றுகின்றதொரு முயற்சியாக, தொடக்க வரையறையான ரூ.500,000 இற்கு குறைவான கொடுக்கல்வாங்கல்களை அடிக்கடி பதிவு செய்கின்ற கணக்குகளை, பொருத்தமான நடவடிக்கைகளுக்காக நிதியியல் நிறுவனங்களின் இணங்குவிப்பு அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்.

21. கணக்கு நடவடிக்கைகள் பதிவிலுள்ள வாடிக்கையாளர் தோற்றப்பாடுகளுடன் ஒத்தனவாக இருக்கின்றன என்பதனை நிதியியல் நிறுவனங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏதும் ஒவ்வாமைகள் காணப்படுமிடத்து அவை விசாரணை செய்யப்பட்டு சரியான நிலைமைகள் பதிவு செய்யப்பட வேண்டும். விளங்கப்படுத்த முடியாத அனைத்து நடவடிக்கைகளும் பொருத்தமான நடவடிக்கைகளுக்காக நிதியியல் நிறுவனங்களில் இணங்குவிப்பு அலுவலருக்கு அறிக்கையிடப்பட வேண்டும்.

22. **புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல்** - நிதியியல் நிறுவனங்கள் பெயர் குறிப்பிடாது நடவடிக்கையெடுக்கும் வழிமுறைகளுக்கு சாதகமானதாகவுள்ள இணையத்தள வங்கித்தொழில் உட்பட புதிய அல்லது அபிவிருத்தியடைந்து வரும் தொழில்நுட்பங்களிலிருந்து தோன்றக்கூடிய எந்த ஒரு பணம் தூயதாக்கலாக்கும் எந்த ஒரு அச்சுறுத்தலுக்கும் தேவையானவிடத்து பணம் தூயதாக்கல் திட்டங்களுக்கு பயன்படுத்துவதிலிருந்தும் தடுப்பதற்கும் சிறப்புக் கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும். நிதியியல் நிறுவனங்கள், பொருட்களையும், பணிகளையும் வாங்குவதற்கும், தன்னியக்க கூற்றுப் பொறிகளிலிருந்து காசினை எடுப்பனவு செய்வதற்கும் நிதிகளின் இலத்திரனியல் மாற்றல்களுக்கும் வாடிக்கையாளர்களினால் பயன்படுத்தப்பட்டுவரும் இலத்திரனியல் அட்டைகளின் வெவ்வேறு வகைகள் பற்றி மனதில் கொள்ள வேண்டும். **குறிப்பாக, முன்னரே நிரப்பப்பட்ட கொடுகடன் அட்டைகள், மற்றைய விடயங்களுடன் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடும் நோக்கங்களுக்காகப் பயன்பட முடியுமாகையால் அவற்றை அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு செய்வது கொடுகடன் அட்டைகளின் தவறான பயன்பாட்டிற்கு சமமானதாகும்.**

23. **கொடுகடன் அட்டை வாணிபத்தின், வியாபாரத் தன்மையின் மீதான சிறப்புக் கவனிப்புக்களுடன் கூடிய ஏற்கனவேயுள்ளதும் புதியதுமான கொடுகடன் அட்டை வியாபார தளத்தினை உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளர்களை நெருக்கமாக கண்காணித்தல் என்பன மேலதிகமாக மேற்கொள்ளப்பட்டதுடன் எந்த ஒரு சட்ட விரோத நடவடிக்கையுடனும் தொடர்புபட்ட எந்தவொரு வாடிக்கையாளர், கொடுக்கல்வாங்கல் அல்லது வணிகத்திற்கெதிராக நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் பொருத்தமான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக**

கொடுகடன் அட்டை மூலமாக இணையத்தள மூலமாக செய்யப்படும் கொடுப்பனவுகள் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் அல்ல என்பதனை உறுதிப்படுத்துவதில் வாடிக்கையாளர் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும்.

24. கொடுகடன் அட்டைகள், சந்தைப்படுத்தல் முகவர்களூடாக மேற்கொள்ளப்படுமிடத்து வாடிக்கையாளர்களுக்கும் அதேபோன்று முகவர்களுக்கும் பொருத்தமான உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள் நடைமுறைகள் சரியாகப் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன என்பதனை நிதியியல் நிறுவனங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

25. கணக்குகளைத் திறப்பதற்கான விண்ணப்பங்களை அஞ்சல் அல்லது மின்னஞ்சலூடகப் பெற்றுக் கொள்ளும் போது, கணக்குகளைத் திறப்பதற்கு அல்லது அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் கட்சிக்காரரின் உண்மையான அடையாளத்தினை பதிவு செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும். கணக்குகளைத் திறக்கவுள்ள கட்சியினர் நேரடியாக வரமுடியாமல் போகுமிடத்து நிதியியல் நிறுவனங்கள் தேவையான அடையாளம் காணும் வழிமுறைகளை மேற்கொள்ள முடியாமல் போகும்.

26. சுவிப்ற் செய்திச் சேவை உள்வரும் பணவனுப்பல் தொடர்பான ஆறு ஆண்டு கால முக்கியமான வாடிக்கையாளர் விபரங்களை கொண்டிருப்பதனால் அதனை பேணிப் பாதுகாப்பது நிதியியல் நிறுவனங்களுக்குக் கட்டாயமானதாகவுள்ளது.

27. நிதியியல் நிறுவனங்கள் நாணய மாற்றுநர்கள்/ பண அனுப்புவோருக்கான கணக்குகளைப் பேணும் பொழுது அவர்கள் அத்தகைய கட்சியினர் பிரத்தியேகமாக நாணயம் மாற்றுவது/ பணம் அனுப்பும் நடவடிக்கையின் போது அவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கவே அதில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பதனை அறிந்து கொள்வது அவசியமாகும். நாணய மாற்றுநர்கள் பணம் தூயதாக்கலுக்கெதிரான சட்டம் மற்றும் நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் என்பனவற்றினால் உள்ளடக்கப்பட்டிருப்பதனால் அவை சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு முழுமையாக இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்துவது நிதியியல் நிறுவனங்களின் கடமையாகும். நிதியியல் கொடுக்கல்வாங்கல்களில் சட்டத்திற்கு மாறான ஏதாவது அங்கீகரிக்கப்படாத நடவடிக்கைகள் காணப்படுமாயின் அவை, பொருத்தமான நடவடிக்கைகளுக்காக நிதியியல் நிறுவனங்களின் இணங்குவிப்பு அலுவலரின் கவனத்திற்கு கொண்டு வரப்படவேண்டும்.

28. மாற்று பணவனுப்பல் முறைகள் (கவுந்தி கவாலா போன்றன)

வழமையான பண பரிமாற்றல் பணிகளுக்கும் முறை சாராத மற்றும் மேற்பார்வையிடப்படாத கணனி வலையமைப்பு அல்லது பொறிமுறையினூடாக ஒரு புவியியற் பிரதேசத்திலிருந்து இன்னொன்றிற்கு நிதியம் அல்லது பெறுமதி நகர்கின்றமையினூடாக ஏனைய பணங்கள் மற்றும் பெறுமதி மாற்றல்களுக்கிடையில் வேறுபாட்டினைக் காண்பதற்கு நிதியியல் நிறுவனங்களுக்கு மேலதிக விழிப்புணர்வு தேவைப்படுகின்றது. இந்நிதியங்களின் மூலத்தினை வேறுபடுத்திக் கொள்வது தவிர்க்க முடியாததாக மாறியுள்ளது.

29. தொடர்பான வங்கிகள் மற்றும் தனிப்பட்ட வங்கிகள் - தொடர்பான வங்கிகள் நிதியியல் நிறுவனங்களுக்குமிடையில் வங்கித்தொழில் உறவுமுறையினை தொடங்குவதற்கு முன்னர் நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் முகாமைத்துவம் முக்கியமான வியாபார நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் பணம் தூயதாக்கல் நடவடிக்கைகளைத் தடுத்தல் மற்றும் கண்டு பிடித்தல் முயற்சிகள் என்பன தொடர்பாக போதுமான தகவல்களைத் திரட்டிக் கொள்ள வேண்டும். கணக்கின் நோக்கம் பிரத்தியேகமான தொடர்பு வங்கித்தொழில் நடவடிக்கைதான் என்பதனை அவ்வங்கி, தொடர்பான அதிகாரிகளினால் அவர்களது நெருக்கமான கவனிப்பு மற்றும் நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான நியமங்களினால் காத்திரமான முறையில் மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது என்பதனையும் உறுதிப்படுத்துவதும் நிதியியல் நிறுவனங்களின் கடமையாகும். மோசமான உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள் தொடர்பான மோசமான நியமங்கள் அல்லது பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பனவற்றிற்கெதிரான நடவடிக்கைகளால் "ஒத்துழைக்காதவை" என அடையாளம் காணப்பட்ட நியாயாதிக்கப் பிரதேசத்தில் அமைந்துள்ள நிதியியல் நிறுவனங்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளவோ, வியாபாரத்தினை நடத்தவோ பணிகளை வழங்கவோ மறுக்கலாம். நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் தொடர்பு நிதியியல் நிறுவனங்கள் தனிப்பட்ட நிதியியல் நிறுவனங்களுடன் வியாபாரங்களை மேற்கொள்ளவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதும் தவிர்க்க முடியாததாகியுள்ளது. செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் சரியான ஒப்புதலில்லாமல் தனிப்படட நிதியியல் நிறுவனங்களுக்கு கணக்குகள் எதுவும் திறக்கப்படமாட்டாது.

குறிப்புக்கள்: 1. விபரிக்கப்பட்ட வரையறைகளுக்கு மிகையாக உள்ளவை

2. வங்கிகள் குறித்துரைக்கும் தன்னியிக்க கூற்றுப் பொறிகளின் எடுப்பனவு அளவு

## 3. பொது

1. நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 14ஆம் பிரிவின் நியதிகளில் **இணங்குவிப்பு அலுவலரொருவரை** நியமிக்குமாறு அனைத்து நிதியியல் நிறுவனங்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. அவர் குறிப்பிட்ட சட்டங்களின் தேவைப்பாடுகளுடன் நிறுவனம் இணங்கிச் செல்கின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருப்பார்.

2. நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 14(1)இ இன் நியதிகளில், ஒவ்வொரு வங்கியும் இணங்குவிப்பதற்கான நடைமுறைகளையும் முறைகளையும் பரீட்சிப்பதற்காக **கணக்காய்வு தொழிற்பாடொன்றினை** உருவாக்குதல் வேண்டும்.

3. அனைத்து நிதியியல் நிறுவனங்களும் அதன் **அலுவலர்களும் ஊழியர்களும்** பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பாக சட்டங்களை அறிந்திருக்க வேண்டுமெனவும் ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அடையாளம் காணும் விதத்தில் இதன் அலுவலர்கள், ஊழியர்கள், முகவர்கள் ஆகியோருக்கு பயிற்சிகளை வழங்கவேண்டும் எனவும் கேட்டுக்

கொள்ளப்பட்டன. நிதியியல் நிறுவனங்கள் ஊழியர்களை நியமிப்பதற்கு முன்னர் அனைத்து ஆட்களையும் பற்றி தெளிவாக அறிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

4. நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் **உள்நாட்டு, வெளிநாட்டுக் கிளைகள் மற்றும் துணை நிறுவனங்கள்** உள்நாட்டுச் சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் பிரயோகிக்கப்பட வேண்டிய அளவிற்கு வழிமுறைகள் பின்பற்றப்படுவதனை அவதானிப்பதனை உறுதிப்படுத்த வேண்டியதுடன் வெளிநாட்டுக் கிளைகள்/ துணை நிறுவனங்கள் நியாயாதிக்கம் இல்லாத அல்லது போதுமானதாக இல்லாத அத்தகைய வழிமுறைகளைப் பின்பற்றவோ அல்லது அவதானிக்கவோ முடியாதனவாக இருந்தவிடத்து பொருத்தமான நடவடிக்கைகளுக்காக பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதனை ஒழிக்கும் விதந்துரைப்புக்கள், நிதியியல் நிறுவனங்களின் இணங்குவிப்பு அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

5. எல்லா நிதியியல் நிறுவனங்களும் அவை தொடர்பான ஒப்பீட்டு ரீதியில் பாரிய சிக்கலான, வழமைக்கு மாறான அல்லது வெளிப்படையான பொருளாதார, சட்ட ரீதியான நோக்கங்களைக் கொண்டிராத கொடுக்கல்வாங்கல்கள் அனைத்தினதும் பின்னணியையும் மிக நுணுக்கமாக ஆராய்ந்து பரீட்சிக்க வேண்டியதுடன் பரீட்சிப்புக்கள் தொடர்பான எழுத்து மூலமான பதிவுகளையும் பேணி வருதல் வேண்டும்.

6. **திறைசேரி வணிகங்கள்**

வெளிநாட்டுச் செலாவணி, பணச் சந்தை, முறிகள், பிணையங்கள், பெறுமதிமிக்க உலோகங்கள் போன்றவற்றின் வணிகம் தொடர்பான உறுதிப்பாடுகளை இணங்கிக் கொள்ளாத நாடுகள்/ முயற்சிகளுடனான கொடுக்கல் வாங்கல்களைத் தவிர்ப்பதற்காக பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதனை ஒழிக்கும் வழிகாட்டல்களை அவர்கள் பின்பற்றுவதன் மீதான இணைக்கிணைத் தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும்.

7. **வர்த்தக நிதி நாணயக்கடிதம் மற்றும் எதிர்பாராத நிகழ்வுகள்**

**வர்த்தகத்தினை அடிப்படையாகக் கொண்ட பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுகின்ற** நடவடிக்கைகள் வழமையாக பொருள்பட்டியலில் மாற்றத்தைச் செய்தல் மற்றும் நிதியியல் வெளிப்படையான தன்மைகள், சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளை தவிர்க்கும் விதத்தில் வர்த்தக நிதி வழிப்படுத்தல்கள் மற்றும் பண்டங்களினைப் பயன்படுத்துதல், என்பனவற்றுடன் தொடர்புபட்டனவாக இருந்தன. இவ்வசதிகளின் பயன்பாட்டினை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது. மற்றைய நிறுவனங்களுடன் கடன்பாட்டு வசதிகளை அல்லது பாரிய வைப்புக்களை வைத்திருக்கும் வாடிக்கையாளரினால் கோரப்படும் வசதிகள் மிக நெருக்கமாக நுணுகி ஆராயப்படுதல் வேண்டும். மற்றைய உதாரணங்களாக வெளிப்படையாக தொடர்புபட்டுள்ள மூன்றாம் தரப்பினரொருவருக்கு பெறுகைகளை ஒப்படைத்தல், பொருள்களின் விபரங்களைக் குறிப்பிடாமல் பொருள்பட்டியல் படிவங்களைப் பயன்படுத்தல் மற்றும் பொருட்களின் விபரணங்களையும் பொருத்தமான ஆதாரமான ஆவணங்களையும் மறைத்தல் என்பன காணப்படுகின்றன.

நிதிசார் உளவறிதல் பிரிவு
2007 மே 23

**தொடர்பு எண்: 37/04/001/0001/007**

அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள்/ பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளுக்கு

அன்புள்ள ஐயா

**2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் அறிக்கையிடும் தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுகுதல்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2006ஆம் ஆண்டின் செத்தெம்பர் 15ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கைக்கு மேலதிகமாக, பின்வருவன தொடர்பாக தங்களின் கவனத்தினை ஈர்க்க விரும்புகிறேன்.

குறிப்பிட்ட சுற்றறிக்கையின் கிளை வாசகம் (அ) மற்றும் (ஆ) இன்படி, தங்களுக்கு தரப்பட்ட மாதிரி படிவத்தில் இரு வார கால அடிப்படையில் உங்கள் அறிக்கைகள் நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

உ-ம் ஒவ்வொரு மாதத்தின் 1ஆம் நாளிலிருந்து 15ஆம் வரையான காலப்பகுதிக்குரிய அறிக்கைகள் மாதத்தின் 30ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

16ஆம் நாளிலிருந்து 31ஆம் நாள் வரையான காலப்பகுதிக்குரிய அறிக்கைகள் அதனை அடுத்து வரும் மாதத்தின் 15ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேற்குறிப்பிட்டவற்றுடன் இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்துமாறு நீங்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள

**பதில் மேலதிகப் பணிப்பாளர்**
நிதிசார் உளவறிதல் பிரிவு

நிதிசார் உளவறிதல் பிரிவு
2007 யூன் 21

**தொடர்பு எண்: 37/04/001/0001/007**

*அனைத்து வர்த்தக வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**கட்டாயமாக அறிக்கையிடும் தேவைப்பாடு - இலத்திரனியல் நிதிய மாற்றல்கள்**

2006 மாச்சு 23ஆம் நாளின் இலக்கம் 1437/25 கொண்ட அரச வர்த்தமானியின் நியதிகளுக்கிணங்க ரூ.500,000 இனை அல்லது அதற்குச் சமமான எந்த ஒரு வெளிநாட்டு நாணயத்தினையும் விஞ்சுகின்ற இலத்திரனியல் நிதிய மாற்றல்களை கட்டாயமாக அறிக்கையிடும் தேவைப்பாடுகளின்பால் உங்களின் கவனம் உடனடியாக ஈர்க்கப்படுகின்றது.

அறிக்கையிடும் காலப்பகுதிக்காக 2007 யூன் 30ஆம் நாளன்றும் அதற்குப் பின்னரும் பின்வரும் கொடுக்கல்வாங்கல்களையும் இந்நோக்கத்திற்காக காட்டாய கொடுக்கல்வாங்கல் வடிவமைப்பில் உள்ளடக்குவதனை உறுதிப்படுத்துவதற்கு நாம் உங்களுக்கு நன்றியுடையவர்களாவோம்.

இலத்திரனியல் நிதிய மாற்றல்கள்

(i) உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் பணவனுப்பல்கள்

(ii) சிலிப்ஸ் மாற்றல்கள்

(iii) அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கொடுக்கல்வாங்கல்கள்

(iv) கொடுகடன் அட்டை கொடுக்கல்வாங்கல்கள்

(v) பற்று அட்டை கொடுக்கல்வாங்கல்கள் (பொருத்தமானவிடத்து)

(vi) வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு

அத்துடன், கட்டாய மட்டத்திற்கு கூடுதலாக இலத்திரனியல் ரீதியாக மாற்றல் செய்யப்பட்ட வேறு ஏதாவது கொடுக்கல் வாங்கல்கள்.

உங்கள் உண்மையுள்ள

**பதில் பணிப்பாளர்**
நிதிசார் உளவறிதல் பிரிவு

படிகள்: இணங்குவிப்பு அலுவலர்கள் அனைவருக்கும்
இலங்கை வங்கியாளர் சங்கம்
ஒப்புதலளிக்கப்பட்ட கணக்காளர் குழுமம்
பணிப்பாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

நிதிசார் உளவறிதல் பிரிவு
2007 ஒகத்து 20

**தொடர்பு எண்: 37/01/016/0001/007**

உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட
நிதிக்கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**புதிய வாடிக்கையாளர் மற்றும் ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களுக்கான உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளர்களை நெருக்கமாக கவனித்தல் தொடர்பான இணங்குவிப்புக்கள் - தயார் நிலை**

2007 யூனில் இத்துறைக்கு வழங்கப்பட்ட உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் கட்டாய ஒழுங்குவிதிகளுடன் இணங்கி ஒழுகுவதற்கான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் தயார் நிலைமையினை மதிப்பிடும் பொருட்டு பின்வரும் விதத்தில் நடைமுறைக்கு வரும்.

| | | |
|---|---|---|
| புதிய வாடிக்கையாளர்கள் | - | 2007 ஒத்தோபர் |
| ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்கள் | - | 2008 மாச்சு |

இக்கடிதம் கிடைத்த நாளிலிருந்து 2 வாரங்களுக்கிடையில் பின்வரும் தகவல்களை நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு தயவு செய்து வழங்கவும்.

- மேற்குறிப்பிட்ட காலத்திற்கு வலுவளிக்கும் பொருட்டு தொழிற்பாட்டு திட்டங்கள் இடம் பெறும்.
- நிர்ணயிக்கப்பட்ட கால அளவு அதாவது 2007 செத்தெம்பர் - 2007 திசெம்பர்
  - 2008 மாச்சு
- 2008 மாச்சு கால அவகாசத்திற்குள் பூர்த்தி செய்ய முடியாவிடின் அதற்கான காரணங்களையும் அதன் பின்னர் நிறைவு செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட கால அளவு
- மூன்றாம் கால இடைவெளி 2009 மாச்சில் முடிவடைகிறது என்பதனைக் கவனத்திற் கொள்ளவும்

உங்கள் உண்மையுள்ள

**பதில் பணிப்பாளர்**
நிதிசார் உளவறிதல் பிரிவு

படிகள்: பணிப்பாளர், வங்கி மேற்பார்வை, இலங்கை மத்திய வங்கி
பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை, இலங்கை மத்திய வங்கி
நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு, 23இன் நியதிகளில் உங்கள் அதிகாரத்தின் கீழ் வரும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளரை நெருக்கமாக கவனித்தல் பற்றிய இணங்குவிப்பு நிலைமையை மேலே குறிப்பிடப்பட்டவாறு உரிய காலத்தில் முழுமையாக இணங்கிக் கொண்டமைக்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிசார் உளவறிதல் பிரிவு
2007 திசெம்பர் 28

**தொடர்பு எண்: 37/03/004/0003/007**

முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் பிணையங்கள் தொழில்துறைக்கான உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் கட்டாய விதிகள்**

நிதிசார் நடவடிக்கை செயலணிக்குழு மற்றும் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் மீதான வங்கி மேற்பார்வை தொடர்பான பாசல் குழு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட விபரமான வழிகாட்டல் மற்றும் விதிகள், பொருத்தமானவிடத்து இலங்கை வங்கியாளர் சங்கத்தினால் செய்யப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட விதந்துரைப்புக்கள் என்பன இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

விபரிக்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் விதிகளுக்கு காத்திரமான தன்மையினை வழங்குவதற்காக, சரியான கொள்கைக் கட்டமைப்பும் தொழிற்பாட்டு வழிகாட்டல்களும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பன தொடர்பாக, இந்நோக்கத்திற்காக உங்கள் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட கொள்கைகளுடன் நடைமுறைக்கிடப்படுவதனை உறுதிப்படுத்துமாறு உங்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

இணைப்பு 1இல் உள்ள இணைக்கப்பட்ட படிவத்தினைப் பயன்படுத்தி காலாண்டின் இறுதியிலிருந்து நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு காலாண்டு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். 2008 சனவரி 31ஆம் நாளுக்கு முன்னர் தங்கள் நிறுவனம் பிணையங்கள் சந்தையின் பங்கேற்பாளர் என்ற ரீதியில் இவ்விதிகளுக்கு பூரணமாக இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுவதுடன் 2008 சனவரி 31ஆம் நாளளவில் அடையப்பட்ட முன்னேற்றம் பற்றியும் எமக்கு அறிவித்தல் வேண்டும்.

இவ்விதிகள், 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2(3)இன் கீழ் வெளியிடப்பட்டுள்ளதுடன் விபரிக்கப்பட்ட விதிகளுக்கு முரணாக நடத்தை அல்லது இணங்கி ஒழுகாமை காணப்படுமிடத்து சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளுக்கிணங்க தண்டனையொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

**பதில் பணிப்பாளர்**
நிதிசார் உளவறிதல் பிரிவு

படி: பணிப்பாளர் நாயகம் - கொழும்பு பங்குச்சந்தை,
மாடி - 4, உலக வர்த்தக மையம், கொழும்பு.

# பிணையங்கள் தொழில்துறைக்கான உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளரை நெருக்கமாக கவனித்தல் கவனிப்பு மீதான விதிகள்

## அறிமுகம்

நிதியியல் நிறுவனங்களிலும் அவற்றின் உறுதிப்பாட்டிலும் பொதுமக்களுக்கிருந்த நம்பிக்கையானது, நிதியியல் நிறுவனங்களின் தொழிற்பாடுகளுக்கு நேரக்கூடிய நிதியியல் இடர்நேர்வுகளைக் குறைத்த ஆற்றல் வாய்ந்த நடைமுறைகளின் மூலம் மேலும் உயர்வடைந்துள்ளது. பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பன நாட்டின் நிதியியல் முறைமைகளின் ஆற்றலையும் அதேபோன்று தனிப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் உறுதிப்பாட்டினையும் பல்வேறு வழிகளிலும் பாதிப்பதாகவுள்ளது. "உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள்" என அறியப்படுகின்ற வாடிக்கையாளர்களை அடையாளம் கண்டு நெருக்கமாகக் கவனிக்கின்ற நடைமுறை விதிகள், பணம் தூயதாக்கலுக்கெதிரான பயங்கரவாதத்திற்கான நிதியிடலை ஒழித்தல் சட்ட நடைமுறைப்படுத்தலின் ஒரு பகுதியாக விளங்குகின்றது. இவ்விதிகள் வங்கித்தொழிலினதும் ஏனைய வகை நிதியியல் நிறுவனங்களினதும் பாதுகாப்பான மற்றும் ஆற்றல் வாய்ந்த தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவது மட்டுமன்றி அவற்றினை உயர்த்தவும் உதவும்.

வாடிக்கையாளர்களை அடையாளம் காணுதல் மற்றும் நெருக்கமாகக் கவனித்தல் நடைமுறைகளின் மீதான தொழிற்பாட்டு வழிகாட்டல்களை தயாரிக்கின்ற பொழுது, நிதியியல் நிறுவனங்கள் கணக்குகளைத் திறக்கும் நோக்கத்திற்காக வாடிக்கையாளர்களிடமிருந்து சேகரித்த தகவல்களை இரகசியமாகப் பேணும்படியும் மாற்று நடவடிக்கைகள் அல்லது வேறு எந்த ஒரு நோக்கத்திற்காகவும் அதிலுள்ள விபரங்களை வெளிப்படுத்தக்கூடாது எனவும் கோரப்பட்ட தகவல்கள் மிக உணரத்தக்க இடர்நேர்வுகளுடன் தொடர்பானவையெனவும் இந்நடவடிக்கை மற்றவர் விடயத்தில் தலையிடுமொன்று அல்ல என்பதுடன் இங்கே வெளியிடப்பட்ட விதிகளுடன் இணைந்து செல்லுகின்றதெனவும் அறிவுறுத்தப்படுகின்றன.

உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள்/ வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல் என்பன மீதான கட்டாய ஒழுங்கு விதிகள் பின்வரும் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளன.

| | | |
|---|---|---|
| பகுதி I | - | பொதுவான விதிகள் |
| பகுதி II | - | குறித்துரைக்கப்பட்ட விதிகள் |
| பகுதி III | - | குறித்துரைக்கப்பட்ட வாடிக்கையாளரை அடையாளம் காணுதல் |
| பகுதி IV | - | பிரகடனம் செய்யும் படிவம் |
| பகுதி V | - | சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் படிவம்/ அறிவுறுத்தல்கள் |

இவ்வொழுங்கு விதிகள் 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2 (3) இன் கீழ் வழங்கப்படுவதுடன் இவ்விதிகளுக்கு மாறாக அல்லது இணங்கி நடவாதவர்கள் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளின் கீழ் தண்டனையொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

பதில் மேலதிகப் பணிப்பாளர்கள்
நிதியியல் உளவறிதல் பிரிவு
இலங்கை மத்திய வங்கி

2007 திசெம்பர் 28 ஆம் நாள்

## பகுதி I

## பிணையங்கள் தொழிற்துறைக்கான பொது விதிகள்

### அ. பணம் தூயதாக்குதலுக்கு எதிரான நிகழ்ச்சித்திட்டம்

### 1. அறிமுகம்

நிறுவனமானது பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பனவற்றிற்கு பயன்படுவதிலிருந்து தடை செய்யப்படும் விதத்தில் நியாயமான முறையில் வடிவமைக்கப்பட்ட எழுதப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றினை உருவாக்கி நடைமுறைக்கிடுதல் வேண்டும். இந் நிகழ்ச்சித்திட்டமானது தரகர்/ வணிகர்/ சந்தை இடையீட்டாளர் வியாபாரங்களை மேற்கொள்ளும் கம்பனிகளைப் பொறுத்தவரை அக் கம்பனிகளின் பணிப்பாளர்களினாலும் கூறுநம்பிக்கைகளின் நம்பிக்கையாளர்களினாலும் எழுத்து மூலம் ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும். அது இவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

- கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளை உருவாக்குதல்
- தற்பொழுது நடைபெற்றுவரும் ஊழியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று
- இணங்குவிப்பிற்காக நிகழ்ச்சித்திட்டத்தினை பரீட்சிப்பதற்கான சுதந்திரமான கணக்காய்வு தொழிற்பாடொன்று
- பொருத்தமான இணங்குவிப்பு முகாமைத்துவ ஒழுங்குகள். இத் தேவைப்பாடுகள் ஒவ்வொன்றிற்குமாக எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகளின் வகை மற்றும் அளவு என்பன பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பனவற்றின் காரணமாக ஏற்படும் இடர்நேர்வு அல்லது பாதிக்கப்படக் கூடிய தன்மை மற்றும் வியாபாரத்தின் அளவு, அமைவிடம் மற்றும் நடவடிக்கைகள் என்பனவற்றைப் பொறுத்தும் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

### 2. கொள்கைகளும் நடைமுறைகளும்:

கொள்கைகளும் நடைமுறைகளும் தொடர்பான தனிப்பட்டவர்களினதும் திணைக்களங்களினதும் பொறுப்புக்கள் உட்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் விபரங்களை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பன பணம் தூயதாக்குதலை எடுத்துக் காட்டுகின்ற நடவடிக்கைகளை கண்டுபிடிக்கக் கூடிய விதத்திலும் பணம் தூயதாக்குதலுக்கெதிரான சட்டவாக்கங்களுக்கு இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்தும் விதத்திலும் நியாயமான முறையில் வடிவமைக்கப்படுதல் வேண்டும். நிறுவனம் அதன் நிகழ்ச்சித்திட்டத்தின் தொழிற்பாடுகளை கண்காணித்து அதன் காத்திரமான தன்மைகளை மதிப்பீடு செய்தலும் வேண்டும். வாடிக்கையாளர்களை அடையாளம் காணுதல் மற்றும் சரிபார்க்கும் நடைமுறைகளும் அதேபோன்று சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளைக் கண்டறிந்து அறிக்கையிடுவது தொடர்பான நடவடிக்கைகளும் பணம் தூயதாக்குதலுக்கெதிரான நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

### 3. ஊழியர் பயிற்சி

நிறுவனத்தின் ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், பணம் தூயதாக்கலுக்கெதிரான சட்டவாக்கத்தின் முழுமையான பொது விழிப்புணர்வு மற்றும் பணம் தூயதாக்கல் பிரச்சனைகள் ஆகிய இரண்டினையும் அதேபோன்று குறிப்பிட்ட ஊழியர்களின் தொழிற்பாடு பற்றிய பெருமளவிற்கு தொழில்சார்ந்த வழிகாட்டல்கள் மற்றும் பணம் தூயதாக்கலுக்கெதிரான நிகழ்ச்சித்திட்டங்களையும் வழங்குதல் வேண்டும். ஊழியர்களைப் பொறுத்த வரையில், எவருடைய கடமைகள் பணம் தூயதாக்கலுக்கெதிரான சட்டவாக்கங்கள் அல்லது சாத்தியமான பணம் தூயதாக்கல் நடவடிக்கைகளுடன் தொடர்பானதாக அமைகின்றதோ அவர்களுக்கு அவர்களது கடமைகளை அவர்கள் பொறுப்பேற்கும் வேளையிலும் அதன் பின்னர் காலத்திற்கு காலம் தற்போதைய முறைக்கேற்ப புதிய பயிற்சிகளையும் வழங்குதல் வேண்டும்.

### 4. சுதந்திரமான கணக்காய்வு

நிகழ்ச்சித்திட்டத்தின் இணங்குவிப்புக்களையும் காத்திரமான தன்மைகளையும் மதிப்பிடுவதற்கும் நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டதற்கிணங்க தொழிற்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்குமாக நிறுவனமானது இதன் நிகழ்ச்சித்திட்டம் பற்றி காலத்திற்குக் காலம் சுதந்திரமான பரீட்சிப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய பரீட்சிப்புக்களை தகைமையுடைய வெளித்தரப்பினர் அல்லது அந்நிகழ்ச்சித்திட்டத்தின் தொழிற்பாட்டில் அல்லது மேற்பார்வையில் ஈடுபட்டிராத அந் நிறுவனத்தின் ஊழியர்களினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எழுத்திலான மதிப்பீடு, அல்லது அறிக்கை, மீளாய்வின் ஒரு பகுதியாக அமைந்திருத்தல் வேண்டுமென்பதுடன் எந்த ஒரு விதந்துரைப்பும் சரியான முறையில் நடைமுறைக்கிடப்படுதல் வேண்டும் அல்லது பரிசீலனைக்காக நிதிக்கம்பனியின் பணிப்பாளர்களுக்கு, வரையறுக்கப்பட்ட பங்குடமையின் பொதுப் பங்காளருக்கு அல்லது கூறுநம்பிக்கையின் நம்பிக்கையாளர்களுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

### 5. இணங்குவிப்பு முகாமைத்துவம்

பணம் தூயதாக்கலுக்கு எதிரான நிகழ்ச்சித்திட்டத்தினை மேற்பார்வையிடுவதற்காக பொறுப்புக்களுடன் கூடிய தனிப்பட்ட ஒருவரை (அல்லது தனிப்பட்ட குழுவினை) பொறுப்பாக நியமித்தல் வேண்டும். அந்த ஆள் (அல்லது ஆட்களின் குழு) பணம் தூயதாக்கலுக்கெதிரான சட்டவாக்கத்திலும் பணம் தூயதாக்கல் விடயங்கள் மற்றும் இடர்நேர்வுகளிலும் அறிவுடையவர்களாகவும் முழுமையான பொறுப்புக்கள்

ஒப்படைக்கப்பட்டவர்களாகவும் பொருத்தமான கொள்கைகளையும், நடைமுறைகளையும் உருவாக்கி நடைமுறைப்படுத்தக் கூடிய அதிகாரமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

6. **நிதியியல் பணிக்குழுமங்களும் பணம் தூயதாக்கலுக்கெதிரான நிகழ்ச்சித்திட்டமாகும்**

நிறுவனத்தின் பகுதியொன்று பெரும்பாலும் பாரிய நிதியியல் பணிக்குழுமத்தினைக் கொண்டிருக்கிறது. இக்குழுமங்கள் தாம் அனுசரனை ஒழுங்குகின்ற, தொழிற்படுத்துகின்ற அல்லது ஆலோசனை வழங்குகின்ற அனைத்து நிறுவனங்களுக்கும் பொருந்தத்தக்க பணம் தூயதாக்கலுக்கெதிரான நிகழ்ச்சித்திட்டமொன்றினை நிறுவுவதற்கு தெரிவு செய்யப்படலாம். மேலும், வங்கிகள்/ தரகர்கள்/ வணிகர்கள் அல்லது காப்புறுதிக் கம்பனிகளை அவற்றின் மைய வியாபாரமாகக் கொண்டுள்ள பாரிய நிதியியல் பணிகளைக் கொண்ட குழுமங்கள், குழுமத்திற்குள்ளேயுள்ள அனைத்துக் கம்பனிகளுக்கும் பிரயோகிக்கத்தக்க பணம் தூயதாக்கலுக்கெதிரான நிகழ்ச்சித்திட்டமொன்றினை ஏற்கனவே மேற்கொண்டு வருகின்றன. ஒவ்வொரு நிறுவனமும் மேலே குறிப்பிடப்பட்ட நான்கு கூறுகளையும் உள்ளடக்கிய பணம் தூயதாக்கலுக்கெதிரான நிகழ்ச்சித்திட்டத்தினால் உள்ளடக்கப்பட்டுள்ளதனால் நிதியியல் பணிகள் குழுவொன்று குழுவின் பணம் தூயதாக்கலுக்கெதிரான நிகழ்ச்சித்திட்டத்தினைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஒவ்வொரு நிறுவனமும் அதன் பணிப்பாளர் சபை, பொதுப்பங்காளர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளருடாக, அது பணம் தூயதாக்கலுக்கெதிரான நிகழ்ச்சித்திட்டத்தினை மேற்கொண்டு வருகின்றமையினை எடுத்துக் காட்டுகின்ற தெளிவான எழுத்து மூலமான ஆவணப்படுத்தல்களை வைத்திருத்தல் வேண்டும்.

**ஆ. வாடிக்கையாளரை அடையாளம் காணுதல் மற்றும் நடைமுறைகளை சரிபார்த்தல்**

இடர்நேர்வுகளுக்கு உட்படக்கூடிய தன்மைகளின் அடிப்படையில் நிறுவனமொன்று வாடிக்கையாளர்களை சரிபார்ப்பதற்கும் நடைமுறைகளைப் பிரயோகிக்கலாம். நிறுவனம் அத்தகைய இடர்நேர்வுகளை தீர்மானிப்பதற்கான அடிப்படைகளை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் இதன் ஒழுங்கு முறைப்படுத்தல் தொடர்பான மதிப்பீடுகளை நியாயப்படுத்தக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

1. **வாடிக்கையாளரை அடையாளம் காணுதல் மற்றும் சரிபார்த்தலுக்கான பொறுப்பு**

நிறுவனமொன்று, முதலீட்டாளரின் கணக்கொன்று வெளிப்படையாகவே முதலீட்டாளர் தவிர்ந்த தரப்பினர் ஒருவரை நன்மை பெறுநராக கொண்டிருக்குமிடத்து முதலீட்டாளரின் நன்மை பெறும் சொந்தக்காரரின் அடையாளத்தினையும் சரிபார்க்கின்ற பொறுப்பினையும் அத்துடன் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையினைத் தொடர்ந்து "உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்" பற்றிய நடைமுறைகளின் மிகப் பொதுவான செயலாற்றத்திற்கும் பொறுப்பாக இருந்து வருகின்றது. பொதுவாக "உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள்" என்ற நடைமுறையானது வியாபாரத்தினையும் இடர்நேர்வு தோற்றப்பாட்டினையும் விருத்தி செய்தல் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் அத்தகைய தோற்றப்பாடுகளுடன் (தேவையானவிடத்து வாடிக்கையாளரின் நிதிகளின் மூலம் உட்பட) முரண்படாத விதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டும் நிதியியல் பின்னணி மற்றும் வியாபாரக் குறிக்கோள் போன்ற தகவல்களைப் பெற்றுக் கொள்வதனை உள்ளடக்கியிருக்கின்றது.

2. **முதலீட்டாளர் அடையாளத்தினைச் சரிபார்த்தல்**

முதலீட்டாளரையும் கணக்கொன்று வெளிப்படையாகவே முதலீட்டாளர் தவிர்ந்த, தரப்பினர் ஒருவரை நன்மை பெறுநராகக் கொண்டிருக்குமிடத்து முதலீட்டாளரின் நன்மை பெறும் சொந்தக்காரரையும் அடையாளம் கண்டு சரிபார்ப்பதற்கான வழிமுறைகள் நியாயமான அளவிலும் நடைமுறைச் சாத்தியமானதாகவும் முதலீட்டாளர் வகை, வியாபார உறவுமுறை அல்லது கொடுக்கல் வாங்கல் மற்றும் நிறுவனத்தினால் திறக்கப்பட்டுள்ள கணக்குகளின் வகை என்பனவற்றைப் பொறுத்து இடர்நேர்வுத் தன்மைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படலாம். இது நிறுவனத்தினால் அல்லது எந்த ஒரு சந்தை இடையீட்டாளரினால் விற்கப்பட்ட அல்லது மீட்கப்பட்ட அலகுகளுக்கும் பொருந்தும். சரிபார்த்தலானது, முதலீட்டாளரின் உண்மையான ஆள் அடையாளம் போதுமானளவிற்கு அறியப்பட்டிருக்கிறது என நிறுவனம் நம்புகின்ற அளவிற்கு நியாயமான அடிப்படைகளை வழங்குதல் வேண்டும். முதலீட்டாளரின் உண்மையான ஆளடையாளத்தினை தெரிந்திராததினால் நிறுவனமொன்றிற்கு ஏற்படும் இடர்நேர்வு உயர்வானதாக இருக்குமிடத்து (உதாரணமாக சிக்கலான தன்மைகளைக் கொண்ட அரசியல் ரீதியாக வெளிப்படுத்தப்பட்ட ஆட்கள் அல்லது தொழில் முயற்சிகள் இலங்கையர்கள் வதிவோர் அல்லது கூட்டுறவு அல்லாத அல்லது போதுமானளவிற்கு ஒழுங்குமுறைப்படுத்தப்படாதவை எனக் கருதப்படுகின்ற மற்றைய நாடுகளிலிருந்தான தொழில் முயற்சிகள் நிறுவனமொன்று மிகக் கடுமையான வாடிக்கையாளர் அடையாளப்படுத்தல் வழிமுறைகளை பிரயோகித்தல் வேண்டும். முதலீட்டாளரை அடையாளம் கண்டு சரிபார்க்கும் செயற்பாடுகள் ஒவ்வொரு விடயங்களையும் பொறுத்த வரை சரியான முறையில் ஆவணப்படுத்தப்பட வேண்டியதுடன், அத்தகைய பதிவேடுகளை வியாபார உறவுமுறைகள் முடிவடைந்ததிலிருந்து குறைந்தது ஆறு ஆண்டுகளுக்கு வைத்திருத்தல் வேண்டும்.

3. முதலீட்டாளர்களை அடையாளம் காண்பதன் பொருட்டும் அவர்களது ஆளடையாளத்தினை சரி பார்க்கும் பொருட்டும் நிறுவனமொன்று ஆவணங்களிலும் அதேபோன்று ஆவணமல்லா முறைகளிலும் அல்லது இரண்டும் இணைந்த முறைகளில் தங்கியிருக்க முடியும். இயற்கையான மனிதர்களைப் பொறுத்த வரையில் நம்பகமான சரிபார்த்தல் முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்க முடியும்.

- தேசிய இனம் அல்லது வதியுமிடம் போன்றவற்றைச் சான்றுபடுத்துகின்ற புகைப்படத்தைத் தாங்கிய அரசினால் வழங்கப்பட்ட காலாவதியாகாத அடையாள ஆவணம் அல்லது ஊர்தி ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் அல்லது கடவுச்சீட்டொன்று;
- பொதுத் தரவுத்தளம் அல்லது ஏனைய மூலங்கள் போன்ற மூலங்களினால் வழங்கப்பட்ட தகவல்களை ஒப்பீடு செய்வதனூடாக முதலீட்டாளரின் அடையாளத்தினை சுதந்திரமாகச் சரிபார்த்தல்;

- மற்றைய நிதியியல் நிறுவனங்களுடனான தொடர்புக் குறிப்புக்களை பரிசோதித்தல்;
- கணக்குகள் தொடர்பான கணக்குக் கூற்றுக்களைப் பெற்றுக் கொள்ளுதல்; அத்துடன்
- நேரடியாகச் சந்தித்தல், நேர் விளம்பல்கள், வீடுகளுக்கு விஜயம் செய்தல், முன்னைய வியாபார உறவு முறைகளிலிருந்தான தொடர்புக் குறிப்புக்கள். இயற்கையல்லா ஆட்கள் தொடர்பாக, நம்பகமான சரிபார்த்தல் முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கலாம்;
- ஒன்று திரட்டப்பட்ட சான்றுகளை அல்லது சட்ட ரீதியான ஆட்கள் அல்லது ஒழுங்குகளின் சட்ட ரீதியான அந்தஸ்து தொடர்பான இதையொத்த சான்றுகளையும் அதேபோன்று முதலீட்டாளர் பெயர், நம்பிக்கை பொறுப்பாளர்களின் பெயர்கள், சட்ட ரீதியான படிவம், முகவரி, பணிப்பாளர்கள், தொடர்பான தகவல்கள் சட்ட ரீதியான ஆளை அல்லது ஒழுங்கினைப் பிணிப்பதற்கான அதிகாரம் பொருந்திய ஆளைச் சான்றுபடுத்துவதற்கான ஆவணங்கள்;
- சொத்துடமை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பினை விளங்கிக் கொள்ளும் தன்மையினை உருவாக்குதல்; அத்துடன்
- நலவுரித்துக்களைக் கட்டுப்படுத்துகின்ற இயற்கையான ஆட்களை அடையாளம் காண்பது அத்துடன் சட்ட ரீதியான ஆளின் அல்லது ஒழுங்குகளின் முகாமைத்துவத்தில் உள்ளடங்கியுள்ள இயற்கையான ஆட்களை அடையாளம் காணுதல்.

4. ஏனைய நிறுவனங்கள், அத்துடன்/ அல்லது நிதிகளின் நிதிகளைப் பொறுத்தவரையில், கூட்டு முதலீட்டு திட்டங்களில் முதலீடொன்றைச் செய்கின்ற முக்கிய பயன் பெறு உரித்தாளர்களின் அடையாளத்தினை அல்லது பின்வரும் தன்மைகளைக் கொண்ட நிதியங்களின் நிதியத்தினை சரிபார்க்க வேண்டிய தேவையில்லை:

- ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டதா அல்லது பதிவு செய்யப்பட்டுள்ளதா;
- திருப்திகரமான நிறுவனம் பணம் தூயதாக்கலுக்கெதிரான பொருத்தமான சட்டவாக்கங்களைக் கொண்டுள்ளது என்ற நியாயாதிக்கத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளதா;
- பணம் தூயதாக்கலுக்கெதிரான நிகழ்ச்சித்திட்டம் இடம் பெற்றுள்ளதா; அத்துடன்
- மேற்பார்வை செய்யப்படுகின்றதா அத்துடன் வாடிக்கையாளரை நெருங்கிக் கவனித்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்கியுள்ளதா என்பதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

## 5. அடையாளம் காணுதல் மற்றும் சரிபார்த்தலுக்கான நேரம்

நிறுவனமொன்று கணக்கொன்றினைத் திறப்பதற்கு முன்னர் அல்லது திறக்கும் போது அல்லது முதலீடுகளை ஏற்றுக்கொள்கையில் முதலீட்டாளரை அடையாளம் கண்டு கொள்ளுதல் வேண்டும். இடர்நேர்வுகள் காத்திரமான முறையில் கட்டுப்படுத்தப்படுவதனை உறுதி செய்யும் நோக்கத்திற்காக நிறுவனமொன்று கணக்கொன்றினைத் திறப்பதற்கு அல்லது முதலீடொன்றினை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் அல்லது பின்னர் சாத்தியமானளவிற்கு உடனடியாக அடையாளத்தினைச் சரிபார்த்தல் வேண்டும். இதனைப் பொறுத்தவரை வழமையான வியாபாரங்களை நடத்தும் தன்மை தடங்கலுறாமல் பார்த்துக் கொள்வதும் இன்றியமையாததாகும்.

முதலீட்டாளரின் அடையாளத்தினை இன்னமும் சரிபார்க்க வேண்டியுள்ளவிடத்து, நிறுவனமானது, சரிபார்த்தலுக்கு முன்னதாக முதலீட்டாளர் பயன்படுத்தக்கூடிய கணக்கு அல்லது முதலீடுகள் எந்த நிபந்தனைகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றதோ அவை தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை நிறுவனம் பின்பற்ற வேண்டும். இத்தகைய நடைமுறைகள் இலக்கங்களை வரையறுத்தல் செயற்படுத்தக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் வகைகள் அத்துடன்/ அல்லது தொகைகள், மற்றும் உறவுமுறைகளின் வகைக்காக எதிர்பார்க்கப்பட்ட விதிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பாரிய கொடுக்கல் வாங்கல்களின் கண்காணிப்பு போன்ற வழிமுறைகளடங்கிய தொகுதியொன்றினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். முதலீட்டாளரொருவரின் அடையாளத்தினை சரிபார்ப்பது நியாயமான முயற்சிகளின் பின்னரும் சாத்தியப்படாதிருக்குமிடத்து நிறுவனமானது கொடுக்கல் வாங்கல்களை நிறுத்துவது பற்றி அல்லது அதன் உறவுமுறைகளை முடிவுறுத்துவது பற்றி பரிசீலனைக்கெடுக்க வேண்டியதுடன் முதலீட்டாளர் தொடர்பாக சரியான அதிகாரிகளுக்கு சந்தேகத்திற்குரிய நடவடிக்கை தொடர்பான அறிவிப்பொன்றினை செய்வது பற்றியும் பரிசீலித்தல் வேண்டும். நிறுவனமானது குறிப்பிட்ட கணக்கிலுள்ள கொடுக்கல் வாங்கல்களை நிறுத்துவதற்கு அல்லது எந்த ஒரு முதலீட்டாளருடனுமான உறவு முறைகளை இடை நிறுத்துவதற்கு முன்னதாக, அதன் ஒழுங்கு முறைப்படுத்துநருடனும் பொருத்தமான சட்டத்தினை நடைமுறைக்கிடும் முகவர்களுடனும் ஆலோசனை நடத்துவது பொருத்தமானதாக அமையும்.

## 6. உள்ளார்ந்த குறைந்த இடர்நேர்வுகளைக் கொண்ட நிலைமைகள்

மேலே கவனித்தவாறு, நிறுவனமொன்றின் அடையாள சரிபார்ப்பு நடைமுறைகள் முதலீட்டாளரின் வகை, வியாபார உறவுமுறை அல்லது கொடுக்கல் வாங்கல் போன்றவற்றைப் பொறுத்து இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். குறைந்தளவு இடர்நேர்வுகள் காணப்படுமிடத்து, இலகுபடுத்தப்பட்ட சரிபார்ப்பு நடைமுறைகளுக்கு மனுச் செய்வது நிறுவனமொன்றிற்கு பொருத்தமுடையதாக இருக்கும். உண்மையில் இந்நடைமுறைகள், நிறுவனம் சரிபார்ப்பு இலக்கினை எய்துவதற்கு - அதன் முதலீட்டாளரின் உண்மையான அடையாளம் அதற்குத் தெரியுமென்பதற்கான நியாயமான நம்பிக்கையினை நிறுவுவதற்கு போதுமானதாக இருத்தல் வேண்டும்.

தரகர் நிறுவனம்/ மத்திய வைப்பகமுறை, தரகர் நிறுவனமொன்றினூடாக வர்த்தகத்தினை மேற்கொள்ளும் வாடிக்கையாளர் ஒருவருக்காக வங்கிக் கணக்கினைப் பேணுகின்ற வங்கியொன்றிடமிருந்து எப்பொழுது வங்கிக்கணக்கு திறக்கப்பட்டு பேணப்படுகின்றது என்பது தொடர்பாக வங்கியொன்றிடமிருந்து உறுதிப்பாட்டினைப் பெற்றுக் கொள்கின்ற சந்தர்ப்பமொன்றில், வங்கி உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளரை நெருங்கிக் கவனித்தல் தேவைப்பாடுகளைப் பின்பற்றுகிறது. தரகர் நிறுவனம்/ மத்திய வைப்பகமுறை பெறப்பட்ட நிதியங்களின் மூலத்தினை சரிபார்க்கின்ற மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளை கைவிட்டு வாடிக்கையாளரின் இடர்நேர்வு மட்டத்தினைப் பரிசீலிக்கின்ற அதன் தற்றுணிபினை கொண்டிருக்கலாம்.

## பகுதி II

### பிணையங்கள் தொழிற்துறைக்கான குறித்துரைக்கப்பட்ட விதிகள்

1. **அறிமுகம்**

தரகர்/ வணிகர் நிறுவனம்/ சந்தை இடையீட்டாளர் என்போர் எந்த ஒரு வாடிக்கையாளரினதும் அடையாளம் தொடர்பான போதுமான சான்றுகளை, அவை வாடிக்கையாளருடன் தொடர்பு கொண்டதன் பின்னர் எவ்வளவிற்கு சாத்தியமோ அவ்வளவிற்கு விரைவாகப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்

2. அடையாளம் தொடர்பான திருப்திகரமான சான்றுகள் தரப்பட்டிருக்காதவிடத்து, கொடுக்கல் வாங்கல்களைத் தொடருமாறு நிதியியல் உளவறிதல் பிரிவு பணிப்புரை வழங்கினாலொழிய தரகர்/ வர்த்தக நிறுவனம்/ சந்தை இடையீட்டாளர் எவரும் அவ்வாறு செய்தலாகாது.

3. தரகர்/ வர்த்தக நிறுவனம்/ சந்தை இடையீட்டாளர் ஒவ்வொருவரும் போதுமான பதிவேடுகளை தயாரித்து 6 ஆண்டுகளுக்கு வைத்திருப்பதில் நியாயமான கவனம் செலுத்துதல் வேண்டும்.

4. சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக நிறுவனங்கள் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களுக்காகவும் பின்வரும் பதிவுகளை வைத்திருத்தல் வேண்டும்.

   - அதன் வாடிக்கையாளரது பெயர் மற்றும் முகவரி;
   - அதன் இணைத்தரப்பினரின் பெயர் மற்றும் முகவரி (அல்லது அடையாளக் குறியீடு);
   - விலை மற்றும் அளவு உட்பட கையாளப்படுகின்ற முதலீடு;
   - கொடுத்தல் வாங்கல்கள் ஒன்றில் கொள்வனவா அல்லது விற்பனையா;
   - அறிவுறுத்தல் அல்லது அதிகாரப் படிவம்;
   - கணக்கு விபரங்கள் மற்றும் நிறுவனத்திற்கு நிதி செலுத்தப்பட்ட விதம் (காசோலையாயின், குறியீட்டு வகை, கணக்கு இலக்கம் மற்றும் பெயர் உள்ளிட்டவை);
   - வாடிக்கையாளருக்கு நிறுவனத்தினால் செலுத்தப்பட்ட கொடுப்பனவு தொடர்பான வகையும் நாடும்;
   - முதலீடுகள் நிறுவனத்தினால் கட்டுக்காப்பில் வைக்கப்பட்டிருந்ததா அல்லது வாடிக்கையாளருக்கு அல்லது அவரின் கட்டளைப்படி அனுப்பப்பட்டதா அப்படியாயின் பெயர் மற்றும் முகவரி என்பன.

5. தரகர்/ வணிகர் நிறுவனம்/ சந்தை இடையீட்டாளர் ஒவ்வொருவரும் கொடுக்கல் வாங்கல்கள் வாடிக்கையாளர் பற்றிய நிறுவனத்தின் அறிவு, வாடிக்கையாளரின் வியாபார இடர்நேர்வு மற்றும் வருமானத்தின் மூலம் என்பனவற்றிற்கு இசைவாக உள்ளமையினை உறுதிப்படுத்துவதற்காக வாடிக்கையாளரூடாக வியாபார கொடுக்கல் வாங்கல்கள் மீது தற்போதுள்ள நெருக்கமாகக் கவனிக்கும் நடவடிக்கையினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

6. தரகர்/ வணிகர் நிறுவனம் /சந்தை இடையீட்டாளர் ஒவ்வொருவரும் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு பின்வருவனவற்றை அறிவித்தல் வேண்டும்.

   - 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதனை ஒடுக்குவதன் மீதான சமவாயச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் குற்றமொன்றிற்கு ஆயத்தமாகுவதாக நிறுவனம் சந்தேகப்படும் எந்த ஒரு நடவடிக்கையையும்; அல்லது
   - 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலுக்கெதிரான சட்டம் என்பனவற்றின் நியதிகளில் சட்டத்திற்கு முரணான நடவடிக்கை எதனினாலும் தரகுப்பணம் தொடர்பானதாக இருக்கக்கூடும் என நிறுவனம் நியாயமான முறையில் சந்தேகப்படக்கூடிய ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களையும்

7. தரகர்/ வணிகர் நிறுவனம்/ சந்தை இடையீட்டாளர் ஒவ்வொருவரும் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருக்கும் விதத்தில் இணங்குவிப்பு அலுவலரொருவரை நியமித்தல்.

8. இணங்குவிப்பு அலுவலர் பின்வருவனவற்றை நிறுவிப் பேணுதல் வேண்டும்.

- வாடிக்கையாளர் ஆளடையாளத் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்தல்
- பதிவேடுகளைப் பேணுவதற்கான நடைமுறைகளை நடைமுறைப்படுத்தல்
- வாடிக்கையாளர் கொடுக்கல் வாங்கல்களை கண்காணிக்கும் செய்முறைகளை நடைமுறைப்படுத்தல்
- நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு சந்தேகத்திற்குரிய நடவடிக்கையினை அறிக்கையிடுவதற்கான முறையொன்றினை நடைமுறைப்படுத்தல்
- பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான சட்டங்கள் பற்றி ஊழியர்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல்
- பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான இடர்நேர்வுகளைப் போதுமானளவிற்கு கட்டுப்படுத்துவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் எடுப்பதற்கு முன்னர் அத்தகைய அனைத்து ஆட்களையும் பற்றி கவனமாக அறிந்து கொள்ளுதல்.

## பகுதி III

## பிணையங்கள் தரகர் தொடர்பான குறித்துரைக்கப்பட்ட வாடிக்கையாளரை அடையாளம் காணுதல் தொடர்பான தகவல் தேவைப்பாடுகள்

### மத்திய வைப்பகமுறையில் கணக்கொன்றினைத் திறப்பதற்காக விண்ணப்பத்தாரியினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தகவல்கள்

**1. இயற்கையான ஆட்கள் (தனிப்பட்டவர்கள்)**

**அ. வதிவோர்**

அ) முழுப்பெயர்

ஆ) தேசீயம்

இ) தொழில்

ஈ) நிரந்தர வதிவிட முகவரி

உ) தற்போதைய வதிவிட முகவரி (மேலேயுள்ளதிலிருந்தும் வேறுபடின்)

ஊ) தொடர்பு கொள்வதற்கான முகவரி (வதிவிட முகவரியிலிருந்தும் வேறுபடின்)

எ) வதிவிடத்தினை நிரூபித்தல் - எந்தவொரு பொதுவசதிப்பட்டியலிலிருந்தும் பிரதிகள் (மின்வலு, நீர், தொலைபேசிப் பட்டியல் போன்றன) அல்லது ஏனைய சான்றுகள்

ஏ) தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் (தேசிய அடையாள அட்டை கிடைக்காதவிடத்து) பிரதி, தேசிய அடையாள அட்டை கடவுச்சீட்டு இரண்டும் கிடைக்காதவிடத்து ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றினை தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு இரண்டும் இல்லையென்பதனை உறுதிப்படுத்துகின்ற சத்தியக்கடதாசியுடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

ஐ) அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆள்/ ஆட்களின் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டின் பிரதி

**ஆ. வதிவற்றோர்**

அ) முழுப்பெயர்

ஆ) தேசீயம்

இ) தொழில்

ஈ) நிரந்தர வதிவிட முகவரி

உ) தற்போதைய வதிவிட முகவரி

ஊ) வதிவிடத்திற்கான சான்று எந்த ஒரு பொது வசதிப்பட்டியலினதும் பிரதிகள் (மின்வலு, நீர், தொலைபேசிப்பட்டியல் போன்றன) அல்லது அது போன்ற வேறு சான்றுகள்

எ) தொடர்பு கொள்வதற்கான முகவரி (வதிவிட முகவரியிலிருந்தும் வேறுபடின்)

ஏ) பங்குகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாய்க் கணக்கு விபரங்கள் சான்றுகளுடன் (விண்ணப்பத்தாரி வதிவற்றோராக இருக்குமிடத்து)

ஐ) கடவுச்சீட்டின் பிரதி

ஒ) அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆள்/ ஆட்களின் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டின் பிரதி

## 2. கம்பனிச் சபைகள்

அ) கம்பனியின் முழுப்பெயர் (கம்பனி/ நியதிச்சபை/ பாராளுமன்ற/ சமூகச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சபை)

ஆ) பதிவு செய்யப்பட்ட முகவரி

இ) தொடர்பு கொள்வதற்கான முகவரி (பதிவு செய்யப்பட்ட முகவரியிலிருந்து வேறுபடுமிடத்து)

ஈ) கூட்டிணைக்கப்பட்ட இடம்/ நிறுவப்பட்ட இடம்

உ) பங்குகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு விபரங்கள் சான்றுகளுடன் (விண்ணப்பத்தாரி வதிவற்றோராக இருக்குமிடத்து)

ஊ) பணிப்பாளர்களின் பெயர்கள், முகவரிகள், தேசிய அடையாள அட்டை கடவுச்சீட்டு இலக்கம்/ இலக்கங்கள் மற்றும் தொழில் (கம்பனி பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டிருந்தால் மட்டுமே பெயர் தரப்பட வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் அத்தகைய பட்டியலிடப்பட்டமை தொடர்பான சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும்)

பணிப்பாளர்/ பணிப்பாளர்கள் கம்பனியொன்றாக இருக்குமிடத்து அத்தகைய பணிப்பாளர் கம்பனி பின்வரும் தகவல்களை வழங்குதல் வேண்டும்.

(i) கம்பனியின் பெயர்

(ii) கூட்டிணைக்கப்பட்ட திகதி

(iii) கூட்டிணைக்கப்பட்ட இடம்

(iv) பதிவு செய்யப்பட்ட முகவரி

விண்ணப்பம் செய்யும் கம்பனியின் சார்பில், அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் மத்திய வைப்பக முறையின் விண்ணப்பத்தில் கையெழுத்திடுமிடத்து, கம்பனியின் சார்பில் அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆள் கையெழுத்திடலாம் என்பதற்கான சபையின் பிரேரணை அட்ரோணித் தத்துவத்தின் பிரதியொன்றினையும், அத்தகைய ஆளின் தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டின் பிரதியொன்றினையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

எ) முன்னணிப் பங்குடமையாயின்/ உறுப்பினர்களின் பெயர் மற்றும் முகவரி (பங்குப் பரிவர்த்தனையில் கம்பனி பட்டியலிடப்பட்டிருப்பின் பொருந்தாது)

ஏ) அட்டோர்னி தத்துவம்/ சபைப் பிரேரணைகளின் பிரதியுடன் அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளின்/ ஆட்களின் பெயர்

ஐ) பின்வரும் ஆவணங்களின் பிரதிகள்

(i) அமைப்பு அகவிதிகள் அல்லது தொடர்பான ஆவணங்கள்

(ii) ஒருங்கிணைப்புச் சான்றிதழ் அல்லது தொடர்பான ஆவணங்கள்

(iii) விண்ணப்பத்தாரியின் பணிப்பாளர்/ பணிப்பாளர்கள் கம்பனியாக இருக்குமிடத்து அத்தகைய கம்பனியின் கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழ்

(iv) விண்ணப்பத்தாரி வதிவற்றோராக இருக்குமிடத்து, கம்பனி ஒருங்கிணைக்கப்பட்டிருக்குமிடத்து கம்பனிகள் பதிவாளர் பொருத்தமான அதிகாரிகளினால் வழங்கப்பட்ட நிலையியல் நற்சான்றிதழின் பிரதி

(v) மத்திய வைப்பக முறையின் கணக்குகளைத் திறப்பதற்கான பிரேரணையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சான்றுபடுத்தப்பட்ட பிரதி (மாற்றீடாக, பிரேரணையானது மத்திய வைப்பக முறையின் கணக்கினைத் திறப்பதற்கான விண்ணப்பத்தின் மூலமாக தானாகவே உறுதிப்படுத்திக் கொள்ளப்படக்கூடும்.)

விண்ணப்பம் "பதிவு செய்யப்பட்ட உடமையாளர்/ உலகளாவிய கட்டுக்காப்பாளர்/ பயன்பெறுநர்" என்ற பெயர்களில் தலைப்பிடப்பட்டு கட்டுக்காப்பு வங்கியூடாக அனுப்பப்படுமிடத்து நன்மை பெறும் கம்பனியின் சார்பில் கணக்கொன்றினைத் திறக்குமாறு உள்ளூர் கட்டுக்காப்பு வங்கிக்கு அறிவுறுத்துகின்ற உலகளாவிய கட்டுக்காப்பு வங்கியினால் வழங்கப்பட்ட சுவிப்ற் செய்தி அல்லது இதையொத்த ஆவணத்தின் பிரதியொன்று உலகளாவிய கட்டுக்காப்பு வங்கியாளர் தான் உலகளாவிய கட்டுக்காப்பாளருக்கும் நன்மை பெறுநருக்குமுடையில் ஏற்கனவேயுள்ள காட்டுக்காப்பு ஒழுங்கு அல்லது உடன்படிக்கை பற்றிய பிரகடனத்துடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(vi) வியாபாரத்தினை தொடங்குவதற்கான சான்றிதழ் (பொருத்தமானவிடத்து).

## 3. பங்குகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட நிதிகள்

அ) நிதியத்தின் பெயர்

ஆ) நிதியத்தின் நோக்கம்

இ) நிதியம் நிறுவப்பட்ட இடம்

ஈ) நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்/ முகாமையாளரின் விபரங்கள் (பெயர், முகவரி, விபரங்கள் போன்றன)

உ) நம்பிக்கைப் பொறுப்பாளர்/ முகாமையாளர் கம்பனியொன்றாக இருக்குமிடத்து, கூட்டிணைக்கப்பட்ட திகதி, கூட்டிணைக்கப்பட்ட இடம் அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளர்/ முகாமையாளரின் பதிவு செய்யப்பட்ட முகவரி.

ஊ) நிதியத்தின் தாபிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான ஆவணங்களின் பிரதிகள் (உ-ம்: எதிர்கால வளர்ப்புக்கள்/ நம்பிக்கை உறுதி/ முகாமைத்துவ உடன்படிக்கை/ வங்கிகள்/ கணக்காய்வாளர்).

எ) தொடர்பான நாட்டின் மேற்பார்வை அதிகார சபையினால் வழங்கப்பட்ட நிதியத்தின் ஒப்புதல் கடிதத்தின் பிரதி

ஏ) தொடர்பான கட்டுக்காப்பு உடன்படிக்கை/ உடன்படிக்கைகளின் பிரதிகள்

ஐ) நன்மை பெறுநர்களின் விபரங்கள்

**4. சான்றுபடுத்தல்**

மத்திய வைப்பக முறைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அனைத்து ஆதாரப்படுத்தும் ஆவணங்களும் பெறுமதியுடையதாக்கும் நோக்கங்களுக்காக கீழே (அ) அல்லது (ஆ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களினால் சான்றுபடுத்தப்பட அல்லது உறுதிப்படுத்தப்பட அல்லது உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். அத்தகைய சான்றுபடுத்தல் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணம் உண்மையான பிரதி என குறிப்பிடப்பட வேண்டும்.

**அ. வதிவற்ற விண்ணப்பதாரர்களை உறுதிப்படுத்தல்**

1) ஆவணங்கள் மூலப்பிரதிகளாக வழங்கப்பட்டிருக்குமிடத்து கம்பனி பதிவாளர் அல்லது அவரையொத்த அதிகாரிகளினால் (கம்பனிகளுக்கும் பொருந்தத்தக்கது), அல்லது

2) ஆவணங்கள் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட நாட்டிலுள்ள இலங்கையின் இராஜதந்திர அலுவலர் அல்லது இலங்கையின் காவற்றூதரினால், அல்லது

3) விண்ணப்பத்தாரி வதியும் நாட்டில் தொழிலாற்றும் சொலிசிஸ்டர், சட்டத்தரணி, பொது நொத்தாரிசு ஒருவரினால், அல்லது

4) கட்டுக்காப்பு வங்கியினால், அல்லது

5) உலகளாவிய கட்டுக்காப்பாளர் - கட்டுக்காப்பு வங்கி உலகளாவிய கட்டுக்காப்பாளரின் கையொப்பத்தினால் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்தல் வேண்டும், அல்லது

6) தரகர் (தனிப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் மாத்திரம் பிரயோகிக்கத்தக்கது).

**ஆ. வதியும் விண்ணப்பத்தாரர்களை உறுதிப்படுத்தல்**

1) கம்பனிகளின் பதிவாளர் நாயகம் அல்லது கம்பனிச் செயலாளர் (கம்பனிகளுக்குப் பொருந்தத்தக்கது) அல்லது

2) சட்டத்தரணி/ பொது நொத்தாரிசு, அல்லது

3) தரகர், அல்லது

4) கட்டுக்காப்பு வங்கி

**குறிப்பு:**

உறுதிப்படுத்துகின்ற ஆட்கள் கையொப்பம், முழுப்பெயர், முகவரி, தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்கள் மற்றும் அலுவல்சார் முத்திரை என்பனவற்றைப் பொறித்தல் வேண்டும். (தரகர்கள், கட்டுக்காப்பு வங்கிகள் மற்றும் உலகளாவிய கட்டுக்காப்பாளர்களுக்கு பொருந்தாது).

## பகுதி IV

### மத்திய வைப்பக முறைமைக் கணக்கொன்றினைத் திறப்பதற்கு விண்ணப்பதாரர்கள் பின்வரும் பிரகடனங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்

- திறக்கப்படவுள்ள மத்திய வைப்பக முறையின் கணக்கூடாக கொள்வனவு செய்யப்படவுள்ள பிணையங்களின் பிரகடனமானது விண்ணப்பத்தாரியின் நன்மைக்கானதாக மட்டுமே இருக்குமென்பதுடன் மற்றைய நன்மை பெறும் சொந்தக்காரர்/ சொந்தக்காரர்களுக்கல்ல. மாற்று நடவடிக்கையாக, விண்ணப்பத்தாரர் நம்பிக்கை பொறுப்பாளர் என்ற ரீதியில் செயற்படுவாராயின், நன்மை பெறுநர்களின் நன்மைக்காக கணக்கு திறக்கப்பட்டது என்ற பிரகடனம், நன்மை பெறுநர்களின் எண்ணிக்கை மூன்றாக (3) இருக்குமிடத்து மட்டும் பெயர்கள், முகவரிகள் மற்றும் தேசீயங்களை பிரகடனப்படுத்தல் வேண்டும். அத்தகைய எண்ணிக்கை கூடுதலாக இருக்குமிடத்து, கணக்கின் இறுதி நன்மை பெறுநர்கள் தொடர்பான பெயர்கள், முகவரிகள் மற்றும் தேசியம் போன்ற தகவல்கள் விண்ணப்பதாரருடன் பேணப்படுவதுடன் மத்திய வைப்பக முறைமை கோரும் எந்தவொரு நேரத்திலும் அத்தகைய தகவல்களை மத்திய வைப்பக முறைக்கு வழங்குவதற்கு பொறுப்பேற்றுக் கொள்கின்ற பிரகடனமொன்று [ஜம.வை.மு (1)அ/ ம.வை.மு 2(அ)]

- மத்திய வைப்பக முறையினூடாக முதலீடு செய்யப்படவுள்ள நிதிகள் எந்தவொரு பணம் தூயதாக்கல் நடவடிக்கைகளிலிருந்தும் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியிடுதல் அல்லது வேறு ஏதேனும் சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட பணமாக இருக்கமாட்டாது என்ற பிரகடனமொன்று [ஜம.வை.மு 1(அ)/ ம.வை.மு 2(அ)]
- வழங்கப்பட்ட அனைத்து தகவல்களும் உண்மையெனவும் சரியானதெனவும் மேற்சொன்ன தகவல்களுக்கு மாற்றமோ, திருத்தமோ செய்யப்படவில்லை என்ற பிரகடனமொன்று [ஜம.வை.மு 1(அ)/ ம.வை.மு 2(அ)]
- மத்திய வைப்பக முறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களில் வேறுபாடுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய மாற்றம் நிகழ்ந்து 14 நாட்களுக்குள், எழுத்தில் மத்திய வைப்பக முறைக்கு விண்ணப்பதாரர் அறிவித்தல் வேண்டும் என்ற பிரகடனமொன்று [ஜம.வை.மு 1(அ)/ ம.வை.மு 2(அ)]
- கீழே பின்னிணைப்பு 'அ' இல் குறிப்பிடப்பட்டவாறான பிரகடனமொன்று

## பின்னிணைப்பு அ

### பிரகடனம்

நான்/ நாங்கள் தடை செய்யப்படவோ அத்துடன்/ அல்லது பின்வரும் குற்றச் செயல்கள் தொடர்பாக இலங்கையிலுள்ள எந்தவொரு குற்றவியல்/ குடியியல் நியாயச்சபையினால் அல்லது நிருவாக அதிகாரசபையினால் இடைநிறுத்தப்படவில்லை என்றும் நான்/ நாங்கள் பிரகடனப்படுத்துகின்றேன்.

- சட்டத்திற்கு மாறான எந்தவொரு நடவடிக்கையிலிருந்தும் அல்லது 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தினால் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான சட்டத்திற்கு மாறான நடவடிக்கையின் மூலமான பணத்தொகையிலிருந்தும் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பெறப்பட்ட அல்லது தேறல் செய்யப்பட்ட எந்தவொரு சொத்து தொடர்பான எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களிலும் நேரடியாக அல்லது மறைமுகமாக ஈடுபட்டமை;

- சட்டத்திற்கு மாறான எந்தவொரு நடடிக்கையிலிருந்தும் நேரடியாக அல்லது மறைமுகமாக பெறப்பட்ட அல்லது தேறப்பட்ட எந்தவொரு சொத்தினையும் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்திற்கு மாறான எந்தவொரு நடவடிக்கையிலிருந்தும் பெறப்பட்ட பணத்தொகையினையும் பெறுதல், உடமையில் வைத்திருத்தல், மறைத்தல், அகற்றுதல் அல்லது இலங்கைக்குள் அல்லது மற்றைய எந்தவொரு நாட்டிற்குள்ளும் கொண்டு வருதல், அல்லது இலங்கையில் அல்லது வேறு ஏதேனுமொரு நாட்டில் முதலீடு செய்தல்; அல்லது

- 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலுக்கெதிரான சட்டம் அதற்கு செய்யப்படும் ஏதாவது திருத்தங்கள் அல்லது உலகின் எந்தவொரு பகுதியிலும் இதனையொத்த சட்டவாக்கங்களின் கீழ் குற்றம் என வரைவிலக்கணம் செய்யப்பட்ட வேறு ஏதாவது குற்றங்கள்.

நான்/ நாங்கள் மேலே குறிப்பிடப்பட்ட குற்றங்கள் தொடர்பாக இலங்கையிலோ அல்லது வேறு ஏதாவது நாட்டிலோ குற்றவியல் குற்றவாளியாக காணப்பட்டமைக்கு பதிவுகள் இல்லையெனவும் நான்/ நாங்கள் நல்ல நிலையிலுள்ள ஆட்களெனவும் பிரகடனப்படுத்துகின்றோம்.

நான்/ நாங்கள் அல்லது என்னுடன்/ எங்களுடன் தொடர்பான ஏதாவது தொழில் முயற்சிகளால் (பங்காளராக, பங்குடமையாளராக, பணிப்பாளராக) இணைந்துள்ள எந்தவொரு ஆளும் (ஆட்கள்) இலங்கையில் அல்லது பின்வருவன தவிர்ந்த உலகின் எந்தவொரு பகுதியிலும் முன் சொல்லப்பட்டவாறு எந்தவொரு குற்றத் தீர்ப்பிற்கும் நிலுவையிலுள்ள குற்றவியல் வழக்குத் தொடர்புகளும் அற்றவர்களெனவும் (நிலுவையிலுள்ள ஏதாவது வழக்குத் தொடுப்புக்கள் பற்றிய விபரமான விபரங்கள் தரப்படுகின்றன) நான்/ நாங்கள் மேலும் பிரகடனப்படுத்துகின்றோம்.

- ........
- ........
- ........
- ........

மத்திய வைப்பகமுறைக் கணக்கொன்றினைத் திறப்பதற்கான எனது/ எங்களது விண்ணப்பங்களும் மற்றைய தொடர்பான ஆவணங்களும் நிராகரிக்கப்படவோ அல்லது வியாபார உறவுமுறைகள் எந்தவொரு மற்றைய பங்கேற்பு கட்டுக்காப்பாளர் வங்கி, மத்திய வைப்பகமுறை/ கொழும்பு பங்கு பரிவர்த்தனையினால் இதற்கு முன்னர் மறுக்கப்படவோ இல்லை என்பதனையும் நான்/ நாங்கள் பிரகடனப்படுத்துகின்றோம்.

என்னால்/ எங்களால் இத்தால் செய்யப்பட்ட எந்தவொரு கூற்றும் மத்திய வைப்பகமுறையின் கணக்கு வைத்திருப்போர் அல்லது அத்தகைய கணக்கு வைத்திருப்போருடன் தொடர்பான தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக இலங்கையின் சட்டங்கள்/ ஒழுங்குவிதிகளுடன் இணங்கிச் செய்ய வேண்டிய நிறுவனமொன்று என்ற ரீதியில் கொழும்பு பங்குச்சந்தை/ மத்திய வைப்பகமுறைக்கு மாறாக (அல்லது பகிரங்கமாக கிடைக்கத்தக்க தகவல்கள் அல்லது வேறுவிதமானவற்றினூடாக வேறு அத்தகைய விடயங்கள்) அமையுமிடத்து கொழும்பு பங்கு பரிவர்த்தனை/ மத்திய வைப்பகமுறையின் தீர்மானமாக இருக்க வேண்டும் என்பதனை நாம் பிரகடனம் செய்து அதற்கு உடன்படுவதுடன், மத்திய வைப்பகமுறை என்னுடன்/ எங்களுடன் தொடர்பான அனைத்து வைப்புக்களையும் அத்தகைய ஏனைய பணிகளையும் முடிவுறுத்துவதற்கும் தொடர்பான செலவுகளையும் இக்கணக்கு தொடர்பான மற்றைய செலவினங்களையும் அறவிடுவதற்கும் இத்தால் ஏகமனதாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளது என்பதனையும் ஏற்றுக் கொள்வதாகவும் இத்தால் பிரகடனம் செய்கிறோம்.

## பகுதி V

### 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளில் பிணையங்கள் தொழில் துறைக்காக சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களின் அறிக்கை

சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையாக ஏற்றுக் கொள்ளப்படவுள்ளது என்பதனைக் கவனிக்கவும். இப்படிவத்திலுள்ள அனைத்து விடயங்களும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

அ. இவ்வறிக்கையானது 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுவதற்கான தேவைப்பாடுகளை செயற்படுத்துகின்றது.

ஆ. நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ், நம்பிக்கை மோசடி செய்திருந்தாலொழிய அறிக்கையிடும் ஆளொருவருக்கெதிராக குடியியல், குற்றவியல் அல்லது ஒழுக்காற்று வழக்குகள் எதுவும் தொடர முடியாது.

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவிற்கிணங்க அறிக்கையிடுகின்ற நிறுவனமானது, சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல் அறிக்கையினை சாத்தியமானளவிற்கு விரைவாக, ஆனால் 2 வேலை நாட்களுக்கு பிந்தாமல் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவிப்பதற்கு கடப்பாடுடையதாகும்.

சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல் அறிக்கையினை பூர்த்தி செய்வதற்கு முன்னர் தயவு செய்து பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்ளவும்.

- சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல் அறிக்கை பற்றி தெளிவானதும் சுருக்கமானதுமான விபரமொன்றைத் **தருவதுடன்** கிடைக்கத்தக்க அனைத்து தகவல்களையும் **குறிப்பிடுக**.
- **கொடுக்கல் வாங்கல்கள்** ஏன் அசாதாரணமாக, கிரமமற்ற அல்லது **சந்தேகத்திற்குரியதாக** கருதப்படுகின்றன என்பதனை விபரமாக **ஆவணப்படுத்துக**.
- சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களை விளக்குவதற்கு அவசியமானதாக இருக்குமிடத்து ஆதாரங்களுக்குரிய ஆவணங்களை **வழங்குக**.
- ஆரம்ப அறிக்கையில் உள்ளார்ந்த சட்ட மீறல்கள் இருப்பின் அல்லது இது முன்னைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது அறிக்கையிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பானதாக இருப்பின் குறிப்பிடுக.
- சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினை பெரிய எழுத்தில் பூரணப்படுத்தவும்.
- பக்கம் 16இலுள்ள விளக்க குறிப்புக்களை உசாத்துணையாகக் கொள்ளவும்.

## 2006ஆம் ஆண்டின் நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளில் பிணையங்கள் தொழில் துறைக்கான சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல் அறிக்கை

அ. இவ்வறிக்கையானது 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் தேவைப்பாடுகளை செயற்படுத்துகின்றது.

ஆ. நிதிசார் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் நம்பிக்கை மோசடி செய்திருந்தாலொழிய அறிக்கையிடும் ஆளொருவருக்கெதிராக குடியியல், குற்றவியல் அல்லது ஒழுக்காற்று வழக்குகள் எதனையும் தொடர முடியாது.

**அறிக்கையிடும் கம்பனியின் பெயர்** : ........................................................................................................

**அறிக்கையிடும் திகதி** : ........................................................................................................

**வெளிப்படுத்தப்படுகின்ற நிறுவனத்தின் விபரங்கள்**

| நிறுவனத்தின் பெயர் | பதிவு செய்யப்பட்ட முகவரி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

**வெளிப்படுத்தலுக்குட்படும் ஆள்**

| முழுப் பெயர் | தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டு இலக்கம்/ முகவரி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

**அல்லது வெளிப்படுத்தலுக்குட்படும் கம்பனி**

| நிறுவனத்தின் பெயர் | பதிவு செய்யப்பட்ட முகவரி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| மேலே உள்ளடக்கப்படாத மற்றைய தகவல்கள் | |

## பகுதி உ: அறிக்கையிடும் அலுவலர் மற்றும் இணங்குவிப்பு அலுவலர்களின் விபரங்கள்

36. அறிக்கையிடும் திகதி [ ][ ][ ][ ] [ ]
தி தி மா மா ஆண்டு

அறிக்கையிடும் அலுவலர்: ..................................................................

பெயர்: ..................................................................

**இணங்குவிப்பு அலுவலரின் பெயர்**

பதவி : ..................................................................

முகவரி: ..................................................................

தொடர்பு இலக்கம் ................................ மின்னஞ்சல் ................................ தொலைநகல் ................................

..................................................................

**இணங்குவிப்பு அலுவலரின் ஒப்பம்**

## பகுதி உ: உளவறிதல் பிரிவின் பயன்பாட்டிற்கு மாத்திரம்

பெறுகின்ற அலுவலர்

---

பெறப்பட்ட திகதி [ ][ ][ ][ ] 200[ ]
தி தி மா மா ஆண்டு

---

ச. கொ. அறிக்கை இல: [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

கிடைத்தமை பற்றிய திகதி [ ][ ][ ][ ] 200[ ]
தி தி மா மா ஆண்டு

---

## பகுதி உ: உளவறிதல் பிரிவின் கிடைத்தமை பற்றிய அறிவித்தல்

.................................. இருந்து இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் உளவறிதல் பிரிவினால் பெறப்பட்டது. ச.கொ. அறிக்கை இல: [ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

திகதி [ ][ ][ ][ ] 200[ ]

..................................................................

**பணிப்பாளர்/ நிதிசார் உளவறிதல் பிரிவு**

**பொதுவான அறிவுறுத்தல்கள்**

**2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ்,** இச்சட்டத்தின் பிரிவு 7(1)இல் வரைவிலக்கணம் செய்யபட்டவாறு, அறிக்கையிடுகின்ற ஒவ்வொரு நிறுவனமும் சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களின் விபரங்களை சமா்ப்பித்தல் வேண்டும்.

7(1) நிறுவனமொன்று

அ) ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் ஏதேனும் சட்ட விரோதமான செயற்பாட்டை அல்லது வேறு ஏதேனும் குற்றவியல் தவறைப் புரிதல் தொடர்பிலானதாக இருக்கக்கூடும் எனச் சந்தேகிப்பதற்கு நியாயமான காரணத்தினைக் கொண்டிருக்குமிடத்து

அல்லது

ஆ) (i) 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பினை ஒடுக்குதல் மீதான சமவாயச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தவறொன்றுக்கு ஆயத்தம் செய்கின்றதோர் செயலொன்றிற்கு இயைபுள்ளதென

(ii) சட்ட விரோதமான செயற்பாடொன்றை அமைத்து உருவாக்கும் செயலொன்றிற்கான புலனாய்வொன்றிற்கு அல்லது வேறு வகையில் இச்சட்டத்தை அல்லது 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலைத் தடை செய்கின்ற சட்டத்தினை அல்லது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பினை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தினை வலுவுக்கிடுவதில் உதவக்கூடிய இயைபுள்ளதென, சந்தேகிக்கின்ற தகவலைக் கொண்டிருக்குமிடத்து.

**எவ்வாறு சமா்ப்பிப்பது**

ஒவ்வொரு நிறுவனமும் இப்படிவத்தினை நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் பதவி குறித்துரைக்கப்பட்ட அறிக்கையிடல் நிறுவனத்தின் இணங்குவிப்பு அலுவலரூடாக மாத்திரம் நிதிசார் உளவறிதல் பிரிவின் பணிப்பாளருக்கு சமா்ப்பித்தல் வேண்டும். அவசரமான விடயங்களில் படிவங்களை தொலைநகலிலும் அனுப்பலாம்.

**முகவரி:** பணிப்பாளா்

நிதிசார் உளவறிதல் பிரிவு

இலங்கை மத்திய வங்கி

30 சனாதிபதி மாவத்தை

கொழும்பு 1

தொலைநகல்: 94-11-2477692

**நிதிசார் சுருக்கப் பார்வை**

- இது கணக்கின் கண நேரப்படமெடுப்பாகும் (கணக்கு திறந்த திகதி, கணக்கு மூடப்பட்ட திகதி தொடர்புடையதாக இருக்குமிடத்து) இது புலனாய்வின் முன்னுரிமையினை எடுத்துக்காட்டக் கூடும்.
- கணக்கினது மொத்தப் புரள்வின் கண நேரப்படமெடுப்பு அறிக்கையின் முக்கியத்துவத்தையும் கூட எடுத்துக்காட்டலாம்.

**நிதிசார் சுருக்க விபரங்கள்**

- மேலே எடுத்துக்காட்டப்பட்டவாறு, அறிக்கையிடும் திகதியுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல் திகதியும் நிதிசார் உளவறிதல் பிரிவில் பெறப்பட்டமை தொடர்பான திகதியும் நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு முக்கியமான உள்ளீடுகளை வழங்க முடியும்.
- இணைக்கிணைத்தரப்பின் தகவல்கள், இதையொத்த இணைக்கிணைத்தரப்பினருடன் ஒப்பீட்டு பகுப்பாய்வுகளை மேற்கொள்ள நிதிசார் உளவறிதல் பிரிவிற்கு உதவும்.
- கூடுதலான அறிக்கைகளை வழங்கும் விதத்தில் நிதியியல் நிறுவனங்கள் மீண்டுமொருமுறை ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

5. பணச்சேவைகளை வழங்குகின்ற அல்லது ஒரு கொடுப்பனவு முறைமையை, ஒரு தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையைத் தொழிற்படுத்துகின்ற சேவை வழங்குநரொருவராகச் செயலாற்றுவதற்கு உட்கருதுகின்ற அல்லது தனியொரு உருவகமாகச் சேர்ந்து அல்லது ஒரு துணைநிலையான, இணைந்த அல்லது முகவர் நிலையத் தன்மையில் மேலேயுள்ள சேவைகளுள் ஏதேனுமொன்றை அல்லது அதற்கதிகமானவற்றை வழங்குகின்ற அல்லது தொழிற்படுத்துகின்ற எவரேனுமாள், இமவங்கியானது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய தகவலை அல்லது ஆவணப்படுத்துகையைக் கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

6. இவ்வொழுங்குவிதிகளில் உள்ளதெதுவும், 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 44ஆம் பிரிவின் ஏற்பாடுகளை வரையறுத்தலோ, மறுதலித்தலோ அல்லது மீறுதலோ ஆகாது.

7. இவ்வொழுங்குவிதிகளின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## வரைவிலக்கணங்கள்

இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக, இமவங்கியானது, காலத்துக்குக்காலம், பின்வரும் பதங்களுக்கான பொருளுக்கு வரைவிலக்கணங்கூறி அரசாங்க கசெற்றில் அவற்றை வெளியிடலாம்.

"இமவ" என்பது, (422ஆம் அத்தியாயமான) 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க, நாணயச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்;

"கணக்குத்தீர்வு முறைமை" என்பது, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 2ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தீர்ப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமை" என்பது, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 32ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

"வழங்குநர்" என்பது, பயன்படுத்துநருக்குக் கொடுப்பனவுச் சாதனங்கள் வழங்கப்படுவதன் விளைவாக அல்லது பயன்படுத்துநர் அச்சாதனங்களைப் பயன்படுத்துவதன் விளைவாக ஒரு கொடுப்பனவுச் சாதனம் தொடர்பிலான கொடுப்பனவுக் கடப்பாடுகளுக்குப் பொறுப்பாகவிருப்பதற்குப் பொறுப்பேற்கின்றவரும், தனியாக அல்லது இன்னோராளுடனான அல்லது ஆட்களுடனான ஒழுங்கேற்பாட்டின் கீழ் செயலாற்றுகின்றவருமான எவரேனுமாள் என்று பொருளாகும்;

"பணம்" என்பது, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 18ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பணச் சேவைகள்" என்பது, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 18ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பணப்பெறுமதி" என்பது, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 18ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தொழிற்படுத்துநர்" என்பது, தனியொரு நிறுவனமாகக் சேர்ந்த அல்லது ஒரு துணை நிறுவனமாக, இணைந்த அல்லது முகவர்நிலையத் தன்மையில், பணச்சேவைகளின், கொடுப்பனவு, கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகளின் அல்லது மேலேயுள்ள சேவைகளுள் ஏதேனுமொன்றின் அல்லது அதற்கதிகமானவற்றின் விதிகள், நடவடிக்கை முறைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பவற்றுக்குப் பொறுப்பாகவுள்ளவரும் தனியாக அல்லது இன்னோராளுடனான அல்லது ஆட்களுடனான ஒழுங்கேற்பாட்டின் கீழ் செயலாற்றுபவருமான எவரேனுமாள் என்று பொருளாகும் என்பதுடன், இமவங்கியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆட்களைத் தவிர்த்தலும் வேண்டும்;

"கொடுப்பனவு முறைமை" என்பது, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 18ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"ஆள்" என்பது, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 18ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"விதித்துரைத்தல்" என்பது, கசெற்றில் வெளியிடுவதன் மூலம் விதித்துரைக்கப்பட்ட என்று பொருளாகும் என்பதுடன், விதித்துரைப்பதற்கானவொரு தத்துவம், அடையாளங் காணப்பட்ட ஆட்களுக்காகவும், பணச்சேவைகளுக்காகவும், கொடுப்பனவு முறைமைகளுக்காகவும், கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகளுக்காகவும் அல்லது கொடுப்பனவுச் சாதனங்களுக்காகவும் தனிவேறான ஏற்பாடுகளைச் செய்வதற்கான தத்துவத்தையும் உள்ளடக்கும்;

"பிணையம்" என்பது, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 10ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''சேவை வழங்குநர்'' என்பது, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 18ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், ஒரு கொடுப்பனவுச் சாதனத்தின் வழங்குநரையும்; ஒரு கொடுப்பனவுச் சாதனத்தின் தயாரிப்பாளரையும்; ஒரு கொள்ளுதல் செய்பவரையும்; செயலிடங்களை உற்பத்திசெய்பவரையும்; செயலிடங்களின் சொந்தக்காரரையும்; செயலிடங்களின் தொழிற்படுத்துநரையும்; ஓர் ஆளியின் சொந்தக்காரரையும்; ஓர் ஆளியின் தொழிற்படுத்துநரையும்; தொலைத்தொடர்பு வலைப்பின்னல், மென்பொருள், வன்பொருள், பேரழிவு மீட்சி இடங்கள் என்பன உட்பட, பணச்சேவைகள், கொடுப்பனவு, கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் தொடர்பான உள்ளகக்கட்டமைப்பின் சொந்தக்காரரையும், தொழிற்படுத்தநரையும் அல்லது பேணுகைத் தொழிற்படுத்துநரையும், பணச் சேவைகளின் தொழிற்படுத்துநரையும் ஒரு கொடுப்பனவு முறைமைத் தொழிற்படுத்துநரையும் ஒரு கணக்குத் தீர்வுத் தொழிற்படுத்துநரையும் ஒரு கொடுத்துத்தீர்த்தல் முறைமைத் தொழிற்படுத்துநரையும் ஒரு கணக்குத்தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைத் தொழிற்படுத்துநரையும் அத்துடன் மேலேயுள்ள சேவை வழங்குவோரின் கொடுத்துத்தீர்த்தல் முகவரையும் அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட முகவரையும் அல்லது உப முகவரையும் அல்லது எவரேனும் சேவை வழங்குநருக்காக முகவர் நிலையத் தன்மையில் செயலாற்றுகின்ற எவரேனுமாளையும் அல்லது எவரேனுமாளின் ஊழியரொருவரையும் உள்ளடக்குதலும் வேண்டும்;

''கொடுத்துத்தீர்த்தல் முறைமை'' என்பது, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 2ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''குறித்துரைத்தல்'' என்பது, எழுத்தில் குறித்துரைத்தல் என்று பொருளாகும் என்பதுடன், குறித்துரைப்பதற்கானவொரு தத்துவமானது, வெவ்வேறு ஆட்களுக்காக, கொடுப்பனவு முறைமைகளுக்காக அல்லது கொடுப்பனவுச் சாதனங்களுக்காக, அல்லது ஆட்களின் விபரங்களுக்காக அல்லது வகையினருக்காக, கொடுப்பனவு முறைகளுக்கான, கொடுப்பனவு கருவிகள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

**பொதுவான பணிப்புரை எண்: 01/2007**

**2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டம்**

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 44ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் மேற்கொள்ளப்பட்ட பொதுவான பணிப்புரை

முனைவர் ராணி ஜெயமகா
துணை ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

கொழும்பு
2007 நவெம்பர் 14

**காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறையின் கீழ் "வாடிக்கையாளர்களிடமிருந்து காசோலை வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கும் வாடிக்கையாளர்களுக்கான காசோலை பெறுகைகளை வரவு வைப்பதற்குமான பணி வசதிகள் மற்றும் நியம நேரங்கள்" தொடர்பாக பங்கேற்கும் நிறுவனங்கள் மீதான பொதுவான பணிப்புரை**

2006 மேயில் அறிமுகப்படுத்தப்பட்ட காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக்குறைப்பு, காசோலை தீர்ப்பனவு செய்முறையின் வேகத்தினை கணிசமாக அதிகரித்து காசோலை தேறல் செய்யப்படும் நேரத்தின் அளவினை ஒரு நாளுக்கு குறைத்தது (T+1, T என்பது தீர்ப்பனவிற்காக லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டடில் அல்லது அதன் பிராந்திய நிலையங்களில் காசோலைகள் பெறப்படுகின்ற நாளையும் 1 என்பது அடுத்த வேலை நாளையும் குறிக்கும். எனினும் பல்வேறு காரணங்களுக்காக சில வங்கிக் கிளைகள் T+1 இனை பின்பற்ற முடியாமல் இருப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது.

2. வாடிக்கையாளர்கள் காசோலைப் பெறுகைகள் T+1 இற்குள் பெறுவதற்கு வசதியளிக்கின்ற பொதுக்கொள்கை குறிக்கோளினை பரிசீலனையில் கொண்டு தேசிய கொடுப்பனவு சபை 2007 ஓகத்து 9ஆம் நாள் நடைபெற்ற அதன் கூட்டத்தில், இலங்கை மத்திய வங்கி அனைத்து வர்த்தக வங்கிகளையும் காசோலை வைப்புக்களுக்கான வெட்டு நேரத்தினை எடுத்துக் காட்டும் அறிவித்தலொன்றினை செய்தித் தாள்களில் பிரதிபலிப்பதற்கு அல்லது வங்கிக் கிளைகளில் காட்சிக்கு வைப்பதற்கு கட்டாயப்படுத்த வேண்டும் என்ற கருத்தினை தெரிவித்தது:

   (i) T+1 இனை வசதிப்படுத்துவதற்கு; அல்லது

   (ii) மேலேயுள்ள (i) சாத்தியப்படாதவிடத்து காசோலைகளின் வரவுப் பெறுகைகளை ............... நாட்களில் வசதிப்படுத்துவதற்கு (நாட்களின் எண்ணிக்கையினை) குறிப்பிடலாம்.

   (iii) வெளியிலுள்ள தன்னியக்க கூற்றுப் பொறிகளில் வைப்புச் செய்யப்பட்ட காசோலைகளின் பெறுகைகளை தேறலின் பின் வரவு வைக்க குறிப்பிட்ட வங்கியொன்று எடுக்கும் நாட்களின் எண்ணிக்கை

இதன்படி, காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறையின் கீழ் "வாடிக்கையாளர்களிடமிருந்து காசோலை வைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கும் வாடிக்கையாளர்களுக்கான காசோலை பெறுகைகளை வரவு வைப்பதற்குமான பணி விதிகள் மற்றும் நியம நேரங்கள்" தொடர்பான பங்கேற்கும் நிறுவனங்கள் மீதான இப்பொதுவான பணிப்புரையானது 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 44ஆம் பிரிவின் நியதிகளில் காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக்குறைப்பு முறையின் அனைத்து பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டது. இப்பொதுவான பணிப்புரை 2007 திசெம்பர் 03ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

3. பங்கேற்கும் நிறுவனங்கள், வங்கிப் பீடங்களிலும் சேகரிப்புப் பெட்டிகளிலும் சேகரிக்கப்படும் காசோலை வைப்புக்களுக்காகவும் பின்வரும் குறைந்தபட்ச வெட்டு நேரத்தினைப் பின்பற்ற வேண்டியதுடன், சேகரிக்கப்பட்ட அத்தகைய காசோலைகளை தீர்ப்பனவிற்காக அதே வேலை நாளன்று (T) சமர்ப்பிக்கவும் வேண்டும்:

4. வழமையான முறையில் லங்கா கிளியரினால் வழங்கப்படும் உள்வரும் திரும்பல் தரவுகள்/ அறிக்கைகளின் நிமித்தம் பங்கேற்கும் நிறுவனங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் பெறுகைகளை அடுத்த வேலை நாளன்று வாடிக்கையாளர் கணக்கிற்கு வரவு வைக்கும் (உ-ம்: T+1 அன்று என்பது தீர்த்தல் தீர்ப்பனவு இடம் பெறும் நாள்) தன்னியக்க கூற்றுப் பொறிகளை வைத்திருக்கும் ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் அடுத்த வேலை நாளன்று வாடிக்கையாளர்கள் தன்னியக்க கூற்றுப் பொறிகளினூடாக பங்கேற்கும் நிறுவனங்களினால் குறித்து வைக்கப்பட்ட வரையறையளவிலான நிதியினை வாடிக்கையாளர் மீளப் பெறுவதனை இயலச் செய்யும் விதத்தில் வாடிக்கையாளரின் கணக்கிற்கு தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் பெறுகைகளை வரவு வைத்தல் வேண்டும்.

5. ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் காசோலைச் சேகரிப்பு, வாடிக்கையாளர்களின் கணக்குகளுக்கு காசோலைப் பெறுகைகளை வரவு வைத்தல் மற்றும் வாடிக்கையாளரின் முறையீடுகளை கையாளும் விதங்கள் என்பன தொடர்பாக தேவையான நடைமுறைகளையும் வசதிகளையும் வடிவமைத்துக் கொள்ளல் வேண்டும். அத்தகைய நடைமுறைகளும் வசதிகளும் வாடிக்கையாளர்களுக்கான பங்கேற்கும் நிறுவனங்களின் கடப்பாடுகளும் வாடிக்கையாளர்களின் உரிமைகளும் நிறுவப்பட்டு நடைமுறையில் பேணப்பட்டு வருவதனை உறுதிப்படுத்துவனவாக இருத்தல் வேண்டும்.

6. பங்கேற்கும் நிறுவனங்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(i) பின்வருவனவற்றின் மூலம் பந்தி 5இல் உள்ள உள்ளடக்கத்திற்கும் காசோலைச் சேகரிப்பு மற்றும் வாடிக்கையாளர் கணக்குகளுக்கு வரவு வைத்தல் என்பன பரந்தளவில் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

(அ) வங்கிக் கிளைகள் அவற்றின் வங்கித்தொழில் மண்டபத்திலுள்ள விளம்பரப் பலகையிலும் காசோலைச் சேகரிப்புப் பெட்டிகளிலும் துலாம்பரமான முறையில் காட்சிக்கு வைப்பதன் மூலம் வாடிக்கையாளரின் கவனத்தையும் அதேபோன்று அவற்றைப் பின்பற்றுவதற்கு ஊழியர்களின் கவனத்தையும் கவரலாம்.

(ஆ) மாதாந்த நடைமுறைக் கணக்கு கூற்றுக்களின் மீது செய்தியொன்றாக இதனை அச்சிடுதல்.

(இ) 2007 திசெம்பர் 31ஆம் நாளுக்கு முன்னர் அவற்றின் வெப்தளத்திற்கு இதனை அனுப்பலாம்.

(ii) காசோலைச் சேகரிப்பு மற்றும் வாடிக்கையாளர் கணக்குகளில் வரவு வைத்தல் என்பன தொடர்பான நடைமுறைகள், விதிகள் அல்லது நேரம் பற்றி ஏதாவது மாற்றங்கள் இருப்பின் அவை வாடிக்கையாளர்களுக்கு சரியான முறையில் அறிவிக்கப்படுகின்றமையையும்;

(iii) எந்த ஒரு தாமதத்திற்கும் அலுவலர்கள் பொறுப்புக்கூறும் தன்மையினை மதிப்பிடும் விதத்தில் நடைமுறைகள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வாடிக்கையாளர் பணிகளை மேம்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய அவசியமான நடவடிக்கைகளின் பொருட்டு, வெட்டு நேரத்திற்கு முன்னர் சேகரிக்கப்பட்டு அதே வேலை நாளன்று தீர்ப்பனவிற்கு அனுப்பப்படாத காசோலைகள்; மற்றும் தாமதங்களுக்கான காரணங்கள்; என்பனவற்றைப் பதிவு செய்வதற்காக சிறப்புப் பதிவேடொன்று அறிமுகப்படுத்தப்படுவதனையும்;

(iv) வாடிக்கையாளர்கள் பணிகளின் தரத்தினை உயர்த்தும் நோக்குடன் இப்பணிப்புரைக்கு இணங்கியொழுகும் தன்மையினை மதிப்பீடு செய்வதற்காக காலாந்தர மதிப்பீடுகள் அரையாண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் தொடர்பான காலப்பகுதி முடிவடைந்து இரண்டு கிழமைகளுக்கிடையில் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளருக்கு அரையாண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றமையினையும்; அத்துடன்

(v) மனக்குறைகள் இருக்கும் தரப்பினர் அக்குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக பங்கேற்கும் நிறுவனங்களினால் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிகளை அணுகும் உரிமையினைக் கொண்டிருக்கிறார்கள் என்பதனையும்.

7. ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் காசோலைச் சேகரிப்பு நடைமுறைகள், விதிகள் மற்றும் காசோலைச் சேகரிப்பு, வாடிக்கையாளர் கணக்குகளுக்கு வரவு வைக்கும் நேரம் என்பன பற்றி தெளிவான அச்சில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலச் செய்தித்தாள்களில் பிரசுரித்தல் வேண்டும். அத்துடன் அவை பற்றி 2007 திசெம்பர் 31இற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களப் பணிப்பாளருக்கு அறிவித்தலும் வேண்டும்.

8. மேலும், ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் காசோலைச் சேகரிப்பு மற்றும் காசோலை சேகரிப்பிற்கான வெட்டு நேரத்தினை விரிவாக்குவதற்கான முயற்சி, காசோலை திரும்பல் அறிவிப்பு பெறப்பட்டதன் பின்னர் வாடிக்கையாளர் கணக்குகளுக்கு பெறுகைகளை வரவு வைப்பதற்கு அத்துடன்/ அல்லது தீர்ப்பனவுத் தீர்த்தலில் உள்வரும் திரும்பல் தரவுகளுக்கும் தேவைப்படும் நேரத்தினைக் குறைத்தல் என்பன தொடர்பாக பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் தற்போதைய ஒழுங்குகளையும் மீளாய்வு செய்தல் வேண்டும்.

2007 யூலை 2

**தொடர்பு: 34/07/029/0001/001**

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/03/2007**

*லங்கா செட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பெயர் மாற்றம்**

வரையறுக்கப்பட்ட செலான் வங்கி அதன் பெயரை செலான் வங்கி பிஎல்சி என மாற்றிக் கொண்டுள்ளமையினால் லங்கா செட்டில் முறையின் நிலையான தரவு 2007 யூன் 04ஆம் நாள் தொடக்கம் கீழே காட்டப்பட்டவாறு மாற்றமடையும்.

(i) வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பங்கேற்பாளர் நிறுவனத்தின் பெயர் செலான் வங்கி பிஎல்சி என மாற்றமடைகிறது; அத்துடன்

(ii) வரையறுக்கபட்ட செலான் வங்கியினது கணக்கின் பெயர் செலான் வங்கி தீர்ப்பனவு கணக்கு என்பதிலிருந்து செலான் வங்கி பிஎல்சி தீர்ப்பனவுக் கணக்கு என மாற்றமடைகிறது.

வங்கியின் சுவிப்ற் வங்கி அடையாளக் குறியீடு மாற்றமின்றியிருக்கும்.

**சி. பிரேமரத்ன**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**கே.ஆர்.எம். சிறிவர்த்தன**
பணிப்பாளர்/கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

2007 ஒத்தோபர் 10

**தொடர்பு: 34/07/029/0001/001**

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/05/2007**

*லங்கா செட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**லங்கா செட்டில் பங்கேற்பாளர்களின் பெயர் மாற்றங்கள்**

2007ஆம் ஆண்டின் கம்பனி ஏற்பாடுகள் சட்டத்தின் நியதிகளில் வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கியும் பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்டும் பின்வரும் பெயர்களின் கீழ் வரையறுக்கப்பட்ட பகிரங்கக் கம்பனிகளாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

(i) தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி

(ii) பான் ஏசியா பாங்கிக் கோப்பிரேசன் பிஎல்சி

| பங்கேற்பாளர் நிறுவனத்தின் பெயர் | வியாபார நாளன்று (T) காசோலை வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்காக குறைந்தபட்ச வெட்டு நேரம் |
|---|---|
| 1. தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி | தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி தீர்ப்பனவு கணக்கு |
| 2. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி | பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி தீர்ப்பனவு கணக்கு |

இதற்கமைய லங்கா செட்டில் முறையின் நிலையான தரவு 2007 ஒத்தோபர் 12ஆம் நாள் தொடக்கம் கீழே எடுத்துக் காட்டப்பட்டவாறு மாற்றமடையும்.

மேற்குறிப்பிட்ட வங்கிகளின் சுவிப்ற் வங்கி அடையாளக் குறியீடுகள் மாற்றமின்றியிருக்கும்.

**சி. பிரேமரத்ன**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**கே.ஆர்.எம். சிறிவர்த்தன**
பணிப்பாளர்/ கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

**தொடர்பு: 34/07/029/0001/001**

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/07/2007**

2007 செத்தெம்பர் 27

*அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**வரையறுக்கப்பட்ட ஸ்டான்டட் சார்டட் வங்கியின் (பாகித்தான்) வங்கி அடையாளக் குறியீட்டின் மாற்றம்**

வரையறுக்கப்பட்ட ஸ்டான்டட் சார்டட் வங்கியின் (பாகித்தான்) சுவிப்ற் வங்கி அடையாளக் குறியீடு 2007.12.29 தொடக்கம் 'UNBLLKLCXXX' இலிருந்து 'SCBLPKKXULK' இற்கு மாற்றமடையும் என்பதனை தங்களுக்கு இத்தால் அறியத் தருகின்றோம்.

2. அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையில் மேற்குறிப்பிட்ட மாற்றத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான தொழில்நுட்ப நடைமுறைகள் பின்வருவனவற்றுடன் தொடர்புபட்டதாயிருக்கும்.

(i) அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையில் வரையறுக்கப்பட்ட ஸ்டான்டட் சார்டட் வங்கியின் (பாகித்தான்) அடையாளப்படுத்தல் 2007.12.31 தொடக்கம் 'UNBL' இலிருந்து 'ULK' இற்கு மாற்றடையும்; அத்துடன்

(ii) வரையறுக்கப்பட்ட ஸ்டான்டட் சார்டட் வங்கியின் (பாகித்தான்) அதேநேர மொத்தத் தீர்ப்பனவு தீர்த்தல் கணக்கின் அடையாளம் 2007.12.31ஆம் நாள் தொடக்கம் 'UNBLLKLCXXX010004413' இலிருந்து 'SCBLPKKXULK010004413' இற்கு மாற்றமடையும்.

3. அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையில் வரையறுக்கப்பட்ட ஸ்டான்டட் சார்டட் வங்கியின் (பாகித்தான்) நிலையான தரவில் மாற்றமடையும் செயற்பாடுகள் இடம் பெறும் போது நீங்கள் பின்வருவனவற்றை அவதானிக்க முடியும்.

(i) வரையறுக்கப்பட்ட ஸ்டான்டட் சார்டட் வங்கியின் (பாகித்தான்) நேராகக் காட்டப்பட்ட தீர்ப்பனவுக் கணக்கு இல. SCBLPKKXULK010004413 அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையில் 28.12.2007 அன்று மட்டும் இடைநிறுத்தப்பட்ட அந்தஸ்தில் காணப்படும். அந்நாளன்று குறிப்பிட்ட கணக்கு தொழிற்படுத்தப்படமாட்டாது என்பதே அதற்குக் காரணமாகும்; அத்துடன்

(ii) வரையறுக்கப்பட்ட ஸ்டான்டட் சார்டட் வங்கியின் (பாகித்தான்) அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கணக்கு இல. UNBLLKLCXXX010004413 அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையில் 28.12.2007 மட்டும் இடைநிறுத்தப்பட்ட அந்தஸ்தில் காணப்படும். குறிப்பிட்ட கணக்கிற்கு அந்நாளன்று இடைநிறுத்தப்பட்டது என்ற அந்தஸ்து வழங்கப்பட்டமைக்கு, குறிப்பிட்ட நாளிலிருந்து குறிப்பிட்ட கணக்கு தொழிற்படுத்தப்படமாட்டாது என்பதே காரணம் என்பதுடன் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையிலுள்ள வரையறுக்கப்பட்ட ஸ்டான்டட் சார்டட் வங்கியின் (பாகித்தான்) தொழிற்பாட்டு தீர்ப்பனவுக் கணக்கு SCBLPKKXULK010004413 ஆக இருக்கும்.

4. 31.12.2007 இற்குப் பின்னர் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக வங்கி அடையாள குறியீடு 'UNBLLKLCXXX' இற்கு பணிக்கப்படும் எந்த ஒரு கொடுப்பனவு அறிவுறுத்தலும் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையினால் தன்னியக்கமாகவே நிராகரிக்கப்படும்.

**ஆர்.பீ.வீரசிங்க**
துணை கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்

**கே.பீ. திஸ்ஸகருண**
மேலதிக பணிப்பாளர்/கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

பொதுப்படுகடன் திணைக்களம்
2007 சனவரி 23

**சுற்றறிக்கை எண்: எஸ்எஸ்எஸ்எஸ்/01/2007**

*லங்கா செட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**2003 ஓகத்தில் லங்கா செட்டில் முறையின் விதிகளுக்கான திருத்தம்**

2003 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறை விதிகளின் தொகுதி 3இன் விதி 5.4, துணை விதி 5.4.அ இனை உட்புகுத்துவதன் மூலம் திருத்தப்படுகின்றமை பற்றி தங்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகின்றது.

இதற்கமைய, கீழே தரப்பட்டவாறு துணைவிதி 5.4அ 2007 பெப்புருவரி 02ஆம் நாள் தொடக்கம் லங்கா செட்டில் முறையின் விதிகளின் தொகுதி 3இன் 5.4 இற்கும் விதி 5.5 இற்குமிடையில் உட்புகுத்தப்படுகிறது.

**"5.4.அ. இலங்கை மத்திய வங்கி பரந்த துறை வலையமைப்பினூடாக மீள் நிலைப்படுத்தலை பதிவு செய்தல்**

எனினும், ரூ.2 மில்லியன் அல்லது அதற்குக் குறைவான அல்லது வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற அத்தகைய பெறுமதியைக் கொண்ட ஓரிரவு வாடிக்கையாளர் மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்துகின்ற கொடுக்கல் வாங்கல்களை, தொடர்பான முறை விதிகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கியின் வலையமைப்பின் தொழிற்பாடுகளுடன் தொடர்பான நடைமுறைகளுக்கும் காலத்திற்குக் காலம் வங்கியினால் விடுக்கப்படும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கும் உட்பட்டு, மத்திய வங்கியின் வலையமைப்பினூடாக பதிவு செய்தல் வேண்டும். ரூ.2 மில்லியனுக்கும் கூடுதலான அல்லது வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடிய அது போன்ற தொகை கொண்ட எந்தவொரு ஓரிரவு மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்தல் கொடுக்கல் வாங்கலையும் சுவிப்ற் செய்தி வழங்கல் முறையினைப் பயன்படுத்தி பதிவு செய்தல் வேண்டும்."

**திருமதி. சி. பிரேமரத்ன**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்
2007 சனவரி 23

**சுற்றறிக்கை எண்: எஸ்எஸ்எஸ்எஸ்/02/2007**

*லங்கா செட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

## அரச பிணையங்களுடன் தொடர்புபட்ட ஓரிரவு வாடிக்கையாளர் மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்துகின்ற கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கான இலங்கை மத்திய வங்கியின் பரந்த துறை வலையமைப்பினை அடிப்படையாகக் கொண்ட விண்ணப்பம்

இலங்கை மத்திய வங்கியின் பரந்த துறை கணனி வலையமைப்பினூடாக, லங்கா சிகுயரின் ஓரிரவு வாடிக்கையாளர் மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்துகின்ற கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கு லங்கா செட்டிலின் பங்கேற்பாளர்களை அனுமதிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருக்கிறது என்பது பற்றி தங்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகிறது. இதற்கமைய லங்கா செட்டிலின் முறை விதிகளுக்கு 2007 சனவரி 23ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கை எண் எஸ்எஸ்எஸ்எஸ்/01/2007 இன்படி திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட திட்டத்தின் பங்கேற்பாளர்களுக்கு பொருந்தத்தக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் கீழே தரப்படுகின்றன.

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

1. இவ்வசதியானது ரூ. 2 மில்லியன் அல்லது அதற்கும் குறைவான முகப்புப் பெறுமதியைக் கொண்ட ஓரிரவு வாடிக்கையாளர் மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்தலுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கியிருக்கும். ரூ. 2 மில்லியன் முகப்புப் பெறுமதியினை விஞ்சிய கொடுக்கல் வாங்கல்களை இம்முறைமை ஏற்றுக் கொள்ளாது. ரூ. 2 மில்லியன்களை விஞ்சுகின்ற மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கு பங்கேற்பாளர்கள் அவற்றினை பயன்படுத்த வேண்டும். எனினும், ரூ. 2 மில்லியன் அல்லது அதற்குக் குறைவான ஓரிரவு மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்காக சுவிப்ற் இனை பங்கேற்பாளர் பயன்படுத்துவதற்கு கட்டுப்பாடு எதுவும் இல்லை.

2. பிணையங்களின் மாற்றல்கள் லங்கா செகுயரின் வேலை நாளன்று மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை மட்டுமே அனுமதிக்கப்படும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கி வலையமைப்பினூடாக பி.ப. 4.00 மணிக்கு பின் நுழைந்த அனுமதிக்கப்பட்ட எந்தவொரு கொடுக்கல் வாங்கலும் தீர்ப்பனவு செய்யப்படமாட்டாது.

3. பிணையங்களின் மாற்றல்கள் ஒரு அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு மற்றொருவரால் அங்கீகரிக்கப்படல் வேண்டும். கொடுக்கல் வாங்கல்கள் அங்கீகாரமளிக்கப்படும் வரை இலங்கை மத்திய வங்கி பிணைய மாற்றல் அறிவுறுத்தல்களை பெற்றுக் கொள்ளாது.

4. தீர்ப்பனவு பிணைய மாற்றல் கோரிக்கைகள் ஒவ்வொரு வேலை நாளன்றும் பி.ப. 3.00 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்கும் லங்கா செகுயரில் மேலேற்றம் செய்யப்படும்.

5. குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல் தொகுதி லங்கா செகுயரில் ஏற்றப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் மாத்திரமே புதிய நிலுவைகள் பங்கேற்பாளர்களுக்கு கிடைக்கச் செய்யப்படும்.

6. கொடுக்கல் வாங்கல்கள் தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு முன்னர் பங்கேற்கும் நிறுவனத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் தேவையானவிடத்து ஏற்கனவேயுள்ள புறோசர் என அழைக்கப்படும் கணனி கோப்பு பணி நிலையத்தினூடாக கொடுக்கல் வாங்கல்களை இரத்துச் செய்யலாம்.

7. லங்கா செகுயரில் கொடுக்கல் வாங்கல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டதும் அவை மாற்றப்பட முடியாதனவாக இருக்கும்.

8. தீர்ப்பனவு செய்யப்படாத மீள்நிலைப்படுத்தப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் நாளின் இறுதியில் முறையினால் இரத்துச் செய்யப்படுவதுடன் இலங்கை மத்திய வங்கி அத்தகைய இரத்திற்கு பொறுப்பாகவும் மாட்டாது.

9. தொழில்நுட்ப அல்லது தொடர்பூட்டல் தவறுகளின் காரணமாக இலங்கை மத்திய வங்கியின் கணனி வலையமைப்பு வசதி கிடைக்காத நிலைமையில் மேற்குறிப்பிட்ட மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு பங்கேற்கும் நிறுவனங்கள் தமது சுவிப்ற் முறையினைப் பயன்படுத்துதல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் கணனி வலையமைப்பில் ஏற்படும் பழுது காரணமாக ஏற்படக்கூடிய எந்தவொரு இழப்பிற்கும் மத்திய வங்கி பொறுப்பாகமாட்டாது.

10. இவ்வர்த்தக உள்ளீட்டு வசதிகளை வழங்குவதற்காக விதிக்கப்படக்கூடிய பெயரளவுக் கட்டணம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

11. இம்முறை தொழிற்படத் தொடங்கியதும், வாடிக்கையாளர் மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்தலுடன் தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் லங்கா செகுயரின் மத்திய வைப்பக முறையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

12. இம்முறை, எந்தவொரு வகைக் கணக்கிற்குமிடையில் பிணையங்களை மாற்றல் செய்கின்ற வசதியைக் கொண்டிருக்கிறது. எனினும், பங்கேற்பாளர்கள் லங்கா செட்டிலின் முறை விதிகளில் விபரிக்கப்பட்ட கணக்கு வகைகளான ஓடபிள்யுஎன், சிஎஸ்எல், சிஆர்ஈ, சிஆர்ஆர், சிஆர்பி மற்றும் ஆர்ஈபி கணக்கு வகைக்கிடையில் மட்டும் மீள்நிலைப்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டனர்.

13. பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களுக்கான தண்டங்கள் இலங்கை மத்திய வங்கியினால் கணிக்கப்பட்ட சூத்திரமொன்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு பின்னர் அறிவிக்கப்படும்.

**திருமதி சி. பிரேமரத்ன**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்
2007 செத்தெம்பர் 07

**சுற்றறிக்கை எண்: எஸ்எஸ்எஸ்எஸ்/03/2007**

*உரிமை பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் அனைத்து*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

**உள்ளூர் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 8(1) மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 21இ(2)இன் நியதிகளில் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை லங்கா செட்டில் முறையில் நேரடிப் பங்கேற்பாளர்களாகவும் வணிகர் நேரடி பங்கேற்பாளர்களாகவும் நியமித்தல்**

லங்கா செட்டிலில் நேரடிப் பங்கேற்பாளர்/ வணிகர் நேரடி பங்கேற்பாளர் அந்தஸ்திற்கு விண்ணப்பிப்பதற்கு அனைத்து உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் அனுமதிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருக்கிறது என்பதனைத் தங்களுக்கு அறியத் தருகின்றோம். உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் 2001 செத்தெம்பர் 7ஆம் நாள் தொடக்கம் நேரடி பங்கேற்பாளர்/ வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் அந்தஸ்திற்கு விண்ணப்பிக்க முடியும். நியமனத்திற்கான தெரிவுப் பிரமாணங்களும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு பொருந்தத்தக்க நியதிகளும் நிபந்தனைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

1. **தெரிவிற்கான பிரமாணங்கள்**

அ. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை நேரடிப் பங்கேற்பாளர்களாகவும் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களாகவும் தெரிவு செய்வதற்கான பிரமாணம்.

(i) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் நிதியியல் ஆற்றல்

இது விண்ணப்பிக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி தொடர்பான தொடர் விகிதங்களின் இரண்டாண்டு சராசரிகளைப் பயன்படுத்தி அறவிடப்படுவதுடன் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கித்துறையின் சராசரி ஒப்பீட்டிற்கான அடிப்படை நியம அளவுக் குறியீடாகவும் கருதப்படுகிறது.

- ஒழுங்கு முறைப்படுத்தல் மூலதனம்/ இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்து
- மொத்த செயற்படாக்கடன் விகிதம்
- தேறிய செயற்படாக்கடன் விகிதம்
- நியதி திரவச் சொத்து விகிதம்
- பங்கு மீதான வருமானம்
- சொத்துக்கள் மீதான வருமானம்
- அலுவலர் செலவு விகிதம் (ஆளணிச் செலவுகள்/ தொழிற்பாட்டுச் செலவுகள்)
- தேறிய வருமான விகிதத்திற்கான தொழிற்பாட்டுச் செலவு (வினைத்திறன் விகிதம்)

(ii) உள்ளூர் தரமிடல் அந்தஸ்து

விண்ணப்பதாரியான உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி ஏற்றுக் கொள்ளத்தக்க தரமிடல் முகவரிடமிருந்து தரமிடலொன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (பிட்ச் ரேட்டிங் லிமிடெட், லங்கா ரேட்டிங் முகவர் அல்லது ஏதுமொரு பன்னாட்டு தரமிடல் முகவர்).

(iii) மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளத்தக்க திருப்திகரமான மட்டத்தில் உள்ளக தகவல் தொழில் நுட்பம் கிடைக்கத்தக்கதாக இருத்தல்.

(iv) அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை/ பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை பங்கேற்பிற்காக மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளத்தக்க தடங்கலற்ற வியாபாரத் திட்டமொன்றும் அடுத்த 5 ஆண்டுகளுக்கான வியாபார உபாயமொன்றும் இருத்தல் வேண்டும்.

(v) தேசிய கொடுப்பனவு முறைகளுடன் இணைப்பதற்கேற்ப இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாடுகளுக்கு இணங்குகின்ற விதத்தில் தகவல் தொழில்நுட்ப தொடர்பூட்டல் உட்கட்டமைப்பை நிறுவுவதற்கு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் இயலக்கூடியதாக இருத்தல். பின்வருவன குறைந்த பட்சத் தேவைப்பாடுகளாகும்.

- ➢ சுவிப்ற் இணைப்புக்கள்
- ➢ இலங்கை மத்திய வங்கி பரந்த துறை கணனி வலையமைப்பின் இணைப்பு
- ➢ தகவல் தொழில் நுட்பத்துடன் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான அறிவினையும் அனுபவத்தினையும் கொண்டிருத்தல்

ஆ. மேற்குறிப்பிட்ட பிரமாணத்தின் மீது மத்திய வங்கியினால் உருவாக்கப்பட்ட புள்ளிக்கணிப்பு அட்டை முறையானது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை நேரடிப் பங்கேற்பாளர்களாகவும் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களாகவும் நியமிப்பதற்கு அவற்றின் தகமையை மதிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது.

இ. மேற்குறிப்பிடப்பட்ட பிரமாணங்களுக்குப் புறம்பாக, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை நேரடிப் பங்கேற்பாளர்களாகவும் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களாகவும் நியமிப்பதற்கு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முகாமைத்துவத்தினையும் அவற்றின் செயற்பாடு தொடர்பான பணிகளையும், குறிப்பாக உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் பின்பற்றப்படும் தொழிற்பாட்டு இடர் நேர்வுகள் மற்றும் இடர்நேர்வினைத் தணிக்கின்ற வழிமுறைகள் என்பனவும் பரிசீலனைக்கெடுக்கப்படும்.

ஈ. எனினும், இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை நேரடிப் பங்கேற்பாளர்களாக அல்லது வணிக நேரடிப் பங்கேற்பாளர்களாக நியமிப்பது அவசியம் என எப்பொழுது நினைக்கின்றதோ அப்பொழுது மற்றைய தேவைப்பாடுகளையும்/ தொடர்பான காரணிகளையும் பரிசீலனையில் கொள்ளவும் அது தற்றுணிபினைக் கொண்டுள்ளது.

உ. இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் நேரடிப் பங்கேற்பாளர்களாகவும் வணிகர் நேரடிப் பங்கேற்பாளாகளாகவும் நியமிக்கப்படுவதற்கான தகமையை மதிப்பீடு செய்யும்.

## 2. நியதிகளும் நிபந்தனைகளும்

தெரிவு செய்யப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அதே நேர மொத்தத் தீர்ப்பனவு மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையிலும் நேரடிப் பங்கேற்பாளர்களாகவும் வணிகர் நேரடி பங்கேற்பாளர்களாகவும் கருதப்படும்.

அ. பதிவு செய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம், உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம், நாணயவிதிச் சட்டம் மற்றும் லங்கா செட்டில் முறை விதிகள் என்பனவற்றின் கீழ் நேரடி பங்கேற்பாளர்கள்/ வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் ஆகியோருக்கும் பொருந்தத்தக்க விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டு தெரிவு செய்யப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு பிணையங்கள் தீர்ப்பனவுக் கணக்கும் அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறை தீர்த்தல் கணக்கும் வழங்கப்பட்டன.

ஆ. தெரிவு செய்யப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக்கு மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடிய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு மத்திய வங்கியின் ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி வழங்கப்படுகிறது.

இ. இலங்கை மத்திய வங்கி, உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம், பதிவு செய்யப்பட்ட பங்குகள் பிணையங்கள் கட்டளைச் சட்டம், நாணயவிதிச் சட்டம் மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைச்சட்டம் என்பனவற்றின் நியதிகளில் உரிமம் பெற்ற சிறப்பியல்பு மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவுமுறை தொடர்பான நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கான ஏக அதிகாரத்தினைக் கொண்டுள்ளது.

திருமதி சி. பிரேமரத்ன
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்
2007 செத்தெம்பர் 28

**சுற்றறிக்கை எண்: எஸ்எஸ்எஸ்எஸ்/04/2007**

*லங்கா செட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**2003 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறை விதிகளுக்கான திருத்தங்கள்**

2003 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறையின் விதிகளின் தொகுதி 3இன் விதி 2.2, பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல் கட்டணத்தினை கூட்டிணைப்பதன் மூலம் பின்வருமாறு வாசிக்கப்படும் விதத்தில் பதிலீடு செய்யப்படுகிறது.

**அ. 2.2 2003 ஓகத்தில் வழங்கப்பட்ட லங்கா செட்டில் முறை விதிகளின் தொகுதி 3இன் விதி 2.2 பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல் விதிப்புக்களை கூட்டிணைத்ததன் மூலம் பின்வருமாறு வாசிக்கும் விதத்தில் பதிலீடு செய்யப்படுகிறது.**

**2.2 கட்டுக்காப்புப் பொறுப்புக்கள்**

2.2 வணிகர் நேரடி பங்கேற்பாளர்கள், வணிகர் நேரடி பங்கேற்பாளர்கள் என்ற தமது வியாபாரத்தைக் கொண்டு நடத்துவதற்காக மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பிரயோகிக்கத்தக்க சட்டம், ஒழுங்கு விதிகள் மற்றும் பணிப்புரைகளுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

வணிகர் நேரடி பங்கேற்பாளர்கள் லங்கா செகுயரிலுள்ள தமது வாடிக்கையாளர்களுக்கான கட்டுக் காப்பாளராக செயற்படுகின்றன. இக்கட்டுக்காப்பு தொழிற்பாடு பின்வரும் பொறுப்புக்களையும் உள்ளடக்குகிறது.

2.2.1 வாடிக்கையாளர் பிணையத்தின் சட்ட ரீதியான சொத்துடமையைப் பெற்றுக் கொள்ளும் பொழுது பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை, கம்பனி பதிவாளர் இலக்கம் அல்லது மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஏனைய அடையாள இலக்கம் என்பனவற்றை சரியாகவும் துல்லியமாகவும் பதிவு செய்தல்;

2.2.2 லங்கா செகுயர் சொத்துடமையை அல்லது சொத்துடமை தொடர்பான ஏதும் மாற்றத்தை அல்லது அவற்றின் பிணையங்களின் உடமைகளில் பிணையமொன்றின் சொத்துடமை விபரங்களினை சரியாகவும் துல்லியமாகவும் பதிவு செய்வதற்கும், அத்துடன் குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல் விபரங்களை பதிவு செய்யத் தவறும் சந்தர்ப்பத்தில், வணிகர் நேரடி பங்கேற்பாளர் மீது கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யாமைக்காக கட்டணமொன்றினை விதிப்பதற்கான ஏக தற்றுணிபினையும் மத்திய வங்கி கொண்டுள்ளது. தற்போது நடைபெற்று வரும் பொதுவாந்தன்மைக்கு பாதிப்பேதுவுமின்றி மத்திய வங்கி பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

2.2.2.1 1ஆவது தடவையாக கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யாமைக்கு கடுமையான எச்சரிக்கை

2.2.2.2 2ஆவது தடவையாக கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யாமைக்கு - கொடுக்கல் வாங்கல் ஒவ்வொன்றிற்கும் ரூ.5,000 அல்லது கொடுக்கல் வாங்கல் பெறுமதியில் (முகப்புப் பெறுமதி) 0.5%, இதில் எது கூடியதோ அது.

2.2.2.3 3ஆவது தடவையாக கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யாமைக்கு - கொடுக்கல் வாங்கல் ஒவ்வொன்றிற்கும் ரூ.10,000 அல்லது கொடுக்கல் வாங்கல் பெறுமதியில் (முகப்புப் பெறமதி) 1% இதில் எது கூடியதோ அது.

2.2.2.4 கொடுக்கல் வாங்கல்களை திரும்பத்திரும்ப பதிவு செய்யத் தவறும் சந்தர்ப்பத்தில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர் என்ற அந்தஸ்தினை மத்திய வங்கி இரத்துச் செய்யலாம். அத்துடன் முதனிலை வணிகர்களின் முதனிலை வணிகர் அந்தஸ்தினை இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படும் பொருத்தமான காலப்பகுதிக்கு இடை நிறுத்தலாம்.

2.2.3 அவ்வாறு விதிக்கப்பட்ட தொகை, மத்திய வங்கியினால் தீர்மானம் எடுக்கப்பட்ட அடுத்த வேலை நாளன்று தீர்ப்பனவு கணக்கிலிருந்து கழிக்கப்பட்டு மத்திய வங்கியின் கணக்கிற்கு வரவு வைக்கப்படும். பங்கேற்பாளரின் கணக்கில் போதுமான நிதி இல்லாதவிடத்து மத்திய வங்கியின் தீர்மானம் அறிவிக்கப்பட்ட 3 வேலை நாட்களுக்குள் கொடுக்கல் வாங்கல் செய்யாமைக்கான கட்டணத்தினைச் செலுத்தல் வேண்டும்.

2.2.4 அவ்வாறு வரவு வைக்கப்பட்ட ஒவ்வொரு விதிப்பினதும் பத்து சதவீதம் (10%) நிருவாகச் செலவாக மத்திய வங்கியினால் கழிக்கப்படும். மீதி வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களின் அலுவலர்களது பயிற்சிக்கு பயன்படுத்தப்படுவதற்கு கிடைக்கத்தக்கதாக இருப்பதுடன் வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கியாளர் (உத்தரவாத) சங்கம் மற்றும் முதனிலை வணிகர் சங்கம் என்பன மத்திய வங்கிக்கு விண்ணப்பிக்கும் போது அத்தகைய நோக்கங்களுக்கு அவை செலுத்தப்படும்.

2.2.5 விதிக்கப்பட்ட எந்தவொரு பதிவு செய்யப்படாமைக்கான விதிப்பும் பதிலீட்டிற்குரியதாகவோ மதிப்பு குறைப்புச் செய்யத்தக்கதாகவோ இல்லாததுடன் மத்திய வங்கியின் எந்தவொரு உரிமையையும் நடைமுறைப்படுத்துவதனை தடுப்பதாகவோ அல்லது எந்தவொரு பங்கேற்பாளரும் பிணையங்களின் உடமைகளில், சொத்துடமையை அல்லது சொத்துடமையின் எந்தவொரு மாற்றத்தையும் அல்லது பிணையத்தின் சொத்துடமை விபரங்களை பதிவு செய்வதற்கு தவறுவதனால் தோன்றுகின்றவைகளுக்காக நீதி மன்றத்தில் வழக்கு தொடரவும் கொண்டு நடத்தவும் மத்திய வங்கி உரித்துடையதாகவிருக்கும்.

2.2.6 இவை தொடர்பாக விடுக்கத்தக்க பணிப்புரைகளுக்கு இணங்க அவர்களது வாடிக்கையாளர்களுக்கு வரவேண்டிய எந்தவொரு வட்டியையும் அல்லது முதிர்ச்சிப் பெறுகைகளையும் கணக்கிட்டு கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும்; அத்துடன்

2.2.7 வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கு இணங்க வாடிக்கையாளர்களின் சார்பில் பெறப்படும் கொடுக்கல் வாங்கல்கள் சட்ட ரீதியானவையாகவும் பங்கேற்பாளர்கள் இம்முறையின் விதிகளை மீளச் செய்யாததாகவும் இருக்குமிடத்து, அத்தகைய கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு.

வாடிக்கையாளர் பிணையங்களை மாற்றல் செய்யும் போது, வணிகர் நேரடி பங்கேற்பாளர்கள் வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்களுக்கு மிகக் கடுமையாக இணங்கியொழுகுதல் வேண்டும்.

**திருமதி சி. பிரேமரத்ன**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்
2007 செத்தெம்பர் 28

**சுற்றறிக்கை எண்: எஸ்எஸ்எஸ்எஸ்/05/2007**

*லங்கா செட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

## அரச பிணையங்களுடன் தொடர்புபட்ட ஓரிரவு வாடிக்கையாளர் மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்துகின்ற கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கான இலங்கை மத்திய வங்கியின் பரந்த துறை வலையமைப்பினை அடிப்படையாகக் கொண்ட விண்ணப்பம்

இலங்கை மத்திய வங்கியின் பரந்த துறை கணனி வலையமைப்பினூடாக, லங்கா செட்டிலின் பங்கேற்பாளர்களை, வாடிக்கையாளர் மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்தல் கொடுக்கல் வாங்கல்களையும் (ஓரிரவு மற்றும் ஒரு மாத கால அளவைக் கொண்ட மீள்கொள்வனவு) வாடிக்கையாளர் உடனடி மீள்நிலைப்படுத்தல் கொடுக்கல் வாங்கல்களையும் பதிவு செய்வதற்கு அனுமதிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருக்கிறது என்பது பற்றி தங்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகிறது. இதற்கமைய லங்கா செட்டில் முறை விதிகளுக்கு 2007 செத்தெம்பர் 28ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கை எண் எஸ்எஸ்எஸ்எஸ்/04/2007 மற்றும் எஸ்எஸ்எஸ்எஸ்/06/2007 என்பனவற்றின் படி திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இவ்வசதி 2007 ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து கிடைக்கத்தக்கதாக இருக்கும். மேற்குறிப்பிட்ட திட்டத்தின் பங்கேற்பாளர்களுக்கு பொருந்தத்தக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் கீழே தரப்படுகின்றன.

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

1. இவ்வசதியானது ரூ. 5 மில்லியன் அல்லது அதற்கும் குறைவான முகப்புப் பெறுமதியைக் கொண்ட வாடிக்கையாளர் மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்தல் (ஓரிரவு மற்றும் தன்னியக்கமாக மாறும் வசதியுடன் கூடிய ஒரு மாதம் வரையான கால மீள்கொள்வனவு) மற்றும் வாடிக்கையாளர் உடனடி மீள்நிலைப்படுத்தல் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கியிருக்கும். ரூ. 5 மில்லியன் முகப்புப் பெறுமதியினை விஞ்சிய மீள்நிலைப்படுத்தல் கொடுக்கல் வாங்கல்களை கணனி முறைமை ஏற்றுக் கொள்ளாது. ரூ. 5 மில்லியன்களை விஞ்சுகின்ற மீள்நிலைப்படுத்தல் கொடுக்கல் வாங்கல்களுக்கு பங்கேற்பாளர்கள் சுவிப்றினைப் பயன்படுத்த வேண்டும். எனினும், முகப்புப் பெறுமதி ரூ. 5 மில்லியன்களாக அல்லது அதற்குக் குறைவாக இருக்குமிடத்து, வாடிக்கையாளர் மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்தல் கொடுக்கல் வாங்கல்கள் (ஓரிரவு மற்றும் ஒரு மாதம் வரையிலான ஒரு மாத காலம் வரையான மீள்கொள்வனவு மற்றும் வாடிக்கையாளர் ஓரிரவு மீள்நிலைப்படுத்தல் கொடுக்கல் வாங்கல்களுக்கும் பங்கேற்பாளர்கள் சுவிப்ற்றினைப் பயன்படுத்துவதற்கு கட்டுப்பாடு எதுவும் இல்லை.

2. பிணையங்களின் மாற்றல்கள் லங்கா செகுயரின் வேலை நாளன்று மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை மட்டுமே அனுமதிக்கப்படும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கி வலையமைப்பினூடாக பி.ப. 4.00 மணிக்கு பின் நுழைந்த அனுமதிக்கப்பட்ட எந்தவொரு கொடுக்கல் வாங்கலும் தீர்ப்பனவு செய்யப்படமாட்டாது.

3. பிணையங்களின் மாற்றல்கள் ஒரு அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு மற்றொருவரால் அங்கீகரிக்கப்படல் வேண்டும். கொடுக்கல் வாங்கல்கள் அங்கீகாரமளிக்கப்படும் வரை இலங்கை மத்திய வங்கி பிணைய மாற்றல் அறிவுறுத்தல்களை பெற்றுக் கொள்ளாது.

4. தீர்ப்பனவிற்கான பிணைய மாற்றல் கோரிக்கைகள் ஒவ்வொரு வேலை நாளன்றும் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்கும் லங்கா செகுயரில் மேலேற்றம் செய்யப்படும்.

5. குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல் தொகுதி லங்கா செகுயரில் ஏற்றப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் மாத்திரமே புதிய நிலுவைகள் பங்கேற்பாளர்களுக்கு கிடைக்கச் செய்யப்படும்.

6. கொடுக்கல் வாங்கல்கள் தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு முன்னர் பங்கேற்கும் நிறுவனத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் தேவையானவிடத்து ஏற்கனவேயுள்ள புறோசர் என அழைக்கப்படும் கணனி கோப்பு பணி நிலையத்தினூடாக கொடுக்கல் வாங்கல்களை இரத்துச் செய்யலாம்.

7. லங்கா செகுயரில் கொடுக்கல் வாங்கல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டதும் அவை மாற்றப்பட முடியாதனவாக இருக்கும்.

8. தீர்ப்பனவு செய்யப்படாத மீள்நிலைப்படுத்தப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் நாளின் இறுதியில் முறையினால் இரத்துச் செய்யப்படுவதுடன் இலங்கை மத்திய வங்கி அத்தகைய இரத்திற்கு பொறுப்பாகவும் மாட்டாது.

9. தொழில்நுட்ப அல்லது தொடர்பூட்டல் தவறுகளின் காரணமாக இலங்கை மத்திய வங்கியின் கணனி வலையமைப்பு வசதி கிடைக்காத நிலைமையில் மேற்குறிப்பிட்ட மீள்நிலைப்படுத்தல் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு பங்கேற்கும் நிறுவனங்கள்

தமது சுவிப்ற் முறையினைப் பயன்படுத்துதல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் கணனி வலையமைப்பில் ஏற்படும் பழுது காரணமாக ஏற்படக்கூடிய எந்தவொரு இழப்பிற்கும் மத்திய வங்கி பொறுப்பாகமாட்டாது.

10. இவ்வர்த்தக உள்ளீட்டு வசதிகளை வழங்குவதற்காக விதிக்கப்படக்கூடிய பெயரளவுக் கட்டணம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

11. இம்முறை, எந்தவொரு வகைக் கணக்கிற்குமிடையில் பிணையங்களை மாற்றல் செய்கின்ற வசதியைக் கொண்டிருக்கிறது. எனினும், பங்கேற்பாளர்கள் லங்கா செட்டிலின் முறை விதிகளில் விபரிக்கப்பட்ட கணக்கு வகைகளான ஓடபிள்யுஎன், சிஎஸ்எல், சிஆர்ஈ, சிஆர்ஆர், சிஆர்பி மற்றும் ஆர்ஈபி கணக்கு வகைக்கிடையில் மட்டும் மீள்நிலைப்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டனர்.

12. சுவிப்ற் செய்தி வழங்கல் முறையினைப் பயன்படுத்தி அல்லது லங்கா செட்டிலில் உள்ள இலங்கை மத்திய வங்கி கணனி வலையமைப்பினூடாக பங்கேற்பாளர்கள் எந்தவொரு மீள்நிலைப்படுத்தலையும் பதிவு செய்யத் தவறுமிடத்து, லங்கா செட்டில் முறைமை விதிகளின் தொகுதி 3இன் விதி 2.2 இற்கு அமைய பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களுக்காக பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல் கட்டணங்கள் பிரயோகிக்கப்படும்.

- **2007 சனவரி 23ஆம் நாளன்று இது தொடர்பாக விடுக்கப்பட்ட சுற்றிக்கை எண் எஸ்எஸ்எஸ்எஸ்/02/2007 இத்தால் நீக்கப்படுகின்றது.**

**திருமதி சி. பிரேமரத்ன**

பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்
2007 செத்தெம்பர் 28

**சுற்றறிக்கை எண்: எஸ்எஸ்எஸ்எஸ்/06/2007**

*லங்கா செட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**2003 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறையின் விதிகளுக்கான திருத்தங்கள்**

2003 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறை விதிகளின் தொகுதி 3இன் விதி 5.4 உம் அதன் பின்னர் 2007 சனவரி 23ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கை எண்: எஸ்எஸ்எஸ்எஸ்/01/2007 இன் மூலமாக விதி 5.4 (அ) உட்புகுத்தப்பட்டதன் மூலமாகச் செய்யப்பட்ட திருத்தமும் 2007 ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து பின்வருமாறு வாசிக்கப்படும் விதத்தில் பதிலீடு செய்யப்படுகிறது.

**"5.4.அ. இலங்கை மத்திய வங்கி பரந்த துறை வலையமைப்பினூடாக மீள் நிலைப்படுத்தப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல்**

எனினும், வாடிக்கையாளர் மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்தல் கொடுக்கல் வாங்கல் (ஓரிரவு மற்றும் ஒரு மாதம் வரையிலான காலப்பகுதியைக் கொள்ள மீள்கொள்வனவு) அல்லது **ரூ.5 மில்லியன்** அல்லது அதற்குக் குறைவான பெறுமதியைக் கொண்ட அல்லது காலத்திற்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய தொகையினை தொடர்பான முறைமை விதிகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கியின் வலையமைப்பு தொழிற்பாடுகளுடன் தொடர்பான நடைமுறைகளுக்கும் வங்கியினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படுகின்ற தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கும் உட்பட்டு இலங்கை மத்திய வங்கியின் வலையமைப்பினூடாக பதிவு செய்தல் வேண்டும். எந்த ஒரு வாடிக்கையாளர் மீள்கொள்வனவு மீள்நிலைப்படுத்துகின்ற கொடுக்கல் வாங்கல் (ஓரிரவு மற்றும் ஒரு மாதம் வரையிலான காலப்பகுதியைக் கொண்டவை) அல்லது வாடிக்கையாளர் உடனடி மீள்நிலைப்படுத்தல் கொடுக்கல் வாங்கல்; **ரூ.5 மில்லியனுக்கும்** கூடுதலான பெறுமதியினைக் கொண்ட அல்லது காலத்திற்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடிய தொகையைக் கொண்ட; என்பன சுவிப்ற் செய்தி வழங்கல் முறையினைப் பயன்படுத்தி பதிவு செய்யப்படல் வேண்டும்."

**திருமதி. சி. பிரேமரத்ன**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

## 1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 46ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2007 பெப்புருவரி 28

### தீர்மானம்

1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 46ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது (நாணயச்சபை), நிதிக்கம்பனியின் மூலதன நிதியத்தினுள் பிணையங்களில்லாத தொகுதிக் கடன்களின் முகப்பெறுமதியினை பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு உள்ளடக்கத் தீர்மானித்துள்ளது.

(அ) தொகுதிக்கடன்கள் முழுதாக செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் நிதிக்கம்பனியின் வைப்பாளர்கள் மற்றும் கடன் கொடுத்தவர்களின் நலன்களுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்;

(அ) தொகுதிக் கடன்களின் முதிர்ச்சி காலப்பகுதி ஆகக் குறைந்தது 5 வருடங்களாகும்;

(இ) எந்தவொரு நிதிக்கம்பனியும் மேலே (அ), (ஆ) இல் கொடுக்கப்பட்ட நிபந்தனைகளை திருப்திப்படுத்தும் வகையில் பிணையங்களில்லாத தொகுதிக் கடன்களை தனது மூலதன நிதியினுள் உள்ளடக்க கருதினால் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளரின் (பணிப்பாளர்) எழுத்து மூலமான முன் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்;

(ஈ) நிதிக்கம்பனியின் மூலதன நிதியத்தினுள் உள்ளடக்கப்பட்ட தொகுதிக் கடன்களானது பணிப்பாளரின் முன் அனுமதியின்றி உரிய காலத்திற்கு முன் மீளச் செலுத்த/ மீட்கப்பட முடியாதவை ஆகும்;

(உ) நாணயச்சபையினால் வழங்கப்பட்ட 2006ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (இடர்நேர்வு நிறையளிக்கப்பட்ட மூலதன போதுமை விகிதம்) பணிப்பின் கீழ் அல்லது நாணயச்சபையினால் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் தொடர்புபட்ட பணிப்பின் கீழ் மூலதன நிதியத்திற்குள் உள்ளடக்கப்படும் தொகுதிக் கடன்களின் தொகையானது அடுக்கு 2 (துணை நிரப்பு மூலதனம்) இற்குள் உள்ளடக்குவதற்கு தகுதிவாய்ந்த பெறுமதியினை விட விஞ்சக்கூடாது;

(ஊ) மூலதன நிதியத்தினுள் உள்ளடக்கப்பட்ட தொகுதிக் கடன்களின் பெறுமதியானது முதிர்ச்சிக்கு முன்னைய நான்கு ஆண்டுகளில் ஒவ்வொரு வருடமும் 1/5ஆல் கழிவு செய்யப்படல் வேண்டும்; அத்துடன்

(எ) நிதிக்கம்பனியினால் வழங்கப்பட்ட தொகுதி கடன்களில் இந்த நிதிக்கம்பனியின் குழுமத்திலுள்ள ஏதாவதொரு கம்பனியின் பங்களிப்பான தொகையினை நிதிக்கம்பனியின் மூலதன நிதிக்கு உள்ளடக்க முடியாது.

## 1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் வழங்கப்பட்டிருந்த பணிப்பினை மீளப்பெறுதல்.

**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2007 பெப்புருவரி 28

## 1995ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வருவாய் அங்கீகரிப்பும், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிக்காட்டல்களும்) பணிப்பு

1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் 1995ஆம் ஆண்டு மாச்சு 15ஆம் திகதி வழங்கப்பட்டதும், 1995ஆம் ஆண்டு மாச்சு 17ஆம் திகதிய 862/19 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் (அதிவிசேடமானது) பிரசுரிக்கப்பட்டதுமான 1995ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வருவாய் அங்கீகரிப்பும், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிக்காட்டல்களும்) பணிப்பானது இத்தால் மீள்பெறப்படுகின்றது.

## 2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்குகளைப் பேணல்) வழிகாட்டல்கள்

1. இவ்வழிகாட்டல்கள் 2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகளின் வழிகாட்டல்கள் (சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்குகளைப் பேணல்) என எடுத்துக்காட்டப்படலாம்.

2. சிறுவர்களுக்கான சேமிப்பு கணக்குகளைப் பேணுகின்ற ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனியும் சிறுவர்களுக்காக சேமிப்புக் கணக்குகளைத் திறத்தல், தொழிற்படுத்தல் மற்றும் பேணல் என்பன தொடர்பான நியதிகள்/ நிபந்தனைகளின்படி பின்வரும் கிளை வாசகங்களை உள்ளடக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

   "(அ) சிறுவர் கணக்கொன்றின் வடிவிலுள்ள மீதியினை சிறுவரின் பெற்றோர் அல்லது சட்ட ரீதியான பாதுகாவலரின் அறிவுறுத்தல்களின் பேரில், முதல் வைப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 60 மாதங்கள் நிறைவடைந்ததும் அல்லது அதன் பின்னர் எந்த ஒரு நேரத்திலும், சிறுவரின் பெயரில் கணக்கொன்று பேணப்படுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வைப்புக்களை ஏற்கும் நிறுவனத்திற்கு மாற்றல் செய்யப்படலாம்.

   (ஆ) சிறுவர் கணக்கொன்றின் வரவிலுள்ள மீதியினை சிறுவரின் மருத்துவ செலவிற்காக அல்லது சிறுவரின் கல்விக்கான செலவினை பூர்த்தி செய்வதற்காக அல்லது பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனியினால் ஏற்றுக் கொள்ளத்தக்க எந்த ஒரு நியாயமான காரணத்திற்காகவும் பெற்றோரினால் அல்லது சட்ட ரீதியான பாதுகாவலரினால் மீளப் பெற முடியும்."

   சேமிப்புக் கணக்குகளைத் திறக்கும் நேரத்தில் சிறுவரின் பெற்றோர் அல்லது சட்ட ரீதியான பாதுகாவலர் மேற்குறிப்பிட்ட இரண்டு கிளை வாசகங்களினதும் உள்ளடக்கத்தினை போதுமானளவிற்கு விளங்கப்படுத்துமாறு அத்தகைய பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. பெற்றோர் அல்லது சட்ட ரீதியான பாதுகாவலர் தவிர்ந்த வேறு ஆட்களினால் கணக்கு திறக்கப்பட்டிருக்குமிடத்து, பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனி பெற்றோருக்கு அல்லது சட்ட ரீதியான பாதுகாப்பாளருக்கு பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனி, கணக்கு நிறுவப்பட்டதிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் மேற்குறிப்பிட்ட இரண்டு கிளை வாசகங்களினதும் உள்ளடக்கத்தினை அறிவித்தல் வேண்டும்.

3. இவ்வழிகாட்டல்களில் -

   (அ) "சிறுவர்" என்பதன் கருத்து யாதெனில் பராயமடைந்தவர் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 66) மற்றும் அதற்குச் செய்யப்படும் எந்த திருத்தத்தின்படியும் சட்ட ரீதியான பராய வயதினை அடையாத ஆள் ஒருவர் எனப் பொருள்படும்.

   (ஆ) "அதிகாரமளிக்கப்பட்ட வைப்புக்களை ஏற்றுக் கொள்கின்ற நிறுவனம்" என்பதன் கருத்து 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்திலுள்ள கருத்து 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கருத்தின் படியான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அல்லது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அல்லது இந்நேரத்தில் வலுவிலுள்ள எந்த ஒரு சட்டத்தின் கீழ் பண வைப்புக்களை ஏற்றுக் கொள்ள, கடனளிக்க அல்லது அவ்வாறு பெறப்பட்ட பணத்தை முதலீடு செய்ய அதிகாரமளிக்கப்பட்ட எந்த ஒரு நிறுவனத்தினையும் கருதும்.

26.04.2007

**பணிப்பாளர்**

வங்கியல்லா நிதி நிறுவனங்களின்
மேற்பார்வைத் திணைக்களம்

## 1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு

**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2007 யூன் 29

## 2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கடன் வழங்கல்) பணிப்பு

1. இப்பணிப்பானது 2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கடன் வழங்கல்) பணிப்பு என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் இது 1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 2இன் நியதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையதாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. நிதிக்கம்பனி எதுவும் -

   (i) அதன் பணிப்பாளருக்கு அத்துடன்/ அல்லது நிதிக்கம்பனியின் பணிப்பாளரின் உறவினருக்கு;

   (ii) அதன் உடமைக் கம்பனிக்கு;

   (iii) அதன் சொந்தப்பங்குகளின் பிணையங்கள் மீது அல்லது வேறு எந்த ஒரு அதன் துணைக்கம்பனிகளின் பங்குகளின் பிணையங்களின் மீதும்;

   (iv) அதன் சொந்த பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு; அல்லது

   (v) நிதிக்கம்பனிப் பணிப்பாளர், நிதிக்கம்பனிப் பணிப்பாளரின் உறவினர் அல்லது நிதிக்கம்பனியின் எந்த ஒரு அலுவலரினதும் உத்தரவாதம் அல்லது நட்டோத்தரவாதத்தின் மீதும்.

   எவ்வகையான கடன் வசதிகளையும் வழங்கக்கூடாது.

3. மேலே 2ஆம் பந்தியில் இவ்வேற்பாடுகள் காணப்பட்ட போதும், பணிப்பாளரின் முன் ஒப்புதலுக்குட்பட்டு கம்பனி ஊழியர்களின் நன்மை கருதி கம்பனியிலுள்ள முழுமையாகச் செலுத்தப்பட்ட பங்குகளை கம்பனியின் நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் கொள்வனவு செய்வதற்கு அல்லது பங்குகளை வைத்திருப்பதற்கு தற்போது அமுலிலுள்ள எந்தவொரு திட்டத்தின் அடிப்படையிலும் நிதிக்கம்பனிகள் கடன் வசதிகளை வழங்கலாம்.

   எந்த சமயத்திலும், வழங்கப்பட்டு வெளிநின்ற கடன்வழங்கலின் கூட்டுமொத்த முதல் தொகையானது, இதன் இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையின்படியான, நிதிக்கம்பனியின் வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தின் மொத்தத் தொகையின் பத்து சதவீதத்திற்கு சமமான தொகையினை அல்லது நிதிக்கம்பனியின் பழுதுறாத சீராக்கம் செய்யப்பட்ட மூலதன நிதியத்தில் பத்து சதவீதத்தினை, இதில் எது கூடுதலானதோ அதனை விஞ்சக்கூடாது.

4. நிதிக்கம்பனியொன்று 2006ஆம் ஆண்டின் நிதிக்கம்பனிகள் (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) 4ஆம் இலக்க பணிப்பில் குறித்துரைக்கப்பட்ட பணிப்புக்களுக்கு உட்பட்ட விதத்தில் அதன் துணைக்கம்பனிகளுக்கோ அல்லது இணைக்கம்பனிகளுக்கோ கடன் வசதிகளை வழங்கலாம். அவ்வாறு துணைக்கம்பனியொன்றிற்கு அல்லது இணைக்கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்ட அத்தகைய கடன் வசதி நிதிக்கம்பனியின் மற்றைய எந்த ஒரு கடன்பாட்டாளருக்கும் ஏற்புடைத்தான நியதிகளிலேயே வழங்கப்பட வேண்டியதுடன் அத்தகைய கடன் வசதி தொடர்பான கடன்பாட்டாளரின் பெயர், கடன் வசதி வழங்கப்பட்ட திகதி, வழங்கப்பட்ட தொகை, மீள்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம், பிணை மற்றும் வட்டி வீதம் என்பனவற்றை உள்ளடக்கிய விபரங்களை அத்தகைய கடன் வசதிகள் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

5. நிதிக்கம்பனி எதுவும் அதன் கடன் வசதியின் மீது வட்டி தவிர்ந்த வேறு வடிவத்திலேனும் வேறு கட்டணங்களை வழங்கப்பட்ட முதல் தொகையின் 5 சதவீதத்தினை விஞ்சும் விதத்தில் அறவிடல் ஆகாது.

6. ஒவ்வொரு நிதிக்கம்பனியும் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட படிவத்தில் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் வெளிநின்ற அனைத்து கடன் வசதிகளின் விபரங்களை ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்து 3 மாதங்களுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. இப்பணிப்புரையின் நோக்கங்களுக்காக -

(i) "கடன் வசதி" என்பதன் கருத்து, கடன்கள்; வாடகைக் கொள்வனவு அல்லது குத்தகைக்கு விடல் உடன்படிக்கைகளின் கீழான வசதிகள்; முறிகள் தொகுதிக்கடன்கள், பிணையங்களிடப்பட்ட சொத்துக்கள், வர்த்தகப்பத்திரங்கள்/ வாக்குறுதிச்சான்றிதழ்கள் போன்ற படுகடன் பிணையங்களின் மூலமான நிதி ஏற்பாடுகள்; அல்லது பணிப்பாளரினால் மற்றைய நிதியியல் வசதிகள் எனப் பொருள்படும்.

(ii) "இணைக்கம்பனி" என்பது நிதிக்கம்பனியொன்று 20 சதவீதத்திற்கு சமனான அல்லது அதற்கும் கூடுதலான ஆனால் முதலீடு செய்யப்பட்ட கம்பனியின் வழங்கப்பட்ட சாதாரண பங்கு மூலதனத்தில் 50 சதவீதத்திற்கும் குறைவான பங்குகளைக் கொண்டுள்ள கம்பனியினைக் குறிக்கும்.

(iii) "சீராக்கம் செய்யப்பட்ட மூலதன நிதியம்" என்பது 2003ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (மூலதன நிதியம்) பணிப்புரை மற்றும் நிரந்தர கட்டற்ற ஒதுக்குகள் என்பனவற்றில் குறிக்கப்பட்டவாறு செலுத்தப்பட்ட மூலதனம், ஒதுக்கு நிதியத்தின் கூட்டுமொத்தம் எனக் கருதப்படும்.

(iv) "உறவினர்" என்பதன் பொருள் வாழ்க்கைத் துணைவர் அத்துடன்/ அல்லது அவரில் தங்கியிருக்கும் குழந்தை என்பதாகும்.

(v) "துணைக்கம்பனி" என்பது 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 529இன் அதே பொருளைக் கொண்டிருக்கும்.

(vi) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

(vii) "நம்பிக்கை பொறுப்பாளர்" என்பதன் கருத்து நிதிக்கம்பனியொன்றின் ஊழியர் பங்குகளின் உரிமைத்திட்டம் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட நம்பிக்கை பொறுப்பு உறுதியின் கீழ் நியமிக்கப்பட்ட அல்லது பெயர் குறிக்கப்பட்ட ஆள் என்பதாகும்.

8. 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கடன் வழங்கல்) பணிப்பு இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

## 1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு

**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2007 யூன் 29

## 2007ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுடனான வியாபார கொடுக்கல் வாங்கல்கள்) பணிப்பு

1. இப்பணிப்பானது 2007ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுடனான வியாபார கொடுக்கல் வாங்கல்கள்) பணிப்பு என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் இது 1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 2இன் நியதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையதாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. நிதிக்கம்பனி எதுவும், கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி மாதமொன்றுக்கு ஐம்பதினாயிரம் (ரூ.50,000/-) ரூபாவிற்கு மேற்படவோ அல்லது கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி நிதியாண்டொன்றிற்கு ஐநூறு ஆயிரம் (ரூ.500,000/-) ரூபாவிற்கு மேற்படவோ இருக்குமிடத்து அவ்வியாபாரக் கொடுக்கல் வாங்கல் எதனையும் பணிப்பாளரின் முன்னங்கீகாரமின்றி ஒரு கம்பனிப் பணிப்பாளருடனோ அல்லது கம்பனிப் பணிப்பாளர் எவரதும் உறவினருடனோ செய்து கொள்ளுதல் ஆகாது. நிதிக்கம்பனியினால், கம்பனிப் பணிப்பாளருடனோ அல்லது கம்பனிப் பணிப்பாளர் எவரதும் உறவினருடனோ மேற்கொள்ளும் வியாபாரக் கொடுக்கல் வாங்கல் எதுவும், 2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கடன் வழங்கல்) பணிப்பிற்கு உட்பட்ட விதத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

3. 2005ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்புக்கு அமைவாக கம்பனியின் பணிப்பாளரிடமிருந்தோ அல்லது பணிப்பாளரின் உறவினரிடமிருந்தோ சேமிப்பு, நிலையான வைப்புக்களை ஏற்றுக் கொண்டு 2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வட்டி) பணிப்புக்கு அமைவாக நிதிக்கம்பனியானது ஏனைய வைப்பாளர்களுக்கு வழங்குவது போன்று இவ்வகை வைப்புகளிற்கும் வட்டியினை வழங்குவதானது மேலேயுள்ள பந்தி 2இன் ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதாகாது.

4. இப்பணிப்பின் நோக்கத்திற்காக,

   (அ) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

   (அ) உறவினர்" என்பதன் பொருள் வாழ்க்கைத் துணை அத்துடன்/ அல்லது அவரில் தங்கியிருக்கும் குழந்தையைக் குறிக்கும்.

5. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுடனான வியாபார கொடுக்கல் வாங்கல்கள்) பணிப்பு இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.